வரு.76 இல. 26 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2024 ஜூலை 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
July 07 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-






03 சம்பந்தனின் மறைவு தமிழர் அரசியலில் நிரப்பமுடியாத வெற்றிடம்


05 மாத்தறையில் இருந்து ஆரம்பமான ரணில் அலை


12 பிரிட்டனில் தொழில்கட்சியின் வெற்றி நவதாராண்மைவாதத்தின் ஆட்சிக்கு வழிவகிக்குமா?


24 சில்வர்வுட்டுக்கு அடுத்து யார்?


# பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி ரணிலுக்கு ஒத்துழைப்பை வழங்க முடிவு

## பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷ

**அஞ்சுல மகிக்க வீரரத்ன**



நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் வரையில் பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதிக்கு சக்தியையும் ஒத்துழைப்பையும் வழங்குமென பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஷில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் எம்மை கைவிட்டுவிட்டு போகும்போது, நாட்டைக் காப்பாற்றியவர் ரணில் என்பதை கருத்திற் கொண்டே பஷில் ராஜபக்ஷ இந்த முடிவை எடுத்ததாக நேற்றுத் தெரிவித்தார்.

அந்த ஒத்துழைப்பை எதிர்காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். அதனைச் செய்வது நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டேயாகும் என்றும் அவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

06

# ரோஹித எம்.பியின் அரசியல் வாழ்வில் 27 வருட நிறைவு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் அரசியல் வாழ்வின் 27ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வு நேற்று (06) களுத்துறை பொது விளையாட்டரங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

(படம்: பிரதீப் பத்திரன)

## சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம்

# டொக்டர் அர்ச்சுனாவுடன் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு



சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை விவகாரம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் நிலவும் பிரச்சினைகளை புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள வைத்திய

06

## மீள செலுத்தும் காலம் அதிகரிப்பு; வட்டி வீதத்திலும் நிவாரணம்

# சர்வதேச கடன் மறுசீரமைப்பில் அரசாங்கம் பாரிய முன்னேற்றம்

## அரசுக்கு கிடைத்த பாரிய வெற்றியென மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையானது பெற்றுக்கொண்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச கடன்களை மறுசீரமைப்பு செய்வதில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

கடனை மீள செலுத்துவதற்கான காலம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் வட்டி வீதத்திலும் நிவாரணங்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏனைய சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் தரப்படுத்தலுக்கிணங்க சாத்தியமான தரப்படுத்தலை மேற்கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் சர்வதேச பிணை இறையாண்மை கடன் உரிமையாளர்களின் இணக்கப்பாட்டுக்கு மேலதிகமாக தற்போது பரிஸ்கிளப், இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இந்த கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த வகையில் கடனை மீள செலுத்தும் காலம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தால் வழங்க வேண்டிய வட்டி வீதம் குறைக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர், இது அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள பெரும் வெற்றி என்றும் சுட்டிக்காட்டினார்.

06

# கூட்டமைப்பின் பெருந்தலைவர் சம்பந்தனின் இறுதிக்கிரியை இன்று

## ஜனாதிபதி ரணில் இரங்கல் உரை

**திருகோணமலை தினகரன்**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மறைந்த இராஜவரோதயம் சம்பந்தனின் இறுதிக்கிரியை இன்று திருகோணமலையில்

06

# மலையக தொழிற்சங்க தியாகிகள் தினம்; வேலுகுமார் எம்.பி. தனிநபர் பிரேரணை

## 12ஆம் திகதி பாராளுமன்றில் விவாதம்



மலையக தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றை பிரகடனப்படுத்தல் தொடர்பான பிரேரணையொன்றை பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

06

# ஸ்ரீஜயவர்தனபுரவுக்கு 'சுவசெரிய பஸ் சேவை'



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் தலைவர் டொக்டர் சாரங்க அழகப்பெரும விடுத்த கோரிக்கைக்கமைய இ.போ.சவினால் நடத்தப்படும் 'சுவசெரிய வைத்தியசாலை சேவை' பஸ் சேவைகள் நேற்று முன்தினம் (05) வைத்தியசாலை வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

06



06 அமைச்சர் அலி சப்ரி இன்று சிங்கப்பூர் பயணம்

## TIN இலக்கத்தை பெற்றவர்களாயினும்

# மாத வருமானம் ரூ. 01 இலட்சத்தை விடவும் குறைவெனில் வரி செலுத்த தேவையில்லை

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் Taxpayer Identification Number (TIN) பெற்றுள்ளவர்கள் வரி செலுத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்த கடிதங்கள் அல்லது குறுஞ்செய்திகள் வந்தாலும், அவர்களின் மாத வருமானம் 1,00,000 ரூபாயை தாண்டவில்லையெனில் அது தொடர்பாக ஒரு கடிதம் மூலமாக அறிவிப்பதன் மூலம் வரி செலுத்துவதை தவிர்க்க

06

## வாரமஞ்சரி எங்கள் கருத்து...

# ஐக்கிய இலங்கையை நேசித்த அரசியல் தலைவர் சம்பந்தன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் காலஞ்சென்ற தலைவரும், முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான அமரர் இரா. சம்பந்தன் அவர்களின் இறுதிக் கிரியை அன்னாரின் சொந்த இடமான திருகோணமலையில் இன்று நடைபெறுகின்றது. இரா. சம்பந்தன் அவர்களின் மறைவானது இலங்கையில் மாத்திரமன்றி, சர்வதேசமெங்கும் பெரும் துயர உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து அன்னாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து வந்துகுவிந்த செய்திகள், அன்னாரின் இழப்பின் பாதிப்பை வெளிப்படுத்துகின்றன.

இலங்கைத் தமிழர் அரசியலில் நிரப்ப முடியாத இடைவெளியொன்றை இரா. சம்பந்தன் அவர்கள் ஏற்படுத்தி விட்டுச் சென்றிருப்பது தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பு ஆகும். அன்னார் தமது அறிவு, அனுபவம், ஆளுமை காரணமாகவே தமிழர் அரசியலில் இத்தனை காலமும் நிகரற்ற தலைவராகத் திகழ்ந்தார் என்பதை மறுப்பதற்கில்லை.

சம்பந்தன் அவர்கள் ஐக்கிய இலங்கையை நேசித்த ஒரு தலைவர் ஆவார்.

06

# தென்மேற்கு பருவமழை தீவிரம் ஒரு வாரத்துக்கு மழை தொடரும்

## அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்பில்லை



தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளமையினால் பல மாகாணங்களில் பெய்து வரும் மழை மேலும் ஒரு வாரத்துக்கு தொடருமென வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க தெரிவித்தார்.

மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் குறிப்பாக காலை மற்றும் பகல்

06

## வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு

# விமான நிலையத்திலேயே சாரதி அனுமதிப்பத்திரம்




இலங்கை வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தேவைப்படும் இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை அவர்கள் நாட்டில் தங்கியிருக்கும் குறுகிய காலத்துக்குள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வழங்க மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்ததும் அவர்கள் இங்கு தங்கியிருக்கும் காலத்துக்குள் அவர்களுக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம்

06

# படைப்பாளர், சட்டத்தரணி முத்துமீரான் காலமானார்



இலங்கையின் சிரேஷ்ட படைப்பாளரும் உருவகக்கதை எழுத்தாளரும் கிழக்கு மாகாணத்தின் பிரபல கிரிமினல் சட்டத்தரணியுமான சின்னத்தம்பி முத்துமீரான் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

திடீரென நோய்வாய்ப்பட்டு நிந்தவூரில் கடந்த வியாழக்கிழமை காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சிக்கந்தர் லெப்பை சின்னத்தம்பி, மீரா உம்மா ஆகியோரின் மகனான இவர், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

06



ஜனாதிபதியின் வீட்டுக்கு தீ வைத்து இரண்டு வருடங்கள்

# நூலகம் இல்லாத ரணிலின் புதிய வீடு









ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 5ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடும், அங்கிருந்த பெறுமதிமிக்க நூலகமும் தீக்கிரையாக்கப்பட்டு இம்மாதம் 9ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. போராட்டக்காரர்கள் எனக் கூறிக் கொள்ளும் குழுவினர் ஐந்தாம் ஒழுங்கை, 117ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வீட்டில் அமைக்கப்பட்டிருந்த நூலகத்தை தீயிட்டுக் கொளுத்தி நாசமாக்கியது 2022 ஜூலை 09ம் திகதி அன்று இரவாகும்.

மறுநாள் ஊடகக் குழு ஒன்றுக்கு எரிந்த வீட்டிற்குள் நுழையும் வாய்ப்பு கிடைத்ததோடு, இரண்டு வருடங்களின் பின்னரும் அவ்வீட்டின் தற்போதைய நிலைமையினைப் பார்த்து அறிந்து கொள்வதற்கும் ஊடகக் குழு ஒன்றுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அந்த வீட்டிற்குள் நுழையும் அளவுக்கு இக்கட்டுரையாளருக்கு வாய்ப்பு கிடைத்தது.

ரணில் விக்கிரமசிங்க அன்று நாடு தீப்பற்றிக் கொண்டிருந்த வேளையில் பிரதமர் பதவியை ஏற்றார். எரிபொருள் இல்லாத, எரிவாயு இல்லாத, மருந்துகள் இல்லாத நாட்டைப் பொறுப்பேற்று மக்களின் மனக் குழப்பத்தை அமைதிப்படுத்துவது எளிதான காரியம் அல்ல. அதற்காக அவர் செலுத்த வேண்டியிருந்த இழப்பீடுகள் கொஞ்சநஞ்சமல்ல.

அன்று போராட்டக்காரர்கள் தீக்கிரையாக்கியது ஒரு வீட்டை மாத்திரமல்ல. அவர்கள் வரலாற்றையே அழித்தார்கள். மீண்டும் கட்டியெழுப்ப முடியாத வரலாறு. சுமார் 2500 புத்தகங்களுக்கும் அதிகமாக இருந்த நூலகம் அது. அங்கிருந்த சில புத்தகங்கள் மீள் பதிப்பு செய்யப்படாத புத்தகங்களாகும். அவ்வாறான நூற்றுக்கணக்கான புத்தகங்கள் அங்கிருந்தன.

பிரதமர் ரணிலுக்கு அந்த வீட்டைக் கட்டிக் கொடுத்தது அவரது தாயான நாலனி விக்கிரமசிங்கவாகும். நாலனி விக்கிரமசிங்கவுக்கு அந்தக் காணி கிடைத்தது அவளது தந்தை தரப்பிடமிருந்தாகும். நாலனி விக்கிரமசிங்கவின் தந்தை தொன் ரிச்சர்ட் விஜயவர்தன எனும் டீ. ஆர். விஜயவர்தனவாகும். விஜயவர்தன தலைமுறை உருவாகியது துடுகல மத்துமராலவிலிருந்தாகும். அவர் சீதாவக்க ராஜசிங்க மன்னனின் தலைமை தளபதியாகும். அவர் திறமையான போர்வீரராக இருந்ததால் விஜயவர்த்தன என்ற பெயர் மரபுரிமையாக உள்ளது.

அவர்கள் பின்னர் கொழும்பில் காணிகளையுடைய தோட்டக்காரர்களாக ஆகினர். கொள்ளுப்பிட்டி ஐந்தாவது ஒழுங்கையில் அமைந்துள்ள சுமார் ஒரு ஏக்கர் காணியை துடுகல டெப் விஜயவர்தன கொள்வனவு செய்கிறார். வெவகே சோபியா டெப் வீரசிங்க என்பவர் டி.ஆர். விஜயவர்தனவின் தாயாகும். அவர் சேதாவத்தை பகுதியில் காணி ஒன்றை வாங்கி பங்களா ஒன்றை நிர்மாணித்தார். டி.ஆர். விஜயவர்தன லேக் ஹவுஸ் நிறுவனத்தை ஆரம்பித்த போது, அதற்குப் பெயர் வைக்கும் கதை உருவானது, வெவகே என்ற குடும்பப் பெயரைப் பயன்படுத்தியாகும்.

தலைமுறை தலைமுறையாக வந்த ஐந்தாவது ஒழுங்கை காணியில், 80 பேர்சஸ் காணி டி. ஆர். விஜயவர்தனவினால் அவரது மூத்த மகளான நாலனி விக்ரமசிங்கவுக்கு 1944ஆம் ஆண்டில் எழுதிக் கொடுக்கப்பட்டது. டி. ஆர். விஜயவர்தன 1944 ஒக்டோபர் 19ஆம் திகதி தனது மகளுக்கு இந்த 80 பேர்சஸ் காணியை எழுதிக் கொடுத்த போது அதன் மதிப்பீட்டுப் பெறுமதி 60 ஆயிரம் ரூபாவாகும்.

கொள்ளுப்பிட்டி 05வது ஒழுங்கையில் அமைந்துள்ள காணியில் டி.ஆர். விஜயவர்தன தனது மகளுக்கு வீடொன்றைக் கட்டினார். நாலனி எஸ்மண்ட் விக்ரமசிங்கவை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பிறகு, இந்த இருவரும் சேர்ந்த அந்த வீட்டில் பல மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்டனர். எஸ்மண்ட் இலங்கையின் முதலாவது தேசாதிபதியான (மாவட்டச் செயலாளர்) சி.எல். விக்கிரமசிங்கவின் மகனாவார். பிரதமர் சேனாநாயக்கவுடன் இணைந்து விவசாயக் குடியேற்றங்களை ஆரம்பித்தது சி. எல். விக்கிரமசிங்கவாகும்.

ஷான் விக்கிரமசிங்க, ரணில் விக்கிரமசிங்க, நிராஜ் விக்கிரமசிங்க, க்ஷனிகா விக்கிரமசிங்க மற்றும் சன்ன விக்கிரமசிங்க ஆகியோர் எஸ்மன்ட் மற்றும் நாலனி தம்பதியின் பிள்ளைகளாவர். பிள்ளைகள் வளர்ந்ததும், நாலனி – எஸ்மண்ட் தம்பதியினர் 1970களில் தமது சொத்தை அவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்தனர். அது 1972ஆம் ஆண்டு ஒக்டோபர் 22ஆம் திகதி நடந்தது. ஷான் விக்கிரமசிங்க கொழும்பில் வசிக்க விரும்பாததால், இரத்மலானை பிரதேசத்தில் அவர்களுக்குச் சொந்தமான காணியொன்று வழங்கப்பட்டது.

நிராஜ் மற்றும் ரணிலுக்கு தலா 20 பேர்சஸ் வீதம் இரண்டு பங்குகள் வழங்கப்பட்டன. டி. ஆர். விஜயவர்தன குடும்பத்தினருக்குச் சொந்தமாக இருந்த லேக் ஹவுஸ் நிறுவனத்தை இந்த காலப் பகுதியில்தான் அம்மையார் சுவீகரித்தார். பின்னர் ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சிக்கு வந்த பின்னர், லேக் ஹவுஸ் மீண்டும் விஜயவர்தன குடும்பத்திடம் ஒப்படைக்கப்படும் என்று பலர் நம்பியிருந்த போதிலும், அது நடக்கவில்லை. எனினும் நாலனி – எஸ்மண்ட் தம்பதியினர் தமது பாரம்பரியத்தை எளிதில் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை.

அவர்கள் இருவரின் போராட்டத்தின் விளைவாக அரசாங்கத்தினால் மதிப்பிடப்பட்ட இழப்பீட்டுத் தொகை மற்றும் அறங்காவலருக்கு மாற்றப்பட்ட ஒரு பங்கு உரிமையின் மதிப்பை வழங்க அரசாங்கம் இணங்கியது.

தாய் நாலனி விக்கிரமசிங்கவின் நிலத்தை மகன் ரணிலுக்கு மாற்றிக் கொடுத்தாலும், அந்த இடத்தில் வீடு கட்டப்பட்டது இழப்பீட்டுத் தொகை கிடைத்ததன் பின்னராகும்.

நாலனி விக்கிரமசிங்கவுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையைப் பயன்படுத்தி 1980ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வீட்டின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் நிர்மாணப்பணிகள் லோரன்ஸ் துடாவே நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன. ரஞ்சித் சமரசிங்கவே வீட்டு வடிவமைப்பு நிபுணராகும். வீட்டில் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் அவர் அவ்வீட்டுக்கு குடியெர்ந்தது பெற்றோரினால் கிடைத்த புராதன வீட்டு உபகரணங்கள் மற்றும் புத்தகங்களை எடுத்துக் கொண்டாகும்.

ஹெலினா விஜயவர்தன சிறுமியாக இருந்த போது கிடைத்த பியானோ ஒன்றும் பரம்பரையாகக் கிடைத்த 200 ஆண்டுகள் பழமையான கட்டில் ஒன்றும் அங்கிருந்தது. அவை துடுகல விஜயவர்தன குடும்பம் மற்றும் விக்கிரமசிங்க குடும்பத்திடமிருந்து பெற்ற பரம்பரை சொத்துகளாகும். அவரது வீட்டில் 100 ஆண்டுகள் பழமையான இரண்டு கருங்காலி கதிரைகளும் இருந்தன. அதில் ஒரு கதிரையில் பல அரச தலைவர்கள் அமர்ந்துள்ளதால் அந்தக் கதிரை வரலாற்று மதிப்பை பெற்றுள்ளது.

ஈ.டப்ளிவ். ஜயவர்தன, டி.பி.ஜயதிலக்க, டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல, ஜே.ஆர். ஜயவர்தன, ஆர். பிரேமதாச, டி.பி. விஜேதுங்க போன்ற அரச தலைவர்கள் அமர்ந்துள்ளனர். அதற்கு மேலதிகமாக, என். எம். பெரேரா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா போன்ற தலைவர்களும் அமர்ந்துள்ளதாக தனது வீடு தீப்பிடித்த மறுநாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அந்த வரலாற்று சிறப்புமிக்க கதிரை தாத்தா டி.ஆர். விஜயவர்தனவிடமிருந்தே அவருக்கு கிடைத்திருந்துள்ளது.

அந்தக் கதிரையின் கைப்பிடி பழுதடைந்து விட்டதால், கருங்காலி மரக் குற்றிகளைக் கொண்டு புதிய கைப்பிடியை அதற்குப் பொருத்துவோம் என தளபாடங்களைப் புதுப்பிப்பதற்கு வந்திருந்து தச்சர் கூறிய போதிலும், அதன் தொன்மையை இழக்க நேரிடும் என்ற சந்தேகத்தில் ரணில் விக்கிரமசிங்க அதற்கு அனுமதிக்கவில்லை. ஜனாதிபதி ரணில் அவற்றைப் புதுப்பிக்கும் செயற்பாடுகளை மாத்திரம் மேற்கொண்டதாக வீடு தீயில் எரிந்து நாசமானதை அடுத்து நாங்கள் அங்கு சென்ற போது வீட்டின் பணியாளர் ஒருவர் கட்டுரையாளரிடம் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டில் உள்ள புத்தகங்கள் தொடர்பில் அன்று நாம் வினவியபோது, தனது நூலகத்தில் சுமார் 2500 புத்தகங்கள் இருந்ததாக குறிப்பிட்டார். அன்றையதினம் அவர் மேலும் கூறியதாவது:

"சட்டம் மற்றும் சமூகம் பற்றிய அதிகமான புத்தகங்கள் இருந்தன. பல பழைய புத்தகங்கள் இருந்தன. புதியவையும் இருந்தன. சில புத்தகங்களில் அப்புத்தகங்களை எழுதியவர்களின் கையொப்பத்துடன் கூடிய குறிப்பும் இருந்தது. ஜனாதிபதி ரூஸ்வெல்டின் மூன்று புத்தகங்களிலும் அவர் கையெழுத்திட்டு வழங்கியிருந்தார். ஜனாதிபதி கீசிஞ்சர் கையெழுத்திட்டு வழங்கிய புத்தகங்கள் இருந்தன. 1902ஆம் ஆண்டிலிருந்து முக்கியமான தகவல்களின் விபரங்களைக் கொண்ட சுமார் 200 சீடிக்கள் இருந்தன.

இசை சீடிக்கள் மற்றும் DVDக்கள் ஏராளமிருந்தன. 1912ஆம் ஆண்டு முதல் தற்போது வரை ஒவ்வொரு வகையிலான பாடல்கள் மற்றும் இசை பதிவு செய்யப்பட்ட 100 ஆண்டுகால பழமையான இசை அடங்கிய ஏராளமான இசைத்தட்டுகள் இருந்தன. இவற்றில் சிங்களம், ஹிந்தி மற்றும் மேற்கத்திய இசை சீடிக்கள் இருந்தன. பழைய வீடியோக்களும் இருந்தன. 1977ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்த காலத்திலிருந்து தேர்தலுக்காக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அடங்கிய இசைத்தட்டுகளும் இருந்தன.

வீட்டில் கீழ் மாடியில் 15 புத்தர் சிலைகள் இருந்தன. மேல் தளத்தில் சுமார் 20 புத்தர் சிலைகள் இருந்தன. அவை அனைத்தும் இப்போது அழிந்து விட்டன. திரிபீடகம், தம்ம பதம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் புத்தகங்கள் இருந்தன. முக்கியமான தகவல்கள் அடங்கிய ஏராளமான கோப்புகள் இருந்தன. பரிசீலனைக்காக வந்திருந்த பைல்களும் அங்கிருந்தன. வரலாறு பற்றிய தகவல்கள் அடங்கிய பல கோப்புகளும் இருந்தன. இப்போது எல்லாம் போய்விட்டது.

புகைப்படங்களைப் போன்று படங்களும் ஏராளமிருந்தன. இறைவனை சித்தரிக்கும் துணியால் செய்யப்பட்ட ஒரு பழங்கால காப்பக படம் இருந்தது. புதிதாக வாங்கிய வீட்டு உபகரணங்கள் கொஞ்சமாகவே இருந்தன. ஏனைய அனைத்தும் பரம்பரையாகக் கிடைத்தவையாகும். அதேபோன்று மற்றொரு பழைய பியானோவும் இருந்தது.

(19 ஆம் பக்க தொடர்ச்சி)

எம். எஸ். முஸப்பிர்



# 67ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்த பாடசாலை மாணவர்கள்

## மரணத்தில் நீடிக்கும் மர்மம்

கொழும்பு குருந்துவத்தை பகுதியில் இயங்கும் பிரபல சர்வதேச பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவர் கொம்பனிவீதியிலுள்ள தொடர்மாடி குடியிருப்பின் 67ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் கடந்த வாரம் முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

10ஆம் வகுப்பில் கல்வி கற்கும் வெள்ளவத்தையைச் சேர்ந்த டிவோன் வீரார் என்ற மாணவன், களனியை சேர்ந்த மாணவி ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தின் பின்னணி தொடர்பில் இதுவரை எந்தவித தகவலும் வெளியாகவில்லை. தற்கொலையா அல்லது விபத்தா என்பதை உறுதிப்படுத்த போதிய சாட்சிகள் இல்லையெனவும் பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் முகபாவங்கள் நடமாட்டங்களை காண்பிக்கும் சிசிடிவி காட்சிகளை அடிப்படையாக வைத்து இது தற்கொலை என்ற முடிவிற்கு வரமுடியவில்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பின் பிரபலமான பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்வி கற்ற இருவரும் கடந்த 3ஆம் திகதி 2.40 மணியளவில் பாடசாலை சீருடையுடன் கொம்பனி வீதியிலுள்ள தொடர்மாடி குடியிருப்புக்கு முச்சக்கரவண்டியில் வந்துள்ளனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் 61ஆவது மாடியிலுள்ள தனது நண்பனொருவரை சந்திக்க செல்வதாக தெரிவித்துள்ளனர். இவர்களுடன் படிக்கும் பாகிஸ்தான் நாட்டு மாணவன் ஒருவனின் தந்தைக்கு சொந்தமான வீட்டுக்கு இவர்கள் அடிக்கடி வந்து சென்றுள்ளனர். எனினும் அவர்கள் இருவரும் அன்று அங்கு வரும் போது நண்பன் வீட்டில் இருக்கவில்லை.

அங்கு அடிக்கடி வந்து சென்றுள்ளமையால் அவர்களை உள்ளே செல்வதற்கு அனுமதித்துள்ளனர்.

அதன் பின்னர் அவர்கள் இருவரும் ஐந்தாம் மாடிக்கு சென்று அங்குள்ள ஜிம்மில் தங்கள் ஆடைகளை மாற்றியுள்ளனர்.

பின்னர் அந்த மாணவன் மோட்டார் சைக்கிளில் வந்த பொதியொன்றை பெறுவதற்காக கீழே சென்று பின்னர் ஐந்தாம் மாடிக்கு திரும்பிச்சென்றுள்ளதும் சிசிடிவியில் பதிவாகியுள்ளது.

மாலை 4.30 மணியளவில் இருவரும் 67 ஆவது மாடிக்கு சென்றுள்ளனர்.

தொடர்மாடிக் குடியிருப்பின் அவசரமாக வெளியேறுவதற்கான பகுதியின் கதவை திறந்தே இவர்கள் சென்றுள்ளனர். அதன்பின்னர் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அருகிலுள்ள சிறிய சுவர் போன்ற ஒன்றில் அவர்கள் அமர்ந்திருந்ததையும் சிசிடிவி காட்சிகள் காட்டுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்த தொடர்மாடியில் 70 மாடிகள் உள்ள போதிலும் வெளியாட்கள் 67ஆவது மாடிக்கு அப்பால் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

மாணவர்களின் காலணிகள் அவசர சூழ்நிலையில் வெளியேறுவதற்கான வாசலுக்கு செல்லும் மாடிப்படிக்கு அருகில் இருந்துள்ளன. அவர்களின் சடலங்கள் 3ம் மாடிக்கு அருகில் காணப்பட்டதாக தெரியவருகின்றது.

மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இருவரும் மேல்தளத்துக்கு ஏன் சென்றார்கள்? அங்கு நடந்தது என்ன? உடலில் விஷம் கலந்திருந்ததா? இருவரும் போதைப் பொருள்பாவனையாளர்களா? அல்லது செல்பி புகைப்படம் எடுக்க சென்று தவறி வீழ்ந்தனரா என்ற பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. பிரேத பரிசோதனை முடிவுகளின்படியே மரணத்துக்கான காரணத்தை உறுதியாக கூறமுடியுமென பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

எதுஎவ்வாறாயினும் இத்தகைய பதின்ம வயதினரின் உயிரிழப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. விபத்துகள் மற்றும் நீரில் மூழ்குதல் கொலை, தற்கொலை என உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

வெள்ளவத்தையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் சர்வதேச பாடசாலை மாணவனொருவன் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பெற்றோரின் கவனயீனமும் புறக்கணிப்பும் கூட இத்தகைய பெரும்பாலான சம்பவங்களுக்கு வழிவகுக்கின்றன.

இதுகுறித்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் மனநல மருத்துவர் ரூமி ரூபன் கருத்துதெரிவிக்கையில்,

பதின்ம வயதினரின் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் மனநிலையைப் பற்றி விவாதிப்பது மிகவும் முக்கியம். எனினும் பிள்ளைகள் தங்களுடைய பிரச்சினைகளை வெளிப்படையாக விவாதிக்க தயக்கம் காட்டுகின்றனர். எனவேதான் அவர்களின் மனநிலையை அடையாளம் காண்பது கடினமாகவுள்ளது. பெரும்பாலும் தங்களுடைய பிரச்சினைகளை தாங்களே அல்லது சக நண்பர்களுடனேயே தீர்க்க முயற்சிக்கின்றனர்.

இத்தகைய மனநிலை பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மருத்துவ ஆலோசனை பெறுவார்கள். மறுபுறம், பிள்ளைகளின் பிரச்சினைகளை பெற்றோர் சரியாகக் கண்டறிவது முக்கியம். இளைஞர்களின் இயல்பான மனநிலை மாற்றத்தில், அவர்கள் அமைதியற்றவர்களாகவும், இயல்பிலேயே ஆபத்துக்களை எதிர்கொள்பவர்களாகவும் இருப்பதைக் காணலாம்.

இளமைப் பருவமே குழந்தைகளின் அடையாளத்தையும் ஆளுமையையும் வளர்க்க உதவும் பரிணாம வளர்ச்சிநிலை.

இக்காலப்பகுதியிலேயே வாழ்க்கையில் புதிய அனுபவம் கிடைக்கும். அத்தகைய அனுபவங்களைப் பெறுவதற்கு, மற்றவர்களிடமிருந்து விலகி ஆபத்தான இடங்களுக்குச் செல்வது, பெற்றோரில் சார்ந்து இருப்பதை தவிர்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள்.

இதனால் பிள்ளைகளின் பாதுகாப்பைப் பற்றி சிந்தித்து பெற்றோர் அறிவுரைகள் கூறினால் இரு தரப்பினருக்கிடையில் மோதல்கள் ஏற்படும். அந்த மோதலால், இவர்கள் பெரும்பாலும் பெற்றோரிடமிருந்து விலகி இருக்க முயற்சி செய்வார்கள்.



எனவே பெற்றோர்கள் இதைப் புரிந்துகொண்டு சரியானதைச் செய்வது எப்படி என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது முக்கியம். பெற்றோர் அவர்களின் ஆளுமையை வளர்த்து, அவர்களை சுதந்திரமான பெரியவர்களாக மாற்றுவதற்கு உதவ வேண்டும். பெற்றோர் அவர்களை குழந்தைகளைப் போலப் பாவித்தால், அவர்கள் முதிர்வயதில் தோல்வியடைந்தவர்களாக மாறிவிடுவார்கள்.

பெரியவர்களாகும் போது சரியான பாதையில் செல்வதற்கு தேவையான சூழலை பெற்றோர் உருவாக்க வேண்டும்.

அதற்கு குழந்தை பருவத்திலிருந்தே அடித்தளம் இட வேண்டும். குழந்தை பருவத்தில் வழங்கப்படும் அன்பும் பிணைப்பும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். குறிப்பாக குழந்தைகளின் உணர்வுகளுக்கு பெற்றோர் குழந்தை பருவத்திலிருந்தே மதிப்பளிக்க வேண்டும்.

அன்புடன் பேசுவதும், நேசிப்பதும், நல்ல உறவைப் பேணுவதும் சிறந்த உறவுக்கு வழிவகுக்கும். இதை வாழ்நாள் முழுவதும் பெறாத குழந்தைகளே எதிர்காலத்தில் பாதிக்கப்படுகின்றனர்.

நவீன உலகில் தாயும் தந்தையும் தொழிலில் ஈடுபடும் போதும் ஒரு சிக்கலான சமூகம் உருவாக்கப்படுகின்றது. அவர்கள் குழந்தைகளின் அனைத்து நிதி பங்களிப்பையும் வழங்குவார்கள், ஆனால் குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் நெருங்கிய உறவு இருக்காது. எனவே அவர்களுடைய கவனம் நண்பர்கள் அல்லது சமூக ஊடகங்கள் பக்கம் திரும்புகிறது.

தனிமையிலிருந்து விடுபட சமூக வலைதளங்களில் வீடியோ கேம் விளையாடுவது, வெவ்வேறு நபர்களுடன் பழகுவது போன்றவை இயல்பாகவே நடக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில் தனிமை ஒரு பெரிய பிரச்சினையாகிவிடுகின்றது. இது போன்ற விடயங்களால் பெற்றோருடனான உறவு தூண்டிக்கப்படுகின்றது. ஒருகட்டத்தில் பெற்றோர் அவர்களின் விடயங்களில் தலையுடும் போது பிள்ளைகள் பெற்றோரை எதிரிகளாகப் பார்க்கின்றனர்.

பெற்றோரின் அன்பும் அக்கறையும் கிடைக்காத குழந்தைகளே வெளியில் அன்பைத் தேடிசெல்கின்றனர்.

அதேபோல் நல்ல நண்பர்களை கண்டறிவதற்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவ வேண்டும். மேலும் பெற்றோருக்கு இருக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் உள்ளது.

மேலும் கல்வியிலுள்ள குறைபாடுகளும் இளம் வயதினரை பாதிக்கின்றது. கல்வியானது சமூகத் திறன்களைக் கற்றுத் தருவதில்லை, ஏனென்றால் அது வெறும் வாய்வழிக் கற்றல் மட்டுமே. பிள்ளைகளின் ஆளுமையை உருவாக்க சமூக திறன்கள் கற்பிக்கப்படவில்லை. மனப்பாடம் செய்து தேர்வில் தேர்ச்சி பெறுவது மட்டுமே கல்வியால் நடக்கின்றது. எனவே பாடத்திட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டும்.

உலக சுகாதார அமைப்பின் தகவல்களின்படி வீடியோ கேம்களினால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



வசந்தா அருள்ரட்ணம்

## சம்பந்தனின் மறைவு

# தமிழர் அரசியலில் நிரப்பமுடியாத வெற்றிடம்



பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் தமிழ்த்தேசிய அரசியலில் அதாவது ஈழத் தமிழரின் அரசியல் அரங்கில், செல்வாக்கைச் செலுத்திக் கொண்டிருந்தவர் சம்பந்தன். அவரை மிஞ்சி நிற்கக் கூடிய வேறு ஆளுமைகள் இருக்கவில்லை. இப்போதுள்ள தமிழ் அரசியற் தலைவர்களில் சம்பந்தனுக்கே சர்வதேச மட்டத்திலும் இலங்கையின் பிற சமூகத்தினரிடத்திலும் கூடுதலான மதிப்பிருந்தது. சுருங்கச்சொன்னால் தமிழ்ப்பரப்பில் கிடைத்த மதிப்பை விட, அதற்கு வெளியேதான் சம்பந்தனுக்கு மதிப்புண்டு.

தன்னுடைய அரசியற்செயற்பாட்டினாலும் அரசியற்திறனாலும் தலைமைத்துவப் பண்பாலும் இந்தச் செல்வாக்கை அல்லது இவ்வாறான தாக்கத்தை சம்பந்தன் உருவாக்கவில்லை. அவருடைய அரசியல் நிலைப்பாடு மட்டுமே இந்த மதிப்பை சம்பந்தனுக்குப் பெற்றுக் கொடுத்தது.

சம்பந்தனுடைய அரசியல் நிலைப்பாடென்பது வழமையான தீவிரத் தமிழ்த்தேசியவாதத்திலிருந்து விலகியது; வேறுபட்டது. மென்போக்கையுடையது. பிற இன, மத, மொழியினரையும் ஏற்று இணங்கிச் செயற்பட விரும்புவது. முடியுமான அளவுக்குப் பல்லினத் தன்மையை உள்ளீர்த்துக் கொண்டது. சர்வதேச நிலைப்பாட்டை உள்ளடக்கியது. அரசுடன் ஆட்சியாளருடன் தீவிர நிலையில் முரண்படுவதைத் தவிர்ப்பது. குறிப்பாகப் புலிகளுடைய அடையாளத்துக்கு வெளியே நிற்க முற்பட்டது. ஆக, தன்னுடைய நிலைப்பாட்டுக்கு அமைவாகப் புறச் சூழலை உருவாக்க ஓரளவுக்குச் சம்பந்தன் முற்பட்டிருந்தார் எனலாம்.

இதற்குச் சில உதாரணங்களைச் சொல்லலாம்.

1. விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியாகவோ அதன் மறுவடிவமாகவோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதனுடைய அரசியலும் இல்லை என்பதை நிறுவ முற்பட்டது. இதை அவர் வெளிப்படையாகவே பல தடவை சொல்லியுமிருக்கிறார். அப்படிச் செய்வதன் மூலமே சர்வதேச சமூகத்திடமும் சிங்களத்தரப்பிலும் முஸ்லிம்களிடத்திலும் தன்னுடைய அரசியலை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்று சம்பந்தன் கருதினார்.

2. இதற்கு அமைவாகவும் ஆதரமாகவுமே யாழ்ப்பாணத்தில் வைத்து அவர் அன்றைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தேசியக் கொடியை ஏந்தினார்.

3. நல்லாட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் ஆளுங்கட்சிக்கு நெருக்கடிகளைக் கொடுக்காமல் நல்லெண்ணத்தை வளர்ப்பதாக இணக்க நிலையில் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கினார்.

4. ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளதைப் போல எல்லாவற்றையும் கடுந்தொனியில் எதிர்க்கும் தீவிரத் தமிழ்த்தேசியத்துக்குப் பதிலாக மென்னிலையிலான தமிழ்த்தேசியத்தைப் பின்பற்றியது.





இதனால்தான் அவர் ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான (சமஸ்டி) தீர்வு என்று துணிவோடு சொல்ல முடிந்தது. என்றபடியாலேயே சம்பந்தனை சிங்களத் தரப்பும் முஸ்லிம்களும் மதிப்புடன் அணுகின.

இதற்குக் காரணம், 2009 க்குப் பிறகான சூழலைச் சம்பந்தன் ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருந்தார் எனலாம். அதாவது, புலிகளுக்குப் பிறகான அரசியல் என்பது, பிரிவினைக்குப் பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் ஒரு நியாயமான தீர்வைக் காண்பதாக அமைய வேண்டும். அது புரிந்துணர்வின் அடிப்படையில் குறைவில்லாத சமநிலைக்குச் செல்வது, சமரசம் காண்பது என்பதாகும். எனவே இதில் தீவிரத்தன்மைக்கு இடமில்லை. ஆகவே, இணக்கத்துக்கும் உடன்பாட்டுக்கும் சமரசத்துக்கும் ஜனநாயக அடிப்படைகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டும். அதையே சர்வதேச சமூகமும் ஆதரிக்கும். இலங்கையிலும் சாத்தியப்படுத்தலாம் என்பதைச் சம்பந்தன் தன்னுடைய புரிதலாகவும் அரசியல் நிலைப்பாடாகவும் கொண்டிருந்தார்.

அப்படி விளங்கிக் கொண்டதற்கமையவே அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்த தீவிரநிலைப்பாட்டைக் கொண்ட கஜேந்திரகுமார், கஜேந்திரன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோரைத் தள்ளி வைத்தார். அடுத்ததாக சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றோர் விலகிச் செல்வதற்கும் இடமளித்தார். பதிலாகத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் நிற்கக் கூடிய தமிழரசுக் கட்சியை மட்டுமே பலப்படுத்த விளைந்தார். மறுவளமாகப் பார்த்தால் சம்பந்தனுடைய இத்தகைய நிலைப்பாடு விடுதலைப் புலிகளை ஆதரிப்போருக்கும் குறைந்த பட்சம் செயற்களத்தில் அரசியலை முன்னெடுத்துச் செல்ல முயற்சித்தோருக்கும் உடன்பாடாக இருக்கவில்லை. அதனால் அவர்கள் வெளியேறிச் சென்றனர்.

பதிலாகத் தன்னுடைய மென்போக்கிற்கு உடன்படக்கூடியவர்கள் எனக் கருதப்பட்ட சுமந்திரன், விக்கினேஸ்வரன், சி.வி.கே. சிவஞானம், சத்தியலிங்கம், ஆர்னோல்ட், குகதாசன் போன்றோரை உள்ளீர்த்து, அவர்களை முன்னிலைப்படுத்தினார் சம்பந்தன். பின்னாளில் விக்கினேஸ்வரன் உள்ளிட்ட சிலர் இதற்கு மாறாக மாறிச் சம்பந்தனுக்கே நெருக்கடியைக் கொடுத்தனர். என்றாலும் இதையெல்லாம் கடந்தே சம்பந்தன் நின்றார்.

சம்பந்தனுடைய இந்த நிலைப்பாட்டைத் தமிழ்த்தேசியத்தின் இன்னொரு போக்கான தீவிர நிலைப்பாடுடையோர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் கடுமையாகச் சாடினர், எதிர்த்தனர், விமர்சித்தனர். அவர்களுடைய குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் மறுத்துரைக்கக் கூடிய அளவுக்கு, மறுதலித்து நிற்கக் கூடியவாறு சம்பந்தன் தன்னைப் பலப்படுத்தியிருக்க வேண்டும். அப்படி அவர் தன்னைப் பலப்படுத்தியிருக்க வேண்டுமானால், தன்னுடைய நிலைப்பாட்டுக்கு வலுச் சேர்த்திருக்க வேண்டும். அதற்காக வேலை செய்திருக்க வேண்டும். அதற்கான கட்டமைப்புகளை உருவாக்கி, அவற்றைச் செயற்படுத்தியிருக்க வேண்டும். அவற்றின் பயன்களை மக்கள் பெறக் கூடியதாக மாற்றியிருப்பது அவசியம்.



அதுவே அவருடைய தலைமைத்துவத்தின் சிறப்பாகவும் பொறுப்பு நிறைவேற்றுதலாகவும் இருந்திருக்கும். அதற்கான வாய்ப்புகளும் அவருக்குக் கிடைத்திருந்தன.

2009 க்குப் பிறகான 15 ஆண்டுகளில் தமிழரின் அரசியலில் ஏக தலைவராகச் சம்பந்தனே இருந்திருக்கிறார். தமிழரசுக் கட்சியின் தலைவராக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக, தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பிராக, நல்லாட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக எனப் பல நிலைகளில் அவருக்கான தகுதிநிலைகளும் வாய்ப்புகளும் கிடைத்திருந்தன.

சம்பந்தன் அரசியலில் செயற்படத் தொடங்கிய காலம் மிகக் கடினமான சூழலையுடையது என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். ஜனநாயக வழிப்போராட்ட அரசியல் செல்வாக்கிழந்து, ஆயுதப்போராட்ட அரசியலும் அதன்வழியான போரும் பலமடைந்திருந்த காலச் சூழல் அது. சம்பந்தன் அந்தத் தீவிரப் பாதையை – அந்த அரசியலை ஏற்றுக் கொண்டவரல்ல. அதனால் அவருக்குப் பல நெருக்கடிகளும் ஆபத்துகளுமிருந்தன. அவருடைய கட்சியான தமிழரசுக் கட்சியும் அது அங்கம் வகித்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் செயற்பட முடியாத நிலைக்குள்ளானது. அவருடைய தலைவர்கள் பலிகொள்ளப்பட்டனர்.

இருந்தாலும் ஏறக்குறைய 70 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் ஏறக்குறைய 30 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டிருக்கிறார் சம்பந்தன். தமிழரசுக் கட்சியின் தலைவராக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக எனப் பல பதவிகளை வகித்திருக்கிறார். தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியைத் தவிர, ஏனையவை காலச் சூழலினால் அவருக்குக் கிடைத்தவை.

இதொரு பக்கமிருக்க, சம்பந்தன் மேற்கொண்டு வந்த மென்னிலைத் தமிழ்த்தேசியவாதத்தை அடுத்த கட்டத்துக்குத் தலைமை தாங்கி, முன்னெடுத்துச் செல்வது யார்? அந்த அரசியல் எப்படியாக இருக்கும்? தீவிரத் தமிழ்த்தேசியவாதத்துக்குத் தலைமை தாங்குவோரில் ஒருவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் நோய்வாய்ப்பட்டுச் செயற்படும் நிலையை இழந்திருக்கிறார். இந்த நிலையில் இரு நிலையிலும் தமிழ்த்தேசியவாத அரசியலின் எதிர்காலம் எப்படி அமையும்? என்பது சிந்திக்கற்பாலது.

**– கருணாகரன்**

**ஆயுர்வேத இயன் மருத்துவர்கள்**

இலங்கையிலுள்ள "ஐந்து நட்சத்திர" ஹோட்டல்களில் வேலை செய்வதற்கு தொழில்சார் **ஆயுர்வேத இயன் மருத்துவர்களை** வெளிநாட்டுக் கம்பனியொன்று அழைக்கின்றது

அடிப்படை சம்பளம் :
80,000/=
அத்துடன் தரகுப்பணம்

உங்களின் சுயதரவை WhatsApp App இற்கு அனுப்பவும்

0777467221






# கடன் மறுசீரமைப்பும் இலங்கையின் எதிர்காலமும்

சுதந்திரத்திற்குப் பின்னர் கடந்த சில தசாப்தங்களில் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மோசமான வீழ்ச்சி மற்றும் இந்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் நிபுணர்களுடனான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை (05) அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இலங்கையில் முன்னெப்போதையும் விட தற்போது பொருளாதார மாற்றம் தேவைப்படுவதாகவும், அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் பொருளாதார மாற்றச் சட்டத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளதாகவும் இதன் போது குறிப்பிடப்பட்டது. இது இந்த நேரத்தில் நாட்டுக்கு மிகவும் தேவையான சட்டமூலமாகும். ஒரு சட்டமூலத்தை முன்வைப்பதால் மட்டும் நாடு முன்னேற்றமடையாது என்றும், அந்தப் புதிய சட்டமூலத்திற்கு அமைவாகச் செயற்பட வேண்டிய வேலைத்திட்டம், திசைகள், வலுவான நிறுவன வலையமைப்பை உருவாக்குவது உள்ளிட்ட விரிவான நோக்கையும் இந்தப் புதிய சட்டமூலம் கொண்டுள்ளது என்றும் இங்கு இந்த நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். இதன்போது அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

லோரன்ஸ் செல்வநாயகம்



கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க, ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன ஆகியோர் சமூகமளித்த மாநாடு அண்மையில் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றது.

## நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் **பந்துல குணவர்தன**

சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் கடந்த பல தசாப்தங்களில் நாடு எதிர்கொண்ட இரண்டு பாரிய பொருளாதார பற்றாக்குறையாக அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் நடப்புக் கணக்கு பற்றாக்குறை மற்றும் கொடுப்பனவு சமநிலையின் நடப்புக் கணக்கு பற்றாக்குறையைக் கூற முடியும். அந்த வகையில் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பில் தெளிவு படுத்துவது முக்கியமாகும்.

யார் இந்த நாட்டை ஆட்சி செய்தாலும் அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படும் செலவுகளை ஈடு செய்வதற்கு அரசாங்கத்திற்கு போதிய வருமானம் கிடையாது என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

உதாரணமாக அரச கணக்காய்வாளர் நாயகத்தின் நிதி தொடர்பான கடந்த வருட அறிக்கை அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும உள்ளிட்ட கொடுப்பனவுகள், ஏனைய மானியங்கள், பொருட்கள் சேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ள வட்டி ஆகியவற்றுக்காக அரசாங்கம் 4.7 டிரில்லியனை செலவு செய்துள்ளது.

அந்த வகையில் வரி மூலமான வருமான மட்டத்தில் மாற்றங்கள் இல்லாத நிலையிலும் அனைவரும் பெற்றுக் கொள்ளும் பொருட்களுக்கான வரி, நேரடி வரி வருமானம், மறைமுகமான வட்டி, வரியற்ற வருமானம் மற்றும் ஏனைய வைப்புகள் மூலம் திறைசேரிக்கு 3 ட்ரில்லியன் நிதியே கிடைத்துள்ளது.

அதன் மூலம் வரும் நிலுவையான 1.7 ட்ரில்லியன் மத்திய வங்கி வாரந்தோறும் மேற்கொள்ளும் திறைசேரி உண்டியல் ஏலத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகிறது. அத்துடன் வன்முறைகள், போராட்டங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அரசாங்கமானது மத்திய வங்கி மூலம் பணத்தை அச்சடிக்க நேர்கின்றது. அந்த வகையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி பணம் அச்சடிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லும் நிலையில் நாட்டிற்கு வெளியே பருப்பு, கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிபொருள் உரம் மற்றும் இரசாயன பொருட்கள் போன்றவையும் இயந்திராதிகள், உபகரணங்களும் கண்டிப்பாக இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளது. அவை இல்லாவிட்டால் மக்களால் வாழ முடியாத நிலையே ஏற்படும்.



தேயிலை, இறப்பர், தேங்காய் உட்பட விவசாய பொருட்களின் ஏற்றுமதி, ஆடைத் தொழில் ஏற்றுமதி, மாணிக்கக் கல் உள்ளிட்ட பொருட்கள் ஏற்றுமதி மூலமாக வருமானம் பெற்றுக் கொள்ளப்படுகிறது. எனினும் 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ந்து அது குறைபடைந்து வருகிறது.

இந்த நிலுவைகளை நிவர்த்தி செய்வதற்கு வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் அனுப்பும் பணம் அல்லது சுற்றுலாத் துறை மூலமான வருமானம் மூலம் நிவர்த்தி செய்ய முடியவில்லை.

இந்த நிலுவைகளை நிவர்த்தி செய்ய எவர் அரசாங்கத்தை ஆட்சி செய்தாலும் தொடர்ச்சியாக கடன் பெறப்பட்டு வந்துள்ளது.

அந்த வகையில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் இலகு கடன்களை பெற்றுக்கொண்ட போதும் அதுவும் போதுமானதாக இல்லாத நிலையில், பணம் அச்சடிக்கப்பட்டு அதன் மூலமும் பற்றாக்குறை நிலவும் போது வர்த்தக சந்தைக்கு இறையாண்மை பிணைமுறி பத்திரம் விடுக்கப்பட்டு பாரியளவு நிதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றை மீளச் செலுத்த முடியாத நிலை வந்தபோது உத்தியோகபூர்வமாக கடன் வழங்க முடியாது என அந்த நிறுவனங்கள் அறிவித்தன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற சந்தர்ப்பத்தில் இத்தகைய நிலை ஏற்பட்டதுடன் நாட்டை முன்னெடுத்து செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையிலேயே அந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு தகுதியான ஒருவரை தெரிவு செய்யுமாறு அமைச்சரவை மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

நாட்டின் ஏனைய நாடுகள் இவ்வாறான வீழ்ச்சி நிலையை எதிர்கொள்ளும் போது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விசேட நிபுணத்துவ சேவை வழங்கக்கூடிய 28 நிறுவனங்கள் அதற்காக முன்வந்தன. அவற்றில் 20 நிறுவனங்கள் அதற்கான தகைமைகளைக் கொண்டிருந்தன.

அவற்றிலிருந்து பொறுப்புக்களை வழங்கக்கூடிய நிறுவனம் ஒன்றை தெரிவு செய்யும் தீர்மானத்தை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதற்கிணங்க அன்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அந்த குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். பிரான்சின் லஸார்ட் நிறுவனத்திற்கு அந்த பொறுப்பு வழங்கப்பட்டது. அத்துடன் நிதித் துறையில் ஏற்படும் நெருக்கடி தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராக ஆலோசனைகளை வழங்குவதற்கு க்ளிபர்ட் பிரான்ஸ் நிறுவனம் அமைச்சரவையின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டது.

இதன்போது இறுதியாக கடனை பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன் அமைச்சரவையில் அது தொடர்பில் ஏற்பட்ட பிளவுகள் காரணமாக சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல முடியாத நிலை உருவானது.

அதன் பின்னர் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்து நெருக்கடியான நிலை உருவானது. நாட்டின் கையிருப்பு வெகுவாக குறைவடைந்தது. நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசை யுகம் ஆரம்பமாகியது.

மக்கள் பிரதிநிதிகளில் வீடுகள் எரிக்கப்பட்டன அவ்வாறு சுமார் 800 வீடுகள் அழிக்கப்பட்டன.

நாடு அராஜக நிலைக்கு முகம் கொடுத்த போது சிறந்த அரசியல் அனுபவமுள்ள, ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்த அனுபவமிக்க தலைவரான ரணில் விக்கிரமசிங்க அந்த நிலையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை பொறுப்பேற்றார்.

அவர் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார். அதன் ஒரு அம்சமாக கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் உடன்படிக்கை வரை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

## கடனை மீளச் செலுத்தும் திறனை அதிகரித்துக் கொள்வது அவசியம்

கலாநிதி **நந்தலால் வீரசிங்க** (மத்திய வங்கி ஆளுநர்)

இலங்கை முன்னொரு போதும் இல்லாத வகையில் பொருளாதார பரிவர்த்தனையில் எதிர்பார்ப்புடன் காணப்படும் காலமாக இக்காலத்தை குறிப்பிட முடியும். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கும் சிறந்த பங்களிப்பை வழங்கக்கூடிய பொருளாதார பரிவர்த்தனை சட்டத்தை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளது. அது நாட்டுக்கு மிகவும் முக்கியமானதொரு சட்டமாகும்.

சட்டத்தை சமர்ப்பித்தன் மூலம் மட்டும் நாடு முன்னேற்றமடையாது அந்த சட்டத்திற்கு இணங்க செயற்படக் கூடிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பலமான நிறுவன வலையமைப்பை உருவாக்குதல் உள்ளிட்ட விரிவான நோக்கங்கள் மேற்படி சட்டத்தில் காணப்படுகின்றன.

அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைவருக்கும் எமது நன்றிகளையும் கௌரவத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

இலங்கை பெற்றுக் கொண்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச கடன்களை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் தற்போது நாம் பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளோம்.

2020, 2021ஆம் ஆண்டளவில் அரசாங்கம் கடனை மீள செலுத்தும் நிலையைக் கொண்டிருக்கவில்லை. 2020ஆம் ஆண்டில் கொவிட் சூழ்நிலையால் உலகில் எந்தவொரு நாடும் எந்தவொரு நிபந்தனையும் இன்றி சர்வதேச நாணய நிதியத்திடம் கடனை பெற்றுக் கொண்டிருந்தது. அதன்போது இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவிக்கவில்லை. அதற்கு காரணம் கடனை மீள செலுத்தக்கூடிய நிலைமை எமது நாட்டிடம் இல்லாமையே.

கொவிட் சூழ்நிலையில் அவசர கடன்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் எமது நாடு பின்னடைவு கண்டது. அதற்குப் பின்னரும் வருமானம் படிப்படியாக குறைந்து வந்தமையும் அதற்கு காரணமாகும்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் தற்காலிகமாக 2020 ஏப்ரல் 12ஆம் திகதியளவில் பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்துவதை இடைநிறுத்தும் அறிவிப்பை வெளியிட்டது.

அரசாங்கம் பெற்றுக் கொண்டிருந்த அரச கடன், இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன் சர்வதேச பிணை இறையாண்மைக் கடன் ஆகியவற்றை கடன் மறுசீரமைப்பு செய்ய நேர்ந்தது. இதில் ஒரு தரப்பு இலங்கை அரசாங்கமாகும். அது கடன் பெற்றுக் கொண்ட தரப்பு. என்பதுடன் ஏனைய தரப்புக்கள் கடன் வழங்கிய தரப்புகளாகும்.



இந்த இரு தரப்புக்கும் இடையில் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வது தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட்டதுடன் அதில் சர்வதேச நாணய நிதியம் மத்தியஸ்தம் செய்தது.

நாம் 2022 மார்ச் 18ஆம் திகதி முதல் தடவையாக சர்வதேச நாணய நிதியத்துடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பணிப்பாளர் மட்ட இணக்கப்பாட்டை மேற்கொண்டிருந்தோம்.

அந்த வகையில் எதிர்வரும் 10 வருடங்களில் நாட்டின் கடன் சுமையை குறைத்து, அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொண்டு ஏற்றுமதி வருமானத்தையும் அதிகரித்து, அத்துடன் மேலும் பல இலக்குகளுக்கு இணங்க செயல்படுவதற்கும் இணக்கப்பாடு காணப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு நாம் செயற்படுவதுடன் அதன் கடன் ஒத்துழைப்பை நிலையானதாக முன்னெடுப்பதானது எமது பயணத்தில் பாரிய பலமாக அமைந்தது. முதலாவதாக நாம் தேசிய கடன் மறு சீரமைப்பை முன்னெடுத்தோம். அதனை 2023 செப்டம்பர் மாதத்தில் முன்னெடுத்ததுடன் அதன் மூலம் நாம் செலுத்த வேண்டிய கடனில் சிறு பங்களிப்பை வழங்க முடிந்தது. இரண்டாவது கட்டமாக இருதரப்பு சர்வதேச கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதானது கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்றது.

பரிஸ் கிளப் மற்றும் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இந்த கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்தன. அதன் போது நாம் கடனை செலுத்துவதற்கான காலம் அதிகரிக்கப்பட்டதுடன் வட்டி வீதமும் குறைக்கப்பட்டது. இது நாம் பெற்றுக் கொண்ட பெரும் வெற்றியாகும்.

அதன் பின்னர் சர்வதேச பிணை இறையாண்மையாளர்களுடன் கடன் மறு சீரமைப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அது கடந்த நான்காம் திகதி இடம் பெற்றது.

அதற்கான பேச்சு வார்த்தையில் எம்முடன் கடன் உரிமையாளர்களில் 50 வீதமானோர் இணக்கப்பாட்டுக்கு வந்தனர். இந்த இணக்கப்பாட்டிற்கு இணங்க எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய உறுதிப்பாடு மற்றும் அவர்களின் ஆய்வுகளுக்கு இணங்க மிக சிறந்த நிவாரணங்களை பெற்றுக் கொள்ளவும் இலங்கைக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இருதரப்பு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் போது அவர்கள் வழங்கியுள்ள நிதி குறைக்கப்பட மாட்டாது. நிவாரணமாக கடனை மீள செலுத்தும் காலத்தை அதிகரிப்பது அல்லது வட்டி வீதத்தை குறைப்பதே இடம்பெறும்.

தனியார் கடன் உரிமையாளர்களுடன் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் போது இலங்கைக்கு கடனை மீள செலுத்துவதற்கான வாய்ப்பு மற்றும் சர்வதேச இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன் மறுசீரமைப்பின் போது பெற்றுக்கொண்ட நிவாரணத்துக்கு பொருத்தமான வகையில் ஒப்பீட்டளவில் நிவாரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடன் உரிமையாளர்களிடம் நாம் எதிர்பார்த்த நிவாரணம் கிடைப்பதற்கு எதிர்வரும் 5 வருடங்கள் மற்றும் பத்து வருடங்களுக்குள் இலங்கை பொருளாதாரத்தில் பெற்றுக் கொள்ளும் வளர்ச்சி, அரச வருமானத்தை அதிகரித்தல் ஆகிய இலக்குகளை அடைவதற்கு நாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆழமான ஆய்வை மேற்கொண்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். அதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச உத்தியோகபூர்வ கடன் உரிமையாளர்களின் இணக்கப்பாடும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில் அரசாங்கம் கடனை மீள செலுத்துவது தொடர்பில் திறமையை அதிகரித்துக் கொள்வது அவசியமாகும்.

## மொத்த தேசிய உற்பத்தி வருடாவருடம் ஐந்து வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும்

கலாநிதி **ஆர்.எச்.எஸ்.சமரதுங்க** (ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர்)

இலங்கை பெற்றுக் கொண்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான கடன்களை மீள செலுத்துவதை முறையாக முன்னெடுத்துச் செல்வது சம்பந்தமாக பல்வேறு கடன் வழங்குனர்களுடனும் கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான வேலைத் திட்டம் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கமும் அதிகாரிகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் எதிர்காலத்தில் இலங்கையானது கடன்களை மீளச் செலுத்த முடியாத வீழ்ச்சியான நிலைமை ஏற்படாதவாறு நிலைமையை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த பயணத்தில் மிகுந்த ஸ்திரத்தன்மையுடனான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான தலைமைத்துவத்தை வழங்கியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் 2022ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நாட்டில் மூன்று வரவு செலவு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முதலாவது வரவு செலவுத் திட்டமும் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் அந்த வருடத்தின் நவம்பர் மாதத்திலும் மூன்றாவது வரவு செலவுத் திட்டம் கடந்த வருடம் நவம்பர் மாதத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று வரவு செலவுத் திட்டங்கள் மூலமும் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தி, மக்களுக்கான நலன்புரி செயற்பாடுகளை உருவாக்குவதற்கான பல யோசனைகள் மற்றும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் பொருளாதார, சமூக அபிவிருத்தி இலக்கை நிவர்த்தி செய்வதற்காக புதிதாகவும் மற்றும் திருத்தமாகவும் 60க்கும் மேற்பட்ட சட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 30 சட்டங்கள் பொருளாதார முகாமைத்துவம் மற்றும் அதனோடு இணைந்த முக்கியமான சட்டங்களாகும்.

இந்த சட்டங்களில் 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கி சட்டம், அரச கடன் முகாமைத்துவ சட்டம், திட்டமிடல் தொடர்பான புதிய நியதிகளை உள்ளடக்கிய சட்டம் பொருளாதார பரிவர்த்தனை சட்டம் ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. நாட்டின் அரச கடன் முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நான்கு முக்கிய நிறுவனங்கள் காணப்படுகின்றன.



அவை பல்வேறு விதத்தில் அரச கடன்முகாமைத்துவத்தை மேற்கொள்கின்றன. எனினும் அதற்காக, தனியான நிறுவனம் ஒன்று உருவாக்கப்படவில்லை. அந்த குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் அரச கடன் முகாமைத்துவம் தொடர்பான புதிய சட்டத்தின் கீழ் தனி நிறுவனம் ஒன்றை உருவாக்குவதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

திட்டமிடல் தொடர்பில் சட்டம் எமது நாட்டில் இதுவரை நடைமுறையில் இல்லை. அது தொடர்பில் அமைச்சரவையின் அனுமதியுடனான கட்டளைகள் மற்றும் சுற்று நிருபங்கள் மூலமே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் திட்டமிடல் தொடர்பில் புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அது தற்போது சட்டமூலமாக உள்ளது.

எமது நாட்டில் 50க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பாரிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

அவற்றுக்கான மறு சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனை முறைப்படுத்தி பயன்களை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் பங்களிப்பை அதிகரித்துக் கொள்ள முடியும்.

இவ்வாறான சூழலில் தற்போதைய அரசாங்கம் சமர்ப்பித்துள்ள, காலத்திற்குப் பொருத்தமான தூர நோக்குடனான புதிய சட்டமாக பொருளாதார பரிவர்த்தனை சட்டத்தை குறிப்பிட முடியும். அதில் ஐந்து சட்டங்கள் இணைந்துள்ளன. இலங்கையின் வரலாற்றில் நான் அறிந்த வகையில் முக்கியமான சட்டமாக 1980 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தொழிற்பயிற்சித் துறை மற்றும் அதனோடு இணைந்த மூன்று சட்டங்கள் இணைந்ததான சட்டத்தைக் குறிப்பிட முடியும். அதன் பின்னர் நாம் அறிந்து கொள்ள வேண்டிய சட்டமாக பொருளாதார பரிவர்த்தனை சட்டத்தை குறிப்பிட முடியும்.

அதில் பொருளாதார கொள்கை மற்றும் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய விதம், இலக்கு மற்றும் பெற்றுக் கொள்ளக் கூடிய வெற்றி, அதனை அடையக்கூடிய வழிகாட்டல் மட்டுமின்றி புதிய முதலீடுகளை கொண்டு வருதல் உள்ளிட்ட விடயங்கள் சுருக்கமாக உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கையானது சிறிய பொருளாதாரத்தை கொண்ட ஒரு நாடு. அதன் பெறுமதி 85 பில்லியன் அமெரிக்கன் டொலராகும். அத்துடன் எமது நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களே உள்ளன. அவற்றை மிகவும் சிறந்த பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதில் நாம் கவனமாக செயற்பட வேண்டும்.

அதற்காக நாம் புதிய ஆராய்ச்சிகள், பயிற்சி, தொழில்நுட்பம், நவீன உலகின் அறிவையும் இணைத்துக் கொள்வது அவசியம். அந்தவகையில் பொருளாதார பரிவர்த்தனை சட்டமானது, அந்த இலக்குகளை வெற்றி கொள்வதற்கான வழிகாட்டல்களை பெற்றுக் கொடுக்கும்.

அதற்கிணங்க மேற்படி சட்டத்தில் மூன்று முக்கிய விடயங்களை நிவர்த்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முக்கியமாக அரச கடன் நிலைபேற்றுத் தன்மையை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மீண்டும் அதே குழிக்குள் விழாமல் முன்னோக்கிச் செல்லவேண்டும்

பேராசிரியர் **பிரியங்க துனுசிங்க** (கொழும்பு பல்கலைக்கழக பொருளாதார விஞ்ஞான ஆய்வுகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்)

உலக மக்கள் இலங்கை மக்களான எம்மை வாழ்விப்பதற்கான எதிர்பார்ப்பைக் கொண்டிருப்பவர்கள் அல்ல. மாறாக நாம் வாழ்வதற்கு நீண்டகால பொருளாதார வளர்ச்சியுடன் கடனை மீள செலுத்தும் திறமையுடன், வளர்ச்சியடைந்த நாட்டை உருவாக்குவது அவசியமாகும்.

அதற்காக முன்னெடுக்கப்படும் பயணத்தில் எமது ஏற்றுமதி கேந்திர பொருளாதாரத்தை உருவாக்கிக் கொள்வது முக்கியமானதாகும்.

நாம் தற்போது கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றோம் 2010ஆம் ஆண்டில் உலகில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இப்போதும் அதே போன்ற நடவடிக்கையை மேற்கொள்ளப்படுகிறது ஆசிய பிராந்திய நாடுகளில் 32 வீதமான கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளுக்கு 30% ஆகவும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு 31% ஆகவும் ஆபிரிக்க நாடுகளுக்கு 47% ஆகவும் நிவாரணம் கிடைத்துள்ளது. தற்போது எமக்கு 28% நிவாரணம் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதன்மூலம் நாம் கவனத்திற்கொள்ள வேண்டியது, எல்லாக் காலங்களிலும் நாம் கடன் நிவாரணத்தில் தங்கியிருக்கக் கூடாது என்பதே.

உலகில் எந்த நாடும் வளர்ச்சியடைந்த நாடாக உருவாவதற்கு கடன் நெருக்கடியிலிருந்து மீள்வது முக்கியமாகும்.

கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு மூன்று விடயங்களை இலக்காகக் கொள்வது அவசியமாகும் அவ்வாறான இலக்கை வெற்றி கொண்ட நாடுகள் வளர்ச்சியடையும்.



தேசிய உற்பத்தி சதவீதத்தில் நேரடியாக வெளிநாட்டு முதலீடு நான்கு அல்லது ஐந்து வீத மட்டமாக காணப்பட வேண்டும். பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு 65 மற்றும் 70 வீத மட்டத்தில் காணப்பட வேண்டும். பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதி வருமானம் 65% முதல் 70 வீதமாகவும் காணப்பட வேண்டும். அத்துடன் எமது நாட்டில் தற்போது பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதி வருமானம் 21.5% ஆகக் காணப்படுகிறது. அதனை 25% ஆகவும் எதிர்காலத்தில் 40% ஆகவும் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருவது அல்லது புதிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் போது நாம் அடைய வேண்டிய இலக்கு மற்றும் நிவர்த்தி செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் பாரியளவில் காணப்படுகின்றன.

இலஞ்சம், ஊழல் என்பன இல்லாதொழிக்கப்பட வேண்டும். உலக ஊழல் மோசடி விரோத பட்டியலில் எமது நாடு முன்னேற்றகரமான மட்டத்தை அடைவது முக்கியமாகும்.

வர்த்தகத்தை இலகுபடுத்தும் பட்டியலில் உலகம் ஏற்றுக்கொள்ளும் மட்டத்திற்கு நாம் வருவது அவசியம். அவ்வாறான செயற்பாடுகளை பின்பற்றாமல் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதால் மட்டும் நாம் நெருக்கடியிலிருந்து மீள முடியாது.

அவ்வாறு நாம் செயற்படாவிட்டால் மீண்டும் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவும் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றுக்கொள்ளவும் நேரும்.

எம்மைப் போன்று கடன் நெருக்கடியில் உள்ள கானா, சிலி, பெரு, ஈக்வடோர், ஆஜென்டினா, கிரேக்கம் ஆகிய நாடுகள் அதிலிருந்து மீள்வதற்கு பல சந்தர்ப்பங்களில் கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டுள்ளன.

எவ்வாறெனினும் அதுபோன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நாம் தயாராகக் கூடாது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் பாடங்களைக் கற்றுக் கொண்டு மீண்டும் அதே குழிக்குள் விழாதவாறு முன்னோக்கி செல்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியமாகும்.

# மாத்தறையில் இருந்து ஆரம்பமான ரணில் அலை



தேர்தல் பரபரப்பு தீவிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் அரசாங்க அணியுடன் இணைந்து அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெரிவிக்கும் கூட்டத் தொடரின் முதலாவது பேரணியை மாத்தறையில் ஆரம்பித்து வைத்தார். கூட்டத்திற்கு செல்ல வேண்டாம் என அழுத்தம் கொடுக்கப்பட்ட போதும், அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதில் கலந்து கொண்டனர் மொட்டின் ஒரு பகுதியினரும் இங்கே என அமைச்சர் கஞ்சன சொன்னது அதனை உறுதி செய்யும் வகையில் இருந்தது.

அமைச்சர் கஞ்சனவும், ஜனாதிபதி தலைமைச் செயலக பணிக்குழு தலைவர் சாகலவும் இந்தச் கூட்டம் வெற்றிபெற கடுமையாக உழைத்தனர். அதற்காக மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை, வெலிகம, தெவிநுவர, அக்குரஸ்ஸ, கம்புருபிட்டிய ஆகிய தேர்தல் தொகுதிகள் உட்பட அனைத்து தேர்தல் தொகுதி அமைப்பாளர்களுக்கும் கூட்டம் குறித்த அறிவிப்பைச் செய்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கலந்து கொண்டதால் மாத்தறை கோட்டை மைதானம் நிரம்பி வழிந்தது. மொனராகலை மாவட்ட மக்களுக்கான 'உறுமய' பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு வெள்ளவாயவில் இடம்பெற்றது. அந் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதி ரணில் அங்கு வந்தார். வெலிகமவில் உள்ள அமைச்சர் கஞ்சனாவின் வீட்டில் ஜனாதிபதி ரணிலுக்கு மதிய உணவு தயார் செய்யப்பட்டிருந்தது. மதிய உணவை சாப்பிட்டுவிட்டு, ஜனாதிபதி ரணில் கூட்ட மைதானத்திற்கு வந்தார். அரசாங்கத்தின் சார்பில் அங்கு வந்த அனைவருக்கும் கஞ்சன, மொட்டு கட்சியின் வேட்பாளராக ரணிலே போட்டியிட வேண்டும் என்று கூறி நன்றி தெரிவித்தார். மகிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்ற உறுப்பினரும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றவிருந்த நிலையில், கடும் வெப்பம் காரணமாக மக்களுக்கு இடையூறு ஏற்படாமல் ஜனாதிபதியின் உரைக்கு நேரடியாகச் செல்லுவோம் என கூறப்பட்டது. அதன்படி கஞ்சன பேசிய பின்னர் ஜனாதிபதி ரணிலுக்கு வாய்ப்பை ஒதுக்கினார். பேரணியின் பின்னர், மாத்தறை விடுதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. எம்.பி.க்களுக்கு இடையிலான சம்பாஷணையின் போது அமைச்சர் அலி சப்ரி, “முதல் கூட்டம் மாத்தறையில் நடத்தப்பட்டது நல்லது. நுகேகொடையில் இருந்து மஹிந்த காற்று ஆரம்பித்தது போல், ரணில் காற்று மாத்தறையிலிருந்து ஆரம்பித்தது” என கூற அனைவரும் தலையை ஆட்டினார்கள்.

“நீங்கள் அனைவரும் கண்டி கூட்டத்துக்கு வரவேண்டும். வந்து உதவி செய்ய வேண்டும்." என்று அமைச்சர் மனுஷ கூறியதும், அமைச்சர் ரமேஷும், அமைச்சர் சப்ரியும் கண்டிப்பாக வருவோம் என்றார்கள். பின்னர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை அனைவரும் தேடிய போது, மீரிகமவில் மொட்டுக்கட்சியின் கூட்ட த்திற்கு சென்றிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த தெரிவித்தார்.

திங்கட்கிழமை காலை ஜனாதிபதி ரணில் அலுவலகத்திற்கு வந்து அமைச்சரவை மற்றும் அமைச்சர்கள் அடங்கிய ஊடகக் குழுவைச் சந்தித்தார். மாலையில் அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றார். அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கான பிரேரணையை அமைச்சர்கள் சபையில் ஜனாதிபதி சமர்ப்பித்தார். அதாவது 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் ஏற்பட்ட தவறை திருத்திக் கொள்ள வேண்டும். 19இல் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 வருடங்களாக மாற்றும் வகையில் திருத்தம் நிறைவேற்றப்பட்ட போதிலும், 6 வருட காலம் இடைநிறுத்தப்படாதது பிரச்சினையாகவே இருந்து வந்தது. எனவே ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்ற பிரேரணையை ஜனாதிபதி ரணில் முன்வைத்து நிறைவேற்றினார். பின்னர் 6 வருட கதை முடிந்து விடுவதோடு விரைவில் அதற்குரிய திருத்த மசோதா தாக்கல் செய்யப்படும். அதனையடுத்து, அமெரிக்காவின் உதவிச் செயலாளர், ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோரை செயலகத்தில் சந்தித்தார். ஜனாதிபதியின் கடன் மறுசீரமைப்புத் திட்டம் மற்றும் நாட்டின் பொருளாதார சீர்திருத்தத் திட்டம் ஆகியவற்றை அவர் பாராட்டினார். செவ்வாய்க்கிழமை காலை ஜனாதிபதி ரணில், கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதற்காக பாராளுமன்றத்திற்குச் சென்றார். அங்கு தொங்கு பாலம் கதையில் இருந்து சமூக வலைதளங்களில் தனக்கு செய்யப்படும் கேலிகள் குறித்தும் பேசினார். ஜனாதிபதியின் உரைக்கு கட்சி மற்றும் எதிர்க்கட்சி அமைச்சர்கள் பலரும் பாராட்டு தெரிவித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் நல்லது கெட்டது உரைக்கு ஜனாதிபதி ரணிலின் பதிலையும் அவர்கள் பாராட்டினர். பொருளாதாரம் மேம்படும் போது இவர்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பொறாமையும் கபடமும் வேரூன்றியுள்ளது. ." இவ்வாறு எம்.பி.க்கள் கூறினர்."ஒரு பெரிய நாட்டிலிருந்து ஒரு தூதுவர் உட்பட ஒரு குழு எதிர்க்கட்சித் தலைவர்களான சஜித், ஹர்ஷா மற்றும் பலரைச் சந்தித்துள்ளது, அவ்வேளையில் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் வெற்றியில் மகிழ்ச்சியடையவில்லை என்பது ஆச்சரியமாக இருந்தது." என கூறியதை பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த குழுவிடம் வருத்தத்துடன் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களை பாராளுமன்றக் குழு அறையொன்றில் சந்திக்கச் சென்றதையடுத்து குறித்த குழுவினர் அங்கிருந்து வெளியேறினர். அந்த நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் நேராக சிறிகொத்தவில் கட்சியின் தலைமையகத்திற்கு சென்றார்.“நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நான் எழுப்பிய கேள்விகளுக்கான அனைத்துப் பதில்களும் ஜனாதிபதி உரையில் இருந்தன என பேராசிரியர் ஆசு மாரசிங்கவுடன் அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார். செவ்வாய்க்கிழமை மாலை, ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட பின்னர், கட்சியின் முகாமைத்துவ குழுவும் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் கூடியது. அதை முடித்துவிட்டு வீட்டுக்குச் செல்லும் வழியில் வாழ்க்கை பயணத்தை நிறைவு செய்த மூத்த அரசியல்வாதியான ஆர். சம்பந்தனின் பூதவுடலுக்கும் இறுதி அஞ்சலி செலுத்தினார். புதன்கிழமை காலை ஜனாதிபதி ரணில், ஆசிரியர் நியமனங்களை வழங்கும் வைபவத்திற்காக அலரி மாளிகைக்கு சென்றார். அங்கு ஆசிரியர்களின் அருகில் சென்று உரையாடினார். . மாலையில் அவர் கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதிகள் மற்றும் வலய அமைப்பாளர்களைச் சந்திக்க சீதுவைக்குச் சென்றார். அங்கு மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியில் இணைவது தொடர்பாகவும் தொகுதி மற்றும். பிரதேச அமைப்பாளர்கள் ஏனைய தொகுதிகளுக்கு வருவது தொடர்பிலும் கலந்துகொண்டவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டறிந்தனர்.“ஒரு பழம் சாப்பிட்டால், அந்தப் பழத்தின் பெயரால் அது அழைக்கப்படுகிறது. பொடியாக நறுக்கிய பழங்களின் துண்டுகளைச் ஒன்றாகச் சேர்த்தால், அது ஃப்ரூட் சாலடாக மாறும். எனவே இவை அனைத்தையும் ஒன்றிணைத்தே முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அத்துடன் கம்பஹா மாவட்டத்தின் வெற்றி முழு நாட்டின் வெற்றிக்கும் முக்கியமானது. எனவே, நீங்கள் தொகுதிகள் மற்றும் பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தாமல் இந்த மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும்" என்றார். அனைத்து உரைகளின் முடிவில் ஜனாதிபதி அளித்த பதில் அதுதான்.

ஜனாதிபதி ரணில் வியாழக்கிழமை காலை பிளவர் வீதியிலுள்ள தனது கட்சி அலுவலகத்திற்குச் சென்றார். பல அமைச்சர்கள் ஏற்கனவே அங்கு வந்திருந்தார்கள். ஜனாதிபதி வழமையாக இந்த நாட்களில் கட்சி அலுவலகத்தில் அதிக நேரத்தை செலவிடக் காத்திருக்கிறார்.“ ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக விளக்கம் கேட்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு குறித்து இப்போது அனைவரும் பேசுகிறார்கள். இதற்கு நாங்கள் பின்னால் இருப்பதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. என்று பாராளுமன்ற உறுப்பினர் வஜிர கூறினார். “ஜனாதிபதி தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தேன். மறுபுறம், தேர்தல் ஆணைக்குழுவுக்கு 8 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம். ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அதில் எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. என்று ஜனாதிபதி கூறினார். ஆனால், 19ஆவது திருத்தத்தின் மூலம் 6 ஆண்டுகளை 5 ஆண்டுகளாகக் குறைத்தாலும் 6 ஆண்டுகள் ரத்து செய்யப்படவில்லை என்ற வாதம் உள்ளது. என்று பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த வாதிட்டார்.“ ஆம், அதனால்தான் 6 வருடங்களை நீக்கி 5 வருடங்களாக மாற்றும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவையில் பிரேரணை முன்வைக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் மீண்டும் பதிலளித்தார்.“ அன்று 19ஆவது அரசியலமைப்பு கொண்டுவரப்பட்ட போது ஜனாதிபதி பதவி காலத்தை குறைப்பது குறித்து மைத்திரிபால சிறிசேனவுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அவரும் ஜயம்பதி விக்ரமரத்னவும் இணைந்து இந்தத் திருத்தத்தைச் செய்தார்கள். அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தலையிடவில்லை. பேராசிரியர் ஆசு மாரசிங்க கடந்த காலத்தை நினைவு கூர்ந்தார்.“அன்று ஜனாதிபதி சிறிசேன 6 வருடங்கள் பற்றி பேசிய போதும், நீதிமன்றம் அவருக்கு இந்த வாய்ப்பை வழங்கவில்லை. மற்றையவர் இந்த மனுவை தாக்கல் செய்தவர் ரொஹான் பல்லேவத்தவின் கட்சியின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ள வர்த்தகர். பல்லேவத்த இப்போது ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினராக உள்ளார் என்று அமைச்சர் மனுஷ அனைவரும் ஆச்சரியபடும்படி கூறினார் .“ஜனாதிபதி மீது அவதூறு ஏற்படுத்தவே இது செய்யப்பட்டது. விடயம் இப்போது தெளிவாகிவிட்டது." பாராளுமன்ற உறுப்பினர் வஜிரவும் கலந்துரையாடலில் கலந்து கொண்டார். “எதிர்க்கட்சிக்கு இப்போது வேறு வழியில்லை. அதனால்தான் கடன் மறுசீரமைப்பினால் எந்தப் பலனும் இல்லை." ..என்பார்கள் “அந்தக் கதை தவறு. இங்கு பெரிய கடனை குறைக்காவிட்டாலும், 5 பில்லியன் ரூபாய் மிச்சமாகும். மறுபுறம், மேலும் 3 பில்லியன் கடன் குறைக்கப்பட்டுள்ளது. அப்போது நமக்கு 8 பில்லியன் ரூபாய் நன்மை கிடைக்கும். அப்படிப் பார்த்தால் 20% கடன் குறைப்பு கிடைத்துள்ளது. நம்மிடம் 40 பில்லியன் வெளிநாட்டுக் கடன் இருப்பதால், 8 பில்லியனை சதவீதமாக எடுத்துக் கொண்டால், 20% என்பது சரி. மறுபுறம், 4 ஆண்டுகளுக்குப் பிறகே கடன் செலுத்தப்படும்.

ஒலுவில் எஸ். முஸம்மிலின்

# ஒத்திசைப்புப் பெற்ற கவி வரிகளின் தொகுப்பு




எஞ்சிக் கிடக்கும் வினாடிகள்' ஒலுவில் எஸ். முஸம்மில் எழுதியிருக்கின்ற கவிதை நூல். அழகிய முகப்பட்டையோடு 78 பக்கங்களில் 64 கவிதைகளோடு விரிந்திருக்கின்றது.

முஸம்மில், தினகரன் பத்திரிகையில் எம்.எச்.எம் ஷம்ஸ் என்ற மறைந்த இலக்கிய ஆளுமை தயாரித்தளித்த 'புதுப் புனலில்' வளர்ந்த படைப்பாளி. இருபது வருடங்களுக்கும் மேலான கவிதைப் பரிச்சயமுடைய முஸம்மிலின் முதல் கவிதை நூல் இது. வெறும் வசன முறிவுகளைக் கவிதைகள் என்று நம்பிக் கொண்டிருப்பவர்களில் இருந்து வித்தியாசப்படுபவர் முஸம்மில். அளவான சொற்களை அழகாகக் கையாண்டு கவிதைகளைத் தருபவராக அவரை அடையாளப்படுத்த முடியும். அவரின் கவிதைகள் ஒத்திசைப்புப் பெற்று ஒழுகுவன என்பதற்குத் தொகுப்பிலுள்ள அவரின் கவிதைகள் சான்று பகர்வனவாக அமைந்திருக்கின்றன. கவிதைகளின் தலைப்புகளிலேயே மொழியழகையும் ,கவித்துவத்தையும் கொட்டி விடும் ஆற்றல் அவருக்கு வாய்த்திருப்பதனை இந்நூலை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்வர் .

நிலவைச் சுட்ட இரவு
பசியாறிய வறுமை
கானலான காதல்
எஞ்சிக் கிடக்கும் வினாடிகள், என்ற சில தலைப்புகளை பதப் பருக்கைகளாக இங்கு எடுத்துக் காட்டலாம் .

இயைபுத் தொடை பெற்று, ஓசை உருவம் பெற்று நிமிர்கின்ற பல கவிதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன..

'நிலைமாறும் உலகில்' என்ற தலைப்பில் இடம்பெறும் கவிதையையும்,,'கானலான காதலில்'வரும் வரிகளையும் ' அப்பக்காரி கவிதையையும் உதாரணமாக எடுத்துச் சொல்லலாம்.

"வேசங்கள் எதுவரை தொடருமோ?
வேள்வியில் வாழ்வு படருமோ?
கேள்விகள் கேட்டால் குற்றமே
கேடென ஆகுமே சுற்றமே" ..( நிலை மாறும் உலகில்)

பத்து முறை பார்த்த பின்பு
மொத்தமாய் நடக்கின்றாய்!
பித்துமனம் தேடயில
மௌனமாய் கடக்கின்றாய்!
(கானலான காதல்)

பனையோலைத் தட்டில்
பாலூற்றிய அப்பம்
பார்ப்பதற்கு வடிவான
பளபளப்புச் செப்பம்!(அப்பக்காரி)

முஸம்மிலின் புதுக்கவிதைகள் வாசிக்குந்தோறும் நமது மன உணர்வுகளோடு அப்பிக் கொள்பவை.. கலைத்துவ இரசனை குறையாத வண்ணம் அழகியலைச் சுமந்து வருபவை.. காட்சிப்படுத்தல்கள் நிறைந்தவையாக அமைந்து இன்பமளிப்பவை. 'பொய்முகம்' என்ற கவிதையில் வரும் சில வரிகள் இவை.

"இளந் தென்றல் கை கோர்க்கும்
அந்தி நேரத்தில்,
நீயும் நானும் ஒன்றித்திருந்த
அந்த ஆற்றங் கரையில்தான்
இன்றும் அமர்ந்திருந்தேன்.
நாணல்கள் தலையாட்டிய தாளத்தில் தான் உனதான கண்ணசைவுகள்
அழகான கானமிசைத்தது மௌனமாய்..
தலை தடவிய என்விரல்கள்
மணலினைக் கீறிக் கொள்கின்றன."
என்று அவர் பாடும் போது அக்காட்சி அப்படியே நம்மனக் கண் முன் விரிகின்றது.

முஸம்மில், பொருத்தமில்லாப் படிமச் சேர்க்கைகளை தலை,கால் தெரியாமல் பெய்து வைப்பவரல்லர்.

படிமச் சிறப்பும் உவமையழகும் கொண்ட பல கவிதைகளை முஸம்மில் நமக்குத் தருகின்றார்.

"கசாப்புக் கடையின்
கூரிய கத்தியால்
கீறி விட்டதாய்
மனசு நிசப்தமாக அழுது புலம்பியது.'
(நிலவைச் சுட்ட இரவு)

"இந்த தேசம் ஈரலிப்பாகவே
சுவாசித்துக் கொண்டிருக்கின்றது.
வறுமையில்
ஏழைகள் விட்டுக் கொண்டிருக்கும்
சொட்டுச் சொட்டான கண்ணீரால்"( பசியாறிய வறுமை)

"எரிதணலின் விரல்கள் கொண்டு
வருடுவது போல்
மெல்லக் கொல்லுது உன் நினைவுகள்" (சலனம்)

கோடைச் சூரியன் சுட்டெரித்த வரட்சியாய்
எல்லோர் மனதினிலும் ஏதோவோர் வெறுமை.
(ஏக்கத்தின் தேடல்கள்)

மண்வளச் சொற்கள் கொண்ட ,நாட்டாரியல் பண்புகள் தோய்ந்த கவிதைகளைத் தருவதிலும் முஸம்மில் முன்னிலை பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

"சாறன மறிச்சிக் கட்டி
சண்டியன் போல் போனாரு
சாராய நாத்தத் தோட
சந்தியில கிடப்பாரு
அடுப்பெரிக்க விறகுமில்ல
அடுத்த வேள உணவுமில்ல
அஞ்சு ரூபா ஒழப்புமில்ல
அரசியல் பேசும் பொழப்பு வேற"(தேர்தல் கால அவலம்)

"காட்டு வயல் வெதச்சிருக்கு
காணி நெலம் வரண்டிருக்கு
மேற்கால வாறமழை
மேலால பெய்யாதோ"?(சுமைகள்)

வாழ்வியற் கோலங்களைப் பல்வேறு கோணங்களிலும் தரிசிக்கத் தருகின்ற விதத்தில் அவரின் கவிதைகளின் பொருட்பரப்பு விரிந்துள்ளது. துயரங்கள் ,அவலங்கள் எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், காதல், ஆத்மீக உணர்வு, போலிகள் என்று அவற்றை வகைப்படுத்திப் பார்க்கலாம். கவிதை நூலுக்கு முஸம்மில் புதியவரானாலும் கவிதைக்கு அவர் புதியவரல்லர் என்பதை, தனது கவிதைகளின் மூலம் நிரூபித்திருக்கின்றார் முஸம்மில்.

அவருக்கு நமது வாழ்த்துகள்!

நூல்:– எஞ்சிக் கிடக்கும் வினாடிகள்
வெளியீடு:– சபியா வெளியீட்டகம்,ஒலுவில்
முகவரி:– 36/1 O.P.A வீதி,ஒலுவில்–06.
விலை:– ரூபா 600/–

பாவேந்தல் பாலமுனை பாறூக்

# உத்தர பிரதேசத்தில் 123 பேரை பலிகொண்ட துயர சம்பவம்!

**இந்தியாவின் உத்தர பிரதேசம், புல்ராய் கிராமத்தில் இடம்பெற்ற மதநிகழ்வொன்றில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்குண்டு 123 பேர் உயிரிழந்துள்ள துயர சம்பவம் உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.**



## யார் இந்த போலே பாபா?

இந்தியாவின் உத்தர பிரதேசம், ஹத்ராஸ் மாவட்டத்தில் உள்ள புல்ராய் கிராமத்தில் போலே பாபா என்ற சுவாமியார் நடத்திய சொற்பொழிவைக் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்த நிகழ்வு நிறைவடைந்ததையடுத்து மக்கள், போலே பாபா அமர்ந்திருந்த காலடி மண்ணை எடுக்க முயன்றுள்ளனர்.

மேலும், சொற்பொழிவு நடந்து கொண்டிருக்கும் போதே சனநெரிசலினால், ஒருவர் பின் ஒருவராக மயங்கி விழ ஆரம்பித்ததாக அங்கு இருந்த மக்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சிக்குண்டு பெண்கள், சிறார்கள் உள்ளிட்ட 123 பேர் நேற்றுவரை உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

இந்தச் சம்பவமானது அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், போலே பாபா சுவாமியார் தலைமறைவாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இந்த துயர சம்பவம் நடந்து 2 நாட்கள் ஆன நிலையில் ஒருவர் கூட நேற்றுவரை கைது செய்யப்படவில்லை.

இது இவ்வாறிருக்க, உத்தர பிரதேசத்தில் பிரபல சுவாமியாராக வலம் வருபவர்தான் போலோ பாபா. இவர் ஹத்ராஸ் நகரில் ஆன்மீக சொற்பொழிவை நடத்த திட்டமிட்டிருந்தார். இது தொடர்பாக அறிவிப்பும் வெளியானது. இவரது உரையை கேட்க ஆயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டனர். ஆனால், இவ்வளவு பக்தர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் முறையாக செய்யப்படவில்லை. இப்படி இருக்கையில் நிகழ்ச்சி முடிந்து பக்தர்கள் வெளியேறியபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெரிசலில் சிக்கிய பலர் திடீரென மயங்கி விழுந்தனர். ஆனால், அவர்களை மீட்காத சக பக்தர்கள் அவர்கள் மீது ஏறி நிகழ்ச்சி நடந்த இடத்திலிருந்து வெளியே வந்தனர். இதனால் நெரிசலில் சிக்கி 123 பேர் உயிரிழந்தனர்.



மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் பலரின் நிலை மோசமாக உள்ளது. இந்தச் சம்பவத்தின் துயரம் ஒருபுறம் இருந்தாலும், காயங்களுடன் மீட்கப்பட்டவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று உ.பி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மருத்துவமனைகளில் போதுமான ஒக்சிஜன் வசதி இல்லை என்றும், மருத்துவமனை வளாகத்தில் பக்தர்களின் உடல்கள் குப்பைகளை போல போடப்பட்டிருப்பதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை கிளப்பிய நிலையில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் மோடி உட்பட பல தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

அதேசமயம் பொலிசார் பதிவு செய்துள்ள எஃப்.ஐ.ஆரில் நிகழ்ச்சி நடத்திய போலோ பாபாவின் பெயர் குறிப்பிடப் படவில்லை. இது குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு உ.பி துணை முதல்வர் பிரஜேஷ் பதக் பதிலளித்திருக்கிறார்.

"இந்தச் சம்பவத்தில் குற்றவாளிகள் யாரும் தப்ப முடியாது. சம்பவத்துக்குக் காரணமானவர்கள் அனைவர் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று அவர் கூறியுள்ளார்.

ஆன்மீக நிகழ்ச்சிக்கு 80,000 பேர் கூடுவார்கள் என்றுதான் பொலிசாரிடம் அனுமதி வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிகழ்ச்சியன்று சுமார் 2.5 இலட்சம் பக்தர்கள் கூடியுள்ளனர். இதுதான் இந்த விபத்துக்கு அடிப்படைக் காரணமாகும்.

ஹத்ராஸ் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்படும் என உத்தரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியை நடத்தியவர்களுக்கு காவல்துறை வலைவீசியுள்ளது. காயமடைந்தவர்கள் ஹத்ராஸ் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நடந்த சம்பவத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவ்விவகாரத்தில் தொடர்புடைய பலர் தலைமறைவாகி இருப்பதாக பொலிசார் தகவல் தெரிவிக்கின்றனர்.

உத்தரப் பிரதேசம் மாநிலத்தின் எடா மாவட்டத்தை சேர்ந்த இந்த சுவாமியாரின் இயற்பெயர் நாராயண் சகார் ஹரி. கல்வியை முடித்த கையோடு பாபா உளவுத்துறையில் பணியாற்றியதாக கூறப்படுகிறது. இவர் மீது பல குற்ற வழக்குகளும் உள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

உ.பியின் பல பகுதிகளில் அதிக செல்வாக்கு மிக்க மத போதகராக வலம்வந்து போலா பாபா, அம்மாநிலத்தின் பொலிஸ்துறையில் காவலராக பணியாற்றி 1990 இல் விடுப்பு ஓய்வு பெற்றபின், சுவாமியாராக மாறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்.சாரங்கன்...

# அமைச்சர் அலி சப்ரி இன்று சிங்கப்பூர் பயணம்



வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இன்று (07) சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கிறார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணனின் அழைப்புக்கமைய அமைச்சர் அலி சப்ரியின் சிங்கப்பூர் விஜயம் இன்று முதல் நாளை 08ஆம் திகதி வரை அமையுமென வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்குமிடையிலான பன்முக உறவுகளை வலு ப்படுத்தும் நோக்கில் சிங்கப்பூர் பிரதமருடன் இரு தரப்பு கலந்துரையாடலில் அமைச்சர் அலி சப்ரி ஈடுபடவுள்ளார்.

அத்துடன் சிங்கப்பூரில் ஜுலை 09ஆம் திகதி நடைபெறவுள்ள (Reuters NEXT AsiaPacific Summit) ராய்ட்டர்ஸ் நெக்ஸ்ட் ஆசியபசுபிக் உச்சி மாநாட்டிலும் அமைச்சர் அலி சப்ரி பங்கேற்கவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# புதிய பொருளாதாரத்துடன் நாட்டுக்கு புதிய கல்வி முறை அறிமுகமாகும்

## "நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறி செல்ல இந்தியா வழங்கும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது"

தென் மாகாணத்தில் 200 பாடசாலைகளுக்கு நவீன வகுப்பறைகள் 2,000 டெப் கணினிகள் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு. புதிய பொருளாதாரத்துடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மேம்பட்ட கல்வி முறையும் அவசியமானதெனவும், அதற்கான கல்வி சீர்திருத்தங்கள் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி ஹால் டி கோல் ஹோட்டலில் நேற்று (06) நடைபெற்ற கல்வி நவீனமயமாக்கலின் புதிய அத்தியாயமாக தென் மாகாணத்தின் 200 பாடசாலைகளுக்கு 2,000 நவீன வகுப்பறைகள் மற்றும் 2,000 டெப் கணினிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்திர் ரமேஷ் பத்திரண, இந்திய அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கமைய தென் மாகாண சபைக்கு கிடைத்த 30 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட 200 பாடசாலைகளில் 150 பாடசாலைகள் காலி மாவட்டத்திலும் ஏனைய 50 பாடசாலைகள் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அமைந்துள்ளன.

ஒரு வகுப்பறைக்கு 10 டெப் கணினிகள் என்ற வகையில் 200 வகுப்பறைகளுக்கு 2,000 டெப் கணினிகள் வழங்கப்பட்டன. இதன் அடையாள அம்சமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கு நினைவுப்பரிசு ஒன்றையும் வழங்கினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

"தற்போது உலகம் நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறி வருகிறது. அதற்கேற்ப, இந்நாட்டின் கல்வி முறையும் நவீன தொழில்நுட்பத்துடன் நடத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான கல்விச் சீர்திருத்தங்கள் அமைச்சினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அன்று நாம் பல கல்விக் கொள்கைகளை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினோம். அந்தக் கல்விக் கொள்கைகள் அன்றைய காலத்திற்கு ஏற்றதாக இருந்தாலும், இன்று ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியால், கல்வித் துறையில் புதிய சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

தற்போது பாடசாலைகளில், செயற்கை நுண்ணறிவுக் கழகங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பக் கல்வியை தொடங்கி சில வருடங்கள் ஆகின்றன. இந்த ஆண்டு நாம் ஆரம்பித்திருக்கும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி தேவைப்படும். அதற்குத் தேவையான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிளை அரசாங்கம் ஏற்படுத்தும். மத்திய கல்லூரிகள் மற்றும் தேசிய பாடசாலைகள் செயற்கை நுண்ணறிவு பாடசாலைகளாக மேம்படுத்தப்பட வேண்டும். நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறுவதில் அண்டை நாடான இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது. பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைக்கு ஐ.ஐ.டி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவுடன் எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக நடந்து வருகின்றன.

மலேசியாவில் நான் எலான் மஸ்குடன் கலந்துரையாடினேன். அவரது நிறுவனத்தின் இணையத் தொழில்நுட்பம் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் தொலைதூர கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கும் வாய்ப்பு கிடைக்கும். இன்று தென் மாகாணம் கல்வித்துறையில் அதீத திறமைகளை வெளிப்படுத்தும் மாகாணமாக மாறியுள்ளது.

தென் மாகாணத்தின் முதலாவது டச்சு பாடசாலையான பத்தேகம கல்லூரி இன்று தேசிய பாடசாலையாக மாறியுள்ளது. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எதிர்காலத்திற்கு ஏற்ற சந்ததியை உருவாக்கி ஒரு நாடாக உலகையே வெல்லும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது" என்று தெரிவித்தார்.



# தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை சம்பந்தன்

## யாழ். தமிழ்ச் சங்கம் இரங்கல்

இலங்கைத் தமிழரின் அரசியல் வேணவாக்களை மிதவாதப் போக்குடன் கையாண்ட தலைவர்களுள் மிக முக்கியமானவரும் தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையுமாக அமரர் இரா. சம்பந்தன்உள்ளார்.

இலங்கையில் சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கைத் தமிழர் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளை முன்கொண்டு சென்றதில் சம்பந்தனின் பங்களிப்பும் கனாதியான இடத்தை வகிக்கின்றதென யாழ். தமிழ்ச் சங்கம் தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தனின் மறைவையிட்டு யாழ். தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது. இலங்கை பாராளுமன்றத்தில் அதிக காலம் அங்கத்துவம் வகித்த தமிழ்த் தலைவர் எனும் பெருமையையும் இரண்டாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் எனும் பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இலங்கைத் தமிழரின் வாழ்வியல் பூர்வீகமான வடக்கு, கிழக்கு மண்ணை இணைத்து இரண்டு தரப்புகளும் மதிப்புணர்வுடன் அணுகிய தலைவராக பார்க்கப்படுகிறார். காலமூப்பினால் அவர் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் யாழ். தமிழ்ச் சங்கம் சார்பாக இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொதுஜன பெரமுன கட்சி...

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் அரசியல் வாழ்வின் 27ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வு நேற்று (06) களுத்துறை பொது விளையாட்டரங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# பாணந்துறையில் இன்று 'முஹர்ரமை வரவேற்போம்'

பாணந்துறை, எழுவிலை அஹதிய்யாஹ் பாடசாலை நிர்வாக குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'முஹர்ரமை வரவேற்போம்' சிறப்பு மாணவர் மன்றம் அலவியா முஸ்லிம் மகா வித்தியால கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் அகில இலங்கை அஹதிய்யா சம்மேளன உப தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம்.அஸ்வர், பிராந்திய தலைவர் ஜாபீர் ஹாஜியார், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எம்.எஸ்.எம். சல்மான் (ஆசிரியர்) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பாணந்துறை, எழுவிலை அஹதிய்யாஹ் பாடசாலை நிர்வாக குழுவினரான என்.ஏ.எம்.ரிப்தி, எம்.பி.எஸ்.வாரிஸ் (ஜே.பி), ஜி.ஏ.எப். சஹ்லினா ஆகியோர் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

# புகழ் பூத்த மூத்த கவிஞர் சடாட்சரன் காலமானார்

துறைநீலாவணை நிருபர்



ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் கிழக்கிலங்கையின் புகழ் பூத்த கவிஞர்களுள் ஒருவரான ஓய்வுநிலை உதவி கல்விப் பணிப்பாளரான கலாபூஷணம் மு.சடாட்சரன் தனது 84ஆவது வயதில் நேற்று காலமானார்.

இந்நிலையில் இவரது இறுதிக்கிரியை இன்று (07) ஞாயிற்றுக்கிழமை பெரியநீலாவணையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனையை பிறப்பிடமாகவும் பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், ஈழத்து கலை இலக்கிய பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவர்.

'புதிய பாதை' எனும் கவிதை நூல் தொகுதியை இவர் வெளியிட்டு, அனைவரதும் பாராட்டை பெற்றார்.

கிழக்கின் கவி சக்கரவர்த்தியாக திகழ்ந்த மறைந்த கவிஞர் நீலாவணனின் பேரன்புக்கு பாத்திரமான இவர், அவரது பாசறையில் வளர்ந்தார். அன்று நீலாவணன் எழுதிய 'மழைக்கை' எனும் நாடகத்தில் கர்ணனாக இவர் நடித்து அனைவரதும் பாராட்டை பெற்றார். தனது வாழ்நாளில் பெரும் பகுதியை எழுத்து மற்றும் கலை இலக்கிய துறைக்காக அர்ப்பணித்தவர். இன்னும் இரு நூல்களை வெளியிட வேண்டுமென முனைப்புடன் செயற்பட்டு வந்தார். அன்னாரின் இழப்பு ஈழத்து கலை இலக்கிய பரப்பில் பெரும் வெற்றிடத்தை விட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீஜயவர்தனபுரவுக்கு...

இரண்டு பஸ்கள் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஒரு பஸ், புறக்கோட்டையிருந்து பொரளை, தலவத்துகொடையூடாக ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலைவரை ஈடுபடும். மற்றைய பஸ், மாகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்திலிருந்து மஹரகம அமுதேனிய ஊடாக ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலைவரை ஈடுபடும்.

இந்த பஸ்களில் எந்த பயணிகளும் பயணிக்கலாம். அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, சுகாதார, கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரண, இராஜாங்க அமைச்சர் டொக்டர் சீதா அரம்பேபொல, சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால, வைத்தியசாலையின் தலைவர் டொக்டர் சாரங்க அழகப்பெரும, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பொறியியலாளர் லலித் டி அல்விஸ், பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் குலதிலக மற்றும் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கதிர்காம கந்தன் பெருவிழா நேற்று முதல் ஆரம்பம்

## இம்மாதம் 22ஆம் திகதி தீர்த்தோற்சவம்



வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமக் கந்தனின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நேற்று (06) ஆரம்பமாகியது. நேற்று (06) முதல் தினமும் பல்வேறு கலாசாரங்களை பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளுடனான ஊர்வலம் நடைபெறவுள்ளதுடன், இம்மாதம் 21ஆம் திகதி இறுதி பெருவிழா நடைபெறவுள்ளது.

22ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் நடைபெறும் தீர்த்தோற்சவத்தையடுத்து, கதிர்காமக் கந்தனின் உற்சவம் இனிதே நிறைவடையும்.

திருவிழாக் காலத்தில் கதிர்காமத்துக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து பொது வசதிகளையும் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மொனராகலை மாவட்ட ஆணையாளர் பசன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பக்தர்களின் பாதுகாப்புக்காக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளனர். அத்துடன், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் 17 நாட்களுக்கு மூடப்படும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கமைய, நாளை முதல் ஜூலை 22ஆம் திகதிவரை அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பின் பெருந்தலைவர்...

நடைபெறும். அன்னாரின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள இலக்கம் 115, அஞ்சல் நிலைய வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைக்கான சமயக்கிரியைகள் ஆரம்பமாகி, 1.00 மணியளவில் நிறைவு பெறும். சுமார் 1.30 மணிக்கு விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 2.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் உரை நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவரின் பிரதிநிதி லக்ஷ்மன் கிரியெல்லவும், பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு மாநில தலைவர் ப.அண்ணாமலையும் இரங்கல் உரை நிகழ்த்தவுள்ளனர். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தேசிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களும் இரங்கல் உரை நிகழ்த்தவுள்ளனர். இன்றைய இறுதி நிகழ்வில் இலங்கைக்கான அயல் நாட்டு தூதுவர்கள், சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தவுள்ளனர். மாலை 3.30 மணிக்கு அஞ்சலி உரைகள் நிறைவு செய்யப்பட்டு, தொடர்ந்து இறுதி ஊர்வலம் அஞ்சல் நிலைய வீதி, மின்சார நிலைய வீதியூடாக கிறீன் வீதி சந்தியை அடைந்து அங்கிருந்து கல்லூரி வீதிக்கு சென்று மீண்டும் சோனகர் தெரு ஊடாக இராஜவரோதயம் வீதியை அடைந்து, பின்னர் பிரதான வீதிக்கு சென்று அங்கிருந்து கடற்காட்சி வீதி ஊடாக ஏகாம்பரம் வீதியூடாக திருகோணமலை இந்துமயானத்தை சென்றடையும். அங்கு அன்னாரின் மூத்த மகன் ச.சஞ்ஜீவன் சிதைக்கு தீ மூட்டவுள்ளார். அன்னாரின் இறுதி ஊர்வலம் செல்லும் வழியில் உள்ள ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் பெருந்தெரு விக்கினேஸ்வரா மகா வித்தியாலய சமூகத்தினர் பூதவுடலுக்கு விசேட அஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இறுதி ஊர்வலம் செல்லவுள்ள வீதிகளில் மக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தென்மேற்கு பருவமழை...

வேளைகளில் இடைக்கிடையே கடும் மழையை எதிர்பார்க்கலாமெனவும் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

ஆனால் இந்த மழையினால் பாரிய அனர்த்தங்கள் ஏற்படாதெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மலையக தொழிற்சங்க...

எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை தனிநபர் பிரேரணைகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன்படி மலையக தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றை பிரகடனப்படுத்தல் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் சமர்ப்பித்துள்ள தனிநபர் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## சர்வதேச கடன் மறுசீரமைப்பில்...

கடன் நிலைபேற்று தன்மையின் மேலும் ஒரு நடவடிக்கை நிறைவடைந்துள்ளதுடன் சர்வதேச பிணை இறையாண்மை கடன் உரிமையாளர்களுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சாத்தியமான இணக்கப்பாட்டை கடந்த நான்காம் திகதி எட்ட முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் கடன் உரிமையாளர்களுடன் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் போது கடனை மீள செலுத்தும் வாய்ப்பின் அடிப்படையில் இருதரப்பு மற்றும் பல் தரப்பு கடன் மறு சீரமைப்பின் போது பெற்றுக்கொண்ட நிவாரணங்களுக்கு பொருத்தமான வகையில் ஒப்பீட்டளவில் நிவாரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# எங்கள் கருத்து...

## ஐக்கிய இலங்கையை நேசித்த அரசியல் தலைவர் சம்பந்தன்

அவர் பிரிவினையை ஒருபோதுமே ஆதரித்ததில்லை. பிரிவினை கோரும் கருத்துகளை எக்காலத்திலும், எவ்விடத்திலும் வெளிப்படுத்தியதுமில்லை. ஐக்கிய இலங்கைக்குள், அனைத்துத் தரப்பினரின் இணக்கப்பாட்டுடனான அரசியல் அதிகாரங்கள் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதே இறுதிக்காலம் வரை அவரது கொள்கையாக இருந்தது.

அவர் தனது கொள்கைகளை பெரும்பான்மையின அரசியல் தலைவர்களுக்கு வெளிப்படையாகவே எடுத்துரைத்தார். அன்னார் தீவிரவாதத்தை ஒருபோதுமே ஆதரித்ததில்லை. புலிகளின் ஆயுதப் போராட்டம் தீவிரம் பெற்றிருந்த வேளையிலும், ஐக்கிய இலங்கைக்குள்ளான அரசியல் தீர்வையே வலியுறுத்தியவர் சம்பந்தன் அவர்கள்.

அதேபோன்று வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் விடயத்திலும் அன்னார் தெளிவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டே பெரும்பான்மை சமூகத்திடமிருந்து அரசியல் தீர்வை வென்றெடுக்க வேண்டுமென்பதே அவரது உறுதியான நிலைப்பாடாக இருந்தது.

இனபேதங்களைத் துரும்பாகப் பயன்படுத்தி தனது அரசியல் செல்வாக்கை அதிகரித்துக் கொள்கின்ற மூன்றாந்தர பாதையை இரா. சம்பந்தன் அவர்கள் ஒருபோதுமே நாடியதில்லை. அவர் எக்காலத்திலும் இனஐக்கியத்தை வலியுறுத்தும் அரசியல் தலைவராகவே வாழ்ந்தார்.

அரசியலில் சுயநலமும், அநாகரிகமும் நிறைந்துள்ள இன்றைய காலத்தில், சம்பந்தன் போன்றவர்கள் போற்றப்பட வேண்டியவராவர். அன்னாரின் மறைவு தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி, ஒட்டுமொத்த தேசத்துக்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

## டொக்டர் அர்ச்சுனாவுடன்...

அத்தியட்சகர் அர்ச்சுனா சீர்செய்ய முற்பட்டபோது, அங்கு ஏற்பட்ட பிரச்சினைகளை ஆராய்வதற்காக நேற்று காலை வைத்தியசாலைக்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவுடன் கலந்துரையாடியதுடன் நிலமைகளையும் ஆராய்ந்தார்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் கடந்த இரு தினங்களாக வைத்திய சேவைகளை புறக்கணித்து வருகின்றனர். நேற்று சனிக்கிழமை அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலைக்கு சென்று கலந்துரையாடினார்.

சாவகச்சேரி வைத்தியசாலையை மேம்படுத்த தன்னால் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளின் போது ஒரு சில வைத்தியர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் வைத்தியசாலையை இவ்வாறானதொரு இக்கட்டான நிலைமைக்கு கொண்டு சென்றிருப்பதாகவும், வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக கடந்த 24 மணிநேரத்தில் தனி ஒரு வைத்தியராக நின்று வைத்தியசாலையை இயங்க வைத்து நோயாளர்களை காப்பாற்றி வருவதாகவும் அமைச்சரிடம் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் துறைசார் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்று சுமுகமான தீர்வை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

## மாத வருமானம்...

முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பாக தேசிய இறைவரி திணைக்களத்தின் அருகிலுள்ள கிளை அலுவலகத்துக்கு தெரிவிக்கலாமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 23 இலட்சம் பேர் Taxpayer Identification Number பெற்றுள்ளதாகவும், ஜூன் மாதத்தில் மட்டும் 13 இலட்சம் பேர் அந்த எண்ணைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். ஜூலை மாத இறுதிக்குள் Taxpayer Identification Number வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையை 73 இலட்சமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## படைப்பாளர், சட்டத்தரணி...

பின்னர் கொழும்பு சட்ட கல்லூரியில் கற்று சட்டத்தரணியானார். இயல்பிலேயே சிறுகதை எழுதும் மற்றும் கவி புனையும் ஆற்றல் கொண்டிருந்த இவர், தன் ஓய்வுநேரத்தில் கிழக்கிலங்கை நாட்டாரியலை ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொண்டார்.

இலங்கையின் சிறந்த உருவகக்கதை படைப்பாளரான இவர், நூற்றுக்கும் மேற்பட்ட உருவகக்கதைகளை எழுதியுள்ளார். இவரது முதல் உருவகக்கதைத் தொகுதி 1982ஆம் ஆண்டு வெளியானது. நூற்றுக்கும் மேற்பட்ட மண்சார்ந்த சிறுகதைகளையும் இருநூறுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களையும், பலநூறு கவிதைகளையும் எழுதியுள்ள இவர், சிலவற்றை நூல்களாகவும் வெளியிட்டுள்ளார்.

மேலும் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான இவர், இலங்கையில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளிலும் தமிழகம் மற்றும் கோலாலம்பூரில் நடைபெற்ற இஸ்லாமிய மற்றும் தமிழ் ஆய்வு மாநாடுகளிலும் பேராளராக பங்குபற்றியுள்ளார்.

2010ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் கலந்து கொண்ட இவர், இலங்கை வாழ் முஸ்லிம்கள் மத்தியில் நிலவும் தாலாட்டுப் பாடல்கள் என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து பாராட்டு பெற்றார்.

இலங்கையின் எல்லா பத்திரிகைகளிலும் தமது படைப்புகளை வெளியிட்டுள்ள இவர், தினகரனுடன் தொப்புள் கொடி உறவை கொண்டிருந்தார். தினகரனிலேயே இவர் அதிகம் எழுதினார்.

## விமான நிலையத்திலேயே...

தேவைப்படும் பட்சத்தில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர அலுவலகத்துக்கு செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. இதனால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றமை தெரியவந்துள்ளது. இதனையடுத்தே இந்த தீர்மானத்தை மேற்படி திணைக்களம் எடுத்துள்ளது.

இந்நிலையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் இலங்கை வந்து வீசா பெறும் போதே அவருக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தின் தேவை தொடர்பாக அவரிடம் வினவப்படும். அவர் தேவையென்று தெரிவிக்கும் பட்சத்தில் உடனடியாக தற்காலிக இலகு ரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இப்புதிய திட்டத்தினூடாக விமான நிலையத்தில் வழங்கப்படும்.

# எட்டியாந்தோட்டை பனாவத்த தோட்டத்தில் நடந்தது என்ன?



## லயன் குடியிருப்பு தீப்பற்றியமையால் தம்பதியினர் தீயில் கருகிப் பலி

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் தொடர் லயன்குடிருப்புகள் தீ பற்றி எரியும் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. பெருந் தோட்டப் பகுதிகளில் இடம்பெறுகின்ற அனர்த்தம் காரணமாக மக்களின் அனைத்து உடமைகளும் தீயில் கருகியதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் கேகாலை மாவட்ட, எட்டியாந்தோட்டை பனாவத்த 2ஆம் பிரிவு தோட்ட தொடர் லயன் குடியிருப்பில் இருந்த மக்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த வேளையில் 03.07.2024 விடியற்காலை 01மணியளவில் இந்த லயன் குடியிருப்பில் திடீரென பரவிய தீ காரணமாக ஐந்து வீடுகள் தீ பற்றி எரிந்ததோடு இரண்டு பேர் பலியாகியுள்ளனர்.

தனது கடமைகளுக்கு சென்று இரவு வீடு திரும்பி உணவு உட்கொண்டு மறுநாள் காலையில் தொழிலுக்கு செல்ல வேண்டுமென எண்ணி நித்திரைக்குச் சென்றவர்களுக்கே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.



இந்த சம்பவத்தில் 60 வயதான சொக்கன் வீரசீங்கம் மற்றும் 50 வயதான மூக்கையா சாந்தினிதேவி ஆகிய தம்பதியினரே உயிரிழந்தனர்.

உயிரிழந்த தம்பதியினருக்கு ஒரே மகள், அவர் பத்தனை ஶ்ரீபாத தேசிய கல்லூரியில் ஆசிரிய மாணவராக கல்விபயின்று வருவதுடன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு சென்று ஒரு மாதகாலமே ஆகின்றது.



இதேவேளை திடிர் தீ விபத்து காரணமாக வீட்டில் இருந்த உடமைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளதாகவும், தனது மகளின் திருமணத்திற்காக சேர்த்து வைத்த தங்க ஆபரணங்கள் மற்றும் ஏனைய பொருட்களும் தீயில் கருகியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட பெற்றார் ஒருவர் குறிப்பிடுகிறார்

இந்நிலையில் தீ விபத்தில் உயிர்ழந்த தம்பதிகளின் இறுதிக் கிரியைகள் பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் 04.07.2024 வியாழக்கிழமை இடம்பெற்றது. இரு சடலங்களும் தீயில் கருகியமையால் அவற்றை வைத்திருந்த சவப்பெட்டிகளை திறப்பதற்கு கூட சட்ட வைத்திய அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை. அத்தோடு இரண்டு சடலங்களும் பனாவத்தை 02ஆம் பிரிவுக்கு கொண்டு வரப்பட்ட ஒரு மணித்தியாலயத்திற்குள் தோட்ட பொது மைதானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த தீவிபத்தில் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களும் பனாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளன.



இந்நிலையில் எட்டியாந்தோட்ட பனாவத்த 2ஆம் பிரிவு தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையெனவும் தீயில் கருகிய சில பொருட்களும் இரண்டு பேரினதும் உடலின் சில பாகங்களும் கொழும்பு இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதி பொலிஸ் மாஅதிபரும் சட்டத்தரணியும் பொலிஸ் ஊடகப்பேச்சாளருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.



இந்த சம்பவம் தொடர்பாக எட்டியாந்தோட்ட பனாவத்த 2ம் பிரிவு தோட்டபகுதிக்கு விரைந்து சென்ற இலங்கை தொழிலாளர் காங்ரஸின் உபதலைவரும் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அண்ணாமலை பாஸ்கரன் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களோடு கலந்துரையாடிதோடு அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்ரஸின் தலைவரும் கிழக்குமாகாண ஆளுனருமான செந்தில் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனம் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் வழங்க நடவடிக்கை எடுத்ததோடு உடனடியாக வீடைப்பு திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடமைப்பு திட்டம் வெகுவிரைவில் முன்னெடுக்கப்பட விருப்பதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதியளித்ததாக அண்ணாமலை பாஸ்கரன் தெரிவித்தார்.

மலையக பெருந் தோட்டத்தின், பெரும்பாலான பகுதிகளில் பழமைவாய்ந்த தொடர் லயன் குடியிருப்புகளே காணப்படுகின்றன. இது போன்ற பெரும்பாலான தொடர் லயன்குடியிருப்புகளில் தீ பிடிக்கும் சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. நல்லாட்சி அரசாங்கத்திலும் சரி, தற்போதய அரசாங்கத்திலும் சரி, தனிவீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் குடியிருப்புகள் தீக்கரையாகும் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. இனிமேலும் இது போன்ற லயன் குடியிருப்புகளில் தீ பரவல் சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதே சிறந்த வழியாகும். அதனையே அப்பகுதி மக்களும் வேண்டுகின்றனர்.

பொகவந்தலாவ நிருபர்
எஸ் சதீஸ்

# கருத்தொற்றுமையுடன் செயற்படவேண்டிய தொழிற்சங்கங்களும் மலையக கட்சிகளும்

இலங்கையில் உள்ள பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த நாட்டில் இருநூற்றொரு வருட வரலாறு உள்ளது. ஆனால் அவர்களில் கணிசமான தொகையினர் இன்னும் ஆங்கிலேயரினால் கட்டப்பட்ட லயன் அறைகளிலேயே பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பவர்களாக அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர்களை தொழில் ரீதியாக தோட்டத் தொழிற்சங்கங்களும் அரசியல் ரீதியாக மலையக அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

ஆனால், தோட்டத் தொழிற்சங்கங்களினாலோ மலையக அரசியல் கட்சிகளினாலோ தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடியவில்லை. இதற்குக் காரணம் தோட்டத் தொழிற்சங்கங்களுக்கிடையே ஏட்டிக்குப் போட்டியாக செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுவதும் தோட்டத் தொழிலாளர்களின் பொதுவான பிரச்சினைகளிலும் கூட கருத்தொற்றுமையுடன் செயல்படாததுமே ஆகும்.

எனவேதான் இந்த நாட்டில் இருண்டு நூற்றாண்டுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ள போதிலும் தோட்டத் தொழிலாளர்கள் இன்னும் வீட்டுரிமை அற்றவர்களாக, காணி உரிமை அற்றவர்களாக, அவ்வப்போது தாமதமின்றி கடிதங்களை பெற முடியாதவர்களாக முகவரி அற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்கள் தாம் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கங்களுக்கு மாதா மாதம் சந்தா செலுத்திவருவதோடு மலையக அரசியல் கட்சிகளுக்கு இந்த நாட்டில் அவ்வப்போது நடைபெறும் தேர்தல்களில் தமது வாக்குகளை அளித்து வருகிறார்கள். ஆனால் தோட்டத் தொழிற்சங்கங்கள் மூலமாகவோ அரசியல் கட்சிகள் மூலமாகவோ தோட்டத் தொழிலாளர்கள் இதுகாலவரை உரிய பயன்களை அடைந்ததாக வரலாறு இல்லை.

எனவேதான் ஏனைய தொழில்துறைகளிலுள்ள தொழிலாளர்கள் நாளாந்தம் வானளாவ உயர்ந்துவரும் வாழ்க்கை செலவுகளை சமாளிக்கக்கூடிய விதத்தில் சம்பளம் பெறும்போது தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரம் தமது சம்பளத்தை போராடி பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

முன்னைய காலங்களில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் இலங்கை தொழிலாளர் சங்கம், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி ஆகிய தோட்டத் தொழிற்சங்கங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது.

ஆனால் ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன்பு சம்பள நிர்ணய சபை தலையிட்டு தோட்டத் தொழிற்சங்கங்களின் பங்குபற்றதலுடன் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் ஆயிரம் ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுத்தது.

அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஏறத்தாழ மூன்று வருடங்கள் கடந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் தலவாக்கலையில் நடாத்தப்பட்ட மே தினக் கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 2024 மே மாதத்திலிருந்து 1700 ரூபா வழங்கப்படும் என அறிவித்தார். 30.04.2024, 21.05.2024 ஆகிய இரு திகதிகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் அடிப்படை சம்பளமாக 1350 ரூபாவும் மேலதிக கொடுப்பனவாக 350 ரூபாவும் மேலதிக கொழுந்திற்கு கிலோ ஒன்றுக்கு 80 ரூபா வழங்கப்படவேண்டும் என அரசாங்கம் வர்த்தமானி மூலம் அறிவித்தது.

ஆனால் அரச நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மாத்தளை எல்கடுவ டிவிசன் மாத்திரமே தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா வழங்கியதாக பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது.

எனவே, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் இழுபறி நிலை தொடர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் என்று அரசு தலையிட்டு சம்பள நிர்ணய சபை மூலம் தீர்வுகாண முற்பட்டதோ அன்றிலிருந்து கூட்டு ஒப்பந்தம் செல்லுபடியற்றதாக போய்விட்டது.

எனவே, இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதி தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் தோட்டத் தொழிற்சங்கங்களும் மலையக அரசியல் கட்சிகளும் அவற்றிற்கிடையேயுள்ள போட்டா போட்டிகளை கைவிட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு



பெருந்தோட்டக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவும் தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு திட்டங்களின் கீழ் வீடுகளை நிர்மாணித்துள்ளவர்களுக்கான காணி உறுதி பத்திரங்களையும் வீட்டுரிமை பத்திரங்களையும் பெற்றுக் கொடுக்கவும் வீடுகளை நிர்மாணிக்காது தோட்டக் குடியிருப்புகளில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு 10 பேச்சர்ஸ் காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கான கோரிக்கைகளை இந்த நாட்டில் செயல்படும் தமிழ் (வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் கட்சிகள்) முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து அந்த கட்சிகள் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் சார்ந்த தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனம்கண்டு அவை சம்பந்தமான கோரிக்கைகளையும் ஒருமித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பற்றிய விபரங்கள் வெளியானதும் இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இன மக்களை தமிழ், முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளை தீர்க்கக் கூடிய செயல்திறன் கொண்ட ஒரு வேட்பாளரிடம் முன்வைத்து அவரின் உத்தரவாதத்தை பெற்றுக் கொள்ளவேண்டும்.

சிறுபான்மை இன கட்சிகள் ஒருமித்து செயற்பட்டால் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது போல இருக்கும். இந்த நாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்களை பொறுத்தவரையில் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் ஒவ்வொரு கருத்தை கூறிவருகிறார்கள். ஒரு சிலர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒட்டுமொத்த பெருந்தோட்டக் காணிகளும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என வலியுறுத்தி வருகிறார்கள்.

**தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை பேர் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள் என்பதை அறிந்து அந்த எண்ணிக்கையை கருத்திற்கொண்டு பயிர்செய்கைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் காணிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.**

அவ்வாறு செய்தால் இந்த நாட்டில் தேயிலை, இறப்பர், தென்னம் தோட்டங்கள் ஒரு காலத்தில் இல்லாமல் போகக்கூடிய பயங்கரமான சூழ்நிலை உருவாகும். இலங்கைக்கு உலகளவிலான அடையாளமும் இல்லாமலேயே போய்விடும்.

எனவே, தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை பேர் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள் என்பதை அறிந்து அந்த எண்ணிக்கையை கருத்திற்கொண்டு பயிர்செய்கைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் காணிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இந்த முறையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்பு பெருந்தோட்டங்களில் எஞ்சியுள்ள காணிகளில் தோட்டத் தொழிலாளர்களை வழமைபோன்று வேலைசெய்ய அனுமதித்தால் அவர்கள் இரு வழிகளில் வருமானத்தை தேடிக் கொள்ளக் கூடிய வாய்ப்புகளை பெற்று வளமாக வாழ வழிகிட்டும்.

விரிவாக குறிப்பிடின் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் உற்பத்தியாகும் தேயிலையை கிலோ கணக்கில் தோட்ட நிர்வாகங்களுக்கு விற்று அதன் மூலம் வருமானத்தையும் பகிர்ந்தளிக்கப்படாத காணிகளில் வேலை செய்து சம்பளத்தையும் பெற தோட்டத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு கிட்டுவதனால் அவர்களின் வாழ்வு பிரகாசிக்கும்.

ஆகவே, தோட்டத் தொழிற்சங்கங்கள் மற்றும் மலையக கட்சிகள் அவற்றிற்கிடையேயுள்ள வேற்றுமைகளை புறந்தள்ளி ஒற்றுமையாக செயல்படின் அடுத்த ஜனாதிபதியின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்பு தோட்டத் தொழிலாளர்களில் இதுவரை காணிகளை பெறாதவர்கள் தோட்டங்களில் காணிகளை பெற்றும் தமக்கான வீடுகளை தாமே நிர்மாணித்து சொந்த வீடுகளில் நிம்மதியாகவும் மனமகிழ்வுடனும் வாழ வழிகிட்டும். அத்தோடு தோட்டத் தொழிலாளர்கள் மேலும் உற்சாகத்துடன் செயல்பட்டு இந்த நாட்டை மேலும் பொருளாதார சுபீட்சம் அடையக்கூடிய நிலைக்கு நிச்சயம் கொண்டு செல்வார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் தமது வீண் செலவுகளை தவிர்த்து பணத்தை சேமித்து அந்த பணத்தின் மூலம் தமது பெற்றோருக்கான காணிகளில் வீடுகளை நிர்மாணித்து அவர்களை சுதந்திரமாகவும் மன நிம்மதியுடன் மகிழ்வாக வாழ வைக்க இன்றை நாளிலிருந்து திடசங்கற்பத்துடன் செயல்பட தயாராகவேண்டும்.

– சி.ப.சீலன்

# தேர்தலை எதிர்பார்த்து அரசியல் களம் பரபரப்பு!




## எதிரணி கட்சிகளிலுள்ள பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கான அறிகுறிகள்!



**தேர்தலுக்கான நேரம் நெருங்கிவரும் நிலையில், அரசியல் பரபரப்புகளும் அதிகரித்து வருகின்றன. ஒவ்வொரு கட்சியும் தம்மை அரசியல்ரீதியாகப் பலப்படுத்துவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.**

ஐக்கிய தேசியக் கட்சி வலய அமைப்பாளர்கள் உள்ளிட்ட புதிய நியமனங்களை வழங்கி அடிமட்டத்தில் தன்னைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துள்ளது. கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக இருந்த சிலர் தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து வலய அமைப்பாளர்கள் பதவிகளை எடுத்துக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவுக்கும் வகையில் மாத்தறையில் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டமொன்றை நடத்தியிருந்தது. இந்தக் கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் பலரும் இணைந்துகொண்டு ஜனாதிபதிக்கான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். அமைச்சர்களான கஞ்சன விஜேசேகர, அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் போன்ற முக்கியஸ்தர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக பொதுமேடை ஏறியிருந்தனர்.

இவர்கள் ஏற்கனவே ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் நிலையில் பகிரங்கமாக ஐக்கிய தேசியக் கட்சியின் மேடை ஏறியிருந்தனர்.

மறுபக்கத்தில், தமது கட்சியில் உள்ளவர்கள் பிரிந்து செல்வதைத் தடுப்பதில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் பிரயத்தனங்களை எடுத்து வருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில உறுப்

## தேசிய அரசாங்கத்துக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுமா?

பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அவருடன் இணையப் போவதாகப் பல்வேறு தகவல்கள் வெளியாகியிருந்தன.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவருடன் கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் ஜனாதிபதியுடன் இணையவிருப்பதாகவும் ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. இந்த நிலையில், தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்வதில்லை யென்ற தீர்மானமொன்றை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு நிறைவேற்றியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன கொண்டுவந்த தீர்மானத்துக்கு ஏகோபித்த ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்திருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார குறிப்பிடுகையில், "எதிர்வரும் மாதங்களில் தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க மாட்டோம் என்ற உறுதிப்பாட்டை மீண்டும் புதுப்பித்துள்ளோம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் (2022) தேசிய அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை முன்வைத்திருந்தார். அது எதிர்க்கட்சியினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் இத்தீர்மானம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது" என்றார்.

தமது கட்சியிலிருந்து உறுப்பினர்கள் எவரும் வெளியேறிச் சென்று ஏனைய கட்சிகளுடன் இணைந்துகொள்ள மாட்டார்கள் என உறுதியாக நம்புவதாகவும் அவர் கூறியிருந்தார்.

அது மாத்திரமன்றி, கட்சியிலிருந்து வெளியேறக்கூடிய உறுப்பினர்களை அதைரியப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லையென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றிய புதுப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் எதுவும் முன்வைக்கப் படாத நிலையில் அவசர அவசரமாக ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொண்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் வெற்றிகரமான ஒப்பந்தமொன்றை செய்துள்ள நிலையில், அதற்கு ஆதரவு வழங்கி ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்துகொள்ளப் போவதாக ஊகங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவருடன் கருத்து முரண்பாட்டைக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாதனதுஅனுபவத்தின்அடிப்படையில் புத்தகமொன்றை வெளியிட்டிருந்தார். இந்த வெளியீட்டு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

இவற்றின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள சிலர் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. அவ்வாறானதொரு நிலை ஏற்படுமாயின் சில சந்தர்ப்பங்களில் எஞ்சியிருக்கும் பாராளுமன்ற காலத்தில் தேசிய அரசாங்கமொன்றுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

ஜனாதிபதிக்கு ஆதரவாக உள்ள தரப்பினர்களை இணைத்துக் கொண்டு தேசிய அரசாங்கத்தை அமைப்பது பற்றி ஆராயப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகளும் வெளியாகியிருந்தன. இது உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படாவிட்டாலும், அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

நாட்டைப் பொருளாதார ரீதியில் மீட்டெடுப்பதற்கான சவாலை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பம் முதலே தேசிய அரசாங்கத்தை அமைக்க முன்வருமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பைத் தொடர்ந்தும் முன்வைத்து வந்தாலும் எதிர்க்கட்சியினர் நாட்டைப் பற்றிச் சிந்தித்து இதற்கான ஒத்துழைப்பை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றனர். நாட்டைச் சவாலில் இருந்து மீட்பதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்குத் தயங்கிய எதிர்க்கட்சிகள் தற்பொழுது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளையே மேற்கொள்கின்றன. மாறாக அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செல்வதாகத் தெரியவில்லை.

இது இவ்விதமிருக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் இன்னமும் நீதிமன்றத் தடையுத்தரவுகள் காணப்படும் நிலையில், தேர்தல் அரசியலில் இருந்து விலகப் போவதாக முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

எதிர்வரும் காலத்தில் தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லையென்றாலும், அரசியலில் தொடர்ந்தும் ஈடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தொடர்ந்தும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவ விவகாரம் இன்னமும் நீதிமன்றத்தில் உள்ள நிலையிலேயே மைத்திரிபால சிறிசேனவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலில் தமது வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பொதுஜன பெரமுனவில் குழப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. இது விடயத்தில் கட்சியில் உள்ளவர்கள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கள் நிலவி வருகின்றன.

ஒரு சாரார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனக் கூறி வருவதாகவும், பிறிதொரு தரப்பினர் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருந்தபோதும் இன்னமும் கட்சியின் தலைமைத்துவம் இதுவரை உறுதியான முடிவை எடுக்க முடியாது இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

**பி.ஹர்ஷன்...**

---

# இஸ்ரேல்–ஹிஸ்புல்லாஹ் முழுஅளவிலான யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு உச்சக்கட்ட முயற்சி!



## காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோரி தாக்குதல்களை முன்னெடுக்கும் ஹிஸ்புல்லாஹ்

**இஸ்ரேலுக்கும் லெபனானின் ஹிஸ்புல்லாஹ் போராட்டக்குழுவுக்கு–ம் இடையில் முழு அளவிலான போர் மூளுவதைத் தவிர்ப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. குறிப்பாக ஹிஸ்புல்லாஹ் உடன் போரை முன்னெடுப்பதை விடுத்து இராஜதந்திர ரீதியில் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு இஸ்ரேலை வலியுறுத்திவரும் அமெரிக்கா, அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றது.**

அந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஆற்றல் மற்றும் முதலீடுகள் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் அமோஷ் ஜே கொஸ்டெய்ன் கடந்த மாத நடுப்பகுதயில் (17, 18 ஆம் திகதிகளில்) இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் நேரில் விஜயம் செய்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தார். அதனைத் தொடர்ந்து கடந்த 2 ஆம் திகதி பிரான்ஸுக்கு விஜயம் செய்த இவர், அந்நாட்டின் லெபனானுக்கான விசேட பிரதிநிதியுடன் இஸ்ரேலும் ஹிஸ்புல்லாஹ்வும் முழு அளவிலான யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான இராஜதந்திர முயற்சிகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்நிலையில் பிரான்ஸ் ஜனாதிபதி, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு 'லெபனான், இஸ்ரேலின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு குறிப்பாக ஆபத்தான வளர்ச்சியை உருவாக்கும் ஒரு மோதலைத் தடுப்பதற்கான முழுமையான தேவையை சுட்டிக்காட்டியுள்ளதோடு, அனைத்து தரப்பினரும் இராஜதந்திர தீர்வை நோக்கி விரைவாக செல்ல வேண்டியதன் அவசரத்தையும் எடுத்துக்கூறியுள்ளதாக இஸ்ரேலிலுள்ள பிரான்ஸ் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேலிய இராணுவ ஜெனரல்கள் காஸாவில் எஞ்சியிருக்கும் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கும், லெபனானில் ஹிஸ்புல்லாஹ்வுடன் ஒரு பெரிய மோதலுக்கு படைகளைத் தயார்படுத்துவதற்கும் காஸாவில் ஹமாஸுடன் போர் நிறுத்தம் அவசியம் என்று வலியுறுத்தியுள்ளதாக 'நியோர்க் ரைம்ஸ்' செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில் யுத்தநிறுத்தத்திற்கு சாதகமான நிலைப்பாட்டை ஹமாஸ் அறிவித்துள்ளது. இதேவேளை இஸ்ரேலும் சமரசப் பேச்சுக்களுக்கான விருப்பதை வெளிப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்திருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அதேநேரம் கடந்த மாதப் பிற்பகுதியில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட், அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன், பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்ட்டின் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். அப்பேச்சுவார்த்தைகளின் போது ஹிஸ்புல்லாவுடன் முழு அளவிலான யுத்தத்திற்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்வதோடு இராஜதந்திர ரீதியில் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறும் வலியுறுத்தப்பட்டது.

இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் உரையாற்றிய அமெரிக்க பாதுகாப்பு செயலாளர், 'வடக்கு எல்லையில் நீடித்த அமைதியை மீட்டெடுக்கவும், இஸ்ரேல் _ லெபனான் எல்லையின் இருபுறமும் உள்ள பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்குப் பாதுகாப்பாகத் திரும்பவும் வழிவகை செய்யும் இராஜதந்திர ஒப்பந்தத்தை அவசரமாக மேற்கொள்ளுமாறு நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்.

காஸா மீதான யுத்தத்தை இஸ்ரேல் ஆரம்பித்த மறுநாள் முதலே அந்த யுத்தத்தை நிறுத்துமாறு கோரி இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லாஹ் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. இஸ்ரேலும் பதிலுக்கு தாக்குதல்களை முன்னெடுக்கிறது. இரு தரப்புக்கும் இடையிலான மோதல் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் லெபனான், இஸ்ரேல் எல்லையில் முழு அளவிலான யுத்தத்திற்கான முயற்சிகளும் அதனையொட்டிய பதற்றங்களும் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையில் இரு தரப்பு மோதல் ஆரம்பமானது முதல் இற்றை வரையும் 7400 தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தாக்குதல்களில் 83 சதவீதத்தை அதாவது 6,142 தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளது, இத்தாக்குதல்களினால் லெபனானில் சுமார் 543 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 92 பேர் சிவிலியன்களாவர். ஏனையவர்கள் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தவர்களாவர். அதேநேரம் ஹிஸ்புல்லாஹ்வும் பிற ஆயுதக் குழுக்களும் முன்னெடுத்த 1,258 தாக்குதல்களினால் சுமார் 21 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு இந்த இரு தரப்பு மோதலால் 60 ஆயிரம் இஸ்ரேலியர்களும் ஒரு இலட்சம் லெபனானியர்களும் எல்லைப்பகுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த மோதலால் வடக்கு இஸ்ரேல் பகுதியில், சுமார் 2,000 கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாக அந்நாட்டின் வரி அதிகார சபை அறிவித்துள்ள அதேநேரம், லெபனான் எல்லைப்பகுதியில் சுமார் 2,700 வீடுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு 22,000 மேலும் சேதமடைந்துள்ளதாக தெற்கு லெபனானுக்கான கவுன்சில் குறிப்பிட்டுள்ளது.

இருதரப்புக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உச்சக்கட்ட பதற்றத்தின் பின்புலத்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸ், மற்றொரு யுத்தம் தோற்றம் பெறுவதைத் தவிர்க்குமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். காஸா யுத்தம் காரணமாக உலகம் பெரிதும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளது. இந்நிலையில் ஹிஸ்புல்லாஹ் உடனான போரை உலகம் ஏற்றுக்கொள்ளாது என்றுள்ளார். இது இஸ்ரேல் ஹிஸ்புல்லாஹ் மோதலின் தீவிரத்தை எடுத்துக்காட்டக்கூடியதாக உள்ளது.

இரு தரப்பினரும் எல்லைப்பகுதியில் தொடர்ந்தும் தாக்குதல்களை முன்னெடுத்து வந்த நிலையில் லெபனானுக்கு எதிரான பரந்த அளவிலான தாக்குதலுக்கான செயல்பாட்டுத் திட்டங்களுக்கு டெல் அவிவ் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. அதனால் முழு அளவிலான யுத்தத்திற்கு செல்வதற்கான முஸ்தீபுகள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. லெபனானின் எல்லையில் யுத்த பயிற்சிகளையும் இஸ்ரேல் ஆரம்பித்துள்ளது. படைப் பிரிவுகளையும் ஆயுத தளபாடங்களையும் வடக்கு நோக்கி இஸ்ரேல் நகர்த்தி வருகிறது.

இவ்வாறான சூழலில் இஸ்ரேலின் ஹைபா துறைமுகம், எண்ணெய்க் களஞ்சியசாலை உள்ளிட்ட இடங்களின் ட்ரோன் வீடியோ காட்சிகளை ஏற்கனவே வெளியிட்ட ஹிஸ்புல்லாஹ் மற்றொரு முக்கிய வீடியோவையும் வெளியிட்டுள்ளது. இவ்வீடியோவில் இஸ்ரேலின் யுத்த விமானங்கள் தரித்து நிற்கும் இரு இடங்கள், அணுவாயுதங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வீடியோ காட்சிகள் இஸ்ரேலுக்கு ஏற்கனவே ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இஸ்ரேலிய இராணுவ மற்றும் ரிசர்வ் வீரர்கள் ஒய்வு பெறும் வயதெல்லையை நீடிக்கும் சட்டத்திற்கு இஸ்ரேலிய பாராளுமன்றம் அங்கீகாரம் அளித்துள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள சட்டப்படி, ரிசர்வ் வீரர்கள் 40 வயது வரையிலும் ரிசர்வ் அதிகாரிகள் 45 வயது வரையிலும் இராணுவத்தில் கடமையாற்ற வேண்டும். தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டப்படி, ரிசர்வ் அதிகாரிகளுக்கு 41 வயது வரையிலும், ரிசர்வ் அதிகாரிகளுக்கு 46 வயது வரையிலும் சேவை நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையில் போர்ப்பதற்றம் அதிகரித்துவரும் நிலையில், லெபனானிலுள்ள வெளிநாட்டு பிரஜைகள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக லெபனானிலுள்ள தமது சுமார் 20 ஆயிரம் பிரஜைகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை கனடா முன்னெடுத்துள்ள அதேநேரம், குவைத் லெபனானிலுள்ள தமது பிரஜைகளை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுள்ளதோடு தற்போது அங்கு உருவாகிவரும் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு லெபனானுக்கு செல்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்க பிரஜைகளோ 86 ஆயிரம் பேர் லெபனானில் உள்ளனர். அவர்களை தெற்குக்கு செல்ல வேண்டாமென அமெரிக்கா ஆலோசனை வழங்கியுள்ளது. அத்தோடு தம் குடிமக்களதும் பிற பணியாளர்களதும் சாத்தியமான வெளியேற்றங்களுக்காக யு.எஸ்.எஸ் வாஸ்ப், ஒரு ஆம்பிபியஸ் தாக்குதல் கப்பல் மற்றும் மத்திய தரைக்கடற் பிராந்தியத்திலுள்ள மற்ற அமெரிக்க கடற்படை கப்பல்களுடன் இணைந்து தயாராகி வருவதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதன் பொருட்டு அமெரிக்கா யுத்தக் கப்பல்கள் மத்திய தரைக்கடல் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஜெர்மனி, கனடா, வடக்கு மாசிடோனியா, நெதர்லாந்து, ஜோர்தான், சவுதி அரேபியா, அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் தங்கள் நாட்டினரை லெபனானில் இருந்து வெளியேறுமாறும் அங்கு செல்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் லெபனான் வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா பௌ ஹபீப், போரைத் தொடங்கப் போவதாக அச்சுறுத்தும் இஸ்ரேலுக்கு எதிராக லெபனானுடன் ஒற்றுமையை வெளிப்படுத்துமாறு உலக நாடுகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார். அத்தோடு லெபனான் மீது இஸ்ரேல் முன்னெடுக்கும் தாக்குதல்களை நிறுத்த இஸ்ரேலுக்கு உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலினதும் லெபனானின் ஹிஸ்புல்லாஹ்வினதும் நகர்வுகளால் ஏற்பட்டுவரும் பதற்றமான சூழலில் ஹமாஸ் யுத்தநிறுத்தத்திற்கு சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தி இருப்பது உலகுக்கு புதிய நம்பிக்கையை அளிக்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில் ஹிஸ்புல்லாஹ் உட்பட மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல்களை முன்னெடுக்கும் ஆயுதக்குழுக்கள் காஸா மீதான யுத்தத்தையே வலியுறுத்தி வருகின்றன. அதனால் காஸாவில் யுத்தநிறுத்தம் ஏற்படும் போது ஹிஸ்புல்லாஹ்வின் தானாகவே நிறுத்தப்பட்டுவிடும். அப்போது லெபனான் - இஸ்ரேல் எல்லையில் யுத்த முஸ்தீபுக்கு இடமிருக்காது. அதுவே சர்வதேச போரியல் நிபுணர்களின் கருத்தாக உள்ளது.



## ஹமாஸுடன் யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் இஸ்ரேலிய ஜெனரல்கள்





**மர்லின் மரிக்கார்...**



# பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெளிவு–படுத்துகிறார் ஜனாதிபதி

# கடன் மறுசீரமைப்புப் பணிகள் அரசினால் வெற்றிகரமாக நிறைவு

**பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த இலங்கையை, அந்த இக்கட்டான நிலைமையிலிருந்து மீட்பதற்குக் கிடைத்த சிறந்ததொரு சந்தர்ப்பமாக சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த நிதியுதவித் திட்டம் அமைந்துள்ளது.**

இந்தக் கடன் உதவியின் காரணமாகவே இலங்கையினால் பணவீக்கத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி, வெளிநாட்டு நாணயக் கையிருப்பை கணிசமானளவு அதிகரித்து பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் கையொப்பமிடப்பட்ட இந்தத் திட்டத்தின் நிபந்தனைகளில் ஒன்றாக கடன்மறுசீரமைப்பு விடயம் காணப்படுகின்றது. பல்வேறு தடைகளைத் தாண்டிவந்துள்ள இலங்கை, கடன்மறுசீரமைப்பு குறித்தும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளமை பாரியதொரு வெற்றியாகவே பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு அனுபவித்த வரிசைகள் மற்றும் பற்றாக்குறைகள் போன்ற கஷ்டங்களை தாங்கிக் கொண்டுள்ள இலங்கையர்கள் பொதுவாக கூர்மையான நினைவாற்றலைக் கொண்டுள்ளனர். அந்த சவாலான காலங்களில் தமக்காக யார் நின்றார்கள் என்பதை அவர்கள் தெளிவாக நினைவில் வைத்துள்ளனர்.

அன்றைய பெரும் சவாலைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெறுமனே பேச்சுக்களை முன்வைக்காது செயலில் துணிச்சலான முடிவுகளை எடுத்து, குறிப்பாக விமர்சனங்களுக்கு அஞ்சாது தொலைநோக்கு சிந்தனையுடன் செயற்பட்டு பொருளாதாரத்தை மீட்கும் பயணத்தில் குறிப்பிடத்தக்கதொரு கட்டத்தை அடையச் செய்துள்ளார்.

இலங்கை பெற்ற கடன்களை தற்பொழுது காணப்படும் இக்கட்டான சூழ்நிலையில் மீளச்செலுத்த முடியாது என்பதால், அவற்றை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பில் கடன் வழங்குனர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்திருந்தது.

இதன் அடிப்படையில் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான ஒப்புதல் பாராளுமன்றத்தில் பெறப்பட்டு, அதற்கான பேச்சுவார்த்தைகள் கடன்வழங்குனர்களுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பல மாதங்களாக இடம்பெற்ற பேச்சுகள் வெற்றியளித்து, கடன்மறுசீரமைப்புக்கான ஒப்பந்தம் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அடிப்படையில் 'பரிஸ் கிளப்' என அறியப்படும் உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவுடனும், தனிப்பட்ட ரீதியில் கடன்களை வழங்கிய சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடனும் கடன்மறுசீரமைப்பு குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்தக் கடன்மறுசீரமைப்புக்கான ஒப்பந்தம் என்பது இலங்கை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கு மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். உண்மையில் இந்தக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தின் மூலம் அடிப்படைக் கடனை மீளச்செலுத்துவதற்காக 2028ஆம் ஆண்டு வரை காலஅவகாசம் கிடைத்துள்ளது.

வட்டி வீதம் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வட்டிவீதம் 2.1 அல்லது அதற்கு குறைந்தளவில் தக்கவைத்துக் கொள்ள அனுமதி கிடைக்கும். 2027ஆம் ஆண்டு முதல் 2032ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி வரையில் கடன்களைச் செலுத்துவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 வீதத்தினை மாத்திரமே ஒதுக்குவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. கடனை முழுமையாகச் செலுத்தி முடிக்க 8 வருட கால அவகாசம் கிடைத்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதாயின், 2043ஆம் ஆண்டு வரை அவகாசம் கிடைத்துள்ளது. கடன் சேவை காலத்தை நீடித்துக் கொள்வதுடன் அடிப்படைக் கடனை மீளச் செலுத்தும் தொகையை தொடர்ந்து அதிகரிக்க முடியும். இதன் பலனாக வட்டியாக செலுத்த வேண்டிய 5 பில்லியன் டொலர்களை சேமித்துக் கொள்ள முடியும்.

இருந்தபோதும், அரசாங்கம் அடைந்திருக்கும் இந்த வெற்றி குறித்து எதிர்க்கட்சியினர் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்களைக் குழப்பும் வகையில் செயற்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான பின்னணியில், நாட்டு மக்களையும், பாராளுமன்றத்தையும் தெளிவுபடுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், அவர் பாராளுமன்ற ஜனநாயக முறையில் உறுதியான நம்பிக்கை கொண்டவர். ஜனாதிபதியாக அவர் பதவியேற்ற காலத்திலிருந்து அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் திட்டங்கள் பற்றியும், எதிர்காலத்தில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ள விடயங்கள் பற்றியும் அவ்வப்போது பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். இந்த வகையிலேயே கடன் மறுசீரமைப்புப் பற்றிய அரசாங்கத்தின் அடைவையும் சபையில் தெளிவுபடுத்திக் கூறியிருந்தார்.




## சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணையையும் இலங்கை பெற்றுக் கொண்டதனால், எதிரணியினரால் உண்மைக்குப் புறம்பான விமர்சனங்கள்! மக்களை தவறாக வழிநடத்த முயற்சி!

இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தொகை 37 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 10.6 பில்லியன் டொலர் இருதரப்புக் கடன்களும், 11.7 பில்லியன் டொலர்கள் பல்தரப்புக் கடன்களும், 14.7 பில்லியன் டொலர் வணிகக் கடன்களும், கடன்பிணை முறிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட 12.5பில்லியன் டொலர்களும் உள்ளடக்கியுள்ளன.

இந்தத் தொகை தொடர்பில் சில அரசியல் சக்திகள் மக்களைப் பிழையாக வழி நடத்தி வருகின்றன.

தான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் 71 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் 100 பில்லியன் டொலர்களாக அதிகரித்திருப்பதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் போலிப் பிரசாரங்களை முன்னெடுப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது அப்பட்டமான பொய் என்றும், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் தொகை 37 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே என்றும் தெரிவித்தார். வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் சமூகத்தில் பரப்பப்படும் பொய்கள் தொடர்பாக சில விடயங்களைக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றினால் தனியாக இயங்க முடியாது. தனியாக இயங்கும் வகையில் வருமானத்தை நாம் ஈட்டவும் இல்லை என்றார்.

'அதனால், நாம் கடன்களையும், நிவாரணங்களையும் பெற்றுக் கொள்ள நேரிடும். ஆனால் நாளாந்தம் உணவுத் தேவைக்காகவும், சம்பளம் வழங்கவும் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது.

சுதந்திரத்தின் பின் எமது நாடு செய்த பெரும் பிழை இதுவாகும்.

சம்பளத்தை அதிகரிக்க கடன்களைப் பயன்படுத்தினோம். அரச தொழில் வழங்க கடன்களைப் பயன்படுத்தினோம். இலவசமாக உணவுகளை வழங்க கடன்களைப் பயன்படுத்தினோம். உணவு, எரிபொருள், மின்சாரம் போன்றவற்றை குறைந்த செலவில் வழங்குவதற்காகவும் கடன்களைப் பயன்படுத்தினோம். அரச சேவைகளின் நட்டத்தை ஈடுசெய்ய கடன்களைப் பயன்படுத்தினோம்.

இவை எதனையும் செய்யாமல் எம்மால் அஸ்வெசும நிவாரணம் வழங்க முடிந்தது. பயனாளிகளை அதிகரிக்க முடிந்தது. தலா 10 கிலோ அரிசியை இரண்டு மாதங்களுக்கு இலவசமாக வழங்க முடிந்தது. வீட்டுரிமையை வழங்க முடிந்தது. காணி உறுதிகளை வழங்க முடிந்தது. வெளிநாட்டு கடன் பெறாமல் இவை அனைத்தையும் நாம் செய்திருக்கிறோம். சில அரசியல் குழுக்கள், ஆட்சிக்கு வந்தவுடன் சம்பளத்தை அதிகரிப்போம் என்று கூறுகின்றன. வரியைக் குறைப்போம், சலுகைகளை வழங்குவோம் என்று ஆயிரக்கணக்கான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். ஆனால் அதற்கான பணத்தை எப்படித் திரட்டப்போகிறார்கள் என்பது தொடர்பில் ஒருவார்த்தைக் கூடப் பேசுவதில்லை.

ஆனால் நான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற பின்னர் பல அரசாங்கங்கள் செய்த தவறுகளை நிறுத்தினேன்' என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வது முடியாத காரியம் என சிலர் அறிக்கைகளை மேற்கோட்காட்டி கூறி வந்ததுடன், முதலாவது தவணை கிடைத்தாலும், இரண்டாவது தவணைக் கிடைக்காது என்றும் கூறினர்.

ஆனால் எமக்கு இரண்டாவது தவணையும் கிடைத்து விட்டது. அப்போது மறுபடியும் விமர்சித்தவர்கள் தடத்தை மாற்றினர். ஐ.எம்.எப் நிபந்தனைகளில் சிலவற்றை பூர்த்தி செய்ய முடியாமல் போனதாக சில மதிப்பீட்டு நிறுவனங்கள் கூறியிருந்தன. அதனால் மூன்றாம் தவணையைப் பெற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறினர்.

முழு நாட்டையும் அச்சத்தில் ஆழ்த்த முயற்சித்தனர். எனினும், மூன்றாவது தவணையையும் நாம் பெற்றுக்கொண்டோம். விமர்சகர்கள் மீண்டும் தமது தடத்தை மாற்றிக் கொண்டனர். மூன்று தவணைகளைப் பெற்றாலும் கடன் மறுசீரமைப்பு ஒருபோதும் வெற்றியளிக்காது என்று கூறினர். அதுமட்டுமன்றி, மறுசீரமைக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டாம் என கடன் வழங்கிய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சித்தனர். ஆனால் கடன் மறுசீரமைப்புப் பணிகளை நாம் வெற்றிகரமாக நிறைவுசெய்தோம். அப்போது மீண்டும் தடத்தை மாற்றிக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி தனது பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரை பல உண்மைகளை உரக்கக் கூறும் வகையில் அமைந்திருந்ததுடன், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அதிகாரத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கும் எதிர்க்கட்சிகளால் எந்தளவுக்கு விமர்சிக்கப்படுகின்றன என்பதும் தெளிவாகின்றது. எதிர்க்கட்சிகளைப் பொறுத்த வரையில் சவாலான காலகட்டத்தில் நாட்டைப் பொறுப்பேற்கத் தவறியது மாத்திரமன்றி, ஒருவர் நாட்டைப் பொறுப்பெற்று அதனை சரியான பாதையில் கொண்டுசெல்லும்போது பிழையான தகவல்களை மக்களுக்கு வழங்கி அவற்றைக் குழப்பும் வகையிலும் நடந்து வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்த வரையில் பல்வேறு தடவை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வருமாறு எதிர்க்கட்சிகளுக்குப் பகிரங்க அழைப்பை விடுத்திருந்தார். உண்மையில் நாட்டை நேசிக்கும் எதிர்க்கட்சிகளாக இருந்தால் ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைத்து, தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அதனை விடுத்து ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் விமர்சிப்பது எந்தளவுக்கு நியாயமானது என்ற வினாவை அவர்கள் தம்மிடமே கேட்டுகொள்ள வேண்டும் என்பது தான் நியாயம்.




## வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் சமூகத்தில் பரப்பப்படும் பொய்கள்!











களுத்துறை மாவட்டம் இங்கிரிய, தும்பர தோட்டம் இல1இல் வசித்துவரும் 70 குடும்பங்களுக்கு மலையக மகளிர் மன்றத்தின் சார்பில் தலைவி சண்முகப்பிரியா கார்த்திக் தலைமையிலான உறுப்பினர்கள் கடந்த 4ஆம் திகதி உலர் உணவுவுப்பொருட்கள், உடுதுணிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர். இக் குழுவில் உப தலைவி சரோஜா சண்முகம், பொருளாளர் உதயா தங்கராஜ், உப பொருளாளர் சுசானி குபேந்திரன், முன்னாள் தலைவி இந்திரா செல்வராஜா, மற்றும் மகேஸ்வரி சுப்பிரமணியம் ஆகியோர் இணைந்து பொருட்களை வழங்குவதை காணலாம்.





சர்வதேச மனித உரிமைகள் குளோபல் மிஷனால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணி அமைதி உச்சி மாநாடு 2024, கடந்த சனிக்கிழமை (29.06.2024) பிற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச "லவேந்திரா" மாநாட்டு மண்டபத்தில் தலைவர் ஏ. ஆர். என்.அமீர்கான் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு ஈரான் தூதரகத்தின் டி.ஆர். பி. மொசாமி கொதாரி ஈரான் கலாசார நிலைய ஆலோசகர் மற்றும் SAAC துணை இயக்குனர் பேராசிரியர் டாக்டர் பினா காந்தி தியோரி, இலங்கைக்கான கியூபா தூதர், இந்தியா மற்றும் Incruises USA இன் பிராந்திய இயக்குனர் விஷ்ணு மது, மற்றும் பிறநாட்டு சர்வதேச இராஜ தந்திரிகள் அனைவரையும் தலைவர் அமீர்கான், மற்றும் சபை பணிப்பாளர் எம். குபேரலிங்கம் மாலை அணிவித்து மரியாதை நிமித்தம் அழைத்து வருவதையும், வலதுகுறைந்தோருக்கான சக்கர நாற்காலிகள் வழங்கப்படுவதையும் காணலாம். (படப்பிடிப்பு: எஸ்.எம். சுரேந்திரன்)

# இலங்கை வங்கி

**இலங்கையின் 1ஆம் தர வங்கியுடன் இணைந்து வெற்றிகரமான தொழில்வாய்ப்பொன்றை உருவாக்குங்கள்!**

வங்கியியற் துறையில் தமது எதிர்காலத்தைக் கட்டமைத்துக்கொள்ள விரும்பும் தகுதியும் ஆற்றலும் உயர் குறிக்கோள்களும் உடைய இளம் விண்ணப்பதாரிகளிடமிருந்து கீழ்க்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## முகாமைத்துவப் பயிலுநர்

(வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் மட்டுமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன)

## தகுதிப் பிரமாணங்கள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**

➢ **தகைமைகளும் அனுபவமும்**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வரும் ஏதேனும் துறையில் குறைந்தது இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு) அல்லது 4.0 என்ற ஆகக்கூடிய சராசரித் தரப் புள்ளியில் (GPA) குறைந்தது 3.5 புள்ளிகளுடன் பட்டம் பெற்றிருத்தல்.

பொருளியல், புள்ளிவிவரவியல், கணிதம், கணக்கியல், வங்கியியல், நிதியியல், வணிகம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம் (பொது/நிதியியல்/கணக்கீடு/ வியாபாரம்), சந்தைப்படுத்தல், மனித வளம், பொறியியல், கணினி விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச வியாபாரம், மதிப்பீடு, விவசாயம் அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படும் வங்கியியல் மற்றும் நிதியியல் தொடர்பான ஏதேனும் ஒரு துறை.

**அல்லது**

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மேலே (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள துறைகளில் முதுமாணி அல்லது அதற்கும் கூடிய பட்டப்பின் படிப்புத் தகைமையுடனான பட்டம்.

**அல்லது**

இ) இலங்கை மத்திய வங்கியால் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனமொன்றில் நிறைவேற்று மட்டத்தில் குறைந்தது ஓராண்டு பணியாற்றிய அனுபவத்துடன் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில் (IBSL) அல்லது ஐக்கிய இராச்சிய வங்கியாளர் பட்டய நிறுவனத்தில் (CIB) இணை உறுப்பினராக இருத்தல்.

**அல்லது**

ஈ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு (02) ஆண்டுகள் நிறைவேற்று மட்டத்தில் பணியாற்றிய அனுபவத்துடன் பின்வரும் தொழில்முறைக் கணக்கீட்டுச் சபைகளில் ஏதேனும் ஒன்றில் இணை உறுப்பினராக இருத்தல். அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மேலே 'அ' பகுதியில் குறிப்பிட்டுள்ள எவையேனும் துறைகளில் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் பின்வரும் ஒன்றில் முழுத் தகைமையுடன் (இறுதிச் சித்தி) பெற்றிருத்தல்.

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICA-SL)
- பட்டயச் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA-UK)
- CFA நிறுவன பட்டய நிதியியல் பகுப்பாய்வுத் திட்டம் (CFA-USA)
- UK முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA-UK)
- இங்கிலாந்து, வேல்ஸில் உள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICA-EW)

**அல்லது**

உ) வங்கியியல் அல்லது அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனமொன்றில் இரண்டு ஆண்டுகள் நிறைவேற்று மட்டத்தில் பணியாற்றிய அனுபவத்துடன் சட்டத்தரணி இறுதிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல்.

➢ **ஏனைய தகைமைகள்**

- வங்கியின் இலக்குகளை அடைவதற்கு ஈடுபாடு, அர்ப்பணிப்புடன் கூடிய நல்ல மனநிலை
- அழுத்தங்களுக்கு மத்தியிலும் வினைத்திறனுடன் செயலாற்றத்தக்க ஆற்றல்
- தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருத்தல்
- குழுவாகச் செயற்படும் ஆற்றலும் தொடர்பாடற் திறன்களும்
- தகவல் தொழில்நுட்ப அறிவு
- ஆங்கிலம், சிங்களம்/தமிழ் மொழிகளில் வல்லமை

➢ **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 28 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

## விதிகளும் நிபந்தனைகளும்

- பயிற்சிக் காலம் 02 ஆண்டுகளாகும். இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்த கொடுப்பனவாக முதலாமாண்டில் 90,000 ரூபாயும் இரண்டாமாண்டில் 100,000 ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவி வழமையான வங்கியியற் சேவையின் (திறந்த சேவை) பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் நிறைவேற்று உத்தியோகத்தர் தரத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
- தேவைப்படும் போது வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- முகாமைத்துவம் முடிவுசெய்தாலே ஒழிய, பயிலுநர்கள் தாம் பணிக்கமர்த்தப்படும் மாகாணத்தில் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகள் (இரண்டு ஆண்டுகள் பயிற்சிக் காலம் உட்பட) கட்டாயம் பணியாற்ற வேண்டும்.

## தெரிவு நடைமுறை

- தகுதியான விண்ணப்பதாரர்கள் பட்டியலிடப்பட்டதன் பின்னர் போட்டிப் பரீட்சை, அதைத் தொடர்ந்து நேர்முகத்தேர்வு(கள்) என்ற அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்.
- மேற்குறிப்பிட்ட ஐந்து மாகாணங்களினதும் தேவைகளைப் பொருத்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- பரீட்சையில் கருத்திற் கொள்ளப்படும் வினாத்தாள்கள்

  வினாத்தாள் I - பகுப்பாய்வுத் திறன்கள் (IQ), பொது அறிவு மற்றும் தகவல் தொழிநுட்பம்

  வினாத்தாள் II - ஆங்கில மொழி

  வினாத்தாள் III - உளச்சார்பு
- போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகள் நேர்முகத்தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியலிடவே பயன்படுத்தப்படும். நேர்முகத்தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கு அமையவே இறுதித் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

## விண்ணப்ப நடைமுறை

www.boc.lk என்ற எமது இணையதளத்தில் Careers என்ற பகுதியின் கீழ் தரவிறக்கிக்கொள்ளக்கூடிய மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி உங்களது சுயவிபரக் கோவையினைத் தயாரித்து அதனை பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தொடர்புடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தொழில் அனுபவத்தை எண்பிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் நிழற்பிரதியுடன் இணைத்து 2024 ஜூலை 20ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் மட்டுமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆகையால் விண்ணப்பதாரிகள் பதவியின் பெயரையும் தாம் விண்ணப்பிக்கும் மாகாணத்தையும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் வெவ்வேறு மாகாணங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்புமிடத்து அவ்வனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுவதோடு தகுதியற்றவையாகவும் கருதப்படும்.

பட்டத்தினதும் ஏனைய தொழில்சார் தகைமைகளினதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதியாகவோ அதற்கு முற்பட்டதாகவோ இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தேவையான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படாத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**'இலங்கை வங்கிச் சதுக்கம்'**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை**
**கொழும்பு -01.**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு
- வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்





கொழும்பு மியூசியஸ் கல்லூரியின் பழைய மாணவியான புதிய பாடகி காவ்யா கிம்ஹானி எதிரிசிங்கவின் முதல் பாடல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் கொழும்பில் லேக்ஹவுஸ் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், கலாநிதி கபில சேனாநாயக்க, பொருளாதார விரிவுரையாளர் அமரநாத் படகொட ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பாடலுக்கான இசையை மூத்த இசையமைப்பாளர் அருண குணவர்தன மேற்கொண்டுள்ளதோடு, பாடல் வரிகளை ஏ.டி. சதுரிகா சில்வா உருவாக்கியுள்ளார். கிஷான் விஸ்வஜித் மற்றும் சனுரி அரம்பேவத்த ஆகியோர் பாடலுக்கு நடனமாடியதோடு, காமினி மதுரு ஆராச்சி இதனை இயக்கியிருந்தார். காவ்யா எதிரிசிங்க, ANCL நிறுவனத்தின் முன்னாள் சட்டப்பிரிவு தலைவர் சட்டத்தரணி ரேணுகா மானெல் தேனுவரவின் மகளாவார்.

# அஷ்ரஃப் சிஹாப்தீனின் கவிதை நூல் வெளியீடு



பன்னூலாசிரியரும் ஒலி, ஒளி பரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீனின் 'சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு இன்று (07) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொழும்பு 09 தெமட கொடை வீதி, வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் வகவம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹூஸைன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் வர்த்தக, வாணிப அமைச்சரும் அ.இ.ம.கா. தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனும், விசேட அதிதியாக மீன்பிடித்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக சி.பி.எம். ஷியாம் (ரூபவாஹினி கூ.தா), எம்.எச்.எம். அன்ஸார் (மாஷா பில்டர்ஸ்), எம்.என்.எம். பிஷ்ருல் அமீன் (சட்டத்தரணி), எஸ். ஆர். எம்.எம். இர்ஷாத் (தகிரேட் இன்டியா செய்தித் தளம்), ரகு இந்திரகுமார் (பிஸ்னஸ் வேர்ள்ட் இன்டர்நெஷனல்), மொஹமட் மில்ஹான் (ஜப்பான் லங்கா என்டர்பிரைஸஸ்), கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், திருமதி சப்ரின் ரின்ஸா (சக்ஸஸ் குறுப் ஒப் கொலேஜ்) செல்வி. டீன் நூர் கனி (ரவ்ளத் அத்பால் இன்டர்நெஷனல்) ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர். வரவேற்புரையை கவிஞர் சிமாரா அலியும் வாழ்த்துரையை மாத்தளை எம்.எம். பீர்முகம்மதுவும் வழங்கவுள்ளனர். நூல் பற்றிய உரைகளை எழுத்தாளர் பூர்ணிமா கருணாகரன், கவிஞர் எஸ்.ஏ.சி.பி. மரிக்கார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்ச்சி தொகுப்பு ஆஷிகா பர்ஸான்.

வெளியீட்டு நிகழ்வுக்கான ஏற்பாடுகளை இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் மேற்கொண்டு வருகிறார்.




கண்டல் தாவரம் தொடர்பான தொழில் முனைவோர் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக வர்த்தகர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுற்றாடல் ஆர்வலர்கள் ஆகியோரை இணைத்துக் கொண்டு அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் செயலமர்வு தாஜ் சமுத்ரா ஹோட்டல் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வை இளம் வர்த்தகர்களின் அமைப்பு, COYLE மற்றும் CIFORICRAF ஆலோசனை நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.


தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வேலைவாய்ப்பு

**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

பிசோன் கோடின்ஸ் தனியார் நிறுவனத்திற்கு நாடளாவிய ரீதியில் விற்பனை முகவர்கள் மற்றும் விநியோகிப்போர் (Agents & Distributors) வங்கிப் பிணையுடன் தேவை. அழையுங்கள் 076 4401701, 011 4348527. 044930

**310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்**

நீர்கொழும்பில் Farma Line Group (Pvt) Ltd கழிவு முகாமைத்துவ நிறுவனத்தில் வேலைப் பரிசோதகர்களுக்காக க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்த இரு பெண்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. சம்பளம் ரூ.30, 000/ தங்குமிட வசதிகள் உண்டு. வயது 25 இற்கும் 40 இற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.071 5354417 071 4536902071 4947935 072 0393295 045312

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கொழும்பு வீட்டில் தங்கி சேவையாற்றுவதற்கு பெண் தேவை. 0703794768 045104

பெந்தொட்ட ஓய்வு பெற்ற தம்பதியினரின் வீட்டில் தங்கி உணவு சமைப்பதற்கு மற்றும் வீட்டுத் தோட்டத்தை சுத்திகரிப்பதற்கு வீட்டுப்பணிப்பெண் / ஊழியர் தேவை. சம்பளம் 35000/ அழையுங்கள் : 072 3568373/ 0342270071045472

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கல்கிசையில் அமைந்துள்ள (வெளிநாட்டவர்கள் வருகை தரும்) கெஸ்ட் ஹவுஸ் இற்கு தங்கி சேவையாற்ற விரும்பும் ஒருவர் தேவை. சம்பளம் 30, 000/ முதல் பயிற்சி தேவை யில்லை. தங்குமிட வசதிகள், உணவு வழங்கப்படும். சகல வேலைகளையும் தேடிப்பார்த்து செய்வதற்கு ஆற்றல்களை (all around) ஆங்கிலம், சிங்களம் அறிவு சாதாரணமாக அல்லது விளங்கிக் கொள்ளுதல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் அன்பான, சுறுசுறுப்பான 20 30 வயதிற்கிடைப்பட்ட ஒருவர் மிக அவசரமாகத் தேவை. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.0772300305 043830

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

கங்காணி தேவை உலப்பனை தேயிலைத் தோட்டத்திற்கு மேலும் உலப்பனை தேயிலைத் தோட்டத்திற்கு ஆண்/ பெண்கள் தேவை. வென்னிலா காருவப்பட்டை வேலை தெரிந்திருந்தால் அதற்கு மேலதிக சம்பளம் வழங்கப்படும். EPF ETF அடங்கலாக. தங்கி வேலை செய்ய வீடுகள் தரப்படும். புதிதாக கட்டிய வீடுகள். 071 3004411. 045081

**325 தொழில்துறை பொது**

எமது தொழிற்சாலைக்கு 18 40 வயதிற்குட்பட்ட ஆண்கள் தொழிற்சாலை ஊழியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். மாத சம்பளம் ரூ. 40, 000/ OT மற்றும் பிற கொடுப்பனவுகளுடன் ரூ.50,000/ இற்கு மேற்பட்ட வருமானம் மதிய உணவு டன் தங்குமிடம் இலவசம். முகாமையாளர், Ice Cubis Private Limited,9, Aluth Road, Hunupitiya , Wattala. 0776819009 045113

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு 45ற்கும் 55ற்கும் இடைப்பட்டவர்கள் பாதுகாவலர்கள் (watcher) தேவை. சம்பளம் ஒரு நாளைக்கு 1500/ நேரில் வரவும். குறைந்த விலையில் உணவு மற்றும் இலவச தங்குமிட வசதி. தொ.பே. இல. 076 6200300 இல. 18, வெளிஅமுன, ஹேகித்த, வத்தளை. 045571

சொந்த விடயம்

**517 அழகு சிகிச்சை/ சிகை அலங்காரம்**

மாதாந்தம் ரூ. 100,000 இற்கு மேல் உழைக்க முடியும். உணவு, தங்குமிடம் இலவசம். திறமையான பாபர்கள் தேவை. 076 4176902. 044908

காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

இருமாடி வீடு விற்பனைக்குகொத்தட்டுவ (IDH) , 68/ A, தொடம்கஹஹேன கொத்தட்டுவ புதிய நகரம், முதலாம் மாடி 2 அறைகள், மண்டபம், உணவு அறை, சமையலறை,குளியலறை 1, இரண்டாம் மாடி 2 அறைகள் மண்டபம் , சமையலறை , குளியலறை 1, (3 .5 பேர்ச்) 150 இலட்சம் . தொ.பே. 07 63 9 31981, 07 27 4 36292 044687

மட்டக்குளி சென்றல் பாதைக்கு 500 மீ தூரத்தில் 26 பேர்ச் காணி 30 அடி பாதையுடன் பழைய வீடுகள் இரண்டு விற்பனைக்கு. கேட், மதில், நீர். மின்சாரம், சிக்கலற்ற உறுதியுடன் வியாபாரம், குடியிறுப்பு இடங்களுக்கு பொருத்தமானது. 076 9079498. 044921

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

கிரிபத்கொட மாகொல சிரிமங்கள வீதியில் 11 பேர்ச் முழுமையான 3 அறைகொண்ட வீடு விற்பனைக்கு. குழாய் நீர், மின்சாரம், சிக்கலற்ற உறுதி. 0 71 4111126. 044903

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

கண்டியில் வீடு விற்பனைக்கு. மாநகர சபை எல்லைக்குள் வாவிக்கு, மாளிகாவைக்கு மற்றும் பாடசாலைகளுக்கு நடைதூரம். பலமாக கட்டப்பட்ட 3000 ச.அடி, 22 பேர்ச் காணி, 5 படுக்கையறைகள், 4 குளியலறைகள், அமரும் பகுதி, சாப்பிடும் பிரதேசம். இன்னும் பலவும். முன்னும் பின்னும் தோட்டம். Threephase மின்சாரம் SLT Fibre Connection விடுதியாக மாற்றலாம். தொலைபேசி 081 2219534. 044738

**622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு**

புதிய மூன்று மாடி வீடு விற்பனைக்கு 8 பிரதான படுக்கையறைகள் இணைந்த குளியலறையுடன் மாத்தளை நகரம். 0777 551799. 044927

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு
330/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



யாழ்ப்பாணம், கோண்டாவில், வாமஸ் வீதியில் வசிக்கும் வைரவன் பிறேமகுமார் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம், நீதவான் நீதி மன்றத்தில் நீதிபதி அ.அ.ஆனந்தராஜா முன்னிலையில் இவர் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமானம் செய்து கொண்டார்.

வைரவன் பிறேமகுமார் தற்போது யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக கடமையாற்றுகிறார்.



தமிழறிஞர் த. துரைசிங்கத்தை நினைவுகூர்ந்து நூல்வெளியீடு செய்யும் நிகழ்வு, நேற்று சனிக்கிழமை கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு முன்னுலை வகித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன ஆலோசகர் ஹாசிம் உமர் பிரதம விருந்தினாக் கலந்துகொண்ட வட மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவனுக்கு முதல் பிரதியை வழங்குகிறார்.

நிகழ்வுக்கு தலைமை வகித்த வானதி காண்டீபன், கல்வியமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் எஸ். தில்லை நடராசா, மருத்துவர் வி. ரி. இளங்கோவன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், ஆகியோர் உடனிருக்கின்றனர்.


தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067




























தினகரன் வாரமஞ்சரி BUDGET adz **போட்டோ குறும் விளம்பரம்**



Toyota Landcruiser V8 Petrol 2009/2013 WP CAB fully loaded Petrol, 4500cc V8, Sunroof, Hight control, Dual A/C, 360 cam, Rs. 55 million 0725 758 266 GD - 02



Toyota Vitz 2017/2018 Edition 2 wp CBC full option, automatic transmission, push start Rs 8,475,000 0777 840 141 GD - 02






RAV4 Year of Manufacture :2008, Imported and Maintained by Toyota Lanka (Agents) Tiptronic , Keyless entry, Cruise Control, Full Option.7.8 Million, Contact Number 0777 672 047 GD - 02



Nissan Xtrail 2015 hybrid petrol, fully loaded, 4wd, first owner, sunroof, power boot etc Rs. 11,700,000/- 0777 840 141 GD - 02

DON'T TXT & DRIVE



Toyota Allion G 2009 first owner, beige interior, alloys, push start, mint condition Rs. 9,250,000/, 0777 840 141 GD - 02



Mitsubishi Montero V6 2004 brand new imported, 3000cc V6 Petrol, beige interior with 7 seater, sunroof, line AC, Tiptronic transmission, 4wd, alloy wheels, 6 airbags, Android multi media player etc, immaculate condition, home used 07778 40 141 GD - 02



Daihatsu Rocky wp FZ ex embassy vehicle, 1994 registered, 2800cc intercooler turbo diesel, manual, 4wd, full option, Android multi media,new tyres, mint condition 0777 840 141 GD - 02



Toyota Belta 1000cc, 3rd owner, white colour, 102351km, kandy, interior and exterior in good condition. Full option. No major repair, 5,790,000.00 Negotiable, Doctor owned, Call 0706 404 032 GD - 02



Toyota Hilux 2011 HL2 brand new imported, 2500cc intercooler Turbo diesel, Manual transmission, 4wd, Rs 10,800,000/- first owner, 0777 840 141 GD - 02



KORA offset printing machine is for sale. 4 colour registration printing machine in good condition/ presently being used for printing work is for sale to the highest offer due to owner's migration 071 4 804 355, 0765 487 216 GD - 02



Sangyoung Rexton 2014 imported & maintained through Micro Cars, fully loaded version, black leather interior with electric memory seats, Tiptronic transmission, 4wd, Dual AC, 18" alloy wheels, new tires, Lenovo android multi media player with R cam, multi function steering, cruise control, Sunroof, first owner immaculate condition Rs. 11,800,000/-. 32A Mirihana Road Nugegoda. 0779 232 207, 0779 232 207 GD - 02



Toyota 121 NW JJ - 2xxx Light Blue, 1500cc, Manual, Dicky light, 2004 Brand new Car for immediate sale. Price 46/50 Slight, Varition can be done after inspection. Wariyapola. 0773 483 930 GD - 02






Chrysler P T Cruiser 2007 Brand New imported through Dimo, 2400cc Petrol, automatic transmission, beige interior, electric seats, 18" alloy wheels, climate control Dual zone AC, premium audio system, 6 airbags, TCS, etc carefully used immaculate condition 32A Mirihana Road Nugegoda 0779 232 207 GD - 02



# திட்டமிட்டு உருவாக்கப்படும் வேலைநிறுத்த அலை

இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நாடு முழுவதும் போராட்ட அலை வீசத் தொடங்கியுள்ளது. நாட்டின் அரசியல் மற்றும் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மிகவும் நெருக்கடியான தருணத்தில் பல்வேறு நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் இவ்வாறு வேலைநிறுத்தங்களை ஆரம்பித்ததற்கான காரணங்களை ஆராய வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் வேலை நிறுத்தம் மற்றும் தொழில் நடவடிக்கைகளுக்கு இடமில்லை எனவும், அதற்கு முன்னர் கோரிக்கைகளை முன்வைத்து அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடத்தப்படுவதாக பலராலும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இதற்கு முன்னரும் பல தேர்தல்கள் அண்மிக்கும் போது இவ்வாறு வேலைநிறுத்தங்கள் நடத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான வேலைநிறுத்தங்கள் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தி அரசியல் ஆதாயத்தை தேடும் நோக்கத்தை கொண்டவை.

பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களால் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, மேலும் இவை ஜனதா விமுக்தி பெரமுனவுடன் இணைந்த தொழிற்சங்கங்களால் வழிநடத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. அக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களான தொழிற்சங்க தலைவர்கள் எவ்வாறு வேலைநிறுத்தத்திற்கு தலைமை தாங்கினார்கள் என்பதை நாட்டிலுள்ள அனைவரும் ஊடகங்கள் ஊடாகக் காண முடிந்தது.

இருப்பினும், இந்த வேலைநிறுத்தங்களின் உண்மையான நோக்கம் சமூக ஊடகங்களில் சிலர் எழுப்பும் கேள்வியின் மூலம் தெளிவாகத் தெரியும். இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள தேர்தலில் ஜே.வி.பி வெற்றியீட்டப் போகிறது என்றால், சில மாதங்கள் கூடப் பொறுத்துக்கொள்ளாமல் ஏன் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது என கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்வி மிகவும் தர்க்கரீதியானது. தங்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வருவது உறுதியானால், ஜனதா விமுக்தி பெரமுனவின் தொழிற்சங்கத் தலைவர்கள் இப்போது வேலை நிறுத்தம் நடத்த வேண்டியது அவசியமில்லை. அப்படியென்றால் அந்தக் கட்சி ஆட்சிக்கு வராது என்பதா பொருள்? வேலைநிறுத்தங்களின் நோக்கம் நாசவேலை மூலம் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை ஏற்படுத்துவதா?

சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பமாகி இரண்டு மாதங்கள் கடந்துள்ளன. அரச ஊழியர்கள் தொடர்பான சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளதுடன், 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அனைத்து சம்பள முரண்பாடுகளும் நீக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு தலைமை தாங்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் சிலர் தொழில் உரிமைகளை வென்றெடுப்பதை விட நாட்டில் பல்கலைக்கழகக் கல்வியை சீர்குலைக்க விரும்புவதாகத் தெரிகிறது. கல்விசாரா ஊழியர்களின் இந்தப் பணிப்புறக்கணிப்பினால் ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் 02 மாதங்களுக்கும் மேலான வாழ்க்கையை இழந்துள்ளனர். கல்விசாரா ஊழியர்களால் இவ்வளவு காலம் பல்கலைக் கழகங்களை மூட முடியும் என்றால், பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர்கள், பீடாதிபதிகள் மற்றும் பதிவாளர்களின் தேவை என்ன?

இந்த வருடம் அரச ஊழியர்களின் சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவால் அரசாங்கம் உயர்த்தியுள்ளது. 2015ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த நல்லாட்சி அரசாங்கம் 10,000/ ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கியது, அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய சம்பள அதிகரிப்பு இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடு வங்குரோத்தாகிவிட்டாலும், இவ்வளவு பெரிய சம்பள உயர்வைக் கொடுப்பதற்கான பணத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் அரசாங்கம் சிரமப்பட்டு வந்தது. ஆனால், தற்போது சில தொழிற்சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ஊதிய உயர்வு கேட்டு வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. 10,000 சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ள வேளையில் அரசாங்கத்தால் சகல துறைக்குமான சம்பளத்தை எப்படி உயர்த்த முடியும்?

ஏற்கனவே இயங்கிவரும் தொழிற்சங்கங்கள், எதிர்காலத்தில் தொடங்கவுள்ள தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, ஜனதா விமுக்தி பெரமுன மற்றும் பிற அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நடத்தும் பிரச்சாரங்கள் இவை என்பது தெளிவாகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக. இவ்வாறான செயற்பாடுகள் இலங்கை அரச சேவையையும் சில தொழில்களையும் அழித்தொழிப்பதற்கு வழிவகுத்துள்ளது.

ஆசிரியர் தொழில் என்பது கண்ணியமான ஒரு தொழிலாகும். ஒருபுறம், ஜனதா விமுக்தி பெரமுன இலவசக் கல்வியின் பாதுகாவலராக நிற்கிறது. எனினும், இன்று நாட்டில் பாடசாலை கல்வியில் இலவசக் கல்வி நடைமுறைப்படுத்தப்படுகிறதா? பல குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தில், இன்றைய பிரச்சினை உணவு அல்லது வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதல்லை. குழந்தைகளின் படிப்புக்கு செலவழிக்க வேண்டிய பெரும் தொகையைச் சேர்ப்பதிலேயே சிக்கல் உள்ளது. பெரும்பாலான பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் மாணவர்கள் இல்லை. சில சாதாரண தர வகுப்புகளின் நிலைமையும் அவ்வாறே. அவர்கள் டியூஷன் வகுப்புகளில் இருக்கிறார்கள். ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் டியூஷன் வகுப்புக்குச் செல்கிறார்கள்.

காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இடையூறு இன்றி பாடசாலைகளை நடத்த வேண்டுமானால் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாட்டில் எத்தனையோ டியூஷன் வகுப்புகள் இருக்கும்போது, டியூஷன் வகுப்புகளால் குழந்தைகளின் வாழ்க்கை அழிக்கப்படும் போது, ஆசிரியர்கள் எப்படி தங்கள் தொழிலை முன்பைப் போலவே தக்கவைக்க முடியும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர்கள் ஒரு புறம் மொத்தப் பணத்தையும் கல்விக்குச் செலவழிக்கிறார்கள். மாதம் ரூ.10,000/ சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை களைய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ள நிலையில், ஆசிரியர்களின் சம்பளத்தை மாத்திரம் எப்படி உயர்த்துவது?

பத்திரிகைகளில் குறிப்பிட்டுள்ளபடி, கொடுப்பனவுகளை அதிகரிக்கக் கோரி அரச ஆயுர்வேத வைத்தியர்கள் தொழில் ரீதியாக போராட்டம் நடத்தவுள்ளனர். அரச சேவை பொறியியலாளர்கள் அனைவரும் தங்கள் துறையில் கள கொடுப்பனவை அதிகரிக்க இதேபோன்ற தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். கிராம சேவை உத்தியோகத்தர்கள் கடந்த சில நாட்களாக தொழில் ரீதியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசாங்க நிறைவேற்று அதிகாரிகள் என்று கூறிக்கொள்ளும் ஒரு குழுவினரும் இப்போது சில காலமாக தொழிற்சங்க போராட்டம் தொடங்கியுள்ளனர். நீண்ட காலமாகவே, அரசு வருமானத்தை வசூல் செய்யும் நிறுவனங்களின் கட்டமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான யோசனைகள் உள்ளன. வரி செலுத்த வேண்டிய மக்கள், வரி செலுத்தாததுதான் நாட்டில் பெரும் பிரச்சினையாக உள்ளது. உள்நாட்டு வருமான வரி, கலால் மற்றும் சுங்கம் ஆகிய முக்கிய துறைகள் அரசாங்க வருவாயை வசூலிக்க இருந்தபோதிலும், அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானத்தின் சதவீதம் தொடர்ந்து குறைந்து வந்தது, ஆனால் பெறப்பட்ட வருவாயின் அளவு அல்லது வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை.

அரசாங்கத்திற்கான வருவாயை வசூலிக்கும் முதன்மைப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த நிறுவனங்கள், பெரும்பாலும் தங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்றாத நிறுவனங்களாகவே கருதப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகள் ஊக்கத்தொகை, கூடுதல் நேரம், பரிசுத் தொகை போன்ற பல சலுகைகளைப் பெறுகின்றனர். அப்படி இருந்தும் நாட்டிற்கு உரிய வருமானத்தை வழங்கும் பொறுப்பு, இந்த நிறுவனங்களால் சரியாக நிறைவேற்றப்படவில்லை எனப் பலர் நம்புகின்றனர். அந்த நோக்கத்திற்காக, மூன்று நிறுவனங்களையும் இணைத்து புதிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க நீண்ட காலமாக யோசனை முன்வைக்கப்பட்டாலும். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. நிலைமையை உணர்ந்து வருமான வரித்துறையும், கலால் துறையும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை, ஆனால் ஒன்றிணைந்த வருவாய் அதிகாரசபையை அமைப்பதற்கு எதிராக சுங்கத்துறையினர் வேலைநிறுத்தத்திற்கு தயாராகி வருகின்றனர். எவ்வாறாயினும், இறுதி நேரத்தில் சுங்கப் பணிப்புறக்கணிப்பை கைவிடுவதற்கு தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த வேலைநிறுத்த அலையின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மிகக் கூர்ந்து கவனித்தால், பெரும்பாலான வேலைநிறுத்தங்கள் ஜனதா விமுக்தி பெரமுன அல்லது ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்புடைய தொழிற்சங்கத் தலைவர்களால் தொடங்கப்படுவதை நீங்கள் காணலாம்.

பல நிறுவனங்களில் கூட்டுத் தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல நிறுவனங்களில் ஜனதா விமுக்தி பெரமுனவுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் மிகக் குறைந்த உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும், அவர்களின் பல்வேறு செயல்பாடுகள் ஒருங்கிணைந்த தொழிற்சங்கங்களில் வலுவான நிலையை ஏற்படுத்தியது. ஒருமுறை வேலைநிறுத்தம் தொடங்கப்பட்டால், அதை நிறுத்த முடியாததற்கு காரணம் இந்த நபர்கள் வேலைநிறுத்த போராட்டங்களை முன்னெடுப்பதாகும்.

பாரிய அலை வரும், ஆட்சிக்கு வருவோம் என்று நம்பும் சில அரசியல் கட்சிகளுக்கு அவ்வாறான அலை எதுவும் இல்லை என்பதையே பொதுமக்களின் எதிர்வினைகள் காட்டுகின்றன. அதன் காரணமாக எப்படியாவது வேலை நிறுத்த அலையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கட்சிகளின் நோக்கமாக தெரிகிறது. அதற்காக பொதுமக்கள், தொழிலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் உயிரையும் எதிர்காலத்தையும் தியாகம் செய்யத் தயாராக உள்ளனர்.



களனி பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கைகள் பிரிவின் முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
**சுனந்த மத்துமபண்டார**

*தமிழில் வீ.ஆர்.வயலட்*

## பிரிட்டனில் தொழில்கட்சியின் வெற்றி

# நவதாராண்மைவாதத்தின் ஆட்சிக்கு வழிவகுக்குமா?



**பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்**
**யாழ். பல்கலைக்கழகம்**

பாராளுமன்ற ஜனநாயகத்தின் தாயகம் என்று அலங்கரிக்கப்படும் பிரித்தானியாவில் 2024 க்கான தேர்தல் நிறைவுற்று முடிவுகள் வெளியாகி புதிய பிரதமரும் ஆட்சியும் ஏற்பட்டுள்ளது. பழமைவாதக் (Conservative Party) கட்சியின் 14 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. ஜனநாயகத்தின் பெயரால் பல பிரதமர்கள் பல அரசாங்கங்கள் என ஓரே கட்சிக்குள் இருந்து மாற்றமுறாத கட்சி அரசியலைக் கண்டு கொள்ளக் கூடியதாக அமைந்திருந்தது. இறுதியாக பிரிட்டிஷ் இந்தியரான பிரதமர் ரிஷி சுனக்கின் ஆட்சி தற்போதைய ஆட்சிமாற்றத்திற்கு வழியமைத்துள்ளது. பிரிட்டன் ஒரு பாரம்பரிய ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் அதனிடம் தற்போதும் ஜனநாயகப் பண்புகள் அதிகம் உள்ளதென்ற கருத்தே அதிகம் காணப்படுகிறது.

பதவியை இராஜினாமாச் செய்வது, விட்டுக் கொடுப்பது, இன,மத, வர்க்க பிரதேச உணர்வுகளைக் கடந்து தேசத்திற்காக உழைப்பது என்பனவற்றைத் தனித்துவமானதாக கண்டு கொள்ள முடிகிறது. மக்களால் நிராகரிக்கப்பட்டால் பதவியை விட்டு வெளியேறுதல் என்ற ஜனநாயகத்தின் உயர் இலட்சியங்களை தற்போதும் பிரிட்டனிலுள்ள அரசியல் தலைவர்கள் பின்பற்ற முயலுகின்றனர். இக்கட்டுரையும் புதிதாக ஆட்சி அமைத்துள்ள தொழில் கட்சியின் அரசியலை தேடுவதாக அமையவுள்ளது.

04.07.2024 நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் வெளியாகிய போது தொழில் கட்சி 412 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது. பழமைவாதக் கட்சி 121 ஆசனங்களையும் தராள ஜனநாயகக் கட்சி 71 ஆசனங்களையும் பெற்றதோடு ஏனைய கட்சிகள் சொற்ப ஆசனங்களையே பெற முடிந்தது. அதன் பிரகாரம் தொழில் கட்சியின் தலைமை கியர் ஸ்ராமர் மன்னர் சார்ள்ஸை பங்கிங்கம் மாளிகையில் சந்தித்து ஆட்சி உரிமையை உறுதிப்படுத்திக் கொண்டார். அவர் பிரதமர் இல்லத்திலிருந்து தனது உரையை நாட்டு மக்களுக்கு வழங்கினார். அவரது உரையில் இது மாற்றத்திற்கான ஆரம்பம் எனவும் தொழில்கட்சி மக்களுக்கு சேவையாற்றும் ஆணையைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். பொருளாதார மாற்றங்களுக்கான அடிப்படையை புதிய அரசாங்கம் கொண்டுள்ளது என்பதை அவரது உரையில் கண்டு கொள்ளக் கூடியதாக அமைந்திருந்தது.

மறுபக்கத்தில் இஸ்ரேல் பலஸ்தீன போர் அதிக முரண்பாட்டை தொழில் கட்சிக்கு ஏற்படுத்தியுள்ளது. தொழில் கட்சியின் முன்னாள் தலைவர் ஜெரமி கோர்பைன் இஸ்ரேலுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்ததனால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். அவ்வாறே ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டனை வெளியேற்றிய தரப்பும் இத் தேர்தலில் கணிசமான வாக்கு விகிதாசாரத்தை அடைந்துள்ளது. இத்தகைய குழப்பங்களுக்கும் நெருக்கடிக்குள்ளுமே தொழில்கட்சி ஆட்சி அமைத்துள்ளது. ஆனால் அதிக பெரும்பான்மையுடன் ஆட்சியை உறுதிப்படுத்தியுள்ளது. இதன் அரசியலை விரிவாக தேடுவது அவசியமானது.



ஓன்று, தொழில்கட்சி தனித்துவமான பாரம்பரியம் ஒன்றைக் கடந்த காலத்தில் பின்பற்றியிருந்தது. இரண்டாம் உலகப் போரின் பின்னரான காலத்தை கட்டமைத்ததில் தொழில் கட்சிக்கு முக்கியத்துவம் இருந்தது. ஆனால் தொழில் கட்சிக்கான கருத்தியல் பெறுமானத்தை படிப்படியாக இழக்கத் தொடங்கியது. பேபியன் சோஷலிஸ்டுகளின் மரபிலிருந்து தொழில் கட்சிகள் தோன்றிய போதும் அவை ஒரு முதலாளித்துவ ஏகாதிபத்திய தராண்மைவாத நவதாராண்மைவாத அரசுக்குள்ளேயே தன்னை வடிவமைத்துக் கொண்டன. அதன் நீட்சியாக பனிப்போருக்கு பின்னான உலக அரசியல் யுகத்திற்குள் மேலும் தொழிலாளர் கருத்தியல் சுருங்கிப் போனது. கார்ல் மாக்ஸினால் இனங்காணப்பட்ட இயந்திர யுகத்தின் வளர்ச்சி இறந்துபோன தொழிலாளரின் பங்களிப்பை உயிருள்ள தொழிலாளருக்கு நிகரானதாக கட்டமைத்திருந்தது.

அத்தகைய யுகத்திற்குள்ளேயே தொழில் கட்சிகளின் கருத்தியல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மரபான யுகத்திற்குள் செயல்படும் தொழில் கட்சில்ல. பிரித்தானிய குடியேற்றத்தின் பிடியிலிருந்த நாடுகளின் விடுதலைக்கு தொழில் கட்சி பங்காற்றியது என்பதற்காக உலகத் தொழிலாளரின் கட்சியாகவோ பிரிட்டன் தொழிலாளரது கட்சியாகவோ கொள்வது கடினமாகும். அதுவும் தற்போதைய யுகத்தில் தொழில் கட்சியின் இருப்பும் பழமைவாதக் கட்சியின் இருப்பும் அதிக வெறுபாடுகளைக் கொண்டதல்ல.

இரண்டு, உலகளாவிய நவதாராண்மைவாத யுகத்திற்குள்ளேயே பிரிட்டனில் தொழில் கட்சி ஆட்சியை மீளவும் பிடித்துள்ளது. ஐரோப்பிய மறுமலர்ச்சியிலிருந்து துளிர்விடத் தொடங்கிய தாராண்மைவாத யுகம் பிரித்தானிய பழமைவாதக் கட்சியின் காலத்திலேயே பெருவளர்ச்சியடைந்தது. அதில் அரசியல் தலைவர்கள் என்ற அடிப்படையில் மார்கிரட் தட்சருக்கும், றொனால்ட் றேகனுக்கும் தனியான பங்கிருந்தது. ஏகாதிபத்தியத்தின் புதிய பரிமாணமாக அமைந்தாலும் உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் மிக்கதாக அமைந்திருந்தது.

உலகளாவிய ரீதியில் அனேக மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு கோட்பாடாக தராண்மைவாதம் பரிமாணம் பெற்றது. இதன் வளர்ச்சிக்குள்ளேயே 21 ஆம் நூற்றாண்டு மனித சமூகத்தின் இருப்பு உள்ளது. தனியார் யுகத்தின் இருப்பே நவதராண்மைவாதத்தின் கட்டுமானம்.

எனவே இதனை நிராகரித்துக் கொண்டு தொழில் கட்சியின் யுகம் எதனையும் மேற்கொள்ள முடியாது. அதன் வரைபுக்குள்ளாலேயே இயங்க வேண்டிய பொறுப்புடமையை தொழில் கட்சி கொண்டுள்ளது. தொழிலாளர் என்ற கருத்தியலைக் கொண்டிருக்காத தொழில் கட்சியாகவே பிரித்தானிய தொழில் கட்சி காணப்படுகிறது. அது ஒரு ஏகபோகத்தின் அடையாளமாகவே தெரிகிறது.

மூன்று, இஸ்ரேல் பலஸ்தீன போர் தொடர்பில் தொழில் கட்சி தெளிவான நிலைப்பாட்டை, ஏற்கனவே தொழில் கட்சியின் முன்னாள் தலைவரை வெளியேற்றியதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். தொழில் கட்சியின் தலைமையையே தொழில் கட்சி இஸ்ரேலுக்காக, அகற்றியுள்ளதென்பது தொழில் கட்சியின் நிலைப்பாட்டை புரிந்து கொள்ளப் போதுமானது.

இதிலிருந்தே ஈழத்தமிழர் தமது அரசியல் சார்ந்து தொழில் கட்சியுடன் உரையாடவோ ஆதரவை பெறவோ முடியுமா என்பது கவனத்தில் கொள்ள வேண்டும். ஈழத்தமிழரை பிரித்தானியப் பிரஜையாகக் கொண்டாலும் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தாலும் பாலஸ்தீன மக்களுக்கு கொடுக்கப்படும் உரிமையும் வாய்ப்புமே ஈழத்தமிழருக்கும் உண்டு என்பதை மறுக்க முடியாது. இது பிரிட்டனின் ஏகாதிபத்தியக் கூட்டின் நலன்சார்ந்ததே அன்றி தனிப்பட்ட ஈழத்தமிழரது அரசியலுக்கானதல்ல. தொழில் கட்சியின் போக்கானது ஈழத்தமிழருக்கானதல்ல. அது பிரித்தானிய உள்ளடங்கலான ஏகாதிபத்தியங்களின் கூட்டுக்களின் நலன்சார்ந்தது. இதுவே மேற்குலகத்தின் ஜனநாயகம். இதனையே வெள்ளைத்தோல் ஜனநாயகம் என்று அழைப்பதுண்டு. யூதர்களுக்கு ஆதரவு வழங்குவதில் எப்போதும் பிரிட்டனில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து செயல்படும் மரபு காணப்படுகிறது. அத்தகைய மரபு தொழில்கட்சி காலத்திலும் மீறப்படவில்லை. தற்போதைய காலம் மட்டுமல்ல ஆரம்பகாலத்திலிருந்தே அத்தகைய செயல்பாட்டையே தொழில் கட்சி கொண்டுள்ளது.

நான்கு, ஐரோப்பிய யூனியலிருந்து வெளியேறிய பிரிட்டனின் சூழலே தொழில் கட்சியின் ஆட்சிக்கு வழியமைத்தது. அதாவது கன்சர்வேட்டிவ் கட்சியின் இருப்பு அதிலிருந்தே நெருக்கடிக்கு உள்ளானது. பிரதமர்கள் பதவியை துறந்ததும். கட்சி நிலைகுலைந்ததும். ஐரோப்பிய யூனியனது பிரித்தானிய வெளியேற்றமானது ஜனநாயகத்தின் பிரதியாக அமைந்தாலும் அது முழுமையாக பிரிட்டன் அமெரிக்க கூட்டின் வெளிப்பாடாகவே தெரிகிறது. அது ஒரு பொருளாதார இயங்குவிசையின் நகர்வாகவே அமைந்துள்ளது. அதில் ஐயர்லாந்து ஐயரிஷ்_ பங்களிப்பும் பிரதானமானதாக புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

அது மட்டுமல்லாது பிரிட்டிஷ் இந்தியரிடம் பிரித்தானியாவின் ஆட்சி போய்ச்சேர்ந்ததும் ஒரு காரணமாக தெரிகிறது. இதில் தொழில் கட்சியின் இத்தகைய வெற்றிக்கு ரிஷி சுனக்கின் ஆட்சிக்காலம் முக்கியமானதாகவே அமைந்துள்ளது. அதற்கான காரணம் ஆங்கிலேயரை ஒரு இந்தியா வம்சாவளியினன் ஆள்வதென்பதே அதன் உட்கிடக்கையாகும். அதன் பிரதிபலிப்பே தொழில் கட்சியின் வெற்றிக்கு பின்னாலுள்ள காரணங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

எனவே தொழில் கட்சி எந்தவித யுகமாற்றத்தையும் தொழிலாளர் சார்ந்து ஏற்படுத்தக் கூடியதாக தெரியவில்லை. அதற்கான புறச்சூழலும் அகச்சூழலும் இல்லை என்பதே அடிப்படையானது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் வடிவமாகவும் அதன் நீட்சியாகவும் அதன் ஆட்சி அமைய வாய்ப்பு உள்ளது. இதிலிருந்தே ஆசிய, ஆபிரிக்க தேசங்களின் இன ஒடுக்குமுறைக்கான கேள்விகளும் தீர்வுகளும் அமையும். அதன் தீர்வு என்பது உலக ஏகாதிபத்தியங்களின் நலனுக்குள் தங்கியுள்ளது. அதில் ஒரு நாடாகவே பிரிட்டன் காணப்படுகிறது. அதன் ஆட்சியில் தொழில் கட்சி ஒரு பங்குதாரராக அமையவுள்ளது. இதிலிருந்து கொண்டே ஈழத்தமிழர் தமது அரசியல் அபிலாஷைகளை கட்டமைக்க வேண்டும். அல்லது புரிந்து கொள்ள வேண்டும்.

# இஸ்லாமிய புத்தாண்டு - ஹிஜ்ரி 1446




**துல்ஹஜ் மறைகிறது.**
**முஹர்ரம் பிறக்கிறது.**
**இஸ்லாமிய புத்தாண்டு மலர்கிறது.**
**அல்லாஹ்வின் அருட்கொடையால்**
**நாம் ஹிஜ்ரி 1445 ஐ கடந்து**
**1446 இல் காலடி வைக்கிறோம்.**

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வினால் உலகத்திற்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்துகொள்வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பாரிய திருப்புமுனையான ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய புதிய வருடம் கணிக்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் கி .பி. 622 இல் மக்காவிலிருந்து மதீனாவுக்கு புலம்பெயர்ந்தமை ஹிஜ்ரத் என அழைக்கப்படுகிறது. எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித்தோழர்களை அழைத்து ஒன்று சேர்த்து ஆலோசனை கேட்டார்கள். அப்போது பலரும் பல மாதங்களைக் குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் ஊடாக இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளையும் அத்துமீறல்களையும் மிகைத்து தூய இஸ்லாத்தை வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க்கையை தெரிவு செய்தார்கள். அதற்கான இலட்சியப் பயணமே ஹிஜ்ரத் நிகழ்வாகும். இன்று ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய புத்தாண்டின் போதும் இதனை நினைவுபடுத்தும் நாம் எம் வாழ்வில் எத்தகைய தீய செயல்களை விட்டும் ஒதுங்கி புதிய வாழ்விற்கு எம்மைத் தயார்படுத்தியிருக்கிறோம்.

வருடத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் நாம் இந்த வருடத்தில் அமைந்த செயற்பாடுகளை ஒரு கணம் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை உண்டு.

எத்தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்தேன்? பர்ளு தொழுகைகளை உரிய நேரத்திற்கு நிறைவேற்றினேனா? எத்தனை தடவைகள் தஹஜ்ஜத் தொழுகைகளை நிறைவேற்றினேன்? சுன்னத்தான தொழுகைகளை எந்தளவு நிறைவேற்றினேன்? எனது சொத்திலிருந்து எத்தனை ரூபாய்களை இறை பாதையில் செலவு செய்தேன்? மற்றைய சகோதரர்களுடனும் இரத்த உறவுகளுடனும் உறவுகளைப் பேணி நடந்தேனா?

மொத்தத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்தளவு நிறைவேற்றியுள்ளேன் என எமக்குள் நாம் கேட்டுக் கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அல்லாஹ்விடத்தில் மன்றாடி பாவமன்னிப்பு தேடிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரி 01 கி.பி. 622 இலிருந்து ஆரம்பிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் இஸ்லாமிய ஆண்டு 1446 தோன்றுகிறது. கிறிஸ்து ஆண்டானது (ஆங்கில, தமிழ், சிங்கள வருடங்கள்) சூரிய சுழற்சியைக் கொண்டு கணிக்கப்படுகிறது.

இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரியானது சந்திர சுழற்சி மூலமாக கணிக்கப்படுகிறது. இது இஸ்லாமிய வருடத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகிறது பசி உணவைத் தேடுவதைப் போல ஈமான் அமல்களைத் தேடும். எனவே ஈமான் உறுதி அடைந்தால் அமல்கள் செய்ய வாய்ப்புக் கிடைக்கும். அமல்கள் செய்தால் ஈருலகிலும் நிம்மதி கிடைக்கும் இந்த வருடத்தை விட அடுத்த வருடம் எனது வாழ்வில் ஈமானிய மலர்கள் மலர்ந்து செழிக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

ஒவ்வொரு வருடமும் எம்மை விட்டு பிரிந்து செல்லும் போது எமது ஆயுட்காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வோம்.

பிறக்கவிருக்கும் இஸ்லாமிய புதுவருடம் ஹிஜ்ரி 1446 இல் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவுகளையும் மனக்கசப்புகளையும் உதறித் தள்ளிவிட்டு சகோதரத்துவத்தை, பரஸ்பர புரிந்துணர்வை தோற்றுவிப்பதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!!

கலாபூஷணம் பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்.

# ஜேர்மனியில் முப்பது வருடங்களாக தொடர்ச்சியாக வெளிவரும் சஞ்சிகை!

## தினகரன் வாரமஞ்சரிக்கான விசேட பேட்டியில் வெற்றிமணி சஞ்சிகையின் ஆசிரியர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன்

**யாழ்ப்பாணம், குரும்பசிட்டியைச் சேர்ந்த மறைந்த ஆசிரியர் மு.க. சுப்ரமணியத்தினால் 1950 இல் சிறுவர் சஞ்சிகையாக மாதாந்தம் ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றிமணி', 1980இல் அவரது மறைவோடு நின்று போனது. என்றாலும் நின்று போயிருந்த வெற்றிமணி, அவரது மகனான கலாநிதி மு.க.சு. சிவகுமாரனின் முயற்சியினால் 1994 ஜூன் முதல் ஒரு ஜனரஞ்சக சஞ்சிகையாக ஜேர்மனியில் இருந்து வெளிவருகிறது. இச் சஞ்சிகையின் ஆசிரியர் சிவகுமாரன் இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த சமயம் வெற்றிமணியின் 30 வருட நிறைவு குறித்து தினகரன் வாரமஞ்சரிக்கென விஷேட பேட்டியொன்றை வழங்கினார். அப் பேட்டியை இங்கு தருகிறோம்.**

**கேள்வி: உங்களது எழுத்துலக பிரவேசம் குறித்து சுருக்கமாகக் கூறுங்கள்?**

பதில்: நான் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். அது இயல்பாகவே தமிழ்வாசனை மிக்க மண். அத்தோடு எனது தந்தை ஒரு ஆசிரியராவார். அவர் நாவலப்பிட்டியில் ஆசிரியராகக் கடமையாற்றிய போது மாணவர்களை மையப்படுத்தி வெற்றிமணி என்ற பெயரில் சிறுவர் சஞ்சிகையொன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார். அச்சஞ்சிகைக்கு எனது சிறுபராயம் முதல் பங்களிப்பு செய்தேன். இதன் ஊடாக எழுத்துலக பிரவேசம் குறித்த ஆர்வமும் ஊக்கமும் எனக்கு கிடைக்கப்பெற்றது.

இவ்வாறான பின்புலத்தில் நான் எழுதிய 'காலம் கடந்த கண்ணீர்' என்ற தலைப்பிலான முதலாவது சிறுகதை 1970இல் தினகரனில் வெளியானது. அச்சிறுகதைக்கு தினகரன் நிறுவனத்தினர் 20 ரூபாவை கொடுப்பனவாக அனுப்பி வைத்திருந்தார்கள். அன்றைய காலகட்டத்தில் எனது சிறுகதை தினகரனில் பிரசுரமானதை எனது சிறுகதைக்கு கிடைத்த அங்கீகாரமாகவே கருதினேன். அதன் பின்னர் நான் எழுதிய பல சிறுகதைகள் தினகரனில் தொடராக வெளிவந்துள்ளன. அவற்றை தொகுத்து 'ஒரே ஒரு தெய்வம்' என்ற பெயரில் சிறுகதைத் தொகுதியாக எனது 19 ஆவது வயதில் வெளியிட்டேன். அவற்றில் பெரும்பாலானவை தினகரனில் வெளிவந்த சிறுகதைகளாகும். அத்தோடு வெற்றிமணியில் 1970களில் வெளிவந்த குருநாவலொன்றையும் நூலாக வெளியிட்டுள்ளேன்.

மேலும் 1990இல் சித்திர, சிற்ப கண்காட்சி சிறப்பு மலரான 'புதிய வடிவங்கள்' நூலினையும், 2000 இல் 'வெற்றிமணி' பொன்விழா மலரினையும், 29 வருடங்கள் நீண்ட இடைவெளியின் பின் மாதவி என்ற புனைபெயரில் 'இடைவெளி' என்ற 32 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பினையும், 2003 இல் மாதவி என்ற புனைபெயரில் ஓவியங்களுக்கு முக்கியத்துவம் தரும் 'அது என்பது இதுவா', தாய்நில ஏக்கத்தினை விளக்கும் 'என் காதல் கிராமத்தின் சாளரம்' கவிதை நூலினையும், நிலாம்கள் எனும் பெயரில் 'தமிழே காதல்' எனும் குறும்பாவகை கவிதைத் தொகுப்பினையும், 2007இல் எட்டு உட்பிரிவுகளோடு வெளியான அறிவியல் கட்டுரைத் தொகுப்பான 'அதிசய உலா' ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளேன்.




**கேள்வி: வெற்றிமணி குறித்து சுருக்கமாக குறிப்பிட முடியுமா?**



பதில்: ஆம். எனது தந்தையான மறைந்த ஆசிரியர் மு.க. சுப்ரமணியம் 1950 இல் நாவலப்பிட்டியில் வெற்றிமணியை சிறுவர் சஞ்சிகையாக ஆரம்பித்தார். மாணவர்களை மையப்படுத்தி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சிறுவர் மாதாந்த சஞ்சிகை இதுவாகும். 1979 வரை வெற்றிகரமாக வெளிவந்த இச்சஞ்சிகை தந்தையின் மறைவோடு நின்றுபோனது.

நான் 1981இல் ஜேர்மனிக்கு புலம்பெயர்ந்தேன். அங்கு என்னை ஒரளவுக்கு நிலைப்படுத்திக்கொண்டு தந்தையால் ஆரம்பிக்கப்பட்டு நின்று போயிருந்த வெற்றிமணி சஞ்சிகையை 1994இல் இடத்துக்கும் காலசூழலுக்கும் ஏற்றாற்போல் ஒரு ஜனரஞ்சக சஞ்சிகையாக மீண்டும் தொடங்கினேன். இதன் முதலாவது இதழ் 1994 ஜுன் முதலாம் திகதி ஜேர்மனியில் வெளிவந்தது. அன்று முதல் இன்று வரையும் வெளியாகி 30 வருடங்களை நிறைவு செய்திருக்கிறது வெற்றிமணி.




இது மின்னிதழ் அல்ல அச்சில் வெளியிடப்படும் சஞ்சிகையாகும். கொவிட் 19 பெருந்தொற்று காலத்தில் கூட தொடராக வெளிவந்த சஞ்சிகையாக வெற்றிமணி விளங்குகிறது.

ஜேர்மனியில் வாழும் இளம் சந்ததியினரின் சாதனைகள், வெற்றிகள் என்பன இச்சஞ்சிகையின் ஊடாக கடந்த 30 வருடங்களாகக் வெளிக்கொணரப்படுகின்றன. அவற்றில் கலை, இலக்கியம், கல்வி என்பன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

கட்டுரை, சிறுகதை, தொடர் கதை உள்ளிட்ட பல அம்சங்களை உள்ளடக்கி வெளியிடப்படும் இச்சஞ்சிகையில் சர்வதேசம், மருத்துவம், சமூகவியல், தொழில்நுட்பவியல், பாரம்பரியம் உள்ளிட்ட விடயங்களிலான கட்டுரைகள், புலம்பெயர் நாடுகளில் இடம்பெறும் நிகழ்வுகள் குறித்த செய்திகள், சினிமா துணுக்குகள் அடங்கலாக பல்சுவை அம்சங்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

**கேள்வி: புலம்பெயர் நாடொன்றில் இருந்தபடி தமிழ் மொழி சஞ்சிகையொன்றை வெளியிடுவதில் எதிர்கொள்ளும் சவால்கள்?**

பதில்: ஜேர்மனி தமிழ் மொழி பரவலாகப் பயன்படுத்தப்படக்கூடிய நாடல்ல. அதனால் இச்சஞ்சிகையை ஆரம்பிக்கும் போது அச்சகத்தில் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அங்குள்ள அச்சகங்களில் பணிபுரிபவர்கள் ஜேர்மனி மொழிப் பரிச்சியம் மாத்திரம் கொண்டவர்களாவர். அவர்களால் தமிழ்மொழி சஞ்சிகைக்கான அச்சுப் பணிகளை மேற்கொள்வது சிரமமான காரியமாக இருந்தது. அப்படியிருந்தும் இச்சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்பதில் நான் உறுதியாக செயற்பட்டேன்.



இதற்கு நான் பெற்றுக் கொண்ட பட்ட படிப்பு பெரிதும் உதவியது. களனி பல்கலைக்கழகத்தில் நுண்கலை துறையில் ஓவியம் தொடர்பில் கற்று பட்டம் பெற்ற எனக்கு இச்சஞ்சிகையை வெளியிட இக்கற்கை பெரிதும் உதவியது. 1994 காலப்பகுதியில் இப்போது போன்று கணினி வசதி இருக்கவில்லை. அச்சமயம் எனது ஓவிய அறிவைப் பயன்படுத்தி இச்சஞ்சிகையை சீராகவும் ஒழுங்கமைப்புடனும் வெளிக்கொணர முடிந்தது

அதேநேரம் அன்றைய காலப்பகுதியில் ஜேர்மனியிலுள்ள அச்சகங்களில் ஜேர்மனி மொழி அல்லாத வேறுமொழியில் சஞ்சிகையொன்றை அச்சிட்டு வெளியிடுவது பாரிய சவாலுக்குரிய விடயமாக இருந்தது. வெற்றிமணி தமிழ் மொழியில் வெளியிடப்படும் சஞ்சிகையாக இருந்ததால் அவர்கள் நீல நிறத்தில் சதுரப் பெட்டி போட்ட அட்டையை வழங்குவார்கள்.

அதில் தமிழ் மொழியில் எழுதி அதைப் பிரதிபண்ணி தலையங்கத்தைக் பெரிதாக்கி அதில் ஒட்டி அவர்களிடம் வழங்க வேண்டும். அதன் பின்னர் அவர்கள் படம் எடுத்து அதனைச் செய்வார்கள்.

அத்தோடு எந்தப் பக்கம் மேல் நோக்கி இருக்க வேண்டும்? எந்தப் பக்கம் கீழ் நோக்கி இருக்க வேண்டும் என்பதை சரியாகக் கண்டறிவதிலும் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டார்கள். அச்சமயம் தான் தமிழ் எழுத்துக்கு மேல் குத்து இருந்தால் அது மேல் நோக்கி இருக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்து அதற்கு ஏற்ப செயற்பட்டார்கள். அவ்வாறான சிரமங்களுக்கு மத்தியில் வளர்ந்த இச்சஞ்சிகையின் ஊடாக ஜேர்மன் மொழி மாத்திரம் தெரிந்த அவர்களுக்கு கடந்த 30 வருட காலப்பகுதியில் தமிழ் மொழிப் பரிச்சம் ஏற்பட்டுள்ளது.

**கேள்வி: தமிழ் மொழி பரவலாகப் பயன்படுத்தப்படாத நாடொன்றில் இவ்வாறான சஞ்சிகையை 30 வருடங்களாக தொடராக வெளியிடுவது என்பது இமாலய சாதனை தான். அது தொடர்பில் கூறுங்கள்?**

பதில்: வெற்றிமணி முழு வர்ணப் பதிப்பாகத் தொடராக வெளிவர ஜேர்மனியிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இலங்கையில் ஒரு காலத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருவதற்கு பிரதேச மட்டத்திலுள்ள வாசிகசாலைகள், கிராம முன்னேற்ற சங்கங்கள் பெரிதும் உதவக் கூடியனவாக இருந்துள்ளன. அதேபோன்று ஜேர்மனியில் வர்த்தக நிறுவனங்கள் உதவுகின்றன. குறிப்பாக பத்திரிகைகள், கலை நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் தங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் இன்முகத்துடன் நல்கிவருகிறார்கள்.

அவர்களது ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் மறக்க முடியாதவையாகும்.

**கேள்வி: நிறைவாக நீங்கள் குறிப்பிட விரும்புவதென்ன?**

பதில்: நான் ஜேர்மனியில் பென்ஸ் நிறுவனத்தில் பணியாற்றுகின்ற அதேநேரம் வெற்றிமணியை வெளியிட்டு வருகின்றேன். அத்தோடு ஓவிய, சிற்பக் கண்காட்சிகளையும் நடாத்தியுள்ளேன். ஜேர்மனிய பத்திரிகையொன்று நடத்திய சுவர்ச் சித்திரப் போட்டியில் 1992 இல் எனக்கு முதல் பரிசு கிடைக்கப்பெற்றது.

ஜேர்மனியில் எனக்குக் கிடைக்கப்பெற்ற அங்கீகாரமாகவே இதனைக் கருதுகிறேன்.

நான் பணியாற்றும் பென்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருக்கு அவரது பிறந்த தினத்தின் நிமித்தம் 80 சென்றி மீற்றர் உயரத்தில் மின்சார உபகரணங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சிலையை அன்பளிப்பாகக் கையளித்தேன்.

இதன் நிமித்தம் 1936 முதல் 1996 வரை பயன்படுத்தப்பட்ட மின்சார உபகரணங்கள் பாவிக்கப்பட்டன. அதற்கும் பெரும் வரவேற்பு கிடைக்கப்பெற்றது. எனது பெரும்பாலான ஓவியங்களும் படைப்புக்களும் எனது தாய்நாட்டை பின்னணியாகக் கொண்டும் மதசார்பற்ற வகையிலும் வெளி வந்தவை.

அவையும் எனக்கு மக்களின் நல்ல பாராட்டுக்களைப் பெற்றுத் தந்தது. களனி பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையில் ஓவிய மற்றும் சிற்பத்துறையில் முதன் முதலில் நான் உட்பட மூவர் கற்று பட்டம் பெற்று வெளியேறினோம். இப்பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழியில் கற்பிக்கப்பட்டதால் நாம் பரீட்சையை தமிழ் மொழியில் எழுத விரும்பினோம். அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலமாக இருந்தது.

அச்சமயம் பேராசிரியர் கைலாசபதி எமக்கு மிகுந்த ஒத்துழைப்பு நல்கி களனி பல்கலைக்கழகத்தில் ஆறுமாதமும் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆறு மாதமாக மாறிமாறி கற்க வசதி செய்து கொடுத்து முழுமை பெற்ற கலைஞராக நாம் வெளிவர உதவினார். இச்சமயம் அவரை நான் நினைகூருகிறேன்.

மர்லின் மரிக்கார்

மனிதநேய பணியாளர்

# பவளவிழா காணும் எச். எச். விக்கிரமசிங்க



கறுப்பு ஜுலை என இன்றும் பேசப்படும், 1983ஆம் ஆண்டு நடந்த கலவரங்களின்போது, எங்கள் நீர்கொழும்பூரில் தமிழர்கள் நடத்திவந்த வர்த்தக நிலையங்கள் எரியூட்டப்பட்டன.

குறிப்பாக நகைக் கடைகள், புடவைக் கடைகள் யாவும் சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டிருந்தன.

அக்காலப்பகுதியில் எனது தம்பி நித்தியானந்தனுக்கு திருமணமும் நிச்சயிக்கப்பட்டிருந்தது. நானும் குடும்பத்தினரும் யாழ்ப்பாணத்தில் அரியாலைக்கு இடம்பெயர்ந்திருந்தோம்.

அவ்வேளையில் தம்பியின் திருமணத்திற்கான தாலிக்கு பொன்னுருக்கும் சடங்கினை அரியாலையில் நாம் தங்கியிருந்த வாடகை வீட்டில் நடத்தினோம்.

சில நாட்களில் தென்னிலங்கையில் நிலைமை படிப்படியாக சீரடைந்ததையடுத்து ஊர் திரும்பியிருந்தோம்.

எனினும், தமிழ் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. தம்பியின் திருமணத்திற்கும் நாள் குறித்துவிட்டோம்.

ஆனால், கூறைச்சேலை, பட்டு வேட்டி மற்றும் நகைகள் வாங்குவதற்கு எங்கள் ஊரில் கடைகள் இருக்கவில்லை.

எனது தம்பியும் உறவினர்களும் யாழ்ப்பாணம் சென்று அவற்றை வாங்கிக்கொண்டு ஊர் திரும்புகையில், வவுனியாவில் அடைமழை பொழியத் தொடங்கிவிட்டது. அதனால், பஸ் போக்குவரத்து தடைப்பட்டது.

அன்று வவுனியா பஸ் நிலையத்தில் தம்பியும் உறவினர்களும், மாலை வரையிலும் என்ன செய்வது எனத் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது கொழும்பு செல்வதற்காக வந்த ஒருவர், எம்மவர்களிடம், நீங்கள் எங்கே செல்வதற்காக காத்திருக்கிறீர்கள்? எனக்கேட்டுள்ளார்.

எனது தம்பி, நீர்கொழும்பு எனச் சொன்னதும், நீர்கொழும்பா, உங்களுக்கு முருகபூபதியை தெரியுமா..? எனக்கேட்டிருக்கிறார்.

நான் அவருடைய தம்பிதான். இவர்கள் எமது உறவினர்கள் என்று தம்பி சொல்லியிருக்கிறார்.

இந்த மழை இன்று ஓயாது போலிருக்கிறது. பஸ் போக்குவரத்தும் தடைப்பட்டிருக்கிறது. இந்த இரவில் நீங்கள் எங்கேயும் செல்லவேண்டாம். வாருங்கள் எங்கள் வீட்டுக்கு. இன்று இரவு தங்கியிருந்து நாளை செல்லலாம் என்று அந்த அன்பர் அழைத்துள்ளார்.

எனது தம்பிக்கும் உறவினர்களுக்கும் சற்றுத் தயக்கம். கையில் தாலிக்கொடி உட்பட பெறுமதியான தங்க நகைகள். அழைப்பவரை முன்பின் தெரியாது.

இவர்களின் தயக்கத்தை புரிந்துகொண்ட அந்த அன்பர், எதற்கும் யோசிக்கவேண்டாம், முருகபூபதி எனது நல்ல நண்பர். நானும் அவரும் ஒரே பத்திரிகையில்தான் வேலை செய்கின்றோம். வாருங்கள் எங்கள் வீட்டுக்குச் செல்வோம். என்று சொல்லி அழைத்துச்சென்று தங்கவைத்து உபசரித்தவர்தான் நாம் மாத்தளை செல்வா என அழைக்கும் நண்பர் எச். எச். விக்கிரமசிங்க.

இவ்வாறு தனது நல்லியல்புகளினால், பலரையும் கவர்ந்திருக்கும் இவரை, நான் அந்தப் பத்திரிகையில் இணைந்த காலம் முதல் நன்கு அறிவேன். அக்காலப் பகுதியில் இவர் அந்தப் பத்திரிகையின் விநியோகப் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்தார். எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இயங்கும் கலை, இலக்கிய ஆர்வலர்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்கள் செ. கணேசலிங்கன், என். எஸ். எம். ராமையா, தெளிவத்தை ஜோசப், ஈழவாணன் உட்பட மலையக எழுத்தாளர்கள் பலருடனும் நெருக்கமான நட்புறவைக்கொண்டிருந்தவர்.

வீரகேசரி மற்றும் தமிழ்நாடு தினமணி பத்திரிகைகளில் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர் எஸ். எம். கார்மேகம், தினகரன் மூத்த ஊடகர் பொ. கிருஷ்ணசாமி, தற்போது லண்டனில் வதியும் பேராசிரியர் மு. நித்தியானந்தன் உட்பட பலருடனும் நெருக்கமான இலக்கிய உறவைக்கொண்டிருந்தவரான விக்கிரமசிங்கவுக்கு பல இடதுசாரி தோழர்களுடனும் நட்புறவு இருந்தது.

சில நூல்களின் பதிப்பாசிரியராகவும் இவர் விளங்கினார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகராகவும் அதன் தலைவராகவும், அமைச்சராகவும் விளங்கிய ( அமரர் ) சந்திரசேகரனின் பொதுசன தொடர்பு அதிகாரியாகவும் பணியாற்றியவர்.

அதனால், அமைச்சர் சென்ற பல நாடுகளில் நடந்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றவர்.

மாத்தளை இவரது பூர்வீகம் என்பதனால், மாத்தளை செல்வா எனவும் தனக்கு புனைபெயரை சூட்டிக்கொண்டவர். மலையக இலக்கியவாதிகள் பற்றி அவ்வப்போது ஊடகங்களில் எழுதி வரும் மாத்தளை செல்வா, தொடர்பாடல்களை ஆரோக்கியமாக பேணிவருபவர்.

அந்தத் தொடர்பாடலை தனக்காக மட்டுமல்ல, பிறருக்காகவும் பேணி வருபவர்.

மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை இவரது இயல்பு. மாத்தளையில் பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்று அவர்களின் தேவைகளை அரச மட்டத்தில் பேசிக் கவனித்தவர். இவரது தன்னலமற்ற சேவைகளை மு. நித்தியானந்தன், மாத்தளை வடிவேலன், மலரன்பன் ஆகியோர் எழுத்திலும் பதிவுசெய்துள்ளனர்.

**19ஆம் பக்கம் பார்க்க ...**

முருகபூபதி –
அவுஸ்திரேலியா
letchumananm@gmail.com



## கணித பாடத்தில் சித்தியடையாத திலிண

# பயோ சிஸ்டம் டெக்னோலோஜியில் மாவட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை

**காலையில் வீதியில் கூலி வேலை செய்வேன். இரவில் வயலில் பயிர்களைப் பாதுகாப்பேன்.**
**கணிதத்தில் சித்தியடையாததால் எந்தப் பாடசாலையும் என்னை சேர்த்துக் கொள்ளவில்லை.**
**தொழில்நுட்பப் பிரிவில் கற்று பிறந்த ஊருக்குச் சேவை செய்வதே எனது நோக்கம்.**
**பாடசாலையில் பயோ சிஸ்டம் டெக்னோலோஜி பிரிவில் கற்பதற்கு எந்தவித வசதிகளும் இருக்கவில்லை.**
**நடைமுறைப் பயிற்சியை வெளியில் செய்வதற்கு பணம் செலுத்தியது அதிபரும் ஆசிரியர்களுமேயாகும்.**

கல்வித் துறையில் ஒரு புதிய திருப்புமுனையை உருவாக்கி, 2013ஆம் ஆண்டு முதல், உயர் தரக் கற்றல் துறையில் தொழில்நுட்ப பாடப்பிரிவு புதிய திருப்பத்தை உருவாக்கத் தொடங்கியது. அப்போது கல்வி அமைச்சராக இருந்த பந்துல குணவர்தன, புத்தக சித்தாந்த அறிவுக்கு அப்பால் சென்ற எதிர்கால வேலைவாய்ப்பு உலகில் பிரவேசிக்க வேண்டும் எனக் கனவு காண்பவர்களுக்காக கோட்பாடுகள் மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் அடங்கிய பாட நெறியாக, பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட புதிய பாட நெறிகளை அறிமுகப்படுத்தினார். இதனால் எந்தவொரு மாணவரும் பாடசாலை பாடப்பிரிவில் சித்தயடையாமல் போவது இதன் ஊடாக நின்று போனது.

மொனராகலை பெல்வத்தை நவோதயா மகா வித்தியாலயத்திலிருந்து அவ்வாறான சிறப்பான கதையை கேட்க முடிந்தது. இன்னமும் 6ஆம் வகுப்பிலிருந்து 13ஆம் வகுப்பு வரையில் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும் 1447 மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலையின் வரலாற்றை மாற்றியிருப்பது தொழில்நுட்ப பாடப்பிரிவில் கற்ற மற்றொரு திறமையான மாணவராகும். அவர் யுதகனாவ குடியேற்றத்தில் வசிக்கும் திலிண தனஞ்சய என்ற மாணவராகும். மொனராகலை, பெல்வத்தை நவோதயா மகா வித்தியாலயத்தில் உயர்தர தொழில்நுட்ப ஐந்து பாடங்களும் கற்பிக்கப்பட்ட போதிலும் தொழில்நுட்ப பாடப்பிரிவில் கற்பதற்காக திலிண அப்பாடசாலையில் சேர்ந்தது யுதகனாவ பாடசாலையிலிருந்தாகும். சாதாரண தரத்தில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடையாமல் திலிண வாழ்க்கையை வெற்றி கொண்டது பெல்வத்தை நவோதயா மகா வித்தியாலயத்திலிருந்தாகும்.

திலிணவின் வீடு யுதகனாவ குடியேற்றத்தில் அமைந்துள்ளது. அவரது தந்தை டி. எம். திலகரத்ன விவசாயம் செய்து வருவதோடு, தாய் காந்தி புஸ்பலதா ஆரம்ப பாடசாலை ஆசிரியராகும். ஜனித் பிரபுத்திக என்ற ஒரே இளைய சகோதரர் யுதகனாவ ஆரம்ப பாடசாலையில் கற்று வருகிறார். திலிண யுதகனாவ பாடசாலையில் சாதாரண தரத்தில் கற்றதோடு, அவர் இரண்டு முக்கிய பாடங்களில் சித்தயடையவில்லை. இவ்வாறு இரண்டு பாடங்களில் சித்தியடையாத போதிலும் வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு வழி திறக்கப்பட்டது பெல்வத்தை நவோதயா மகா வித்தியாலயத்திலிருந்தாகும். இதற்கு வாய்ப்பை வழங்கியது பாடசாலை அதிபர் வி. மு. நந்தசேனவாகும்.

"கணிதப் பாடத்தில் சித்தியடையாதது எனக்கு உயர் தரத்தில் கற்பதற்கு தடையை ஏற்படுத்தியது. கணிதத்தில் சித்தியடையாததால் எல்லோரும் என்னிடம் "உனக்கு இனி கலைப் பிரிவில்தான் கற்க வேண்டி வரும்" எனக் கூறினார்கள். எனது ஊரில் இருந்த எனது நண்பர்கள் 12 பேரும் கணிதத்தில் சித்தியடைந்தார்கள். நான் மாத்திரமே பெயிலடைந்தேன். அன்று அவர்கள் அனைவரும் சித்தியடைந்ததற்காக பார்ட்டி கொடுத்த போது எனக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. இன்று நீங்கள் மகிழ்ச்சியடைந்தால், நான் நாளை மகிழ்ச்சியடைவேன் அன்றிரவு நான் நினைத்துக் கொண்டதோடு, உறுதி பூண்டுகொண்டேன். அன்றிலிருந்தே நான் தீவிரமாகக் கற்கத் தொடங்கினேன். எனினும் நான் உயர் தரத்தில் கற்பதற்கு எனக்கு ஒரு பாடசாலை இருக்கவில்லை. பல பாடசாலைகளுக்கும் சென்றேன். நான் கணிதத்தில் சித்தியடையாததால் எந்தப் பாடசாலையும் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை. பின்னர் நான் பெல்வத்தை நவோதயா பாடசாலைக்குச் சென்றேன். அந்நேரத்தில் பயோசிஸ்டம் டெக்னோலோஜி துறையில் கற்பதற்கு பெரும் ஆசை இருந்தது. நான் பெல்வத்தை நவோதயா பாடசாலைக்குச் சென்று அதிபரைச் சந்தித்தேன். அந்நேரம் கணிதத்தில் பெயிலான 15 மாணவர்கள் இருந்தார்கள். "பரவாயில்லை, நீங்கள் இந்தப் பாடசாலைக்கு வாருங்கள். கணிதத்தில் பெயிலானாலும், வாழ்க்கை பெயிலாகிவிடுவதில்லை. பாடசாலைக்கு வந்து விரும்பிய துறையில் பயிலுங்கள். எனினும் அடுத்த வருடம் கணிதத்தில் சித்தியடைந்து என்னைக் காப்பாற்றி விடுங்கள்" என பெரும் எச்சரிக்கையையும் விடுத்தார். அதிபர் வழங்கிய பெரும் தைரியத்தினால் நாம் அப்போதிலிருந்தே செயற்படத் தொடங்கினோம். சாதாரண தர கணிதப் பாடத்திற்காக பாடசாலையில் தனியான ஆசிரியர் ஒருவர் ஒதுக்கப்பட்டார். "மாலை வரைக்கும் கணித வகுப்புக்குச் சென்றேன். கடைசியில் எமது பாடசாலையில் கணிதத்தில் பெயிலான 33 மாணவர்களுள் 30 மாணவர்களும் கணிதத்தில் சித்தியடைந்தார்கள். எனது இலக்காக இருந்தது கணிதத்தில் சித்தியடைந்து உயர் தரத்தில் முதல் பத்து பேருக்குள் வருவதாகும்....."

வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு தடைகள் இருந்த போதிலும் அவை அனைத்திற்கும் முகங்கொடுப்பதற்கு திலிணவினால் முடிந்தது. பயோ சிஸ்டம் டெக்னோலோஜி பிரிவில் உயர் தரத்திற்கு முகங் கொடுத்தாலும் அப்பாடசாலையில் வசதிகள் குறைவாகவே இருந்தன.

"எமது பாடசாலையில் எந்த வசதிகளும் இருக்கவில்லை. சிறியதொரு அறையைச் சுத்தப்படுத்தி வகுப்பறையை அமைத்துக் கொண்டோம். வைட் போட் கூட எம்மிடம் இருக்கவில்லை. வகுப்பறைகளிலிருந்து அப்புறப்படுத்திய பலகைத் துண்டுகளை ஒன்று சேர்த்துத்தான் போட் ஒன்றை அமைத்துக் கொண்டோம். ஆசிரியர்கள் எம்மிடம் பணம் எடுக்கவில்லை. அவர்களே பணம் போட்டு போட்டோ கொப்பி இயந்திரத்தைக் கூட அவர்கள் எமக்கு வாங்கிக் கொடுத்தார்கள். உணவுத் தொழில்நுட்பத்தைச் செய்வதற்கு எந்த வித உபகரணங்களோ, உணவுகளை வெட்டுவதற்கு கத்தியோ எம்மிடம் இருக்கவில்லை. பண்ணைகளுக்கும் கூட அதிபரின் செலவிலேயே அழைத்துச் செல்லப்பட்டோம். நான் அதற்காக கைமாறு செய்ய விரும்பினேன். எனினும் நான் எதிர்பார்க்காத வகையில் மாவட்டத்தில் முதலிடத்தில் சித்தியடைந்தேன். எனது Z மதிப்பெண் 1.9247 பரீட்சை எழுதி முடிந்த போது, உரப் பையின் பாதியளவு மார்க்கர் பேனா மற்றும் மை போத்தல்களை அப்புறப்படுத்தினேன்....."

திலிண உள்ளிட்ட ஏனைய மாணவர்களுக்கு நவோதயா மகா வித்தியாலய அதிபரான வி. மு. நந்தசேனவே இந்த வாய்ப்பை வழங்கினார். சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் பெயிலானதால், பல பாடசாலைகளால் அனுமதி மறுக்கப்பட்ட இந்த மாணவர்களுக்கு அவர்தான் வாய்ப்புக்கொடுத்தார்.

"இந்தப் பாடசாலையில் கல்வி கற்பது மொனராகலை கல்வி வலயத்தில் அதி கஷ்டப்பிரதேசங்களில் வாழும் மாணவர்களாகும். சாதாரண தரத்தில் திறமையாகச் சித்தியடைந்தவர்கள் அருகில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள். திலிண போன்ற குறைவான சித்தியைப் பெற்ற மாணவர்கள் இந்த பெல்வத்தை நவோதயா பாடசாலையில் சேர்ந்து கொள்கிறார்கள். திலிண முதலில் யுதகனாவ வித்தியாலயத்திற்கே சென்றுள்ளார். இவர் கணிதம், ஆங்கிலப் பாடங்களில் பெயிலாகியிருந்தார். எனினும் இவ்வாறான மாணவர்களை அதிபரின் விருப்பத்தின் பிரகாரம் பாடசாலையில் அனுமதித்து, பெயிலான பாடங்களில் சித்தியைப் பெற்றுக் கொண்டு உயர் தரப் பரீட்சையை எழுதுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. நான் திலிணவுடன் 33 மாணவர்களை சேர்த்துக் கொண்டேன். அவர்கள் பையோசிஸ்டம் டெக்னோலாஜி பிரிவில் கற்றார்கள். திறமையான சித்தியினைப் பெறுவதற்காக மாலை வேளையில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தி அடிக்கடி நான் இந்த மாணவர்களைக் கண்காணித்து வந்தேன். பின்னர் திலிண பெயிலான கணிதத்தில் பீ தரச் சித்தியைப் பெற்றார். தொழில்நுட்ப பிரிவில் கற்பதற்கு திலிண பெரும் கஷ்டங்களை அனுபவித்தார். அவர் மாவட்டத்தில் முதலாமிடத்தில் சித்தியடைந்தார். உயர் தரத்தில் திறமையாகச் சித்தியடைந்ததன் பின்னரே அவருக்கு பெரிய குறிக்கோள் இருப்பதை நாம் அறிந்து கொண்டோம். இந்தப் பிரிவில் எமது பாடசாலை ஆசிரியர்கள் திறமையானவர்கள். நாம் வழங்கிய வாய்ப்பு குறித்து திலிணவின் உள்ளத்தில் பெரும் மதிப்பு இருந்தது. அதனால் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கு கௌரவத்தைப் பெற்றுத் தந்துள்ளார்....."

எனக் கூறினார் பாடசாலை அதிபர் வி. மு. நந்தசேன. வறுமை மற்றும் ஆதரவற்ற நிலைமைக்கு முகங்கொடுத்த திலிண உயர் தரத்தினை எதிர்கொண்டவுடனேயே வாழ்க்கைச் சுமையைச் சுமக்கத் தொடங்கினார். மாவட்டத்திலேயே முதலாவதாக வந்து பிறந்த கிராமத்திற்குப் பெருமையைத் தேடிக் கொடுத்தாலும், அவர் அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, தாய்க்கு பாரமில்லாமல் தனது செலவுகளைச் செய்து கொள்வதற்காக நாளொன்றுக்கு சுமார் 1000 ரூபாய் சம்பளத்தில் வீதியில் கூலி வேலைக்குச் சென்றார்.

மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வயலில் வேளாண்மை செய்யத் தொடங்கினார். பகலில் வெயிலில் காய்ந்து, சிறு தொழில்களைச் செய்த திலிண, இரவில் நேரத்தைக் கழிப்பது வீட்டில் அல்ல. திலிணவின் இரவு வேளை நெல் வயலில் கழிகிறது. வறண்ட காலங்களில் நெற்பயிர்களுக்கு வரும் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக இரவில் வயலைப் பாதுகாக்கும் பணியில் திலிண ஈடுபட வேண்டிய நிலை. இதன் காரணமாக, அவரை தொலைபேசியில் தொடர்புகொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

"நான் வயலில் வேளாண்மையைப் பாதுகாத்துவிட்டு அதிகாலையிலேயே வீட்டுக்கு வந்தேன்..." இளைஞனான திலிணவின் கதை எம்மை வியப்பூட்டியது. வாழ்க்கையில் தோல்வியை விரும்பாத திலிண, தனது கசப்பான அனுபவங்களை விபரித்தது, அவையும் அவரது வாழ்க்கைக்கு பலத்தைக் கொடுத்ததனாலாகும்.

"நான் இரவில் வயலில்தான் இருப்பேன். சிலர் வயலுக்கு அதிகளவில் நீரை பாய்ச்சுவதால் வயலின் உரிமையாளர்கள் இரவில் வயலில் இருக்க வேண்டும். நானும் ஒருவரிடம் வயலை வாங்கி வேளாண்மை செய்கிறேன். சில நேரம் கூலி வேலையும் செய்கிறேன். ஒரு நாளைக்கு 1000 ரூபாய் கிடைக்கும். இந்த பணத்தை எனது செலவுகளுக்காக நான் புத்தகத்தில் சேமித்துக் கொள்கிறேன். தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னேறிச் செல்ல ஆசைப்பட்டாலும் பகல் நேரங்களில் வீதியில் தொழில் செய்வதால் கல்வி கற்க முடிவதில்லை. எனது தாய், தம்பிக்காகச் செலவு செய்ய வேண்டியிருப்பதால் நான் எனது முயற்சியினால் கொஞ்சமாவது சேமித்துக் கொள்கிறேன்....." என்றார் திலிண.

"எனது மகன் சிறு வயதில் திறமைசாலியாக இருக்கவில்லை. பாடசாலைக்கும் கூட செல்வதற்குத் தேவையான பொருளாதார வசதி எம்மிடம் இருக்கவில்லை. சாதாரண தரப் பரீட்சையில் கணிதத்தில் "எஸ்" தரச் சித்தியை மகன் எதிர்பார்த்த போதிலும் அவர் கணிதம், ஆங்கிலப் பாடங்களில் பெயிலாகிவிட்டார்.

எனினும் கணிதத்தில் சித்தியைப் பெற்றுக் கொண்டு உயர்தரத்தில் தொழில்நுட்பப்பிரிவில் கற்பதற்கு விரும்பினார்.

பல பாடசாலைகளுக்குச் சென்ற போதிலும் மகனின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. பெல்வத்தை நவோதயா பாடசாலைதான் மகனுக்கு இந்த வாய்ப்பை வழங்கியது. அப்பாடசாலையின் அதிபரினால்தான் மகன் உயர் தரத்தில் தொழில்நுட்ப பிரிவில் விருப்பத்தோடு கல்வி கற்றார்.

வகுப்புகளுக்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கும் கூட எனக்கு வழியிருக்கவில்லை. எமது வீட்டிலிருந்து வீதிக்குச் செல்ல மூன்று கிலோ மீற்றர் தூரம் உள்ளது. கையில் பணம் இல்லாததால் இந்த தூரத்தை நடந்தே சென்று மொனராகலையில் வகுப்புகளுக்குச் செல்வார்.

அவர் இரவில் தூங்குவதில்லை. தூக்கம் வரும் என்பதால் சாப்பிடுவதுமில்லை. இரண்டு மணி நேரங்கள் மாத்திரமே உறங்குவார். அவர் மாவட்டத்தில் முதலாவதாக வருவார் என நாம் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. நானும் மகனுக்கு அருகில் விழித்திருப்பேன். எனினும் இன்று எனக்கு அதிகளவு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது....." என்றார் திலிணவின் தாய்.

**சுபாஷினி ஜயரத்ன**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**





சர்வதேச மனித உரிமைகள் பணியகத்தின் இலங்கையின் உலகளாவிய பணியமைப்பு ஏற்பாட்டில் ஐந்தாவது சமாதான உச்ச மாநாடு கடந்த வாரம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாடு மண்டபத்தில் நடைபெற்றது. கியூபா நாட்டின் தூதுவர் Andres Marrelo Gonzales, ஈரான் கலாசார நிலைய கவுன்சிலர் Moazami Goodarzi, சார்க் நாடுகளின் பணியகத்தின் பணிப்பாளர் முனைவர் Bina Gandhi ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்ட நிகழ்வில் சிறப்பு அதிதியான மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ் சிவலிங்கம் சமூக ஆர்வலர்களுக்கான பாராட்டு பத்திரங்களை வழங்கி வைப்பதையும் அமைப்பின் பணிப்பாளர்களான எம். அமீர்கான், குபேரலிங்கம் உள்ளிட்டோரையும் படங்களில் காணலாம். வலது குறைந்தவர்களுக்கான சக்கர நாற்காலிகள் மற்றும் ஆதரவற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பனவும் இந்நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 8ஆம் ஆண்டு மருத்துவ விருது உலகத் தமிழ் வர்த்தக சங்கம் ஏற்பாடு

மருத்துவத்துறையில் சிறந்து விளங்கும் மருத்துவர்களுக்கு விருது வழங்கும் விழா (MEDICAL EXCELLENCE AWARDS) ஆகஸ்ட் மாதம் சென்னையில் நட்சத்திர விடுதியில் நடைபெற உள்ளது. பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களை ஊக்குவிக்கும் உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மருத்துவத் துறையில் தன்னலம் பாராமல் பணியாற்றும் மருத்துவர்களுக்கு எட்டாவது ஆண்டாக மருத்துவ விருது விழா நடத்த உள்ளது.

இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் மருத்துவர்கள் கலந்து கொண்டு விருது பெற உள்ளனர். இரவு, பகல் பாராமல் சேவையாற்றி வரும் நம் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமனைகள், ஆய்வகங்கள், மருத்துவ பல்கலைக்கழகங்கள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், உதவி மருத்துவர்கள் போன்றவர்களுக்கு விருது வழங்கப்பட உள்ளது, இவ்விருது பெற விண்ணப்பங்கள் ஆகஸ்ட் 5ஆம் திகதி வரை பெறப்பட்டு, மருத்துவ அறிஞர்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட உள்ளது.

தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் medicalexcellenceaward@gmail.com மற்றும் +60166167708 என்ற whatsappலும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என நிகழ்ச்சியின் ஏற்பட்டாளரும் உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவருமான செல்வகுமார் தெரிவித்தார்.

## ஊடகவியலாளருக்கு மடிக் கணினி கையளிப்பு



ஜெர்மனி, கிங்ஸிங் கிரேஸ் மாநில முன்னாள் முதலமைச்சரும் பரோபகாரியுமான கர்ள் எகோபரின் நிதியுதவியில் ஊடகவியலாளரும் தினகரன் பத்திரிகையின் பிராந்திய செய்தி ஆசிரியருமான எம்.எப்.எம். அஜ்வாத் பாஸிக்கு லெப்டொப் ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதனை இலங்கைக்கான முதலமைச்சரின் இணைப்பாளர் பேருவளை இர்ஸான் மொஹமட் பேருவளை காரியாலயத்தில் வைத்து கையளித்த போது எடுத்த படம்.

## மொறட்டுவை பல்கலைக்கழகம் தயாரித்த

# இலங்கையின் முதலாவது இலக்ட்ரோனிக் ரேஸிங் கார்

ரேஸ் ஓடும் கார்களை நாம் நிறையவே பார்த்திருக்கிறோம். அவற்றுள் ரேஸ் ஓடுவதற்காகவே தயாரிக்கப்பட்ட கார்கள் சிறப்புமிக்கவை. அதற்கு காரணம் அதனுள் இருக்கும் கவர்ச்சியான வடிவமைப்பாகும். எரிபொருளில் இயங்கும் ரேஸ் கார்கள் பற்றியே நாம் பெரும்பாலும் கேள்விப்பட்டிருப்போம். எனினும் கடந்த சனிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற வாகன கண்காட்சியில் விசித்திரமான கார் ஒன்று காட்சிப் படுத்தப்பட்டிருந்ததைக் காண முடிந்தது. அந்தக் காரை மொறட்டுவ பல்கலைக்கழகம் வடிவமைத்திருந்தது.




இந்நாட்டின் போக்குவரத்து வரலாற்றில் இந்தக் கார் எப்போதும் மறக்க முடியாத காராக இருக்கும். அதற்குக் காரணம், மின்சாரத்தில் சார்ஜ் செய்யப்பட்டு பயணிக்கக் கூடிய இலங்கையின் முதலாவது இலக்ட்ரோனிக் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடும் காராக இந்தக் கார் வரலாற்றில் இடம்பிடிப்பதனாலாகும். இந்த காருக்கு பெல்கன் ஈ1 (Falcon e1) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த காரின் உடல் முழுக்க முழுக்க ஃபைபரால் உருவாக்கப்பட்டுள்ளது. இது மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பட்டத்தை எதிர்பார்த்து கல்வி கற்கும் மாணவர்களின் உருவாக்கமாக இருந்தது. இந்தக் கண்காட்சியைக் காண வந்த உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பார்வையாளர்களுக்கு நம்ப முடியாத வடிவமைப்பாக அது இருந்தது. மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் இந்த வருடம் தாம் உருவாக்கிய இந்தக் காரை இந்தியாவுக்கு எடுத்துச் சென்றது உலகம் முழுவதிலிருந்தும் வந்த 39 பல்கலைக்கழகக் குழுக்களுடன் போட்டியிடுவதற்காகும். இந்தக் கார் போர்முலா வகைக்குள் அடங்கியிருந்தது. மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்களின் இந்த தயாரிப்பானது போட்டியில் தெரிவு செய்யப்பட்ட முதல் பத்து உருவாக்கங்களுள் ஒன்றாகத் தெரிவாகியதோடு, இந்தப் போட்டியின் போது Best looking Car க்கான விருது இந்த வடிவமைப்புக்கு வழங்கப்பட்டது.




மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் இந்தக் காரின் உடலைத் தயாரிக்க பைபருக்கான அச்சினை உருவாக்கியிருப்பது MDF மற்றும் ரெஜிபோம் என்பவற்றைப் பயன்படுத்தியாகும். மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் இதற்கு முன்னரும் இதேபோன்ற காரை தயாரித்துள்ள போதிலும், அந்தக் கார் பெட்ரோலில் இயங்கக் கூடியதாகும். முழு உலகமும் இலக்ட்ரோனிக் வெஹிகல் என்ற கருத்தின்பால் ஈர்க்கப்பட்டுள்ள நிலையில், மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் இந்த பரீட்சித்துப் பார்த்தலை மேற்கொண்டிருப்பது நவீன உலகத்துடன் பயணிப்பது மிகவும் பயனுள்ள பணி என்பதாலாகும். இந்த காரைப் பற்றி நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாத ஒரு விடயம் இருக்கின்றது.

அதாவது, 2024ஆம் ஆண்டு மாணவர்கள் தமது கல்வியை ஆரம்பித்ததன் பின்னர் மேற்கொண்ட தனி உருவாக்கம் என்று நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இந்த உருவாக்கத்திற்காக 14 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணையினை 14 நிறுவனங்கள் வழங்கியுள்ளன. பிராண்டிக்ஸ், டயலொக், மைக்கோ, அலுமெக்ஸ், நிப்போன் பெயிண்ட் போன்றவை அவற்றில் சிலவாகும்.

இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற பாரத் கம்பட்டிசன் போர்முலா ஸ்டூடண்ட் போட்டியில் உலகம் முழுவதையும் சேர்ந்த 39 பல்கலைக்கழகங்கள் போட்டியிட்டன.

அந்தப் போட்டியில் மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்களின் வடிவமைப்பு சிறந்த வணிகத் திட்டப் போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்றது. அதேபோன்று பொறியியல் வடிவமைப்பு போட்டியில் எட்டாவது இடத்தையும், செலவு மற்றும் உற்பத்தி மதிப்பீட்டில் 39 பல்கலைக்கழகங்களில் 15வது இடத்தையும் பெற்றுக் கொண்டது. மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் இந்தக் காரினை உற்பத்தி செய்ததன் பின்னர், இந்த அதிவேக காரை ஓட்டுவதற்கு கொழும்பில் வீதிகள் இல்லாததே பிரதான பிரச்சினையாக இருந்தது. இதன்போது இந்தக் காரை தயாரித்த மாணவர்களுக்கு இரத்மலானை விமான நிலையம் உதவிக்கு வந்தது.

இறுதியில் இரத்மலானை விமான நிலைய ஓடுபாதையில் அனைவரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கார் பந்தயங்களில் கணக்கில் கொள்ள வேண்டிய வேக வரம்புகள் அனைத்தும் சோதனை செய்யப்பட்டன.

மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்களின் இந்த காருக்கு அடுத்தபடியாக அவர்கள் திட்டமிட்டிருப்பது இங்கிலாந்தில் 2025ம் ஆண்டில் இடம்பெறவுள்ள போர்முலா ஸ்டுடண்ட் யூகே 2025 போட்டியில் போட்டியிடுவதற்காகும். Formula Students UK 2025 போட்டியில் கலந்து கொள்வதற்காகப் புதிதாக கார் ஒன்றைத் தயாரிப்பதற்கு மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

13 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகச் செலவாகும் இந்தப் புதிய ரேஸிங் காரானது பெல்கன் e2 என பெயரிடப்பட்டுள்ளது.

**வஜிர லியனகே**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

## 'சர்வதேச நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தினத்தை நினைவு கூர்ந்த பிரிட்டிஷ் கவுன்சில்




2024 சர்வதேச நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தினத்தை நினைவு கூரும் வகையில் 'இளைஞர்கள் தலைமையிலான பசுமை மற்றும் உள்ளடக்கிய வர்த்தகங்கள்' திட்டத்தின் வெற்றிகரமான முன்னோடி நிகழ்வினை இலங்கை பிரிட்டிஷ் கவுன்சில் கொண்டாடியது. 'இளைஞர்கள் தலைமையிலான பசுமை மற்றும் உள்ளடக்கிய வர்த்தகங்கள்' திட்டமானது, அறிவு, திறன்கள், வளங்கள் மற்றும் வலையமைப்புகள் ஆகியவை சார்ந்த இளம் தொழில் முயற்சியாளர்களை உள்ளடக்கியதாகும்.

அத்துடன் இத்திட்டமானது தற்போதுள்ள வர்த்தகங்களை பசுமையான மற்றும் உள்ளடக்கிய மாதிரிகளாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

'நிலையான தன்மைக்கான பாதைகள்: தொழில்முயற்சியாளர்களின் காட்சிப்படுத்தல் என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அதியுயர் சிறப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. இலங்கையைச் சேர்ந்த 30 இளம் வர்த்தகத் தலைவர்களுக்கு அவர்கள் தமது வர்த்தக செயற்பாடுகளை பசுமையானதாகவும் மேலும் உள்ளடக்கியதாகவும் மாற்றுவதற்கு புதுமையான தீர்வுகள் மற்றும் முக்கிய பங்குதாரர்களின் வலையமைப்புடன் அவர்கள் மேற்கொண்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்வைக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரிட்டிஷ் கவுன்சில் இலங்கையின் பசுமை இயக்கம் மற்றும் லங்கா சோஷியல் வென்ச்சர்ஸ் ஆகிய இரண்டு உள்நாட்டு அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டது பிரிட்டிஷ் கவுன்சிலின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ஓர்லாண்டோ எட்வர்ட்ஸ், இளைஞர்களின் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்: "எதிர்காலம் எமது இளைஞர்களின் கைகளில் உள்ளது என்பதே எமது நம்பிக்கையாகும்.

அவர்கள் நாளைய தலைவர்கள் மட்டுமல்ல, இன்று குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துபவர்களாகவும் திகழ்கின்றனர் என்றார்.

# "குவளை" ; வாழைச்சேனையின் நஞ்சற்ற இயற்கை உணவகம்

## இயற்கை ஆர்வலர் மணி ரஞ்சனின் அற்புத முயற்சி








எஸ்.ஏ.ஸ்ரீதர்

இலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான பாசிக்குடாவுக்கு செல்கின்ற வாழைச்சேனை பிரதான வீதியில் கோறளைப்பற்று பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ளது "குவளை" எனும் இயற்கை உணவகம். இன்று நாம் உண்ணுகின்ற அனைத்திலும் நச்சு இரசாயனப் பொருட்கள் கலந்துள்ள நிலையில் "நஞ்சற்ற ஆரோக்கியமான இயற்கை உணவுகளை வழங்க வேண்டும்" என்னும் நோக்கில் இதனை நிறுவியுள்ளார் இதன் உரிமையாளரான மணி ரஞ்சன். இயற்கை உணவகம் மட்டுமல்லாது பல்வேறு இயற்கை பாதுகாப்பு பணிகளிலும் ஈடுபட்டு வரும் இவர் பிரதேசத்தின் சிறந்த இயற்கை ஆர்வலராக விளங்கி வருகின்றார்.

"கல்குடா லீஃப்" எனும் பெயரில் இயற்கை மூலிகைகளை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் நேரடியாகத் தேடிச்சென்று அவற்றைக் கொண்டு வந்து கல்குடா வீதியில் உள்ள தனது காணியில் பயிரிட்டு அவற்றின் கன்றுகளை இலவசமாக பொது இடங்களில் நட்டு வருவதுடன் ஒன்லைன் மூலமாக விற்பனையும் செய்து வருகின்றார்.

ஒவ்வொரு வருடமும் தனது இயற்கைநேய நண்பர்களுடன் இணைந்து கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற மலையான "தொப்பிக் கல்" என அறியப்படுகின்ற குடும்பிமலைக்கு வருடந்தோறும் சென்று அம்மலைப் பகுதியிலும் இயற்கை மூலிகைச் செடிகளை நட்டு வருகின்றார்.

இவ்வாறு மூலிகைச்செடிகளைத் தேடி இலங்கையின் பல புராதனமான காடுகளுக்குச் சென்று வருகின்ற இவர் சிங்களவர் மத்தியில் இன்றும் சிறப்புடன் விளங்குகின்ற இயற்கை முறையிலான உணவகங்களைக் கண்டு அவற்றின்பால் கவரப்பட்டு தனது ஊரிலும் நஞ்சற்ற இயற்கை உணவகம் ஒன்றினை அமைக்க விரும்பி "குவளை" எனும் பெயரில் உணவகம் ஒன்றை நிறுவியுள்ளார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விசேடமான உணவுகள் எனத் தயாரிக்கப்பட்டு முகநூல் வழியாக அதனை விளம்பரம் செய்து வருவதுடன், நாடு முழுவதும் தமது குவளை இயற்கை உணவக உற்பத்திகளை கொண்டு சேர்ப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். பனை உற்பத்திகள் முதல் அனைவரும் விரும்பும் பானிபூரி வரை இவரது உணவகத்தில் கிடைக்கிறது.

## ஒலிம்பிக் பதக்கக் கனவை நனவாக்க ஜூலை மாதம் தடகள பயிற்சி அகாடமியை திறக்கும் MAS

எதிர்கால ஒலிம்பிக் விளையாட்டு வீர, வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்துவதற்காக நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது மிகப் பெரிய அரச – தனியார் பங்காளித்துவமான MAS தகள பயிற்சி அகாடமியை அமைப்பதற்காக MAS Holdingsக்கு அண்மையில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன்படி, தனித்துவமான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

550 மில்லியன் ரூபா பெறுமதியான பாரிய முதலீடான இந்த பயிற்சி அகாடமியின் ஊடாக 2028ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சலிஸிலும் மற்றும் 2032ஆம் ஆண்டு பிரிஸ்பேனிலும் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் விளையாட்டு வீர வீராங்கனைகள் இனங்காணப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவும் வழங்கப்படவுள்ளது.

8 ஆண்டுகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டமாக செயல்படுத்தப்படும் வகையில், இந்த பயிற்சி அகாடமி, விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு எதிர்கால இலக்கு பயிற்சி, சர்வதேச அளவிலான தடகள உபகரணங்கள், சர்வதேச வாய்ப்புகள், ஊட்டச்சத்து மற்றும் கல்வி ஆதரவு, நிதி மற்றும் உபகரணங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நேரடியாக ஒத்துழைப்புகளை வழங்கவுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த





MAS Holdings நிறுவனத்தின் இணை நிறுவனரும் தலைவருமான மஹேஷ் அமலீன், "பல வருடங்களாக தடகள விளையாட்டு மூலம் தான் இலங்கை ஒலிம்பிக் பதக்கங்களை வென்றது. அதற்கான திறன் எங்களிடம் இருந்தாலும், பெரும்பாலான விளையாட்டு வீர வீராங்கனைகள் கிராமப்புறங்களில் இருந்து வருவதால் அவர்களுக்கு வழங்கப்படும் ஆதரவு மிகவும் குறைவாகவே உள்ளது.

500 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள்;

# சாதனை படைத்துள்ள நவலோக்க மருத்துவமனை



மூன்றாம் நிலை சுகாதார சேவையில் இலங்கையின் முன்னணியிலுள்ள நவலோக்க மருத்துவமனை குழுமம், 500 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளதாக அண்மையில் அறிவித்தது. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையில், ஒரு நபரின் உயிரைக் காப்பாற்ற ஒரு தனித்துவமான அறுவை சிகிச்சையாக இதனைக் கூறலாம்.

உயிருடன் அல்லது இறந்த நபரிடமிருந்து தானமாக பெறப்பட்ட ஆரோக்கியமான சிறுநீரகம், சிறுநீரகங்கள் சரியாக செயல்படாத ஒரு நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தப்படுகிறது.

சிறுநீரகம் செயலிழந்த நோயாளிகளுக்கு ஆரோக்கியமான சிறுநீரகத்தை மாற்றுவதற்காக அதிநவீன மருத்துவ உபகரணங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் நவலோக்க மருத்துவமனை அதன் மூலம் 500 சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து முடித்தமை இலங்கையின் சுகாதார வரலாற்றில் பெரும் சாதனையாக குறிப்பிடலாம்.

நவலோக்க மருத்துவமனையின் சிறுநீரக மாற்று சிகிச்சைப் பிரிவு சிறப்பு வசதிகள் மற்றும் பயிற்சி பெற்ற தாதியர்கள் மற்றும் சுகாதார நிபுணர்களைக் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவைக் கொண்டுள்ளது, இதன் மூலம் சிறுநீரக நன்கொடையாளர்கள் மற்றும் செயற்பட முடியாத நோயாளிகளுக்கு பல சேவைகள் வழங்கப்படுகின்றன.

நவலோக மருத்துவமனையின் வெற்றிக்குப் பின்னால் உள்ள மற்றொரு ரகசியம், இந்த சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளில் வெற்றிபெற சிறுநீரக நோய்த் துறையைத் தாண்டி நோயாளியின் மனநலம் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்துவதாகும்.

## நிலைபேறான தொழிற்துறை செயற்பாடு; Forbes Marshall லங்காவின் அர்ப்பணிப்பு



சர்வதேச பதப்படுத்தல் தொழிற்துறைக்கு வலுப் பேணல் மற்றும் தன்னியக்கமயமாக்கல் தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான Forbes Marshall Lanka Pvt Ltd, அண்மையில் "Partnering KPI Sustenance" எனும் தலைப்பில் கருத்தரங்கொன்றையும், விசேட நிகழ்வையும் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்வில், இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த பல்வேறு தொழிற்துறைகளின் 500க்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

இரு தொழினுட்ப அமர்வுகளை இந்த நிகழ்வு உள்ளடக்கியிருந்ததுடன், அதில் ஒரு அமர்வு, KPI தீர்வுகளை தக்க வைத்துக் கொள்வதனூடாக நிலைபேறாண்மைக்கான வழிமுறையில் கவனம் செலுத்துவதாகவும், மற்றைய அமர்வு, டிஜிட்டல் தக்க வைப்பு சேவைகளில் கவனம் செலுத்துவதாகவும் அமைந்திருந்தது. ஸ்டீம் பொயிலர்கள் மற்றும் ஸ்டீம் உதிரிப்பாகங்கள் மற்றும் Control Instrumentation கட்டமைப்புகள் போன்றவற்றுக்கான சந்தை முன்னோடியாக Forbes Marshall Lanka திகழ்கின்றது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான முகாமையாளர் லொஷான் பலயன்கொட தமது வரவேற்புரையின் போது, இலங்கையில் 30 வருடங்களுக்கு மேலான பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஆதரவளித்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்திருந்தார். பல் கலைக்கழகங்களில் மூன்று ஸ்டீம் ஆய்வுகூடங்களை Forbes Marshall எவ்வாறு நிறுவியிருந்தது என்பது பற்றியும் அவர் விளக்கமளித்திருந்ததுடன், பட்டம் பயிலும் பொறியியலாளர்கள் அடங்கலாக, ஆயிரக்கணக்கான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு திறன் கட்டியெழுப்பல் அமர்வுகளை முன்னெடுத்திருந்தமை பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

## அசட்லைன் பைனான்ஸ் பதுளை கிளை புதிய இடத்தில்




அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் பதுளை கிளை அண்மையில் இல 30, ரோஸ் ஹோர்ஸ் வீதி, பதுளை என்ற இடத்தில் அமைந்துள்ள புதிய கட்டடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தப் புதிய இடம் வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை எளிதாக அணுகும் வாய்ப்பைக் கொடுக்கும்.

வாடிக்கையாளர்கள், இந்தப் பகுதியில் உள்ள அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகள் அசட்லைன் மற்றும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இந்த எளிமையான நிகழ்வில் கலந்துகொண்டதுடன், அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி மகேஷ் த.சில்வா புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

குறிப்பாக பதுளையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள், மரக்கறி விவசாயிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த வாடிக்கையாளர்களினதும் நிதித் தேவைகளைப் பூர்த்திசெய்ய அசட்லைன் பைனான்ஸ் அர்ப்பணிப்புடன் உள்ளது. வாகன லீசிங் மற்றும் கடன், வர்த்தக மற்றும் செயற்பாட்டு மூலதனக் கடன், நிலையான வைப்பு, லிய திரிய பெண்களை வலுவூட்டும் கடன், சூரியசக்தி தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழங்கப்படும் பசுமைக் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன் தீர்வுகள் அசட்லைன் பைனான்ஸ் சேவையில் உள்ளடங்குகின்றன.

அசட்லைன் பைனான்ஸ் பதுளை கிளையை நவீன கட்டடத்திற்கு இடமாற்றம் செய்வது குறித்துக் கருத்துத் தெரிவித்த பிரதம செயற்பாட்டு அதிகாரிமகேஷ் த.சில்வா குறிப்பிடுகையில், "எங்கள் பதுளை கிளையை புதிய கட்டடத்திற்கு மாற்றுவது வசதிகளை அதிகரிக்கும் அதேநேரம், அப்பகுதியில் உள்ள வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப நிதித் தீர்வுகளை வழங்குவதில் எங்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது. என்றார்.

# H.E.R அறக்கட்டளையின் எழுச்சியூட்டும் முதல் வருட அடைவுகள்

ஃபெம்ஸ் ஆரம்பித்த H.E.R அறக்கட்டளை, பெண்கள் தம் வாழ்வில் முகங்கொடுக்கும் சவால்களை கடந்து வருவதற்கு உதவுவதை நோக்காகக் கொண்டு இயங்குவதோடு, அதனை தமது செயற்பாடுகளின் அடிப்படை கொள்கைகளான உதவி, ஊக்கமளிப்பு மற்றும் எழுச்சி ஆகியவற்றின் கீழ் அமைந்த முன்னெடுப்புகளின் ஊடாக மேற்கொள்கிறது. தமது முதலாவது ஆண்டை அறக்கட்டளை நிறைவு செய்யும் இவ்வேளையில் சமூகத் தடைகளை உடைக்கும் தமது நோக்கத்திற்காக மீண்டும் உறுதி பூண்டுள்ளது.

இப் பயணமானது, ஹேமாஸ் நுகர்வோர் வர்த்தகநாமப் பிரிவில் ஒரு முன்னணி பெண் சுகாதார பராமரிப்பு வர்த்தகநாமமான ஃபெம்ஸ், இலங்கையில் மாதவிடாய் சுகாதாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ள கதைகளை மறுவரையறை செய்து மகத்தான ஒரு மாற்றத்தின் ஊடாக தீவிரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற தேவையை இனங்கண்ட போதே ஆரம்பித்தது.

று ய வ ந ச யு னை மற்றும் தெற்காசியாவுக்கான UNICEF பிராந்திய அலுவலகம் இணைந்து தெற்காசிய பாடசாலைகளில் மாதவிடாய் கால சுகாதார நிலைமை தொடர்பாக நடாத்திய ஆய்வின் அடிப்படையில், இலங்கைப் பெண்களில் 66% ஆனோர் பூப்பெய்தும் வரை மாதவிடாய் பற்றி ஏதும் அறியாதவர்களாக உள்ளனர்.




மேலும், 60% ஆன பெற்றோர் தமது பெண் பிள்ளைகளை மாதவிடாய் காலத்தில் பாடசாலை செல்ல அனுமதிப்பதில்லை. நீண்ட காலமாகவே, பெண்களும் சிறுமிகளும் இது பற்றிய முறையான அறிவைப் பெறுவதில், அத்தியாவசிய மாதவிடாய் சுகாதாரப் பொருட்களை அணுகுவதில், மற்றும் இந்த இயற்கையான உயிரியல் செயன்முறையைச் சுற்றியுள்ள சமூகத் தடைகளைக் கடப்பதில் எண்ணற்ற சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

## "Unveil the Dream 2024" நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தும் இலங்கை வங்கி



நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் புத்தாக்கத்தையும் வலுவூட்டும் நோக்கில் இலங்கை வங்கியானது "Unveil the Dream 2024" எனும் இளந் தலைமுறை தொழில்முனைவோருக்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது. நாடு முழுவதுமுள்ள இளம் தொழில்முனைவோருக்கு அவர்களின் கனவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் உதவிகளை வழங்கி அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதே இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏற்றுமதி அபி விருத்திச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறியளவிலான வியாபார அபிவிருத்திப் பிரிவு, தேசிய வியாபார அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்நிகழ்ச்சித் திட்டம் இளம் தொழில் முனைவோருக்கு அவர்கள் உலகச் சந்தையில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான அறிவு, வளங்கள், வலையமைப்பு வாய்ப்புகள் என்பவற்றை வழங்கவுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டமானது வியாபாரத்துறையின் முன்னோடிகளையும் எதிர்கால வியாபாரத்துறையில் சிறந்து விளங்கப்போகும் தொழில் முனைவோரையும் ஒன்றிணைத்து இலங்கையின் எற்றுமதிச் சந்தையை விரிவுபடுத்துவதற்கான புத்தாக்கம் மிகு உத்திகள், தீர்வுகள் குறித்து உரையாடும் வாய்ப்பையும் வழங்கவுள்ளது.

இதில் நிதிமுகாமைத்துவம், சந்தை ஆய்வு, உற்பத்தி அபிவிருத்தி முதலான துறைகளில் பாண்டித்தியம் மிக்க வளவாளர்களினால் நடைமுறை சார் அறிவுரைகளும் பெறுமதிமிக்க ஆலோசனைகளும் வழங்கப்படும்.




# மலையகத்தின் மறைந்துபோன பக்கங்களை மீட்டெடுத்த ஆய்வாளர் சாரல்நாடன்

மலையகத்தின் மறைந்துபோன பக்கங்களை மீட்டெடுத்த ஆய்வாளர் சாரல்நாடன் அறுபதுகளில் மலையகம் தரிசித்த இலக்கிய விழிப்புணர்வினால் பிரக்ஞை பெற்று எழுச்சியுற்றவர்களில் 'சாரல்நாடனும் ஒருவர். சாரல்நாடன் ஆய்வுத்துறையில் அதிகமாக ஈடுபட்டு; தன்னை ஓர் ஆய்வாளனாக இனங்காட்டியவர். சி. வி. சில சிந்தனைகள் (1986), தேசபக்தன் கோ. நடேசையர் (1988), மலையகத் தமிழர் (1990), மலையக வாய்மொழி இலக்கியம் (1993) ஆகிய நூல்களை அக்காலப்பகுதியில் அவர் வெளியிட்டிருந்தார்.

இவற்றுள் 'தேசபக்தன் கோ. நடேசையர்' அரசதேசிய சாகித்தியப் பரிசினைப்; பெற்ற நூலாகும். இந்த நூல் மூலம் மலையக மக்களின் புதிய விழிப்பிற்கும், மலையக இலக்கிய வரலாற்றின் தோற்றுவாய்க்கும் மூலகர்த்தாவாக விளங்கியவர் கோ. நடேசையர் என்ற உண்மையைத் தெட்டத் தெளிவாக வெளிக்கொணர்ந்திருந்தார் சாரல்நாடன்.

சாமிமலை சிங்காரவத்தைத் தோட்டத்தில் கருப்பையா வீரம்மா தம்பதியினருக்கு 09.05.1944இல் மகனாகப் பிறந்த சாரல் நாடனுக்குத் தாய்தந்தையர் இட்ட பெயர் நல்லையா.

இவர் தனது ஆரம்பக் கல்வியை அப்கொட் மின்னா தோட்டப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியிலும் பெற்றார்.

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டதும் சாரல் நாடனுக்கு கண்டி அசோகா வித்தியாலய விடுதியில் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது. அக்கால கட்டத்தில் தனது ஆய்வு ஆற்றலை மேம்படுத்தக்கூடிய பல நூல்களைக் கற்றுத் தேறினார்.



1963இல் பத்திரிகையொன்று சிறுகதைப் போட்டியை நடத்தியது. அதில் சாரல் நாடனின் 'காலஓட்டம்' என்ற சிறுகதை இரண்டாவது பரிசினைப் பெற்றது. இச் சிறுகதை சாரல் நாடனை ஒரு சிறந்த படைப்பாளியாக இனங்காட்டியது.

1965இல் இவர் தேயிலைத் தொழிற்சாலை உத்தியோகத்தராக டன்சினேன் தோட்டத்தில் பணிபுரியத் தொடங்கினார். அதன்பின்னர் நியூபீகொக், டிரெய்டன், கெலிவத்தை ஆகிய பெருந்தோட்டங்களில் பணிபுரிந்து 2000ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

1994இல் இவரது 'மலைக் கொழுந்தி' சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. அந்நூல் அவ்வாண்டுக்கான மத்தியமாகாண சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக் கொண்டது.

'மலையகம் வளர்த்த தமிழ்' என்ற சாரல்நாடனின் கட்டுரைத் தொகுப்புநூல் துரைவி பதிப்பக வெளியீடாக 1997இல் வெளியாகியது. தொடர்ந்து 1998இல் 'பத்திரிகையாளர் நடேசையர்' என்ற ஆய்வுநூல் வெளியாகியது. இந்நூல் மீண்டும் இவரது ஆய்வுப் புலமைக்குச் சான்றாக அமைந்து அவ்வாண்டுக்கான அரச சாகித்திய விருதினைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் சார்பாக இவரது 'இன்னொரு நூற்றாண்டுக்காய்' என்ற நூல் வெளியாகியது. சாரல்நாடனின் இன்னுமொரு கட்டுரைத் தொகுப்பான 'மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும்;' என்ற நூல் 2000ஆம் ஆண்டிற்கான மத்தியமாகாண சாகித்திய விருதினைப் பெற்றது.




'மலையகத் தமிழர் வரலாறு' என்ற இவரது நூல் 2003இல் வெளியாகியது. இந்நூல் சாரல்நாடனுக்கு மூன்றாவது முறையாகவும் சாகித்திய மண்டலப் பரிசுபெறும் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தது.

இன்னொரு நூற்றாண்டுக்காய் (1999) பேரேட்டில் சில பக்கங்கள் (2005) இளைஞர் தளபதி இரா. சிவலிங்கம் (2010) என்பன இவரது ஏனைய நூல்களாகும்

கொட்டகலை இலக்கிய வட்டம், மலையகக் கலை இலக்கியப் பேரவை ஆகியவற்றின் தலைவராகவும் சாரல் வெளியீட்டகத்தின் உரிமையாளராகவும் விளங்கிய சாரல்நாடன் இவ்வமைப்புகள் மூலம் தமது இலக்கியப் பணிகளை முன்னெடுத்து மலையக எழுத்தாளர்கள் பலரின் நூல்களை வெளியிடுவதிலும் முனைப்புடன் உழைத்து வந்தார். மலையக மக்களது வரலாறு அவர்களது இலக்கியம் மேன்மையுற உழைத்த சாரல்நாடன் 31.07.2014 இல்அமரரானார்.

## மலையகம்: இங்கிருந்து எங்கே? சில குறிப்புகள்

மு.நித்தியானந்தன்

கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை வெளியீடாக மலர்ந்திருக்கும் பீ.மரியதாஸின் 'மலையகம்: இங்கிருந்து எங்கே?' என்ற நூல் மலையகத் தமிழரின் சமகால வாழ்வியலை வரலாற்றுப் பின்புலத்தில் நிறுத்தி அலசும் ஆவணமாகச் சிறப்புப் பெறுகிறது. தேயிலையை வளர்த்துத் தேசத்தை உயர்த்தியோர், தங்களின் 200 ஆண்டு கால வரலாற்றில் ஒதுக்கப்பட்டோராக நடத்தப்பட்ட அவலத்தை, வேதனைதரும் வேதன முறையை, சுதந்திர இலங்கையில் மலையகத் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, குந்துவதற்குக் கையகலக் காணி இல்லாத கொடுமையை இந்த நூலில் பீ.மரியதாஸ் நுணுக்கமாகப் பேசுகிறார். இடதுசாரி இயக்கமும் மலையகமும், மலையகத் தேசியம் பற்றிய அவரின் கட்டுரைகள் அவரது அனுபவப் பின்னணியிலிருந்தும் மார்க்சிய அணுகுமுறையிலிருந்தும் எழுந்தவையாகும். இந்த நூலின் கட்டுரைகள் அனைத்திலும் அவரது பரந்த வாசிப்பும், நுணுகிய பார்வையும், சமகால அனுபவத்துடனான கிரகிப்பும் துலாம்பரமாகத் தெரிகிறது. வரலாற்று ஆவணங்கள், ஆராய்ச்சி நூல்கள், களஆய்வு முடிவுகள், அரசாங்க அறிக்கைகள், அனைத்துலக நாடுகளின் அமைப்புகளின் ஆய்வறிக்கைகள் என்று தேடி வாசித்து, சான்றுகளின் துணையுடன் கட்டுரைகளை வரையும் பாங்கு பாராட்டிற்குரியது.



மலையக சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் மரியதாஸின் பார்வை குவிந்திருக்கிறது. ஒன்றோடு ஒன்றை இணைத்தும் பிரித்தும் தொகுத்தும் அசலான எழுத்தை அவர் தந்திருக்கிறார். அனைத்தையும் வரலாற்றுப் பின்புலத்தில் அணுகும் அவரின் ஆய்வு நோக்கு அவரது கட்டுரைகளுக்கு ஆழத்தைச் சேர்க்கிறது.

இருநூற்றாண்டுகால மலையக மக்களின் வாழ்வு அவரது சிந்தனைத் தளத்தில் எதிரொலித்திருக்கிறது. தனது சரித்திரகதியின் இடத்தை மரியதாஸ் உணர்கிறார். நடைமுறை அரசியலையும் மலையகத்தின் புதிய அரசியல் தேவைகளையும் எழுச்சிகளையும் தனது மார்க்ஸிய தரிசனத்தில் பரிசீலித்து மரியதாஸ் தந்திருக்கும் இந்த நூல் நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அரசியல், சமூகக் கையேடு.

பல்கலைக்கழகக் காலத்திலேயே அவர் எழுத ஆரம்பித்து விட்டாரெனினும், ஆசிரியப்பணி அவரது நேரத்தை விழுங்கிய நிலையில், அவரின் எழுத்துப்பணி தொடரவில்லை. ஆயினும், அண்மைக்காலத்தில் அவரது எழுத்தாக்கம் மிகுந்த உற்சாகத்துடன் தொடர்வது மகிழ்ச்சி தருகிறது.




மலையக இலக்கியத்திற்கு அவரது மீள்வரவு புத்துணர்ச்சி தருவது. செழுமையான மார்க்சிய ஞானம் கொண்ட மரியதாஸின் எழுத்துகள் மலையக எழுத்தில் தனி முத்திரை பதிப்பவை. தன்னை முன்னிலைப்படுத்தாத மாண்பு அவருடையது.

தொடர்ந்த, அயராத, ஆழ்ந்த அவரது வாசிப்பு அவரின் எழுத்திற்குக் கனதி சேர்க்கிறது.

மலையகம் அவரது சுவாசம். அந்த மக்களின் வாழ்வும் வளமும் அவரது ரத்த நாளத்தோடு உறைந்தது. அந்த மண்ணின் சோக ராகத்தை அவர் நெஞ்சில் சுமந்து திரிபவர். மலைமுகடுகளில் நம்மவர் படும் அவலம் அவர் நெஞ்சக்கணப்பறையில் என்றும் கனன்று கொண்டிருப்பது.

முதலாளித்துவம் எங்கள் ஈரலைப் பிடுங்கி வைத்தாலும் திருப்தி கொள்வதில்லை என்பதை அவர் கண்கூடாகக் கண்டவர். முதலாளித்துவ சுரண்டலும் இனவன்முறையும் நம் சமூகத்தைச் சூறையாடி வருவதை உணர்பவர்.

இந்த அநியாயத்தை எதிர்க்கும் சின்ன முனகலையும் அவரால் கேட்க முடிகிறது. அற்பஜீவிகளின் சந்தை இரைச்சலிலிருந்து வெகுதொலைவில் நிற்பவர். மரியதாஸ் வாசிப்பில் மட்டுமே கருத்தூன்றி நின்ற காலத்தில், 'நீங்கள் எழுதவேண்டும்' என்று அவருக்கு உற்சாகம் ஊட்டி, இக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து, அவற்றைத் தொகுத்து நூலாக்கும் பணியில் முழுமூச்சுடன் உழைத்த எச்.எச்.விக்ரமசிங்கவிற்கு நன்றி கூற வேண்டும். 'இங்கிருந்து எங்கே?' என்று மரியதாஸ் எழுப்பும் கேள்வி நம் சமூகத்தின் கூட்டுக்குரல்.

நிகழ்கால அவலத்திலிருந்து நம் சமூகம் எழுந்து நிமிர்ந்து, ஒளியை நோக்கி நகரும் எழுச்சியின் எக்காளம் அது.

## யாழில் JUNIOR SUPER SINGER

Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு வடமாகாணத்தில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது. இந்தப் போட்டி முதலில் மாவட்ட ரீதியில் நடத்தப்படும்.

வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் இந்தப் போட்டி முதலில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஶ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமறைக்கலாமன்றத்தில் இன்று 07ஆம் திகதி நடைபெறும்.

பிரிட்டிஷ் கவுன்சில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், ஆர்ஜே மஹால், யாழ். பீச் ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டூரண்ட்டின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் அச்சு ஊடக அனுசரணை வழங்குவதுடன் "சமூகம்", சமூக ஊடக வலைத்தளம் அனுசரணை வழங்கவுள்ளது.




## ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி!" நாவல் வெளியீடு

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி!"நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.53க்கு கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஜங்கரன் மண்டபத்தில் நடை பெறவுள்ளது. தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் தேசமான்ய லயன் தர்மராஜா தவசீலன் முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன் IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அதிபர் மூக்கப்பிள்ளை மூவேந்தன், சமூக சேவகியும் கலை இலக்கிய செயற்பாட்டாளருமான கலாநிதி கௌசலாதேவி கோவிந்தப்பிள்ளை, சமூக சேவகரும் ஆன்மிகவாதியுமான தேசமான்ய பிச்சை கிருஷ்ணா, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான கலாநிதி துரைராசா சுரேஷ், டவர் ஹோல் பவுண்டேஷனின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி எஸ். ஜெயபிரகாஷ் சர்மா, யுனைடட் ஆர்ட் ஸ்டேஜின் தலைவர் கலாபூஷணம் கே. செல்வராஜன், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். மணிமாறன்,

அகில இலங்கை சபரிமலை குருசுவாமிகள் ஒன்றியத்தின் தலைவர், கலைஞர் ஆறுமுகம் ரவீந்திரன், பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் கலாநிதி வைத்தியமாநிதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீடு ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜா, தமிழ் மிரர் பிரதம ஆசிரியர் அழகன் கனகராஜ், கெப்பிட்டல் எப். எம் வானொலியின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எப். சியா உல் ஹசன், ஞாயிறு தினக்குரலின் உதவி ஆசிரியர் லெப்டின்ராஜ், பிரபல கட்டடக் கலைஞர் எம். நந்தகுமாரன், வருணி ஜுவலர்ஸ் அதிபர் கே. யோகரட்ணம், சாய் டெய்லர்ஸ் அதிபர் ரதீஜா சபாபதி, ரஜனி துலானி ட்ரவல்ஸ் என். ரஜனிகாந்த், சினிமா, தொலைக்காட்சி மேடை நாடக நடிகர் கலைஞர் விஜேசுந்தரம் ஆகியோர் ஊடக விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.



DMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி நூலின் முதற்பிரதியை பெறுவார்.

### இந்திய பிரதமர் நரேந்திர மோடியின்

# மனதின் குரலும், மக்களவை எதிரொலியும்




நந்தவனம் சந்திரசேகரன்

ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை வானொலியில் மனதின் குரல் என்ற நிகழ்ச்சி மூலமாக நாட்டு மக்களுக்கு கருத்துரை வழங்கி வருகிறார். தற்போது மூன்றாவது முறையாகவும் பிரதமர் பொறுப்பேற்ற பின்பு முதல் முறையாகவும் ஜூன் 30ஆம் திகதி மனதில் குரல் வழியாக பெருமையுடன் பல கருத்துகளை முன்வைத்து உரையாற்றியிருந்தார்.

மனதின் குரல்வாயிலாக மீண்டும் ஒரு முறை குடும்பத்தினரிடையே வந்துள்ளேன். நமது அரசமைப்புச் சட்டம் மற்றும் தேகத்தின் ஜனநாயக அமைப்புகள் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையை மக்கள் மீண்டும் நிரூபித்துள்ளனர். இதற்காக மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

உலகில் விலை மதிப்பில்லாத உறவு தாய். நம் அனைவரின் வாழ்க்கையிலும் தாய்க்கான இடம் மிக உயர்வானதாக இருக்கும். இந்தாண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தில் (ஜூன் 5) தாயின் பெயரில் மரம் நடும் இயக்கத்தை தொடங்கினேன். எனது வேண்டுகோளை ஏற்று உலக அளவில் இந்த இயக்கத்துக்கு வரவேற்பு கிடைத்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த இயக்கத்தால் பூமித்தாய் பாதுகாக்கப் படுகிறாள்.



பிரான்ஸின் பாரீஸ் நகரில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் ஜூலை மாதம் தொடங்கப்படவுள்ளன. இப்போட்டியில் பங்கேற்கும் இந்திய வீரர்கள் விராங்கனைகளுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். குவைத் நாட்டின் தேசிய வானொலியில் இந்தி மொழியில் சிறப்பு நிகழ்ச்சியொன்றை அந்நாட்டு அரசு தொடங்கியுள்ளது. பாரத கலாசாரம் நமது திரைப்படங்கள், கலைப் படைப்புகள் தொடர்பான விவாதங்கள் இந்நிகழ்ச்சியில் இடம் பெறுகின்றன. இது இந்தியர்களுக்கு பெருமையானது.

உலகம் முழுவதும் கடந்த ஜூன் 21ஆம் திகதி யோகா தினம் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. பாரத நாட்டின் மரபுகள் மற்றும் கலாசாரத்தின் பெருமை சர்வதேச அளவில் மேலோங்கி வருவது நம் அனைவருக்கும் பெருமிதம் அளிக்கிறது என்று உரையாற்றியிருந்தார்.

பிரதமரின் வானொலி உரை, மக்கள் பிரச்சினைகளைப் பேசாத மனதின் குரல் என்று காங்கிரஸ் விமர்சனம் செய்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் ஊடகம் மற்றும் விளம்பரப் பிரிவின் தலைவர், பவன் கேரா இது பற்றிக் கூறும் போது. பிரதமரின் வானொலி உரையில் நீட் வினாத்தாள் கசிவு, இரயில் விபத்து, தில்லி விமான நிலைய மேற்கூரை சரிந்தமை பற்றிப் பேசாதது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார். இது நியாமான கேள்வி தானே?

அறிவுபூர்வமான விடயங்களை இம்முறை பிரதமார் தனது வானொலி நிகழ்ச்சியில் பேசுவார் என்று நினைத்தோம்.

ஆனால், அவ்வாறு பேசவில்லை என்று எதிர்க்கட்சிகளின் எதிர்பார்ப்பு என்பது இந்திய மக்கள் அனைவரின் எதிர்பார்ப்பாக வேண்டிய கட்டாயமும் இருக்கிறது.

ஏனென்றால். மக்கள் கேட்க விரும்பும் பிரச்சினைகள் குறித்து அவர் பேசவில்லை இது ஏமாற்றத்தைத் தருகிறது.

நீட்தேர்வு முறைகேடுகள், ஊழங்கள், குறித்து அனைவரும் பேசிக் கொண்டிருக்கும்போது அவற்றில் இருந்து கவனத்தை திசைத் திருப்பும் நோக்கில் கேரளத்தைச் சேர்ந்த குடைகள் குறித்துப் பேசுகிறார் நாட்டின் வடக்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் மோதிக் கொள்ளும் வகையில் அவர் பேசியுள்ளார் என்றும் தற்போது பிரதமர் விளம்பரப் பிரசாரத்தில் மட்டுமே ஈடுபட்டுள்ளார் என்றும் காங்கிரஸ் விமர்சித்துள்ளதை கடந்துபோக முடியாது, நாட்டில் நடந்து வரும் பல முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வுவேண்டும் என்றும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பிரதமர் வானொலி உரையில் நீட் பற்றி பேசாமல் போனதால் மக்களவையில் இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கோரிக்கை வைத்தார்.

ஜூலை முதலாம் திகதி மக்களவை கூடியபோது எதிர்க்கட்சிகள் அனைவரும் நீட் விவகரம் பற்றி விவாதிக்க வேண்டும் என்று குரல் எழுப்பினர்.

நீட் விவகாரம் தொடர்பாக நாட்டில் உள்ள மாணவர்களுக்கு நாம் தகவல் தெரிவித்தே ஆகவேண்டும். அதற்கு இந்த சபையில் விவதம், மேற்கொள்ளவேண்டும். நீட் விவகாரம் மிகவும் முக்கியமானது. நாடு முழுவதும் இரண்டு கோடிக்கு மேற்பட்ட மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நீட் வினாத்தாள் 70 முறை கசிந்துள்ளது. எனவே இதுபற்றி தனியாக நாள் முழுவதும் விவாதிக்க வேண்டும் என்று ராகுல் காந்தி கோரிக்கைமுன்வைத்தபோது.

மக்களவைக் கூட்டம் சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டே செயல்படுகிறது.

தற்போது ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் போது வேறு எதனையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது. ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் முடிந்த பிறகு மற்ற பிரச்சினைகளை எழுப்பலாம் என்று ஆளும்கட்சி அமைச்சர் ராஜ்நாத்சிங் கூறிய பதிலை எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொள்ளாமல் அவையிலிருந்து வெளிநடப்பு செய்து விட்டனர். இதனால் மக்களவையும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்தமுறை மக்களவையில் எதிர்க்கட்சி பலமாக இருப்பதாலும் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் ஆளும்கட்சி ஆட்சி அமைத்திருப்பதாலும் உறுதியான முடிவுகள் எதையும் எடுக்க முடியாமல் தடுமாற்றத்தில் இருப்பதையும் பார்க்க முடிகிறது.

மக்களின் குரலாக எதிர்க்கட்சிகள் மக்களவையில் குரல் எழுப்பபுவதால் வருங்காலங்களிலும் மக்கள் நலனில் அக்கறை இல்லாமல் ஆளும் கட்சி எடுக்கும் முடிவு ஒவ்வொன்றுக்கும் மக்களவையில் எதிர்க்கட்சியின் செயற்பாடுகளில் எதிரொலிக்கும் என்று உறுதியாக நம்பலாம்.

நிந்தவூர்த்தாய் பெற்ற

# கிராமியத்தமிழ்ப் படைப்பாளி எஸ். முத்துமீரான்



மண்மணக்கும் சொற்களினால் நம்மை ஈர்த்த
மாகவிஞர் எழுத்தாளர் முத்துமீரான்
மண்ணிதனை விட்டகன்ற மரணச் செய்தி
மனத்தினிலே பெருந்துயரைத் தந்ததையோ!
தென்கிழக்கின் கலாசாரப் பேரவைக்கு
தெம்பூட்டித் தலைவரென வாய்த்த அன்னார்
சென்றுவிட்டார் சுவனம் சேர்க!'
என்று இரங்கலோடு சேதி தந்தார் பாலமுனை பாறூக்.
நிந்தவூர்த்தாய் பெற்ற நித்தியப்புதல்வன்
முத்துமீரான் தன் சொந்த ஊரில்
நேற்று மறைந்தாராம்.
ஓ இதுவே எங்கள் இழப்பின் சோகம்
கிராம மக்களின் அக, புற வாழ்வு
தன் முத்திரையைப் பதித்துவிட்டது முத்துமீரானில்
மரணத்தை வென்ற
அபார மனிதர்; எத்தனை பேர்
இன்னும் வாழுகிறார் இந்த பூமியில்.
ஓ எங்கள் இரத்தின துவீபத்தின் சொத்து
விருட்சமிட்ட வித்து எஸ். முத்துமீரானா மறைந்தார்?
சட்டத்தரணி மூத்த எழுத்தாளர் எஸ். முத்துமீரான் மறைந்தார்.
அவர் மறைந்தாரா?
இல்லை!
அவர் வாழ்கிறார்
மனித மனங்களில் வாழ்கிறார்.
அவர்
மக்களுக்குச் சேவை செய்த மனிதாபிமானி;
அவர் வாழ்கிறார்
மண்ணில் வாழ்கிறார்
படைப்பவன் மரிப்பதில்லை
இன்னமும்
அவர் வாழ்கிறார்
படைப்பாளன் முத்துமீரான்
பூமியில்
இன்னமும் வாழ்கிறார்
அவர் இன்னமும்
எழுத்தில் வாழ்கிறார்
சேவையில் வாழ்கிறார்
நூலில் வாழ்கிறார்
நூலகத்தில் வாழ்கிறார்
கால்மார்க்சு இறந்தபோது
ஏங்கல்சு எழுதினான்:
அவன்
சுவாசிப்பதை நிறுத்தவில்லை
வாசிப்பதை நிறுத்திவிட்டான்
இந்த உலகத்தில்
கொடுக்கிறவன் வாழ்கிறான்
பெறுகிறவன் பிழைக்கிறான்
தானம் பெறுகிறவன் பரதேசி
தானம் தருகிறவன் படைப்பாளி
வாங்குவதில் இல்லை பெருமை
வழங்குவதில்தான் பெருமை
சமூகப்போராளியோ
இலக்கியப் படைப்பாளியோ
இவர்கள் எவரும்
தனி மரங்களுக்காகத்
தர்க்கம் செய்வதில்லை
தோப்புகளுக்காகவே
தொண்டு செய்கிறார்கள்
அப்படி
காலத்தால் மூத்து கருத்தால் முதிர்ந்து
கானமாய்த் திரிந்து ஞானமாய் சுரந்து வானமாய் விரிந்து
வனமாய் விளைந்து உயர்ந்து உயர்ந்து
உயர்ந்த தமிழால் உலகத்தமிழர் உள்ளமெல்லாம்
உள்ளவர்தான் எஸ். முத்துமீரான்
மரணத்தைத் தரிசிக்க
'உயிரை எடுத்திடு' என்று
இப்படி எழுதுகிறார் கவிஞர் முத்துமீரான்;:
'ஒரு கவளச் சோற்றுக்கு தினமும்
உருவம் தேடும் நானொரு
உணர்வும் உயிருமுள்ள மனிதன்
வாழ்வின் அந்திம காலத்தில்
வாழும் எனக்கு உறவுகளிருந்தும்
உதவும் கரங்கள் ஒருவருமில்லை
இரங்கும் இறைவன் இரக்கும் வரையில்
என்றும் எனக்கு இருளே இல்லை
விடியும்போது கண்களிரண்டும்
முடிவைத் தேடித் தவித்துத் துடிக்கும்
பசியால் உள்ளம் வாடும்போது
பரமன் உறவைத் தேடித் தவிக்கும்
வீதிகள் எல்லாம் எனக்கு வீடே
தேடுவாரில்லா வீடுகள் எனக்கு
வாடும் வாழ்வில் வளமாய் உண்டு
இன்னும் உயிரை எடுக்காதிருக்கும்
அன்பின் இறைவா அருளைப் பொழிந்திடு
முதுமைவாழ்வில் முழுதும் தந்து
உன்னில் கலக்க உயிரை எடுத்திடு'

சின்னத்தம்பி தந்தைக்கும் மீரா சாகிபு மீரா உம்மா தாய்க்கும் நிந்தவூரில் பிறந்தவர் எஸ். முத்துமீரான் (1941.05.03).மண்ணின் மணம் கிராமியக் கலை – கிராமிய மொழிவழக்கு என்பவற்றை அடிநாதமாகக் கொண்டவை இவரது படைப்புக்கள். எஸ். முத்துமீரான் குறிப்பிடத் தக்க படைப்பாளியாய் சிறு பத்திரிகைகளில் தன் பயணத்தைத் தொடங்கி கிராமிய மக்கள் எழுத்தாளராய் மலர்ந்தவர். கவிதையில் தொடங்கி உருவகக் கதைகளில் நிறைந்தவர். வேளாண்மைச் சூழலில் வளர்ந்தவர். நாட்டுப்புற இலக்கியத்தில் ஆய்வு செய்து பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள், கிராமத்துச் சிறு கதைகள், உருவகக் கதைகள் போன்றவை இவர் படைப்புக்களில் குறிப்பிடத் தக்கவை.

ஆரம்ப காலத்தில் முத்துமீரான் தனது ஆக்கங்களை சமூக ஊடகங்களில் நிந்தன் நிந்தவூரான் லத்தீபா முத்துமீரான் போன்ற புனைபெயர்களில் எழுதி தன்னை அடையாளம் காட்டினார்.

ஆண்டு 1957இல் தனது 16ஆவது வயதில் இலங்கை வானொலியில்; நாடக ஆசிரியராக பிரவேசம் பெற்றார். பள்ளிஆசிரியர் தொழிலை ஆரம்பித்து எழுத்தாளராகவும் கவிஞராகவும் பத்திரிகை நிருபராகவும் சட்டத்தரணியாகவும் அரசியல் பிரமுகராகவும் சமூகத் தலைவராகவும் தமழுணர்வாளராகவும் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.

கவி கதை – கவிதை – நாடகம் உருவகக் கதை நாட்டார் பாடல்கள் பழமொழிகள் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் தாலாட்டுப் பாடல்கள் ஆய்வுநூல்கள் கட்டுரைகள் என ஆயிரக் கணக்கான ஆக்கஇலக்கியங்களை அனுபவ உணர்வு வெளிக்கொணர்ந்ததால் சமுதாயத்துக்கு யதார்த்த உயர்வு கிடைத்தது. அதனால் இவர் தமிழ்கூறு நல்லுலகில் ஒரு தமிழ்ப் பேராளராகப் பிரபல்யமானார்.

உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளிலும் தனது படைப்புக்களை வாசித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றார். இவரது தமிழ் இலக்கியநூல்கள் இலங்கை இந்திய பல்கலைக் கழகங்களிலும் கூட உசாத்துணை நூலாகவும் பயன்படுத்தப்படுகிறன. ஒரு படைப்பாளி தன் தாய்மொழிக்கும் சமூகத்துக்கும் சக மனித வாழ்க்கைக்கும் ஒரு மடைமாற்றம் நிகழ்த்துவதாக இருந்தால் மட்டுமே தனது எழுதுகோலைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு முன்னுதாரணம்தான் எழுத்தாளர் எஸ். முத்துமீரான்.

1980இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் கிழக்கு மாகாண எழுத்தாளர் படிப்பாளர் கவிஞர் கலைஞர் வாசகர் குழுமத்தின் 'தென்கிழக்கு கலாசாரப் பேரவை' என்ற தமிழ் கலை இலக்கிய வெளியீட்டகத்தின் தலைவராகவும் செயற்பட்ட முத்துமீரான் வளரும் இளம் தலைமுறையை வளர்த்து விடவேண்டும் என்று 'நிந்தவூர் தமிழ் இலக்கியப் பேரவை' என்ற பயிற்சிப் பட்டறையையும் உருவாக்கிக் கொடுத்தார்.

நிந்தவூர் பிரதேச சபையில் நீண்ட கால உறுப்பினராய் சேவையாற்றிய முத்துமீரான் தொழில் ரீதியிலும், அரசியல் ரீதியிலும், நெருங்கிய நண்பராயிருந்த முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்; எம். எச். எம். அஷ்ரஃப் இலங்கை மக்கள் புனர்வாழ்வு அமைச்சராக இருந்தபோது அம்பாறை மாவட்ட இணைப்பாளராகவும் பணி புரிந்தார்.

இன்றைய தமிழ்த் தலைமுறைகள் தமிழ்க்கலை, கலாசாரத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் உண்மையான பழமையையும் , பெருமையையும் அறியாமல் இருக்கக் கூடாது என்பதற்காக தன்னுடைய ஆய்வையும்அறிவையும் இலக்கியத்துறையில் வெளிக்கொணர்ந்தபோது,

(தொடச்சி 19ஆம் பக்கத்தில்...)



**கனடாவிலிருந்து இனியவன் இசாறுதீன் –**







மூடும் திகதி மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட
விலைமனுக் கூட்டம் ஆகியவற்றின் நீடிப்பு அறிவித்தல் SPMC

**சுகாதார அமைச்சு**

**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்** (SPMC)

**INVITATION FOR BIDS, FOR SUPPLY , INSTALLATION, COMMISSIONING, SERVICING AND PROVIDE TRAINING FOR 01 No. OF BRAND NEW HIGH-PERFORMANCE LIQUID CHROMATOGRAPH (HPLC) SYSTEM FOR STATE PHARMACEUTICAL MANUFACTURING CORPORATION AT RATMALANA**

**CONTRACT No. SPMC/FD/01/2024**

2024 ஜூலை 08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த மேலேயுள்ள பெறுகையின் மூடும் திகதி தொடர்பானது.

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக பெறுகைக் குழுவானது இந்த பெறுகையின் மூடும் திகதியை 2024 ஜூலை 22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடித்துள்ளதுடன் விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2024 ஜூலை 10 மு.ப. 10.30 மணிக்கு நடைபெறுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர் - பெறுகைக் குழு**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல தோட்டம்**
**இரத்மலான.**
தொலைபேசி : 2635353/2637574/2623298
தொலைநகல் : 2634771/2626621



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## உரிமம்பெற்ற வங்கிகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றின் வைப்பாளர்களுக்கான தனித்துவமான அடையாள இலக்கங்கள்

இலங்கை மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வங்கிகளும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும், 2022 ஒத்தோபர் 1 இலிருந்து வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கின்ற அல்லது பராமரிக்கின்ற போது ஒவ்வொரு வைப்பாளருக்குமெனத் தனித்துவ அடையாள இலக்கமொன்றினைப் பதிவுசெய்யுமாறும், ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை இற்றைப்படுத்துமாறும் கட்டாயப்படுத்தியது.

2024 மே மாதத்தில், இலங்கை மத்திய வங்கியானது இது தொடர்பில் விடுக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளை மாற்றீடு செய்து, 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதற்கான செயற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுத்தது. மேலும், ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் இற்றைப்படுத்துவதற்கான இறுதித் திகதியும் 2024 திசெம்பர் மாதம் 31 வரை நீடிக்கப்பட்டது.

அதற்கிணங்க, உரிமம்பெற்ற வங்கிகளுடனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுடனும் வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கின்ற அல்லது பராமரிக்கின்ற போது வைப்பாளர்கள் பின்வரும் கட்டாயமான தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பயன்படுத்தவேண்டும்:

| | வைப்பாளர்களின் வகை | அடையாள ஆவணத்தின் வகை/ உருவாக்க வேண்டிய இலக்கம் |
|---|---|---|
| 1. | **தனிநபர்கள்** | |
| 1.1 | இலங்கைப் பிரசைகள் | தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்<br>*மாற்று ஆவணங்கள்*<br>*கணக்குகளை ஆரம்பிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்கியுள்ள வைப்பாளரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அவர்களது முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைப் பதிவுசெய்வது கட்டாயமாகும்.* |
| 1.2 | இலங்கைப் பிரசைகள் (இலங்கைக்கு வெளியே வதிபவர்/ நிரந்தர வதிவிட உடைமையாளர்/ தற்காலிக வதிவிட உரிமையாளர்), இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கையில் வதிபவர்),<br>இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதிபவர்) | தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்<br>*விதிவிலக்கான சூழ்நிலைகள்*<br>*தேசிய அடையாள அட்டை இல்லாத பின்வரும் சந்தர்ப்பங்களில் இலங்கை கடவுச்சீட்டு இலக்கத்தினைப் பயன்படுத்த முடியும்.*<br>*(அ) தேசிய அடையாள அட்டை வைப்பாளரால் தற்காலிகமாகக் ஒப்படைக்கப்பட்டிருத்தல்*<br>*(ஆ) வெளிநாட்டில் வாழும் ஒரு இலங்கையரொருவர்*<br>*(இ) பராயவயதை அடையும் முன் இலங்கையை விட்டு வெளியேறிய சூழ்நிலையால் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்காமை*<br>*இத்தகைய சூழ்நிலைகளில், வைப்பாளர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டைகளை விரைவில் பெற்று, உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் முறைமைகளில் அவற்றை புதுப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.* |
| 1.3 | இலங்கையரல்லாப் பிரசைகள் - இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டவர் உட்பட (இலங்கைக்கு வெளியே வதிபவர்) இலங்கைக்குத் தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ள வெளிநாட்டுப் பிரசைகள், வெளிநாட்டு இராசதந்திரிகள் ஆகியோரை உள்ளடக்கும் | வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் |
| 1.4 | பராயமடையா வைப்பாளர்கள் (தேசிய அடையாள அட்டை பெறும் வரை) | பிறப்புச் சான்றிதழ்: *தேசிய அடையாள அடையை பெற்றுக்கொள்ளும் வரை அடையாள இலக்கமாக பிறந்த திகதியைத் தொடர்ந்து பிறப்புச் சான்றிதழ் இலக்கத்தினைப் பதிவுசெய்ய வேண்டும்* |
| 2. | **நிறுவனங்கள்** | |
| 2.1 | கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் | கம்பனிப் பதிவுச் சான்றிதழ் மற்றும் கம்பனிப் பதிவு இலக்கம் |
| 2.2 | அரசசார்பற்ற அமைப்புக்கள் | அரசசார்பற்ற அமைப்புகளுக்கான தேசிய செயலகத்தினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் இயைபுடைய பதிவு இலக்கம் |
| 2.3 | தனியுடைமை/ பங்குடைமை/ இணைந்த கூட்டு முயற்சிகள் போன்ற பிரதேச/ உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வியாபாரப் பதிவு இலக்கம் |
| 2.4 | பாராளுமன்றச் சட்டமொன்றால் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனம் | பாராளுமன்ற தொடக்கச் சட்டத்தின் பிரதி: *தொடக்கச் சட்ட இலக்கத்தைத் தொடர்ந்து கூட்டிணைக்கப்பட்ட ஆண்டைப் பதிவுசெய்தல் வேண்டும்.* |
| 2.5 | கழகங்கள், அமைப்புகள், சங்கங்கள் போன்ற ஏனைய அனைத்து நிறுவனங்களும் | இயைபுடைய அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் இயைபுடைய பதிவிலக்கம்.<br>*பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கான மாற்றீடுகள்*<br>*பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் பெறப்பட்ட அடையாள இலக்கங்கள் குறிப்பிட்ட நிறுவனத்திற்கான தனித்துவமான அடையாள இலக்கமாகப் பதிவுசெய்ய அனுமதிக்கப்படுகின்றன.* |

இயைபுடைய அதிகாரசபைகளின் கீழ் தமது பதிவினை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளாத கழகங்கள், அமைப்புகள், சங்கங்கள் போன்றன உள்ளடங்கலாக அனைத்து நிறுவனங்களும் அவ்வாறு செய்வதற்கும் உரிய உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றில் அடையாள இலக்கத்தை இற்றைப்படுத்தவும் வலியுறுத்தப்படுகின்றனர்.

மேற்கூறிய தனித்துவமான அடையாள இலக்கத்தைப் பதிவுசெய்யத் தவறினாலோ, அல்லது மாற்று அடையாள இலக்கங்களைப் பயன்படுத்தினாலோ, வங்கி அல்லது நிதிக் கம்பனி ஒன்றின் உரிமம் இரத்துசெய்யப்படும் போது/ இரத்துசெய்யப்பட்டால், வைப்பாளர்கள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நட்டஈட்டினை உரிமைகோரும் போது தாமதங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்ள வழிவகுக்கும்.

ஆகையால், அனைத்து வைப்பாளர்களும் (தனிநபர் மற்றும் ஆள்சாரா என இருவகையினதான வைப்பாளர்களும்) தாங்கள் அவ்வாறு செய்திருக்காவிடின் தங்களது தனித்துவ அடையாள இலக்கங்களை உரிய உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் உடனடியாக அறிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

**பணிப்பாளர்**
**வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 0112477261
மின்னஞ்சல்: ddir@cbsl.lk

# சொல்லம்புகள்



தாய் என்ற உறவு உன்னதமானது மட்டுமல்ல; மிகவும் வித்தியாசமானதும் தான்!

பால் நினைந்தூட்டுபவள் அல்லவா அவள்! தன் பிள்ளைகளின் ஒவ்வொரு சிறு அசைவையும் கூட அவளால் துல்லியமாக உணர்ந்து கொள்ள முடியுமே.

வஸீலா இரண்டு மூன்று நாட்களாகவே அவதானித்துக் கொண்டே இருக்கிறாள்.

வஸீலாவின் இரண்டு மகள்மாரும் ஏதோ தங்களுக்குள் கதைத்துக் கொள்வதும் தொலைபேசியில் யாருடனோ கதைத்துக் கொள்வதும் அலுமாரியைத் திறந்து நல்ல உடைகளை வெளியே எடுத்துப் பார்ப்பதும், உடுத்திப் பார்ப்பதும் வைப்பதுமாய் இருப்பதை

வஸீலா அவதானித்துக் கொண்டிருந்தாளே தவிர ஒன்றும் கேட்கவில்லை. என்னதான் அறைக்குள் வேஷமிட்டாலும் அம்பலத்தில் வந்து தானே ஆட வேண்டும்? மற்றது தன் பிள்ளைகள் தவறான முடிவுகளை எடுக்க மாட்டார்கள் என்ற நல்ல நம்பிக்கையும் உண்டு.

இன்னும் மூன்று நாட்களில் வஸீலாவின் மூத்த சகோதரன் காமிலின் மகள் சுரையாவின் திருமணம். அவரது மூத்த மகள் குடும்பம், அண்டை அயலார் என்று எல்லோருக்குமே அழைப்பு.

அந்த திருமணம் நிச்சயமானதிலிருந்தே வஸீலாவின் மனதுக்குள் பெரும் குமைச்சல். வெளியே சொல்லவும் முடியாத மெல்லவும் முடியாத வேதனை.

குடும்பத்தோடு போகவேண்டிய நிகழ்வு. வஸீலாவுக்கு மகள்மாரிடம் கேட்டுப் பார்ப்போம் என்ற எண்ணம் எத்தனையோ முறை வந்தாலும் கேட்கவிடாது ஏதோ தடுத்தது.

நஸ்ரின், ரிஸாயா இருவருமே அடுத்தடுத்த வருடங்களில் பிறந்தவர்கள். பார்த்தால் இரட்டைப் பிள்ளைகள் போலவே இருப்பார்கள். ஒருவர் விஞ்ஞானப் பட்டதாரி மற்றவர் வர்த்தகப் பட்டதாரி. ஆனால் அரசு மிகவும் பிரயத்தனத்தின் பின் ஆரம்பக்கல்வி ஆசிரியைகளாகவே நியமனம் கொடுத்துள்ளது.

என்ன செய்வது? கிடைத்ததைச் சிறப்பாகச் செய்வோம் என்ற எண்ணத்தில் இருவரும் செய்து கொண்டிருக்கின்றனர். மனப்பூர்வமான திருப்தியுடன்.

பல்கலையிலிருந்து வெளியேறியதில் இருந்தே வஸீலாவும் கணவர் இஜாசும் பிள்ளைகளுக்குத் திருமணம் முடித்து வைக்க முயற்சித்துக் கொண்டே இருக்கின்றனர்.

திருமணம் பேசி முடிப்பது இப்போதெல்லாம் இலேசான காரியமாகவா இருக்கின்றது?

சில மாப்பிள்ளை வீட்டார் இருபது வயதுக்குள் பெண் தேடுகின்றனர். வேறு சிலரோ வரப்போகிற மருமகளின் உழைப்பில் தம் மகன் உல்லாசமாக வாழலாம் என்று நினைக்கின்றனர். பெரிதாக சீதனம் எடுக்காது. தொழில் செய்யும் பெண்ணை எடுத்தால் காலத்துக்கும் வருமானம் வரும் என்ற தீர்க்க தரிசனத்துடன் உள்ளனர்.

தங்கள் மகன்மார் அதிகம் படித்ததில்லை எனவே பட்டதாரி பிள்ளைகள் சரிவரமாட்டார்கள் என்று ஒதுங்குபவர் சிலர்.

"எங்கள் மகன் நல்ல பிஸ்னஸ் செய்கிறார். உங்கள் மகள் வேலையை ரிஸைன் பண்ணினால் எங்களுக்கு விருப்பம்" என்று கூறியவர்களும் உள்ளனர்.

இத்யாதி இத்யாதி பிரச்சினைகளால் நஸ்ரினதும், ரிஸாயாவினதும் திருமணம் தாமதமாகிக் கொண்டே போகிறது.

அண்மைக் காலமாக நஸ்ரினும், ரிஸாயாவும் மாத்திரமல்ல, வஸீலாவும், இஜாசும் கூட வைபவங்களுக்குப் போவதை முடிந்தளவு தவிர்த்துக் கொண்டே வருகின்றனர். தாயும் தகப்பனும் செல்லும் பல வைபவங்களுக்கு மகள்மார் வருவதை விரும்பவே இல்லை.

"நரம்பில்லாத நாக்கு எதை வேண்டுமென்றாலும் பேசும்" என்று சொல்லி வைத்தவர்களின் வாயில் கிலோ கணக்கில் சீனியைப் போட வேண்டும்.

"புள்ளைக ரெண்டு பேருமே நல்லா சம்பளம் எடுக்குதுக கலியாணம் செய்து வச்சா கஷ்டமாப் போயிடுமே" என்ற வார்த்தை அம்புகளால் நொந்து நைந்து போவார்கள் அந்த பெற்றோர்.

வேலை செய்யும் இடத்திலும் பல வார்த்தை வதைகள், நஸ்ரினுடன் வேலை செய்யும் ரஹ்மா டீச்சர் ஒரு நாள் கூறிய வார்த்தை அடியால் அடுத்த நாள் பாடசாலைக்கே போகவில்லை. எல்லோரும் ஆசிரியர் ஓய்வறையில் இருக்கும் போது கதையோடு கதையாக ரஹ்மா டீச்சர் சொன்னார்.

"காலம் ரொம்ப மோசமாயிடிச்சி சிலர் ஏழு குதிரைகள் பூட்டிய தேரிலே ஏறி இராஜகுமாரன் மாப்பிள்ளையாக வருவார் எண்டுகனா காணுறாங்க கடைசில ஒட்ட சட்டியிலதான் கையை வைக்கப் போறாங்க"

இந்த வார்த்தைகளுக்கு ஆதார பூர்வமான சான்றுகளையும் இரண்டு மூன்று பேர் முன்வைக்க நஸ்ரின் பேசாமல் இருந்தாள். ஆனால் இந்த வார்த்தைகளால் அவளது இதயம் நொருங்கி சுக்கு நூறாகி இரத்தத்தைக் கொட்டியது.

படித்தவர்கள் என்ற சிறப்புடன் வாழ்பவர்கள் படிப்பித்துக் கொடுப்பவர்கள், தான் இப்படியென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்!

இத்தகைய சொல்லடிகளைத் தாங்க முடியாதவர்களாகித்தான் நஸ்ரினும் ரிஸாயாவும் பல முக்கியமான வைபவங்களுக்கே போகாது தவிர்த்து வந்தனர். வஸீலாவும் இஜாசைம் கூடத்தான்.

இம்முறை வஸீலாவின் மூத்த சகோதரன் காமிலின் வீட்டில் அவரது மகளுக்குத் திருமணம் ஆச்சர்யமாக நஸ்ரினும், ரிஸாயாவும் புறப்படுகின்றனர். வஸீலாவுக்கு விளங்கியது மனதுக்குள் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

"உம்மா நாங்க இண்டைக்கு ஸ்கூல் முடிஞ்சி வர்ரபோது கொஞ்சம் கடைக்குப் பொயிட்டு வருவோம் கொஞ்சம் சொனங்கும் மாமா வீட்டு கலியாணத்துக்குப் போக கொஞ்சம் சாமான் வாங்கனும்."

வஸீலா முழுமையாகவே மகிழ்ந்து போனாள், எங்கே இவர்கள் வரமாட்டார்களோ என்று குமைந்து கொண்டிருந்தவளாயிற்றே!

திருமண வீடு கலகலத்தது. நஸ்ரினும் ரிஸாயாவும் வழமையைவிட மிகமிக அழகாகவும் நேர்த்தியாகவும் கலகலப்பாகவும் வந்தது பெற்றோருக்கு அளவற்ற ஆனந்தத்தையே தந்தது

சாப்பாடு இன்னும் வைக்கவில்லை. சகோதரிகளின் கண்கள் யார் யாரையோ தேடிக் கொண்டிருந்தன.

ரிஸாயா தான் சொன்னாள் "அங்க பாருங்க தொங்கல் மேசையில் உட்கார்ந்திரிக்கிறாங்க ரெண்டு மூணு கதிரைகளும் இரிக்கி வாங்க போவோம்"

வஸீலா யார் யாரோ உறவினர்களுடன் கதைத்துக் கொண்டிருந்ததால் இவர்களைக் கவனிக்கவில்லை.

அவர்கள் குறிப்பிட்ட மேசையில் சித்தி மாமியும், சல்ஹா பெரியம்மாவும், ரஸீனா தாத்தாவும் இவர்களே முந்திக் கொண்டு "ஸலாம்" கூறியவர்களாக இரண்டு கதிரைகளை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டனர்.

இந்த மூவர் கூட்டணிதான் அதிகமதிகமாக மற்றவர்களின் வாழ்க்கையில் மூக்கை நுழைத்து சொல்லம்புகளால் வதைவதையென்று வதைத்து இன்பம் காணுபவர்கள்.

ரிஸாயா "எப்படி சித்திமாமி சல்ஹா பெரியம்மா, ரஸீனா தாத்தா எல்லாரும் சொகமா?" என்று கதையைத் தொடங்கினாள்.

"இரிக்கிறோம் இரிக்கிறோம்"

"ஏன் சித்தி மாமி இண்டைக்கு ஏன் சலிப்பாக இரிக்கிறீங்க அவசரமான கலியாணம் முடிச்சி வச்சி ஊரெல்லாம் பெருமையா பேசித் திரிஞ்ச ஒங்கட மகள் கையில புள்ளையோட டிவோஸாகி வீட்டுக்கு வந்துட்டாளாமே பாவம் மாமி" நஸரின் முதல் பாணத்தை விட்டாள்.

"சல்ஹா பெரியம்மா நீங்களே சொல்லுங்க மத்தவங்கட வாழ்க்கையைப் பத்தித் தேடித் திரியுற சித்தி மாமி தன்ட மகன நல்லா யோசிச்சி தானே கலியாணம் செய்து கொடுத்திருக்கணும் இல்லையா?"

"நெசந்தான் நெசந்தான்" ரஸீனா தாத்தாவும் ஒத்து ஊதினார்.

"இல்ல இது அவட விதி. அத எங்களால மாத்த முடியுமா?" சித்தி மாமியின் சமாதானம் அது.

"ரஸீனா தாத்தா நாங்க இன்னமும் கலியாணம் முடிக்காம இரிக்கிறோம் எண்டு கொஞ்சம் பேருக்கு சரியான கவலை பாருங்க ரஸீனா தாத்தா எங்களுக்குப் பொருத்தமானவங்களத்தானே நாங்க கலியாணம் செய்யனும் இல்லையா? எங்கட உம்மா வாப்பா நாங்க சம்பாதிக்கிறதால கலியாணம் செய்து வைக்காம இரிக்கிறாங்க எண்டும் கதைக்கிறாங்களே நீங்களே சொல்லுங்க இது சரியா?"

"இல்ல அப்படித்தான் நாங்க சம்பாதித்துக் கொடுத்தாலும் மத்தவங்க ஏன் கவலப்படனும் எங்கள எவ்வளவு கஷ்டப்பட்டு வளத்தவங்க அவங்க இல்லையா ரஸீனா தாத்தா" என்றவளாய் ரிஸாயா ரஸீனா தாத்தாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அந்த முகம் பார்க்க சகிக்காமல் மாறிக் கொண்டிருந்தது. நஸ்ரின் கூறிமுடிக்க, திட்டமிட்டபடியே அங்கே வந்து சேர்ந்தாள் மரீனா. கதிரையில் உட்கார்ந்தவளாய் "ஹாய் நஸ்ரின், ரிஸாயா நீங்க ரெண்டு பேரும் எங்கே வரமாட்டீங்களோ என்று நெனைச்சேன்" என்றாள்.

மரீனா பக்கத்து மாவட்ட வைத்தியசாலையில் பிரதம நர்ஸ். அந்த ஊரிலிருந்து முதன் முதலில் நர்ஸாகியவள்... அப்போது அவளும் அவளது குடும்பத்தினரும் கேட்ட அபவாத வார்த்தைகள் அப்பப்பா

"சீ...சீ... நேர்ஸ் வேலைக்கா போவாங்க...அசிங்கமான வேல...ராவிராவா டொக்டர் மார்களுடன் வேல செய்யணும் கட்டகவுன் உடுக்கணும்... அத நெனக்கவே முடியல்ல..." இவை மாத்திரமா...?

ஆனால், மரீனாவிடம் அவசரத்துக்கு ஓடிவந்து வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொள்ள அவர்கள் தயங்கவில்லை. மரீனாவும் தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்தே வருகிறாள்.

இறைவனருளால் வைத்தியசாலை மருந்தாளரான ஹஸன் என்பவரைத் திருமணம் செய்து வளமாக வாழ்கிறாள்.

மரீனாவின் வருகையும் திட்டமிட்டதுதான். "இல்ல இல்ல எத்தனையோ பங்ஷனுக்கு வராமதான் இருந்தோம் பொறகு யோசிச்சோம் எங்கட கலியாணம் சொனங்குறத பத்தி மத்தவங்க கதைக்கிறத பாத்து நாங்க ஏன் கவலப்படணும் வேலயத் தவங்கட கதைகளுக்காக நாங்க ஏன் மனம் சோரணும் எண்டு நெனைச்சுத்தான் வந்தோம்" நஸ்ரின் சொல்லும் போதே அவர்களுக்கு முன்னால் உட்கார்ந்திருந்த மூவரது முகங்களும் அஷ்ட கோணலாகின.

"அதுதானே, என்னப்பத்தி இங்க கொஞ்சம் பேர் கதைக்காத கதையா ஒரு பெண் டொக்டரானா புகழ்றாங்க அவங்களே நேர்ஸ்களை ஏசுறாங்க அவமானமாம் ஹராமாம் எங்க படிச்சாங்களோ கார் ஓட்டினா புகழ்றாங்க பைசிக்கல் ஓட்டினா கேவலமாம் என்னடா இது" மரீனா அழுத்தம் திருத்தமாக சொன்னார்.

சித்திமாமி, சல்ஹா பெரியம்மா, ரஸீனா தாத்தா மூவரும் பதில் பேச முடியாதிருந்தனர். இப்படி ஒரு தாக்குதல் நடைபெறும் என்று எதிர்பார்க்கவே இல்லை.

ரியாஸா அழகாகச் சொன்னாள்"ஏன் மரீனா சிஸ்டர்... மத்தவங்களப்பத்தி புறம் கதைக்கிறவங்க இறந்தவரின் மாமிசத்தைச் சாப்பிடுபவர்கள்" என்ற நபிமொழியை இங்கே மிச்சம்பேருக்கு சொல்லிக் கொடுக்கணும்" என்று கூறினாள்.

"ரிஸாயா நஸ்ரின் யாரும் ஒங்கட கலியாணம் பத்தி பேசித் திரியிறாங்க எண்டு நீங்களோ உம்மா வாப்பாவோ கவலப்பட வேணாம் என்னைப் பத்தியும் இப்படித்தான் பேசினாங்க இப்ப அவங்கவட புள்ளைகள் தான் கஷ்டப்படுறாங்க. பாவம்; இவங்கட புள்ளைகள். சரி சரி வாங்க நாங்க சாப்பிடுவோம் பங்ஷனுக்கு வராம இனி இரிக்காதீங்க என்ன நான் சொல்றது சரியா?" மரீனா கூறியவளாக எழும்பினாள் நஸ்ரினும், ரிஸாயாவும் கூடவே எழுந்தனர்.

"மூவரும் சேர்ந்தபடி சல்ஹா பெரியம்மா, சித்திமாமி, ரஸீனா தாத்தா ஒன்னும் யோசிக்காதீங்க நல்லா சாப்பிடுங்க இன்ஷா அல்லாஹ் இனி வரும் பங்ஷன்களுக்கும் நாங்க வருவோம். நீங்களும் வாங்க" என்று கூறியவர்களாக நகர்ந்தனர்.

குட்டக் குட்டக் குனிந்தே போகும் மடமைத்தனத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமே.

**நயீமா சித்தீக் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 128



திரு/திருமதி.செல்வி ........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ........................................

........................................

........................................

.................... ....................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 128
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 128

### இடமிருந்து வலம்

1. குற்றமற்றவன்
5. இரவு
7. இதுவும் ஒரு விலங்கு (குழம்பியுள்ளது)
9. இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் இதுவும் ஒன்று (குழம்பியுள்ளது)
11. ஒன்றை நிர்ணயம் செய்வதற்கு உரிய நிலை அல்லது தகுதி
13. முகத்தின் பக்கவாட்டுப் பகுதி (குழம்பியுள்ளது)
15. பூலோக கற்பகதரு (திரும்பியுள்ளது)
17. ஏற்றத்தாழ்வு இல்லாத நிலை (திரும்பியுள்ளது)
18. குறிப்பிட்ட ஒன்றைக் குறித்து வெளிப்படுத்தப்படும் செய்தி
21. இனிமையான இது மருத்துவக் குணமுள்ளது (திரும்பியுள்ளது)
22. நேசமும் நட்பும் கலந்த உணர்வு
23. மயில் இதனை விரித்தாடும்
25. பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது (திரும்பியுள்ளது)
26. பறவை

### மேலிருந்து கீழ்

1. ஒன்றைச் செய்வதற்கு அல்லது செய்யாமலிருப்பதற்கு விதிக்கப்படும் கட்டுப்பாடு.
2. கேடு அல்லது களங்கம்
3. இசையுடன் இணைந்தது
4. கள்வன்
6. தலைமுடி
8. காடு
10. அரசன் குழம்பிவிட்டான்
12. இராமாயணக் கதையில் வரும் ஒரு பாத்திரம்
14. நாடு (தலைகீழ்)
16. வேதனை தரும் உணர்வு (தலைகீழ்)
19. பலராலும் பாராட்டிப் பேசப்படும் நிலை அல்லது மேன்மை (குழம்பியுள்ளது)
20. உடலின் தசைப்பகுதியை மூடியிருப்பது (தலைகீழ்)
22. ஆணோ, பெண்ணோ என்று சொல்லமுடியாத நபர்
24. விரோதம் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 127

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. உறுதுணை
4. அல்லி
6. அறவுரை
8. புரவி
10. தலை
11. உதயம்
13. நிம்மதி
16. கனி
17. சதி
18. அம்மை
20. தடை
22. அவா
24. மணி
25. மனைவி
26. கிலி

**மேலிருந்து கீழ்**

1. உப்பு
2. துறவி
3. அணை
4. அரை
5. லிகிதம்
7. உணவு
9. ரதம்
10 மலையகம்
12. தனிமை
13. நிந்தனை
14. மதி
15. அசதி
19. அணில்
21. விடை
23. வாலி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 127

### பரிசு பெறுவோர் விபரம்

முதலாம் பரிசு ரூ 500.00
**எச்.எம்.எம். லெப்பே**
இல 38/1 வெலகெதர வீதி,
பதுளை

இரண்டாம் பரிசு ரூ 350.00
**வி. பாலேந்திரான்**
15/2 தயா வீதி,
வெள்ளவத்தை

மூன்றாம் பரிசு ரூ 150.00
**ஆர் முஆத்,**
இல 115, அண்ணல் வீதி,
மாஞ்சோலைச் சேனை,
கிண்ணியா 3

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ். சந்திரிக்கா** களுவாஞ்சிக்குடி
2. **எஸ். விகாஷினி,** கொழும்பு 13
3. **எம். பாஸிர்,** ஹாலிஎல
4. **எம்.எல். ஆதம்லெப்பை,** அக்கரைப்பற்று
5. **எம்.எஸ்.அமீர்** தெஹிவளை
6. **சாஹா ஹனீம்,** துல்ஹிரிய
7. **என்.கே.வேணி** பலாங்கொட
8. **மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை
9. **யு. சுல்பிக்கர்,** பொலன்னறுவை
10. **கே.எம்.எம். பாரூக்** மாத்தளை

## நூலகம் இல்லாத ... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

இது என் பாட்டியின் அம்மாவால் வாங்கப்பட்டது. அத்துடன் துடுகல தலைமுறையிலிருந்து கிடைத்த 200 ஆண்டுகள் பழமையான கட்டில் ஒன்றும் இருந்தது.

இவை ஒரு அருங்காட்சியகத்திற்கு ஒப்படைக்கப்பட இருந்த பொருட்களாகும். புத்தகங்களில் ஒரு பகுதியை ரோயல் கல்லூரிக்கு கொடுப்பது தொடர்பில் நானும் மைத்திரியும் பேசிக்கொண்டிருந்தோம். ஒல்லாந்தர் காலத்து புத்தகங்கள் இருந்தன. போல் ஈ. பீரிஸின் சுமார் 50, 60 புத்தகங்கள் இருந்தன. அவற்றை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு வழங்குவது குறித்து பேசியிருந்தோம். இன்னும் சில புத்தகங்களை கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்கவும் திட்டமிட்டிருந்தோம்.

வருங்கால சந்ததியினருக்கு மரபுரிமையாக கிடைத்திருக்க வேண்டிய மதிப்புமிக்க வரலாற்று நூல்கள் அழிந்ததே எனக்குள்ள ஒரே கவலை. 1932ஆம் ஆண்டில், ஹிட்லர் புத்தகங்களை எரித்துத்தான் தனது பயணத்தைத் தொடங்கினார். இம்முறை நடந்திருப்பதும் அவ்வாறான ஒன்றேயாகும்.

இவ்வாறுதான் அன்று பிரதமராக ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

2020ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்ததன் பின்னர் அவர் புத்தகம் ஒன்றை எழுத ஆரம்பித்துள்ளார். அந்த புத்தகத்தின் உள்ளடக்கம் தென்கிழக்கு ஆசியாவில் அரசியல் நடத்தை பற்றியதாக இருந்தது. அதன் கையெழுத்துப் பிரதியும் கூட தீயில் எரிந்து சாம்பலாகிவிட்டது. அவருக்கென்றிருந்த அனைத்து உடமைகளும் தீயில் எரிந்து நாசமடைந்துவிட்டன.

அன்று நாம் அங்கிருந்து வெளியேறும் போது, ஒரு மனிதனால் பணத்தைச் சம்பாதிக்க முடியும் என்றாலும், அவனால் சேகரித்தவற்றை திரும்பப் பெற முடியாது என அவர் கூறினார். புது வீட்டுக்கு சென்ற பிறகுதான் அது உண்மை என்பதை உணர்ந்தோம். இப்போது அவ்வீட்டில் இருப்பது புதிய தளபாடங்களும், தீயில் பாதி சேதமடைந்து மீள புதுப்பிக்கப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுமேயாகும்.

நூலகம் இருந்த இடத்தில், தற்போது நூலகத்திற்கு பதிலாக வீட்டுத் தளபாடங்களுடன் கூடிய அறை ஒன்றே உள்ளது. எஞ்சியிருந்த சில புத்தகங்கள் மட்டும் கீழே உள்ள சிறிய நூலகத்தில் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்தன. அன்று புத்தகங்களால் நிறைந்திருந்த வீடு இன்று புத்தகங்கள் இல்லாத வெற்று வீடாக மாறிவிட்டது.

வரலாற்றை அழித்த மண்ணில் மீண்டும் ஜனாதிபதி ரணில் குடியிருக்கத் திரும்பியுள்ளார்.

அந்த வீட்டைத் துப்புரவாக்கிப் புதுப்பித்தது துடாவ பிரதர்ஸ் என்ற நிறுவனமாகும். இந்த நூலகத்தைப் பற்றிக் கேட்டபோது, "இப்போது அவ்விடத்தில் நூலகம் இல்லை" என்று மாத்திரமே அவர் கூறினார். கண்கள் ஈரத்தால் மின்னியது. வரலாறு அழிந்து போனாலும், அவர் தற்போது நாட்டைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறார்.


### சுகாதார அமைச்சு

#### இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் ஹோமியோபதி மருத்துவ பட்டதாரி புலமைப்பரிசில் – 2024/2025

இந்திய அரசாங்க அனுசரணையின் கீழ் இலங்கை மாணவர்கள் 10 பேருக்கு மேற்கு வங்காள பல்கலைக்கழகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கல்கட்டாவில் அமையப்பெற்ற தேசிய ஹோமியோபதி நிறுவனத்தில் (NIH) 2024-2025 கல்வியாண்டிற்காக ஹோமியோபதி மருத்துவபட்ட கற்கைநெறியை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில்களை வழங்குவது தொடர்பாக தகைமையானவர்களை தேர்ந்தெடுக்கும் முகமாக சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிக்காலம் 5 1/2 வருடங்களாகும். கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர் தகைமையான ஹோமியோபதி மருத்துவராக செயற்படுவதற்கு வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

**தகைமைகள்**

க.பொ.த.(உ/த) பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் தோற்றி பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்து அப்பரீட்சையில் பொது ஆங்கிலப் பாடத்திலும் சித்திபெற்றுள்ள மற்றும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடனான தகைமையைக் கொண்டுள்ள 2024.07.31 திகதியன்று 18 - 25 வயதிற்கிடைப்பட்ட விண்ணப்பதாரிகள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை**

அனைத்து விண்ணப்பதாரிகளும் பெயர், முகவரி, பிறந்த திகதி, வயது, நிரந்தர மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் (02) (விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடுதல் கட்டாயம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்), கல்வித் தகைமைகள் மற்றும் க.பொ.த.(உ/த மற்றும் சா/த ) பரீட்சைகளில் சித்தியடைந்த வருடம் போன்றவற்றை, தெளிவாகக் குறிப்பிட்டு தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் அனைத்து சான்றிதழ்களினதும் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள் சகிதம் 2024.07.31 அன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை ministryofindigenousmedicine@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பப்படும் மூலப்பிரதிக்கு மேலதிகமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை (சுய தரவுகளை மட்டும்) தொலைநகல் மூலம் 011 2112736 இற்கு அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக செயலாளர் (நிர்வாகம்)**
**சுதேச வைத்தியப் பிரிவு**
**சுகாதார அமைச்சு**
**இல. 26, 3ம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.**

**தெரிவு செய்யும் முறை**

நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின் அதியுயர் தகைமைகளை பூர்த்தி செய்தவர்களுக்கிடையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் பிரகாரம் திறமை அடிப்படையில் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

**குறிப்பு:**

விண்ணப்பதாரிகளுள் அதியுயர் தகைமைகளை பூர்த்தி செய்தவர்கள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இது தொடர்பில் சுகாதார அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாவதுடன் கல்கட்டாவில் அமைந்துள்ள ஹோமியோபதி நிறுவனம் மற்றும் குறித்த பாடநெறி பற்றிய மேலதிக விபரங்களை www.nih.nic.in என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஒரு வழிப்பயணத்திற்காக (செல்வதற்கு) மாத்திரம் விமான பயணச்சீட்டொன்று (Air Ticket) அமைச்சினால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பின்வரும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் மற்றும் மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு கடிதங்களை அனுப்புவதன் மூலமும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 011 2112742.

**டாக்டர் பி.ஜி. மஹிபால**
**செயலாளர்,**
**சுகாதார அமைச்சு**

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

#### செயற்பாட்டு குத்தகைசார் முறையின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்காக வாகனங்களின் பெறுகை

கீழே வழங்கப்பட்டவாறு செயற்பாட்டு குத்தகைசார் முறையின் கீழ் வாகனங்களின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

**வாகன இனம்** : 01 டபிள் கெப்

**வாகன நிலைமை** : வாடகைக்கு பெறும் வேளையில்150,000 கி.மீ. இற்கு குறைவாக செயற்படுத்தப்பட்ட வாகனங்கள்

**ஒப்பந்தக்காலம்** : 12 மாதங்கள்

**தகுதியுள்ள வழங்குநர்கள்** : ஆகக் குறைந்தது 10 வாகன எண்ணிக்கையைக் கொண்ட வாகன முகவர்கள் (உலக புகழ்பெற்ற வாகன உரிமைப் பெயர்கள்) அல்லது நிதிசார் நிறுவனங்களாக மத்திய வங்கியுடன் பதிவு பெற்ற ஆகக் குறைந்தது 10 வாகன தொகையைக் கொண்ட கார்களை வாடகைக்கு வழங்கும் சேவைகள்.

**வழங்கவேண்டிய சேவைகள்** : குத்தகைக்கு வழங்குபவர் வருடாந்த உரிமம் பெறுதல், புகைப் பரிசோதனை மற்றும் காப்புறுதி அடங்கலான அனைத்து வழமையான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்களை பொறுப்பேற்றல் வேண்டும்.

**வாகனங்களை மாற்றீடு செய்தல்** : பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு வேலைகள் ஆகியன 12 மணித்தியாலங்களுக்கு மேற்படின், இயைவுடைய இனமுள்ள வாகனமொன்று வழங்கப்படல் வேண்டும்.

**வாகனங்களின் விபரங்கள்:**

| தொகுதி | வாகனத்தின் இனம் | வாகனங்களின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் | விலைமனு பிரகடனம் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| தொகுதி ஏ | டபிள் கெப் | 01 | 1000.00 | 2024.10.24 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2024.07.22 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் 011-2484538/ 011-2484600 (நீடிப்பு 1430) ஆகிய தொடர்பிலக்கங்களினூடாக கொழும்பு-01, செயலகம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் வழங்கலுக்கான கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். 2024.07.08 ஆம் திகதியிலிருந்து 2024.07.22 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பெற்றுக் கொள்ளப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் மாத்திரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் சிறாப்பரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

2024.07.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் தன்மையில் விலைமனுக்கள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடம், மேல் தரை மாடி, நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே கொழும்பு-01, லோட்டஸ் வீதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 என்ற முகவரியில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரிதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

2024 ஜூலை 16 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு கொழும்பு-01, லோட்டஸ் வீதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரை மாடி, நிதிப்பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,**
**லோட்டஸ் வீதி, கொழும்பு-01.**

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு

#### நீச்சல் தடாகத்திற்கான இரசாயனங்களை வழங்கல் - 2024-2025

**ஒப்பந்த இல.: SNSCA/PRO60/2024-2025**

1. 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கான நீச்சல் தடாகங்களுக்காக இரசாயனங்களை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் இப்பொது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை, பெறுகை அலுவலரிடமிருந்து பெற்று 2024.07.09ஆம் திகதிக்கும் 2024.07.26ஆம் திகதிக்குமிடையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. தகுதியுள்ள விலைமனுதாரர் இலங்கையில் செயற்படும் பதிவு பெற்ற வியாபார அமைப்பொன்றாகவும் இன்று வரையும் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் நீச்சல் தடாக இரசாயனங்களை வழங்குவதில் அனுபவமுள்ளவராகவுமிருத்தல் வேண்டும்.
5. 2024.07.09 ஆம் திகதியிலிருந்து 2024.07.26 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2500 ரூபாவை ஒவ்வொரு ஆவணத்திற்கும் (பெசேவ அடங்கலாக) செலுத்திய பின்னர், கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கீழுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2024.07.29 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை, வெளியக விளையாட்டரங்கு, நிர்வாக கட்டிடம் என்ற கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அல்லது ஒன்லைனில் தொடர்பு கொள்பவர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் ஐம்பதினாயிரம் இலங்கை ரூபா (50,000 இ.ரூ.) பெறுமதியானதுமான கேள்விப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 2024.07.29 ஆம் திகதியிலிருந்து 2024.10.28 ஆம் திகதியன்று வரையும் இருத்தல் வேண்டும் (விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்கள்)
9. விலைமனுவானது 2024.07.29 ஆம் திகதியிலிருந்து 2024.09.30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (விலைமனுவை திறக்கும் திகதியிலிருந்து 64 நாட்கள்)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**ஆர்தர் த சில்வா மாவத்தை, கொழும்பு -13.**

### சுகாதார அமைச்சு

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவ

### வெற்றிடங்கள்

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மருந்தாளர்**

**தகைமைகள்** - இலங்கை மருத்துவ பேரவையில் ஒரு மருந்தாளராக பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் மருந்தாளர் பயிற்சிப் பாடசாலையிலிருந்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** - 45 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பள அளவு** - ரூபா 40,100 - 10x556.25 - 10x912.50 - 10x937.50 - 73,237.50 (மாதாந்தம்)

**சுகாதார சாரதி**

**தகைமைகள்** - **கல்வி:** க.பொ.த (சா/த) பரீட்சையில் 02 அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
**தொழில்சார்:** "A" வகுப்பு வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றிருத்தல்
**அனுபவம்:** "A" வகுப்பு வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கீர்த்தி வாய்ந்த நிறுவனமொன்றில் சாரதியாக 05 வருட கால சேவை அனுபவம்.

**வயது** - குறைந்தபட்ச வயதெல்லை 18 வயது அதிகபட்ச வயதெல்லை 45 வயது.

**சம்பள அளவு** - ரூபா 32,237.50 - 10x337.50 - 10x375 - 10x412.50 - 12x437.50 - 48,737.50 (மாதாந்தம்)

அரசாங்கத் துறையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்படி சம்பளத்தில் தற்போதைய அரச சேவை சம்பள அளவை விட 25% சம்பள அதிகரிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

உங்கள் விண்ணப்பங்களை 2024 ஜூலை 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவ'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**


## மனிதநேய பணியாளர்

(13 ஆம் பக்க தொடர்ச்சி)

இவரிடம் என்னைப் பெரிதும் கவர்ந்த விடயம், இவர் மற்றவர்களின் குறிப்பாக மலையக படைப்பாளிகளின் நூல்களை வெளியிட்டு வருவதில் காண்பிக்கும் ஆர்வமும் அக்கறையும்தான்.

(அமரர்) எஸ். எம். கார்மேகத்தின் வாழ்வையும் பணிகளையும் சித்திரித்த தொகுப்பு நூல், மாத்தளை வடிவேலன், மலரன்பன் ஆகியோரின் கதைத் தொகுப்புகள் முதலானவற்றை வெளியிட்டிருக்கும் மாத்தளை செல்வா, மூத்த கவிஞர் நவாலியூர் சொக்கநாதர் இயற்றிய மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சியையும் நூலாக பதிப்பித்தவர்.

திருமுருக கிருபானந்தவாரியார் அந்த நூலுக்கு அணிந்துரையும் கவிஞர் வி. கந்தவனம் மதிப்புரையும் எழுதியிருக்கிறார்கள்.

அத்துடன் நவாலியூர் சொக்கநாதர், கந்தவனம், ஈழவாணன் ஆகியோர் இணைந்து எழுதிய சிட்டுக்குருவி என்ற நூலையும் வெளியிட்டவர்தான் மாத்தளை செல்வா.

தனது பவளவிழாவையும் எம்மத்தியில் இல்லாமலே கடந்திருக்கும் கவிஞர் புதுவை இரத்தினதுரையும், மாத்தளை செல்வா பற்றி ஒரு பாடலை பாடியிருக்கிறார் எனச்சொன்னால் நம்பமாட்டீர்கள்.

"அக்கிரமங்கள் எங்கெங்கு பூத்திட்டாலும், அதை அழிக்க ஓடிவரும் எனதருமை நண்பன் விக்கிரமசிங்கவின் பார்வை பட்டதன் பின்பே கவிஞனானேன். "

இந்த வரிகள் கவிஞரின் மிகைப்படுத்தப்பட்ட கூற்றோ..? என்னவோ..? நானறியேன்.

எனினும் நான் அறிந்தவரையிலும் அறச்சீற்றத்துடன் வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்திருப்பவர் மாத்தளை செல்வா.

மாத்தளை செல்வாவின் தொடர் பாடல் இலங்கை – இந்தியாவுக்கு அப்பால், தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நீடிக்கிறது.

இலங்கை அரசியல் வரலாற்றில் மாத்தளைக்கு முக்கிய இடமிருப்பது போன்று, மலையக இலக்கிய பதிப்புத்துறை வரலாற்றில் மாத்தளை செல்வாவுக்கும் முக்கிய இடமிருக்கிறது. பவளவிழாக்காணும் மாத்தளை செல்வா என்ற விக்கிரமசிங்காவுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## பகிரங்க சேவை ஆணைக்குழு

### சட்ட உத்தியோகத்தர் பதவி

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்குத் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பிலான மேலதிகத் தகவல்கள் மற்றும் விண்ணப்பத்தைப் பின்வரும் இணையதளத்தினூடாக தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

www.psc.gov.lk

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 2024.08.15

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி செயலாளர், பகிரங்க சேவை ஆணைக்குழு, 1200/09, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.

சகல விண்ணப்பப்படிவங்களும் பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் பதவி"** எனக் குறிப்பிடல் வேண்டும்.

**செயலாளர்,**
**பகிரங்க சேவை ஆணைக்குழு**
**1200/09, இராஜமல்வத்தை வீதி,**
**பத்தரமுல்லை.**
**2024.07.02**

# For classified advertisements and for replies

**received in response to advertisements published under Lake House box numbers**

Manager front office
**+94 112429342**
**+94 112429343**

## கிழக்கு மாகாண சபை

### ஒழுக்காற்று விசாரணை அலுவலர் குழாமில் இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

கிழக்கு மாகாண சபைக்கான ஒழுக்காற்று விசாரணை அலுவலர் குழாமில் அலுவலர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு கீழ் குறிப்பிடப்படும் கிழக்கு மாகாண இணையதளத்தினை பார்வையிடவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:** 2024.08.07 www.ep.gov.lk

**பிரதம செயலாளர்,**
**கிழக்கு மாகாணம்.**

## கைத்தொழில் அமைச்சு

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

# பதவி வெற்றிடங்கள் – புல்மோட்டை பொறித்தொகுதி

முழுமையாக அரசுக்குரித்தான இலங்கை கனிப்பொருள் மணல் லிமி டெட் நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. சிரேஷ்ட நிதி முகாமையாளர் (Senior Finance Manager)

**சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (HM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளின் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

(1) **கல்வித் தகைமைகள் / தொழில்சார் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நிதி / வர்த்தகமானி / கணக்கியல் துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

நிதி மற்றும் கணக்கியல் துறை தொடர்பில் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் / பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனம் / பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் இணை அங்கத்துவத்தைப் (ICA/CIMA/ACCA) பெற்றிருத்தல்

**மற்றும்**

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

(2) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் / பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனம் / பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் (ICA/CIMA/ACCA) பெற்றிருத்தல்

**மற்றும்**

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை தொகுதி Iஆம் தரத்தில் (MM 1-1) குறைந்தபட்சம் 05 வருட காலம் குறித்த விடயத் துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**HM-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - HM-1-1, ரூபா 80,295/-=2,270X15 = 114,345/-

ரூபா 80,295/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்க உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப் பாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**HM-1-1 சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.**

1. PED/1/2015, PED/1/2015(i) மற்றும் PED/1/2015(ii) எனும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது கடமைகளுக்காக நிறுவனத்தின் வாகனம் எனும் இரண்டில் ஒன்று வழங்கப்படும்.

### 02. இயந்திரவியல் பொறியியலாளர் - (Mechanical Engineer)

**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**கல்வி / தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (இயந்திரவியல்) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

(2) இயந்திரவியல் வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்க உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

### 03. புவியியலாளர் - (Geologist)

**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

**கல்வி தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் புவியியலாளர் பட்டமொன்று, (இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்கள் உட்பட) அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம், கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் புவியியல் துறைக்கு இயைபான பதவியொன்றில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை**: 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்க உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

### 04. அத்தியட்சகர் - (Superintendent)

**கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (JM 1-2)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**கல்வி / தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டத்தைப் பெற்றிருத்தல் (அகழ்தல் / இயந்திரவியல் / மின்சாரம் / உற்பத்தி/ சிவில்)

(2) அகழ்தல் / இயந்திரவியல் / மின்சாரம் / உற்பத்தி/ சிவில் நடவடிக்கைகள் தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஏழாம் (07) நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

(3) அகழ்தல் / இயந்திரவியல் / மின்சாரம் / உற்பத்தி/ சிவில் நடவடிக்கைகள் தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஆறாம் (06) நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் ஐந்து (05) வருட அனுபவம்.

(4) அகழ்தல் / இயந்திரவியல் / மின்சாரம் / உற்பத்தி/ சிவில் நடவடிக்கைகள் தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் பத்து (10) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (MA 2-1) சேவை தொகுதியில் IIஆம் தரத்தில் இயைபுடைய விடயத்துறை பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**JM-1-2 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - JM-1-2, ரூபா 43,355/- =755X10, 1,135x18 = 71,335/-

ரூபா 43,355/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்க உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

### கொடுப்பனவுகள் மற்றும் அனுகூலங்கள்

01. பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதியில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு மட்டும்)
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு
07. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள்
08. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும். (HM 1-1, MM 1-1 வகுதி பதவிகளுக்கு மட்டும்)

### அனுகூலங்கள்

01. வருடாந்த போனஸ் கொடுப்பனவு
02. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி காப்பீடு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி காப்பீடு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii. ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
03. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு
    ii. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் ஒரு வருடத்திற்கு ஒரு முறை வெளிவாரி சிகிச்சைக்காக 5000.00 ரூபா வழங்கப்படும்.
    iii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா வழங்கப்படும்.
04. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.
05. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

### பொது நிபந்தனைகள்

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல்ரீதியான மற்றும் மன ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Pay Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்போது மின்னஞ்சல் முகவரியையும் உள்ளடக்கி உங்களின் கையொப்பத்துடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உங்கள் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வகையில் சகல கல்வி, தொழில்சார்ந்த மற்றும் சேவை சான்றிதழ்களினதும் புகைப்படப் பிரதியுடன் அனுப்புதல் வேண்டும். (முறையாக சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

நீங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13 இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் தலைவருக்குக் கிடைக்கும் வகையில் ஜூலை 22ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/13, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

UNIVERSITY HOSPITAL

## பல்கலைக்கழக வைத்தியசாலை
## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**Full Time - Permanent Basis**
- Post of Medical Laboratory Technologist
- Post of Radiographer (Diagnostic)
- Post of Pharmacist
- Post of Physiotherapist
- Post of Perfusionist
- Post of Midwife
- Post of Social Worker
- Post of Audiology Technician
- Post of Driver

**Full Time - Contract Basis**
- Post of Pharmacist
- Post ECG Recordist
- Post of Optometrist
- Post of Technician (Operation Theatre)
- Post of CSSD Operator

**Temporary Basis**
- Post of Multitask Labourers
- Post of Attendant

சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு **"நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர"** என்ற முகவரிக்கு **2024.07.22** க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.kdu.ac.lk) / தொ.பேசி இல. 011-2044555.

**www.kdu.ac.lk**

**பரந்த கிளை வலையமைப்பு ஒன்றைக் கொண்ட இலங்கையில் உள்ள அபிவிருத்தி வங்கி ஒன்றுடன் எமது வாடிக்கையாளர்கள் இணைந்திருப்பதோடு எமது தேசத்தின் சுபீட்சத்தை நோக்கிய பயணத்தில் ஈடுபட்டுள்ளனர். வருமானப் பகிர்வு மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு கிராமியப் பகுதியில் தொழில்முனைவை வளர்ப்பதன் மூலம் குறிப்பாக பிராந்தியத்தில் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிப்பது வங்கியின் திட்டமாகும். தற்போது அவர்களின் பின்வரும் பதவிக்காக அதிக திறன் கொண்ட இடர் முகாமைத்துவ தொழில்முறையாளர் ஒருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.**

### பிரதான உள்ளக கணக்காய்வாளர் (CIA)

**முக்கிய தேவைகள்**

- ஆகக்குறைந்தது பின்வருவனவற்றில் ஒன்றில் தொழில் நிபுணத்துவ உறுப்புரிமை.
  - அ) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்
  - ஆ) இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டய கணக்காளர் நிறுவனம்
  - இ) சான்றளிக்கப்பட்ட இங்கிலாந்து கணக்காளர் சங்கம்
  - ஈ) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் இங்கிலாந்து / இலங்கை அல்லது வேறு எந்தவொரு தொழில்சார் தகைமை
- சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் (தலைமை முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலைக்கு இணையானதாகவும் அதில் 5 வருடங்கள் உதவி பொது முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலை) 8 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன் அதில் 5 வருடங்கள் வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் உள்ளக கணக்காய்வு பிரிவுடன் தொடர்புடைய அனுபவம் இருத்தல் வேண்டும்.
- தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுத் தொழில் நுணுக்கங்களுடன் கையாளக்கூடிய சிறந்த அனுபவம்.
- ஆளணி முகாமைத்துவம் பற்றி நிரூபிக்கப்பட்ட தளதடங்களுடன் சபை மட்டத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடிய ஆற்றல்.
- வங்கித் துறையில் கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் பற்றிய பரிச்சயம் மற்றும் சர்வதேச நிதியறிக்கைகள் அறிக்கையிடல் நடைமுறை (IRFC) அறிவியலுடனான பிரகடனப்படுத்தக்கூடிய தேவைப்பாடுகள்.
- வயது - 56 வருடங்களுக்கு குறைவானதாக இருத்தல் வேண்டும்.

**சம்பள மட்டம்**

தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வங்கித் தொழிற்துறையில் நிலவும் தரநிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் அளிக்கப்படும்.

மேலுள்ள தேவையான தகைமை அளவுகோள்களை நிறைவு செய்யாத அல்லது தவறான தகவல்களை வழங்கும் விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட அபேட்சகர்களை அழைப்பது மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை ஒத்தி வைத்தல் அல்லது இரத்து செய்வதற்கு சேவை பெறுநருக்கு உரிமை உள்ளது.

இந்த விளம்பரத்தின் 10 நாட்களுக்குள் mslrcv@sltnet.lk என்ற மின்னஞ்சலுக்கு இரு உறவினர் அல்லாத நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் PDF வடிவத்தில் உங்களது முழுமையான சுயவிபரக்கோவையை அனுப்பவும். subject பகுதியில் MSL Reference No. 7993 என்று குறிப்பிடவும்.

**MSL Management Systems (Pvt) Ltd.**

இல. 08, டிக்மேல் வீதி,
கொழும்பு - 08
mslrcv@sltnet.lk
0112015900



# வாரபலன்

07.07.2024 - 13.07.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

தொழில் சிறப்பாக இருக்கும். போட்டித் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். சௌக்கியங்கள் உண்டு. பிரச்சினைகள் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும். உடல் நலனில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரம், தொழிலில் போட்டிகள் விலகும். வழக்குகள் சாதகமாகும். தொழில் விருத்தியாகும்.

புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றிபெறும். வேலை செய்யும் இடத்தில் சிறிய பிரச்சினைகள் நிம்மதியை இழக்கச் செய்யலாம் என்பதால் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். வீடு வாகனம் சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக மாறும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு.

பூர்வீக சொத்து விஷயங்களில் ஆதாயம் ஏற்படும். வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்ல முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான முயற்சிகள் கைகூடும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. உடற்சோர்வு உண்டாகலாம். பூர்வீக சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் மனம் விட்டு பேசுவதன் மூலம் பிரச்சினைகளை தவிர்க்கலாம். பெண்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. கலைத்துறையினருக்கு முயற்சிகள் பலன் தரும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவார்கள். மேற்படிப்பு படிக்கும் ஆர்வம் உண்டாகும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எல்லா வகையிலும் நன்மைகள் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டு சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் மனக்கவலை அகலும். அலைச்சலால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத போட்டிகள் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவுகள் கூடும். பெண்களுக்கு வீண் அலைச்சல் உண்டாகும். கலைத்துறையினருக்கு வாக்குவன்மையால் அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்ல மதிப்பெண் பெற உதவும். எந்த காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

வாக்குத் திறமையால் அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும், சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகளை விலக்குவது நல்லது. பெண்களுக்கு எந்தவொரு விவகாரத்தையும் எதிர்கொள்ளும் மனவலிமை உண்டாகும். கலைத்துறையினருக்கு பொருளாதாரம் மேம்படும்.புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான சிக்கல்கள் குறையும். எதிர்பார்த்த மதிப்பெண் பெற அதிக நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது நல்லது.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எல்லா வகையிலும் நல்ல பலன்கள் உண்டாகும். எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். சந்திரன் சஞ்சாரம் உடல் ஆரோக்கியம் மனதில் உற்சாகத்தை தரும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். கலைத்துறையினருக்கு மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தைரியம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறையும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். உங்களது எண்ணப்படியே அனைத்தும் நடைபெறும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கவுரவம், அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வார்கள். புதிய தொடர்புகள் மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். பெண்களுக்கு எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். கலைத்துறையினர் செலவுகளை குறைக்க திட்டமிடுவது நல்லது. அரசியல்துறையினருக்கு கவுரவம் உயரும். மாணவர்கள் திட்டமிட்டு செயலாற்றுவது முனனேற்றத்திற்கு உதவும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

புகழும், அந்தஸ்தும் உயரும். எடுத்த காரியங்கள் எல்லாம் கைகூடும். ஆன்மிக பணிகளில் நாட்டம் செல்லும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். வாழ்க்கை துணையின் உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள் பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்களில் சாதகமான பலன் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு லாபம் ஏற்படும். சுணங்கிக் கிடந்த காரியங்கள் மீண்டும் வேகம் ஏற்படும். மாணவர்கள் ஆசிரியர்களிடம் நன்கு பழகி அவர்கள் நன்மதிப்பை பெறுவதுடன், பாடங்களில் இருக்கும் சந்தேகங்களையும் போக்கிக் கொள்வார்கள்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எதிலும் வேகம் உண்டாகும். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. சந்திரன் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். பயணம் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். வாகன மூலம் லாபம் வரும். அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுப காரியம் நடக்கும். நிலம், வீடு மூலம் லாபம் கிடைக்கும். பெண்களுக்கு புதிய நபர்கள் அறிமுகமும் அவர்களால் உதவியும் கிடைக்கும். கலைத்துறையினருக்கு தொழிலில் வேகம் பிடிக்கும்.திடீர் பயணம் செல்ல வேண்டியிருக்கும். மாணவர்களுக்கு போட்டிகள் விலகும். பாடங்களில் கவனம் செலுத்துவர். சக மாணவர் நலனில் அக்கறை காட்டுவார்கள்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

எதிலும் நிதானமாக செயற்படுவது அவசியம். பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். சந்திரன் சஞ்சாரம் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தும். வீண் பகைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவு திறமையாக செயற்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். பிடிவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தன போக்கு காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களுடன் கடுமையாக பேசாமல் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் மன வருத்தங்கள் உண்டாகலாம். பெண்களுக்கு மற்றவர்கள் செயல்களால் திடீர் கோபம் உண்டாகலாம். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் காணப்பட்ட மெத்தன போக்கு நீங்கி சுறுசுறுப்பாக பாடங்களை படிப்பார்கள்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சொல்லாற்றலும் செயலாற்றலும் அதிகரிக்கும். தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். சந்திரன் சஞ்சாரம் வீண் மன குழப்பங்களை ஏற்படுத்தினாலும் முடிவில் தெளிவு உண்டாகும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டியிருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விஷயத்திற்காக கூட அலைய வேண்டியிருக்கும். பணிச்சுமை காரணமாக திடீர் கோபம் உண்டாகலாம். எதிர்பார்த்த பணம் வார இறுதியில் கிடைக்கலாம். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு சரியாகும். பெண்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றுவார்கள். கலைத்துறையினர் கோபத்தை தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்கள் நிதானத்தை கடைபிடிப்பது வெற்றிக்கு உதவும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

கடின உழைப்பினால் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். புத்தி கூர்மையுடன் செயற்படுவீர்கள். தைரியம் உண்டாகும். வேண்டியவர்களுடன் மனஸ்தாபம் உண்டாகும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். உத்தியோக மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம். கவனம் தேவை. குடும்ப செலவுகள் அதிகரிக்கும். ஆயுதங்கள், நெருப்புகள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பெண்கள் மற்றவர்கள் நலனை அக்கறையுடன் கவனிப்பர். கலைத்துறையினருக்கு செலவுகள் அதிகரிக்கும். மாணவர்கள் பாடங்களை படிப்பதற்கு கூடுதல் நேரம் ஒதுக்குவது நல்லது.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பணம் கைக்கு வந்து சேரும். தொழில், வியாபாரம், இலாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பார்கள். கஷ்டமில்லாத சுக வாழ்க்கை உண்டாகும். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். பெண்களுக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். கலைத்துறையினருக்கு எதிர்ப்புகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி உண்டாகும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிப்பார்கள். விளையாட்டுகளில் ஆர்வம் உண்டாகும்.

---

**சஜித்துக்கு அமைச்சர் பந்துல சவால்**

# நான் நாட்டுக்காகச் செய்தவற்றை சஜித்தால் ஒருபோதும் செய்யமுடியாது

**ஹோமாகம தியகம – வல்கம வீதியை நவீனமயப்படுத்தும் ஆரம்ப நிகழ்வின் போது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு சவால் ஒன்றை விடுத்தார். தான் நாட்டுக்காகச் செய்த சேவைகளை சஜித் பிரேமதாசவால் உயிர் உள்ள வரை செய்ய முடியாது என அமைச்சர் தெரிவித்தார்.**

இதன்போது அமைச்சர் பந்துல தொடர்ந்து கருத்து தெரிவித்தபோது,

கடந்த காலங்களில் ஹோமாகம பிரதேசத்திலுள்ள இரண்டு பாடசாலைகளுக்கு நட்பு வகுப்பறைகளை நிர்மாணிக்க பத்து, பதினொரு இலட்சம் வரை நிதியை கட்சித் தலைவர் கொடுத்துள்ளார். ஹோமாகம பிரதேச மக்களை அவமதிக்க வேண்டாம் என நான் அன்புடனும், கருணையுடனும், மரியாதையுடனும் அவருக்கு நினைவூட்டுகின்றேன்.

நான் கல்வி அமைச்சராக கடமைகளைப் பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் ஹோமாகம கல்வி வலயம் மேல் மாகாணத்தில் கடைசி இடத்தில் இருந்தது. தற்போது அதனை ஐந்தாவது இடத்திற்கு கொண்டு வரத் தேவையான பணிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். பிரக்ஞா பந்து நகரமாக, இந்த பிரதேசம் மரியாதைக்குரிய பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறே அபிவிருத்தியடைந்த இந்த பிரதேசத்திற்கு வருகை தருமாறு நான் எதிர்க்கட்சித் தலைவரை அழைக்கின்றேன். தேரவாத பௌத்த தத்துவத்தை உலகம் முழுவதும் விநியோகிக்கும் பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் ஹோமாகம தொகுதியில் அமைந்துள்ளது. ஏராளமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தேரர்கள் அங்கு கல்வி பயின்று வருகின்றனர்.

அதனைக் கௌரவிக்கும் வகையில் பிடிபன சந்தி முற்றாகப் புனரமைக்கப்பட்டு அங்கு அவுகன புத்தரின் சிலை நிறுவப்பட்டுள்ளது. அதேபோன்று, ஆசியாவிலேயே மிகப் பெரிய இடைநிலைப் பாடசாலையான பிடிபன மஹிந்த ராஜபக் ஷ கல்லூரி அமைந்துள்ளதும் ஹோமாகம தொகுதியினுள்ளாகும். இக்கல்லூரியானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு ஏழாயிரம் மாணவர்களுக்கு முந்நூறுக்கும் அதிக ஆசிரியர்கள் கல்வியை வழங்கும் ஒரு தசாப்தத்திற்கும் மேலான ஒரு தனித்துவமான பாடசாலையாக இப்பாடசாலை மாறியுள்ளது. கடந்த வருடம் 768 மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி, அவர்கள் அனைவரும் உயர்தரத்திற்குத் தகுதிபெற்று 100% பெறுபேறுகளைப் பதிவுசெய்த, இலங்கையின் மிகப்பெரிய தேசிய பாடசாலையாக மஹிந்த ராஜபக் ஷ கல்லூரி அமைந்திருப்பதும் ஹோமாகமவிலாகும்.

இவ்வாறானதொரு பாடசாலையை வாழ்வின் இறுதி வரை எதிர்க்கட்சித் தலைவரால் உருவாக்க முடியாது.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தொழிற்பயிற்சி அமைச்சராக இருந்த காலத்தில் எனது முயற்சியின் கீழ் பிடிபன NSBM பசுமைப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. பதின்மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கு கல்வி பயில்கின்றனர். பிரதேசவாசிகளுக்கு, இந்த மாணவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் வருமான வழிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சராக க.பொ.த உயர்தரத்தில் அதுவரை இருந்த கலை,



வணிகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளுக்கு மேலதிகமாக, உயர்தரத்தில் தொழில்நுட்ப பிரிவையும் நான் அறிமுகப்படுத்தி வைத்தேன். அதற்காக, இதுவரை பல்கலைக்கழகங்களில் இல்லாத தொழில்நுட்ப பீடங்கள் பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டன. தற்போது,

அதிலிருந்து உருவாகு ம் ஏராளமான பட்டதாரிகள் உள்ளூர் மற்றும் வெளியூர்க ளில் வேலை வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளனர். நற்பது கணினிகள் கொண்ட ஆய்வுக்கூடம், இருபது கணினிகள் கொண்ட மொழி ஆய்வுக்கூடம், ஒரு கணினியுடன் கூடிய கணித ஆய்வுகூடம், ஒரு கணினியுடன் கூடிய தொலைதூரக் கல்விப் பிரிவு என நாடளாவிய ரீதியில் ஆயிரம் மஹிந்தோதய ஆய்வுகூடங்களை கல்வி அமைச்சர் என்ற வகையில் நிறுவியுள்ளேன். ஒரு பாடசாலைக்கு 62 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வசதிகளுக்காக மூன்று மாடி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கீழ் மாடி பொறியில் தொழில்நுட்பத்திற்காகவும், இரண்டாம் மாடி பயோசிஸ்டம் தொழில்நுட்பத்திற்காகவும்,

மூன்றாம் மாடி வகுப்பறைக்காகவும் ஒதுக்கப்பட்ட 251 மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான பீடங்கள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன.

கல்வியமைச்சர் என்ற ரீதியில் இவை அனைத்திற்காகவும் இலங்கை முழுவதிலும் ஆயிரம் கூட்டங்களை நடாத்தினாலும் இன்று வரைக்கும் கூட்டங்கள் நடந்திருக்கும். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம் ஹோமாகமவில் 28 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம் ஹோமாகமவில் நிறுவப்பட்டுள்ளது. மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்து வருகிறது.

மஹிந்த ராஜபக் ஷ சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. ஹோமாகம நீதிமன்ற வளாகம் நிறுவப்பட்டுள்ளது. புதிய பிரதேச செயலக அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன.

பாடநூல் களஞ்சிய வளாகத்தின் மூலம் முழு இலங்கைக்கும் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படுகின்றன. இங்கு அளவீடு மற்றும் தரநிலை சேவைகள் திணைக்களம் அமைந்துள்ளது. டெலிகொம் தரவுக் களஞ்சியம் இங்குதான் அமைந்துள்ளது. பிரபஞ்சத்தின் சொத்தாக இருக்கும் மாணவர்களை உருவாக்கும் பிரக்ஞா பந்து நகரின் மூலம் உலகிற்கு ஒரு சொத்தாக இருக்கக்கூடிய மனித மூலதனத்தை உருவாக்குவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். கிராமத்தை நாடாக மாற்றியமைத்து மேற்கொண்டுள்ள இந்த மாபெரும் அபிவிருத்தியை எதிர்க்கட்சித் தலைவரால் உயிர் உள்ளவரைக்கும் செய்ய முடியாது என தான் சவால் விடுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**எம். எஸ். முஸப்பிர்**

---

# பூஜ்ய ஸ்ரீ சுவாமி பிரம்மயோகானந்தா மஹாராஜ் இலங்கை வருகிறார்



பூஜ்ய ஸ்ரீ சுவாமி பிரம்மயோகானந்தா மஹாராஜ் கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சீரடி சாயி நாதனின் சரணாலயத்துக்கு எதிர்வரும் 11 ஆம்திகதி மாலை 4 முதல் 6 மணி வரை வருகை தர இருக்கிறார். 'வேதநெறி வாழ்க்கை முறை' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையையும் நிகழ்த்தி பின்பு பக்தர்களுக்கு அருளாசி வழங்க இருக்கிறார்.

சுவாமிகள் தமிழ்நாடு, பாரதத்தைச் சேர்ந்த ஒரு ஆன்மிக ஆசிரியர் ஆவார். அவர் உலகளாவிய அன்பையும் நல்லிணக்கத்தையும் கடைப்பிடித்து வருகிறார். ஏழைகளுக்கு சேவை செய்வதை தேச சேவையாகக் கருதி, தனது 17ஆவது வயதில் வீட்டை விட்டு வெளியேறினார்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஆன்மிகப்பணியாற்றி வரும் சுவாமிகள், 1995ஆம் ஆண்டில் சென்னையில் யோக சாந்தி குருகுலத்தை நிறுவி, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு யோகா கற்பித்தார்.

அயோத்தியில் இராமர் கோயில் நிர்மாணத்திற்காக, 16 கோடிக்கும் அதிகமான காயத்ரி ஜெபம், 328 கோடிக்கும் அதிகமான விஜயமந்திர ஜெபத்தைச் செய்ய பக்தர்களை ஊக்கப்படுத்தி வழிநடத்தினார்.

கிராமவாசிகளை ஈஸ்வரருடன் இணைக்க ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு கிராமங்களில் 27 க்கும் மேற்பட்ட கோயில்களின் கும்பாபிஷேகங்களை நிகழ்த்தினார்.

வீட்டுக்கு வீடு பிரச்சாரம் செய்து, கிராம மக்களுக்கு 2000 க்கும் மேற்பட்ட தீபங்களை விநியோகித்து, நாளைத் தொடங்க ஒரு விளக்கை ஏற்ற ஊக்குவித்தார்.

அவரது நீலமங்கலம் ஆசிரம வளாகத்திற்குள், பண்டிகை நாட்களில் அன்னதானம் மற்றும் வஸ்திர தானம் செய்வதுடன் நின்று விடாமல், உஜ்ஜைனி மகா காளேஷ்வர் கோவிலையும் சுவாமிகள் கட்டியுள்ளார்.

பாரத் மாதாவுக்கு ஒரு தனிக் கோயிலைக் கட்டி மே 2023 இல் கும்பாபிஷேகம் நடத்தினார். வேதாந்த ஆசிரியரான சுவாமிஜி, இதிகாசங்கள், பகவத் கீதை, 10 முக்கிய உபநிடதங்கள், வியாசரின் பிரம்ம சூத்திரங்கள் என்பனவற்றை கற்பித்து வருகிறார்.

அகண்ட் ஐக்யா பாரத் யாத்திரையின் வழி சுவாமிஜி இலங்கை உட்பட உலகின் பல நாடுகளுக்கும் பயணித்துள்ளார்.

சுவாமிஜியின் அமைதியான பிரசன்னத்தில், மக்கள் அமைதியை அனுபவித்து, அவரது ஞான உபதேசங்கள் மூலம் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்கின்றனர். இலங்கை சீதையம்மன் ஆலயம், ரம்போட ஆஞ்சநேயர் ஆலயம், அவிசாவெல சீரடி பாபா ஆசிரமம், கொழும்பு தெமடகொட ஸ்ரீ செந்தில்குமரன் ஆலயம் மற்றும் தொண்டீச்சுரம் ஸ்ரீ உத்பலவர்ணன் ஆலயம் இவற்றுக்கும் விஜயம் செய்து வழிபாடு செய்ய இருக்கிறார். இன்று ஏழாம் திகதி இலங்கை வரும் சுவாமிகள் இன்றைய தினம் கதிர்காமத்திலும் நாளை எட்டாம் திகதி ரம்போடை ஆஞ்சநேயர் ஆலயத்திலும் அதன் பின்னர் நுவரெலியாவில் உள்ள சீதை அம்மன் ஆலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து சிறப்பிப்பார்.

**மருதினி தெய்வநாயகம்**

# படித்ததும் பகர்வதும் 198



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### திருட்டும் கொள்ளையும்!



இலங்கையில் திருட்டு, கொள்ளை சம்பவங்கள் இப்போது அதிகரித்து வருவதாக சிறைச்சாலைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. 2021ஆம் ஆண்டை விட 2022 ஆம் ஆண்டில் இதில் 44 சதவீத அதிகரிப்பு காணப்படுகிறது. 2022 ஆம் ஆண்டை விட 2023ஆம் ஆண்டிலும் இத்தொகை அதிகரித்து வந்திருக்கின்றது. அத்துடன் திருட்டு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்படுபவர்களில் பெண்களின் தொகையும் அதிகரித்து வருவதை புள்ளி விபரங்கள் மூலம் அவதானிக்க முடிகிறது.

பொருளாதார கஷ்டம், அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் உள்ள பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை, ஆடம்பரப் பொருட்கள் மீதான மோகம், விரைவாக பணமீட்ட வேண்டும் என்ற வெறி போன்றவையே இத்திருட்டு, கொள்ளைச் சம்பவங்களுக்குக் காரணங்களாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த வகையில் எந்த நோக்கத்துக்காக இத்திருட்டு, கொள்ளை போன்றவை இடம்பெற்றாலும் அவை கட்டாயமாக தடுக்கப்பட வேண்டியதும் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியதுமாகும் என்பதை மறுக்க முடியாது.

சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் கவனயீனமான செயற்பாடுகளும் திருடர்களுக்கும் கொள்ளையர்களுக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுப்பவையாக இருப்பதையும் காண முடிகிறது. சிலர் தங்களது வீடுகளில் அல்லது காரியாலயங்களில் உள்ள அலுமாரிகளை அல்லது பெட்டிகளை மூடிவிட்டு அவற்றுக்கான சாவிகளை அதே அலுமாரியின் அல்லது பெட்டியின் மேலே அல்லது கீழே அல்லது பக்கத்தில் வைப்பதை வழக்கமாக்கி கொண்டுள்ளதை காண முடிகிறது.

சிலர் வீட்டுக் கதவுகளை மூடிவிட்டு அதன் சாவிகளை வீட்டுக்கு முன்னாள் உள்ள பூந்தொட்டிகளில் அல்லது ஏதாவது ஒரு இடத்தில் வைத்துவிட்டு செல்கின்றனர். வீட்டிலுள்ள ஏனையோருக்கு வசதியாக அமையும் என்ற நோக்கத்தில் இவ்வாறு செயற்பட்டாலும் கூட இச் செயல்கள் திருடர்களுக்கும் கொள்ளையர்களுக்கும் கூட வசதியாக அமைந்துவிடும் என்பதை கவனத்தில் கொள்ள மறந்து விடுகின்றனர். இத்தகைய செயற்பாடுகளை தொடர்ந்து அவதானிக்கும் திருடர்கள் இவற்றை தமக்கு சாதகமாக்கிக் கொள்கின்றனர்.

சில வானொலி நிகழ்ச்சிகளில், தொலைக்காட்சி நேரடி நிகழ்ச்சிகளில் அல்லது முகநூல் பதிவுகளில், தமது வீட்டின் ஏகாந்த நிலைமையை, குறிப்பாக வீட்டிலிருந்து வெளியேறி பயணம் செல்லுதல், வீட்டில் தனியாக இருத்தல் போன்ற தகவல்களை பொறுப்பற்ற முறையில் வெளியிடுவதனாலும், தெரிவிப்பதனாலும் திருடர்களும் கொள்ளையர்களும் அத்தகைய தகவல்களை தமக்கு வாய்ப்பாக்கி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப செயற்பட வாய்ப்புகள் ஏற்படுகிறன.

இவற்றை கவனத்தில் கொண்டு திருட்டு, கொள்ளை சம்பவங்களில் இருந்து தமது உடைமைகளை பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொருவரும் சரியான வழிகளில் முயற்சிக்க வேண்டும்.

## பிரிந்தார் பெருமை

### பெரும் தலைவர் இரா. சம்பந்தன்



இலங்கை தமிழர் அரசியலில் மூன்றரை தசாப்தங்களுக்கு மேலாக முக்கிய பங்கு வகித்த, மூத்த அரசியல்வாதியான, இலங்கை தமிழரசு கட்சியின் பெரும் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியன்று (2024.06.30) தனது 91ஆவது அகவையில் காலமானார். அரசியல் வாழ்வில் பல்வேறு வகையான, இக்கட்டான அரசியல் சூழ்நிலைகளை சந்தித்த போதும், எல்லா சந்தர்ப்பங்களிலும் திட உறுதியோடும் பொறுப்புணர்வோடும் செயற்பட்டவர் இவர்.

1970களில் அரசியல் பிரவேசம் செய்த, இரா சம்பந்தன் 1977ஆம் ஆண்டு திருகோணமலை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று முதன்முதலாக பாராளுமன்ற அங்கத்தவரானார். 2007ஆம் ஆண்டில் சில அரசியல் கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்து அரசியலில் தவிர்க்க முடியாத தலைவராகத் திகழ்ந்தார்.

2015ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கையின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியும் இணைந்து கூட்டாக ஆட்சியமைத்தனர். இதனால் இவ்விரு கட்சிகளுக்கும் அடுத்ததாக அதிக இடங்களைப் பெற்ற கட்சியாக, 16 இடங்களைப் பெற்றிருந்த தமிழரசுக் கட்சி எதிர்க்கட்சியானது. இதனால் இரா. சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவரானார். இவ் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அலங்கரித்த இரண்டாவது தமிழ் அரசியல் தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழர்களுக்காக, தமிழ் இனத்துக்காக குரல் கொடுத்த இவர், குறிப்பாக மனித உரிமைகள் மீறல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழர் பகுதிகளில் அத்துமீறிய குடியேற்றம், காணிப் பிரச்சினைகள் உட்பட தமிழர்களின் அனைத்து பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுத்த தலைவராக இருந்தார்.

தமிழ் முஸ்லிம் உறவுகள் சீராக தொடர்வதற்கு இவர் அர்ப்பணிப்போடு செயல்பட்டமை பலரதும் கவனத்தையும் ஈர்த்தது. எனது சட்டக் கல்லூரி சகாவான நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனை தமிழ் அரசியலில் முக்கிய இடம் பெறச் செய்தார்.

தனித்துவமான தமிழ் தலைவராக, பல அரசியல் தலைவர்களினதும் அபிமானத்தைப் பெற்ற இரா சம்பந்தன், தனது மரணத்தின் மூலம் இலகுவில் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை இலங்கை தமிழர் அரசியலில் ஏற்படுத்திச் சென்றிருக்கிறார் என்றால் மிகையல்ல.

## சிந்தனை செய் மனமே

### என் உயிரின் பாதி நீ



கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற முக்கியமான, முன்மாதிரி ஒரு ஏழை விவசாயி தன் மனைவியை அவளது முதல் பிரசவத்திற்காக அவளின் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். வாகன வசதி இல்லாத காலம் அது. கடும் வெயிலின் காரணமாக கர்ப்பமான மனைவிக்கு தண்ணீர் தாகம் எடுக்கிறது.

ஆள் நடமாட்டமில்லாத அந்த நடைபாதையில் தன் கணவர் தண்ணீருக்கு எங்கு செல்வார் என்று அதை கணவனிடம் சொல்லாமலே வருகிறாள். ஆனால் அந்த கணவனோ, தன் மனைவிக்கு தாகம் எடுத்திருக்கிறது என்று சரியாக புரிந்துகொண்டான். கணவன் மனைவி உறவின் இரகசியம் அல்லவா அது!

தூரத்தில் ஒரு முதியவர் இளநீர் வியாபாரம் செய்வதை கண்ட கணவன், மனைவியின் கையைப் பிடித்து கொண்டு வேகமாக அங்கு சென்றான். அவனிடம் ஒரு இளநீர் வாங்குவதற்கு மட்டுமே காசு இருக்கிறது என்று அங்கு சென்ற பிறகுதான் அவனுக்கு தெரிந்தது.

"ஒரு இளநீர் தாருங்கள்" என்று ஒரு இளநீரை மட்டும் வாங்கியவன் அதனை தன் மனைவியிடம் கொடுத்து "நீ குடிமா" என்றான். ஆனால் அவளோ, "நீங்கள் குடித்து விட்டுத் தாருங்கள்" என்று அவனிடம் கொடுத்தாள்.

அதனை மறுத்த கணவனோ மனைவியை வற்புறுத்தி குடிக்க வைத்தான். ஆனால் அவளோ 'என் கணவர் எனக்காக காடு மலையெல்லாம் வேலை செய்பவர். என்னை கஷ்டத்தோடு அழைத்துச் செல்கிறார். அவர் முதலில் குடிக்கட்டும்' என்று நினைத்துக் கொண்டு குடிப்பது போல் நடித்துக் கொண்டிருக்கிறாள். பின் "எனக்கு போதும். இப்போ நீங்க குடிங்க!" என்று மீண்டும் கணவனிடம் கொடுத்தாள்.

இளநீர் கணவன் கைக்கு வந்தது. அவனும் மனைவியை போலவே 'இவள் என்னை நம்பி வாழவந்தவள். அதோடு என் குழந்தையை தன் வயிற்றில் சுமக்கிறாள். இன்னும் கொஞ்சம் இவள் குடித்தால் தானே நல்லது' என்று இவனும் குடிப்பது போல் மீண்டும் நடித்தான்.

இவர்களின் செயலையும், காதலையும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் குணத்தையும் சரியாகப் புரிந்துகொண்ட அந்த அனுபவசாலியான முதியவர் அந்த பெண்ணிடம் "மகளே நீ என் பொண்ணு போல இருக்கிறாய். இந்த இளநீரை நீ குடிமா" என்று வேறொரு இளநீரை வெட்டிக் கொடுத்தார்.

கணவனின் அனுமதியோடு அந்த இளநீரை தாகம் தீர குடித்துவிட்டு அவன்மீது மெதுவாக சாய்ந்துக்கொண்டாள். 'என் மீது இவருக்கு எவ்வளவு பாசம்" என்று எண்ணி பெருமிதத்தோடு கணவனைப் பார்த்தாள்.

'நீ என் மனைவி, என் உயிரின் பாதி' என்று தனக்குள் நினைத்துக் கொண்டு அர்த்தத்துடன் கண் சிமிட்டினான் அந்த காதல் கணவன்.

இவ்வுலகில் எல்லா உயிர்களும் அன்பிற்காக மட்டும் தான் ஏங்குகின்றன. எத்தகைய பிரச்சினைகள் என்றாலும் கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்தும், ஒருவர் குறையை மற்றொருவர் மறைத்து வாழ்வதுமான இல்லற வாழ்கை இவ்வுலகிலேயே சொர்க்கமாக இருக்கும்.

## தகவல் களஞ்சியம்

### மிளகாய் ஐஸ்கிரீம்



இலங்கையில் விரைவில் மிளகாய் ஐஸ்கிரீம் விற்பனைக்கு வரவிருக்கிறது. வித்தியாசமான சுவையை விரும்பும் ஐஸ்கிரீம் பிரியர்களுக்கு இது நற்செய்தியாக இருக்கும்.

ஒருவர் விவசாய நவீனமயப்படுத்தலின் தொழில்நுட்ப மற்றும் நிதி பங்களிப்பில், வெலிமடை பகுதியைச் சேர்ந்த விவசாயி லசந்த ருவன் லங்காதிலக்க என்பவரே இந்த மிளகாய் சுவைகொண்ட புதிய வகை ஐஸ் கீரிமை தயாரித்துள்ளார். ஊவா பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பிரிவின் வழிகாட்டலில் சுகாதாரத்திற்கு ஏற்ற வகையில் இம்மிளகாய் ஐஸ் கிரீம் தயாரிக்கப்பட்டுள்ளது. காரம் மற்றும் இனிப்புச் சுவை இதில் கலந்துள்ளமை விசேட அம்சமாகும்.

சிறுவர்கள் வேறாகவும், பெரியோர்களுக்கென தனியாகவும் இரு பிரிவுகளைக் கொண்ட தயாரிப்பாக இதனை விரைவில் சந்தையில் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அந்த நாள் ஞாபகம்!



ரொம்ப காலத்துக்கு முன்னாடி நாங்க கிராமத்துல இருந்தப்ப இந்த மாதிரியான பன் புல்லால் தயாரான பாயைத்தான் மார்க்கெட்ல சாமான் வாங்கப் பாவிச்சோம்! அந்தக்காலத்துல Plastic Marketing Bag அல்லது Polythene Bag எதுவுமே இருந்த ஞாபகமே இல்ல. அதனால் சுற்றாடல் மாசடைந்ததாக கேள்விப் படவுமில்ல!

இந்தப் பை. நீண்ட காலம் பாவிக்கக்கூடியது! அழுக்கானால் கூட கழுவிக் கழுவிப் பாவிக்கலாம்! ஆனால் இந்த நாகரிக யுகத்துக்கு இது இப்ப சரிப்பட்டு வருமான்னுதான் புரியல! இருந்தாலும் ஒரேயடியா ஒரு 50, 100 பேர் என்று இந்த வகைப் பன் பைகளை எடுத்துகிட்டு மார்க்கெட் போனா அதுதான் லேட்டஸ்ட் ஸ்டைலா மாறினாலும் ஆச்சரியமில்ல!

**கலைஞர் மஹதி ஹஸன் இப்ராஹிம்**

# சிக்கிக் கொண்டாளே துர்கா கொலைகாரனிடம் விரைவில் போய் சேர்ந்துவிடுவாளா எமதர்மனிடம்




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

தலையில் ஏற்பட்ட ஒரு வலியினால்,

விழித்தெழுந்து அமர்ந்து கொண்டாள் துர்கா. சுற்றும் முற்றும் பார்த்தாள்!

அந்த சிறிய அறை இருளில் மூழ்கியிருந்தது!

தான் இப்போது எங்கே இருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் தவித்த அவள்,

கட்டிலில் அமர்ந்தபடியே, கொஞ்சம் பின்நோக்கிப் பார்த்தாள். இருள் மேகத்திற்குள் இருந்து வெளிவரும் பூர்ண சந்திரனைப் போல்,

முன்தினம் நடந்த ஒவ்வொரு சம்பவமும்,

அவள் நினைவுத்திரையில் ஓடியது!

சொலமனின் அறையில் அமர்ந்து கொண்டு தான் புத்தகம் படித்துக் கொண்டிருந்தபோது,

அந்த பழைய சாமான்கள் நிறைந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு சொலமன் உள்ளே வந்ததும்,

ஏதோ ஓர் அதிசயத்தைக் காட்டப் போவதைப் போல் தன்னை அந்த அறைக்குள் அழைத்ததையும்,

அவர் மீது எந்த சந்தேகமும் கொள்ளாமல் உடனே அறைக்குள் நுழைந்ததும்,

படாரென்று கதவைச் சாத்திவிட்ட சொலமன்,

தனது உயிருக்கும் மேலாக என்னைக் காதலிப்பதாகவும்,

நான் கிடைக்கவில்லையென்றால் அவரது வாழ்வில் எந்தவிதப் பலனும் இல்லையென்றும் கூறி,

தனது காதலை ஏற்றுக் கொள்ளுமாறு பல வழிகளில் கூறி மன்றாடி நின்ற போது,

கெட்ட கெட்ட வார்த்தைகளையெல்லாம் சொல்லி,

தான் அவரைத் திட்டித்தீர்த்ததொல்லாம் அவள் ஞாபகத்திற்கு வந்தது!

இதனால் ஆத்திரமடைந்த சொலமன்,

என்னைமட்டுமல்ல நான் உயிராகக் காதலிக்கும் சிந்துஜனையும் கொலை செய்யப் போவதாக மிரட்டியதும்,

இதனால் அதற்குப் பயந்துபோய் அவர் விருப்பத்திற்கு ஒத்துப் போவதைப் போல் போக்குக் காட்டி அவரை ஏமாற்ற முயன்றதும்,

அதன் பிறகு அந்த கபட்டுக்குள் ஒரு நாற்காலியைப் போட்டு அதில் தன்னை அமர வைத்துவிட்டு கபட்டை மூடிவிட்டதும்,

சிறிது நேரத்தில் வேலைக்காரன் முனியாண்டி கொண்டு வந்து கொடுத்த தேநீரை குடித்த பிறகு தூக்கம் வருவதைப் போல் இருந்ததனால் அந்த நாற்காலியிலேயே தூங்கிவிட்டதும் அவள் ஞாபகத்திற்கு வந்தன.

அதன்பிறகு இலேசாக நினைவு வந்த போது யாரோ தன்னை தூக்கிக் கொண்டு செல்வதை உணர்ந்த போதிலும்,

எதுவுமே செய்ய முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்ததால்,

தனது காலணி ஒன்றைக் கழற்றி மெல்ல நழுவ விட்டதையும்,

மீண்டும் ஒரு வாகனத்தில் ஏற்றி தன்னை எங்கோ கொண்டு சென்ற நேரத்தில் தான் மீண்டும் தூங்கிப்போனதும் துர்காவிற்கு ஞாபகம் வந்தது!

இந்த காட்சிகள் எல்லாம் அவள் மனத்திரையில், ஒரு திரைப்படத்தைப் போல் ஓடிய போது,

தான் இப்போது இருக்கும் இடம் அவ்வளவு பாதுகாப்பான இடமாக இல்லை. என்பதையும் அவள் உணர்ந்து கொண்டாள்.

இப்போது,

அவளது விழிகள் அறைக்குள் இருந்த அந்த இருட்டுக்கு பழக்கப்பட்டு விட்டன.

விழிகளை அந்த அறைக்குள் சுழல விட்டாள் துர்கா!

அந்த அறைக்குள் இருந்த ஒரே ஒரு ஜன்னலும் சாத்தப்பட்டிருந்தது.

தலைவலி கொஞ்சம் அதிகமாகிவிட்டதால்,

நெற்றிப் பொட்டைக் கொஞ்சம் அழுத்தி விட்டாள் துர்கா!

அப்போது,

கையில் ஒரு மெழுகுவர்த்தி விளக்குடன் உள்ளே வந்தாள் கொஞ்சம் வயதுடைய ஒரு பெண்மணி,

"ஓ நீ எழுந்துட்டியாம்மா உனக்கு இப்போது பசியாகவும் இருக்குமில்லையா?" என்று கருணையுடன் கேட்டார்.

"ஐயோ எனக்கு ஒரே தலைவலியா இருக்கு தாங்க முடியல்ல! அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடியே சொன்னாள் துர்கா.

"அப்படியா கொஞ்சம் பொறு நான் உடனே அதை குணப்படுத்துகிறேன்!" விரைந்து வெளியே சென்ற அவள்,

சிறிது நேரத்தில்,

வெள்ளை மாத்திரைகள் நிறைந்த ஒரு பெட்டியுடனும் தேனீர் கோப்பை ஒன்றுடனும் மீண்டும் அறைக்குள் நுழைந்தாள்.

அந்த மாத்திரைகளை துர்கா ஐயத்துடன் பார்ப்பதை உணர்ந்து கொண்ட அவள்,

இரண்டு மாத்திரைகளை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

"இப்போது நல்ல பிள்ளையைப் போல் இந்த மாத்திரைகளை வாயில் போட்டு விழுங்கி விட்டு கோப்பி குடி ஏன் இப்படி பயந்து போயிருக்கிறாய் இந்த நஞ்சு கலந்த மாத்திரைகள் இல்லை உன்னைப் போன்ற பைத்தியக்காரிகளுக்கு இப்படித்தான் உனக்கு நஞ்சைக் கொடுத்து விடுவார்களோ என்ற சந்தேகம் தான் இல்லியா?"

"ம் பைத்தியக்காரியா! நான் பைத்தியக்காரி என்று நினைக்கிறாயா? யார் அப்படி உனக்குச் சொன்னது?

"உனது கணவர் உன்னை இங்கே அழைத்து வந்தது எதற்கென்று நினைக்கிறாய்? நான் பன்னிரெண்டு வருடங்களாக உன்னைப் போன்ற பைத்தியங்களைப் பார்த்து வைத்தியம் செய்து வரும் முரட்டுப் பெண் முகத்தைப் பார்த்த உடனேயே இவள் பைத்தியக்காரியா இல்லையா என்று சொல்லிவிடுவேன். அதுமட்டுமல்ல எந்த விதமான பைத்தியம் என்பதையும் சொல்லிவிடும் திறமையும் இந்த பேபி நோனாவிடம் இருக்கிறது!" என்று,

மார்பில் தட்டியபடியே சொன்னாள் பேபி நோனா என்ற அந்தப் பெண்,

தன்னை பைத்தியக்காரி என்று அவள் சொன்னதைவிடவும்,

தான் அவனுடைய மனைவி என்று சொல்லி சொலமன் அவளை ஏமாற்றியிருப்பதை நினைத்தபோது,

துர்காவால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை!

"சரி இப்போது நான் எங்கே இருக்கிறேன்! யார் என்னை இங்கே கொண்டு வந்தது ! இது உனது வீடா! எப்போது என்னை இங்கிருந்து அனுப்புவாய்?" கேள்விகளைத் தொடுத்தாள் துர்கா.

"நீ இப்போது இருப்பது மலையகத்தில் இருக்கும் சுகபோகமான ஒரு பங்களாவில். இது இப்போது எனதல்ல. ஆனால் நீ குணமான பிறகு இந்த பங்களா எனக்கு சொந்தமாகிவிடும் என்பது எனக்குத் தெரியும். உனது கணவர் சம்மதித்தால்தான் நீ மீண்டும் இங்கிருந்து போகலாம். அதுவரையில் இந்த துப்பாக்கி முனையில் நீ ஒரு கைதியைப் போல்தான் இருக்கவேண்டும்!"



"என்னது எனது கணவர் சம்மதித்தால்தான் நான் இங்கிருந்து போக முடியுமா?" அவளைப் பரிதாபமாகப் பார்த்தபடியே கேட்டாள் துர்கா.

"ம் அப்படித்தான் உன் கணவர் சொன்னார்!"

"அம்மா எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நீங்கள் சொல்லுகின்ற அந்த நபர் உங்களை ஏமாற்றி என்னை துப்பாக்கி முனையில் கைதியாக வைத்திருக்கிறார். எனக்கு எந்த விதமான பைத்தியமும் இல்லை எனக்கு கணவரும் இல்லை!"

"ம் அந்தா பாத்தியா அதுதான் உனது பைத்தியக் காரத்தனம் அவர் உனது கணவர் இல்லை என்று எந்த வாயால் நீ சொல்லுகிறாய்?"

"ஆனாலும் அவர் எனக்கு மயக்க மருந்து கொடுத்து என்னை நினைவில்லாமலாக்கி பலவந்தமாக என்னை இங்கே அழைத்து வந்தார் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

தடித்த அந்த பெண்மணிக்கு,

தனது நிலைமையை உணர்த்த விரும்பினாள் துர்கா.

ஆனால்,

எலிக்கு தெரியவா போகிறது ஏலக்காயின் வாசம்!

"உன்னைப் போன்ற அதிர்ஷ்டமில்லாத பெண்கள் தினமும் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? இந்த உலகத்தில் உள்ள எல்லோருமே உங்களுக்கு துரோகம் செய்கிறார்கள் என்று! அதுதான் கருமம் என்பது!"

இப்போது,

துர்காவின் மனம் எண்ணியது!

நான் எவ்வளவுதான் முயன்றாலும் என்னுடைய அப்பாவித்தனத்தை இவளிடம் நிரூபிக்க முடியாது. அப்படி நான் நிரூபிக்க மேலும் முயற்சி செய்தால் உண்மையிலேயே நான் பைத்தியக்காரிதான் என்று இவள் முத்திரை குத்திடுவாள். அதனால் அதைப் பற்றி பேசாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்!"

பேபி நோனாவின் அனுமதியுடன்,

ஜன்னலைத் திறந்து விட்டபோது,

அது பகல் பொழுது தான் என்று துர்கா புரிந்து கொண்டாள்.

தான் இப்போது முகங்கொடுத்திருக்கும் பயங்கரமான நிலைமையைப் புரிந்து கொண்ட துர்கா, என்னதான் நடந்தாலும், சொலமனின் எண்ணத்திற்கு இணங்காமல் இருப்பதற்கும், அப்படி முடியாமல் போனால்,

தன் உயிரைக் கொடுத்தாவது தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் முடிவு செய்து கொண்டாள்!

"உனக்கு பசிக்கிறதா?" என்று பேசி நோனா மீண்டும் கேட்டபோது,

சாப்பிடாமல் இருப்பதற்கு முதலில் முடிவு செய்திருந்த துர்கா,

அது முட்டாள்தனமான முடிவு என்று உணர்ந்து கொண்டு,

வருகின்ற எந்த விஷயங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டுமானால் அதற்கு உடலில் தெம்பு இருக்க வேண்டும்!

அதனால் சாப்பிடுவதற்கு முடிவு செய்தாள்.

"ஆமாம் எனக்கு நன்றாகவே பசிக்கிறது சாப்பிடுவதற்கு ஏதாவது உடனே கொண்டு வாருங்கள்!" என்றாள்.

"சரி மாடியை விட்டுக் கீழே இறங்கி வா!" என்று சொல்லிவிட்டு பேபி நோனா கீழே சென்றதும்,

ஜன்னல் வழியாக வெளியே எட்டிப்பார்த்தாள் துர்கா.

அந்த இடத்தில் அந்த பங்களா மட்டுமே இருப்பதைப் போல்தான் அவளுக்குத் தோன்றியது!

பக்கத்தில் ஏதும் வீடுகள் இருப்பதாகவே தெரியவில்லை.

அதே நேரம்,

அந்த பங்களாவைச் சுற்றி பெரிய ஒரு மதில் சுவர் கட்டப்பட்டிருப்பதும் தெரிந்தது!

இப்போது,

அந்த துப்பாக்கி முனையில், தான் ஒரு கைதியாக இருக்கிறேன் என்பது மட்டுமே அவளுக்கு இப்போது புரிந்தது!

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 121

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| 10 | 11 | | 12 | 13 | 14 |
| | 15 | 16 | | 17 | |
| 18 | | 19 | 20 | | 21 |
| 22 | 23 | 24 | | 25 | 26 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர்
வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) மலையகத்தின் மத்தியில் அமைந்துள்ள நகரம். இலங்கையின் புராதன இராச்சியங்களில் குறிப்பிடத்தக்க இடம் இது.
(4) கடலோரம் சென்றால் பார்க்கலாம். இது என்றுமே ஓய்வதில்லை. (தலைகீழான சொல்)
(7) தென்னை போன்று இதுவும் உயரமாக, கிளைகள் இன்றி வளருகின்ற மரம். இம்மரத்தின் பகுதிகள் ஒவ்வொன்றும் மனிதனால் பயன்படுத்தப்படுகின்றன.
(10) உயிரினங்கள் பலவற்றின் இடப்பெயர்ச்சி அங்கம் இது. (தலைகீழான சொல்)
(12) இச்சொல்லுக்கு புதல்வி, புத்திரி என்றும் ஒத்தபொருள் சொற்கள் உள்ளன.
(15) மணலும், மணல் சார்ந்ததுமான நிலப்பகுதி. (தலைகீழான சொல்)
(19) கவிதையையும், கவிதை புனைபவனையும் குறிக்கின்ற சொல்.
(22) உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கைச் சொல். தூரத்தே நிற்கின்ற ஆண் ஒருவனைச் சுட்டுகின்ற சொல்.
(25) உறைப்பு, இனிப்பு, கசப்பு போன்று இதுவும் ஒரு சுவை. நாம் அன்றாடம் சமையலில் இச்சுவையைப் பயன்படுத்துகின்றோம்.

### மேலிருந்து கீழ்

(1) புவியின் மேற்பரப்பில் சுமார் முக்காற் பங்கு இதுதான்.
(3) மாடிக்கு நாம் ஏறிச் செல்ல வேண்டுமானால் இதன் மீது ஏறி ஏறிச் செல்ல வேண்டும். (தலைகீழான சொல்)
(5) உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கைச் சொல்.
(8) அகம், வீடு, இல்லம் போன்றனவெல்லாம் இச்சொல்லின் ஒத்தபொருள் சொற்கள். (தலைகீழான சொல்)
(11) இரவு முடிந்து, சூரியன் உதயமானதும் தோன்றும் பொழுது.
(13) மான்களில் இது ஆண் இனம்.
(16) யானையைப் பராமரிப்பவன்.
(18) குளத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்காக சுற்றிவர அமைக்கப்படுவது. (தலைகீழான சொல்)
(21) மட்பாண்டங்கள், கூரை ஓடு போன்றவற்றைத் தயாரிப்பதற்கான மூலப்பொருள் இது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 120

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. முக்கோணி 08. பாதி 11. ஏரி
15. தாழை 17. நான்கு 20. மதி 23. கரையம்

**மேலிருந்து கீழ்**
01. முயல் 03. கோடரி 05. குதிரை 12. ஏழை
14. பேன் 16. தாமரை 17. குடை 19. நாம்
21. கதி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 119

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ.எப். அலீனா**
தரம் 09B, க/பதியுதீன் ம. வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன், றம்புக்கன வீதி, கலகெதர.

**2. ம. பிருந்தாவன்**
தரம் 03A, யா/ வட இந்து ஆரம்ப பாடசாலை,
விநாயகர் முதலியார் வீதி, பருத்தித்துறை.

**3. ஜே. கீர்த்தனா**
தரம் 05A, ப/ பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி,
இல. 34A, நாயபெத்த தோட்டம்.

**4. ர. அஷ்வினி**
தரம் 04, மட். வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை,
இல. 33, ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு.

**5. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**6. ஐ.எம். இஸ்மா**
தரம் 07, வேறபெத்த மு. வித்தியாலயம்,
வேறபெத்த, தொரட்டியாவ, குருநாகல்.

**7. எம்.வை. யூசுப் உமர்**
தரம் 05, கே/ ஜாமியுல் அசர் ம. கல்லூரி,
இல. 17/1, தொரகமுவ வீதி, உடதலவின்ன, மடிகே.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 121
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**புகழ்:** ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்

***தெளிவுரை :***
*உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்க வல்லது வேறொன்றும் இல்லை.*

# கர்வம் கொடுத்த அழிவு

கோடை ஆரம்பமாகியதில் காட்டில் நீர் நிலைகளில் நீர் குறைய தொடங்கியது. முற்றிலும் வறட்சி ஏற்படும் முன், வேறு இடத்தை கண்டறிய வேண்டும் என விலங்குகள் கலந்துரையாடின.

துள்ளிக்குதித்த மான் கூட்டமும், வேகம் காட்டிய வரிக்குதிரைகளும் இது தொடர்பாக ஆலோசித்தன. பேசி முடிவெடுக்க ஒற்றுமையுடன் கூடின. அப்போது மான்களின் தலைவன் 'நண்பர்களே... செழிப்பான ஓடையை கண்டறிந்து வருகிறேன். பின், அனைவரையும் அழைத்து செல்கிறேன்...' என்றது.

அதன் பேச்சை கேட்டு மகிழ்ந்தன வரிக்குதிரைகள். காட்டின் ஒரு பகுதியில் பசும் புல்வெளியும், அதையொட்டி பெரிய ஓடையையும் கண்டறிந்து தகவல் கூறியது.

பின், மான்களும், வரிக்குதிரைகளும் அங்கு இடம் பெயர்ந்தன. சில நாட்களுக்கு பின், அவற்றுக்குள் சண்டை ஏற்பட்டது. 'நான் தான் ஓடையை கண்டுபிடித்தேன். என்னை மீறி, இதில் நீர் அருந்த கூடாது...' கர்வத்துடன் உத்தரவிட்டது மான்களின் தலைவன்.

'நண்பா... காட்டில் உள்ள ஓடை, எல்லா உயிரினங்களுக்கு பொதுவானது; எங்களை கட்டுப்படுத்த உன்னால் முடியாது...' என்றன வரிக்குதிரைகள். வீண் கர்வத்தால் மான் மற்றும் வரிக்குதிரை கூட்டங்கள் பிரிந்து நின்றன.

இந்த சண்டையை கவனித்தது ஒரு சிறுத்தை. தனியாக மேயும் மான்களை வேட்டையாடுவது அதற்கு எளிதாக அமைந்தது. இதனால், மான்கள் எண்ணிக்கையில் குறைய துவங்கின. நண்பர்களாய் பழகி, ஒற்றுமையாக வாழ்ந்த போது, மகிழ்ச்சியும், பாதுகாப்பும் இருந்தது. கர்வத்தால் ஏற்பட்ட சண்டை அழிவுக்கு காரணமானது. தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டது மான்களின் தலைவன்.

அவை மீண்டும் நட்பாய் இணைந்தன. சிறுத்தைகள் வலிமை குறைந்து பின் வாங்கின. வெற்றியால் மகிழ்ச்சி அடையாலம். ஆனால், கர்வம் கொள்ளலாகாது. அது அழிவையே தரும்!



# பிரமிப்பூட்டும் நீலத் திமிங்கிலத்தின் இதயம்



**நீலத் திமிங்கிலம், அதன் பிரம்மாண்ட உடலமைப்பால் பூமியில் வாழும் மிகப்பெரிய விலங்காக கருதப்படுகிறது.**

**இதன் இதயம் சிறிய கார் அளவுக்கு இருப்பது ஆச்சரியமானது. நீலத் திமிங்கிலத்தின் இதயம் சுமார் சுமார் 590 கிலோகிராம் அளவை கொண்டதாகும். இது அசாதாரண எடையைக் கொண்டதாகும்.**

**நீலத் திமிங்கிலத்தின் இதயம் ஒவ்வொரு துடிப்பிலும் சுமார் 227.1 லீற்றர் இரத்தத்தைப் பம்ப் செய்கிறது. இதன் காரணமாக, அதன் உடலில் தேவையான ஒக்சிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்கள் எல்லா இடங்களுக்கும் பரவுகின்றன. இப் பம்ப் செயல்முறை இதன் உடல் அளவினை பராமரிக்க உதவுகிறது.**

**நீலத் திமிங்கிலம் நீர்நிலைகளில் சுதந்திரமாக நீந்தி, தனது மாபெரும் இதயத்தால் இயங்குகிறது. இதயத்தின் பாரிய அளவும் மற்றும் சக்தி அதன் வாழ்வாதாரத்தை முழுமையாக நிலைநிறுத்துகின்றது.**

**நீலத் திமிங்கிலத்தின் இதயம் அதன் பிரம்மாண்ட உடலமைப்பிற்கேற்றவாறு, முழு உடலின் ஆரோக்கியத்தையும் செயல்திறனையும் பராமரிக்கிறது. இதயத்தின் வலிமை மற்றும் செயல்திறன், இயற்கையின் அதிசயங்களின் சான்றாக திகழ்கின்றன.**

திவ்யா...✍

# இயற்கையின் அழியாத அற்புதம் தேன்



தேன், மனிதன் கண்டுபிடித்த பழமையான உணவுகளில் ஒன்றாகும். இது அதிக காலம் பழுதடையாமல் இருக்கும் என்பதற்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன.

**தேனின் குறைந்த ஈரப்பதம்**

தேனில் நீர்ச்சத்து சுமார் 17% மட்டுமே உள்ளதால், பக்டீரியாக்கள் மற்றும் பூஞ்சைகள் தேனில் வளர முடியாது. குறைவான ஈரப்பதம், வெப்பம் மற்றும் ஈரத்தன்மை போன்ற காரணங்களால் தேன் பழுதாகாமல் இருக்க உதவுகிறது.

**தேனின் உயர்ந்த அமிலத்தன்மை**

தேனில் pH அளவுகோல் சுமார் 3.2 முதல் 4.5 வரை உள்ளது. இது அமிலத்தன்மையை குறிக்கிறது. இந்த அமிலத்தன்மை நுண்ணுயிர்கள் வளர்வதற்கு இடமளிக்காது.

**தேனீக்கள் சுரக்கும் குளுக்கோஸ் ஒக்சிடேஸ் என்சைம்**

தேனில் குளுக்கோஸை ஹைட்ரஜன் பெராக்சைடாக மாற்றுகிறது. ஹைட்ரஜன் பெராக்சைட் ஒரு சக்திவாய்ந்த நுண்ணுயிர்க்கொல்லி, இது தேனை நாசிகளிலிருந்து பாதுகாக்கிறது.

**தேனின் பாதுகாப்பு முறை**

தேனை நன்றாக மூடிவைத்தால், அதில் உள்ள குறைந்த ஈரப்பதம் நீராவி அல்லது வெளிப்புற ஈரத்தன்மையால் பாதிக்கப்படாமல் இருக்கும். இதனால் தேன் பல ஆண்டுகள் பழுதாகாமல் இருக்கும். தேன் ஒரு நீண்ட பிற்காலத்தைக் கொண்ட உணவுப் பொருளாகும். இது பல ஆண்டுகள் கூட பழுதாகாமல் இருக்கும்.அதனால், தேனை பழங்காலத்திலிருந்தே பல பகுதிகளில் பாதுகாப்பான உணவாகக் கருதுகின்றனர்.

பாரதி...✍

# உலகின் சிறந்த 25 பல்கலைக்கழகங்கள்

சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் 1500க்கும் அதிகமான பல்கலைக்கழகங்களின் பல்வேறு விடயங்களை ஆய்வு செய்த க்யூ.எஸ். நிறுவனம், 2025ஆம் ஆண்டிற்கான உலக பல்கலைக்கழக தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

***தரவரிசையில் இடம்பெற்றுள்ள முதல் 25 பல்கலைக்கழகங்களின் பட்டியல்:***

1. மசாசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னொலஜி - பிரித்தானியா
2. இம்பீரியல் கொலேஜ் லண்டன் - பிரித்தானியா
3. யுனிவர்சிட்டி ஒப் ஒக்ஸ்போர்ட் - பிரித்தானியா
4. ஹார்வர்ட் யுனிவர்சிட்டி - அமெரிக்கா
5. யுனிவர்சிட்டி ஒப் கேம்ப்ரிட்ஜ்- பிரித்தானியா
6. ஸ்டான்போர்ட் யுனிவர்சிட்டி - பிரித்தானியா
7. இ.டி.எச். சூரிச் - சுவிட்சர்லாந்து
8. நேஷனல் யுனிவர்சிட்டி ஒப் சிங்கப்பூர் - சிங்கப்பூர்
9. யு.சி.எல். - பிரித்தானியா
10. கலிபோர்னியா இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னாலஜி -அமெரிக்கா
11. யுனிவர்சிட்டி ஒப் பென்சில்வேனியா - அமெரிக்கா
12. யுனிவர்சிட்டி ஒப் கலிபோர்னியா பெர்க்லி - அமெரிக்கா
13. யுனிவர்சிட்டி ஒப் மெல்போர்ன் -அவுஸ்திரேலியா
14. பீக்கிங் யுனிவர்சிட்டி - சீனா
15. நன்யாங் டெக்னொலஜிக்கல் யுனிவர்சிட்டி - சிங்கப்பூர்
16. கார்னெல் யுனிவர்சிட்டி - அமெரிக்கா
17. யுனிவர்சிட்டி ஒப் ஹொங்கொங் - ஹொங்கொங்
18. யுனிவர்சிட்டி ஒப் சிட்னி - அவுஸ்திரேலியா
19. யுனிவர்சிட்டி ஆப் நியூ சவுத் வேல்ஸ் - அவுஸ்திரேலியா
20. சிங்குவா யுனிவர்சிட்டி - சீனா
21. யுனிவர்சிட்டி ஒப் சிக்காகோ - அமெரிக்கா
22. பிரின்ஸ்டன் யுனிவர்சிட்டி - அமெரிக்கா
23. யேல் யுனிவர்சிட்டி - அமெரிக்கா
24. யுனிவர்சிட்டி பி.எஸ்.எல். - பிரான்ஸ்
25. யுனிவர்சிட்டி ஒப் டொரொண்டோ - கனடா

# இவ்வார மழலை




அம்ஹர் - அயாஸா






நிசுலி கெஹெல்கமுவ
ஹோலி ஃபேமிலி பாடசாலை



# மோட்டார் சைக்கிள் எவ்வாறு உருவாக்கப்பட்டது?

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்திருந்த காலப்பகுதியில் ஜப்பானின் பொருளாதாரம் நிர்மூலமாக்கப்பட்ட காலக்கட்டம்.

ஜப்பான் முழுவதும் பெட்ரோல் தட்டுப்பாடு. கார்கள் எல்லாம் முடங்கிவிட்டன.

எல்லோரும் நடக்கிறார்கள் அல்லது சைக்கிளில் செல்கின்றார்கள்.

சோய்செ ரோஹோண்டா, வீட்டில் அமர்ந்திருந்தார். அருகில் சைக்கிள் நின்றது. சற்றுத் தொலைவில் புல்வெட்டும் இயந்திரம் இருந்தது.

அந்தப் புல்வெட்டும் இயந்திரத்தில் உள்ள மோட்டாரை க் கழற்றி, இந்த சைக்கிளில் இணைத்தால் என்ன என்று ஹோண்டாவுக்கு ஒரு புத்தம் புது யோசனை தோன்றியது.

அடுத்த நொடியில் காரியத்தில் இறங்கினார் ஹோண்டா. புல்வெட்டும் இயந்திர மோட்டாரைக் கழற்றி எடுத்து, தனது சைக்கிளில் பொருத்தியபோது உலகின் முதல் மோட்டார் சைக்கிள் பிறந்துவிட்டது. அதை எடுத்துக்கொண்டு ஆனந்தமாக சுற்றி வந்தார் ஹோண்டா. அதேபோன்று எங்களுக்கும் செய்துகொடுங்கள் என்று மக்கள் அலைமோத தொடங்கினர்.

அவரும் சளைக்காமல் செய்து கொடுத்தார். அதன் விளைவு அந்த ஊரில் மோட்டார் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இதையே பெரிய தொழிலாக மாற்றினால் என்ன என்று சிந்தித்தார் ஹோண்டா.

கையில் பணமில்லை, வங்கிகள் கடன் தரத்தயாராகஇல்லை. தனது தொழில் திட்டத்துக்கு பண உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்து, ஜப்பானில் உள்ள 18 ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்களுக்கு கடிதம் எழுதினார்.

முதலீடு செய்யும் சைக்கிள் கடைக்காரர்கள், மோட்டார் சைக்கிள் விநியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவார்கள் என உறுதியளித்தார். 5 ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்கள் முன்வந்து பண உதவி செய்தனர். இவ்வாறு உருவாக்கப்பட்டதே ஹொண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனமாகும். இவ்வாறு உருவாக்கப்பட்டு இன்று பல வர்க்கங்களில் வந்தாலும் முதன் முதலில் உருவாக்கப்பட்டது ஹொண்டா மோட்டார் சைக்கிள் ஆகும்.



# மின்னல், மின்னொளி

மின்னல் (lightning) என்பது வானிலிருந்து மிக வேகமாக காற்றில் பாயும் மின்காந்த அலை (electrical charge) ஆகும். மின்னொளி (thunder) மின்னல் ஏற்படும் போது காற்றின் விரைவான விஸ்தரிப்பு காரணமாக ஏற்படும் மிக சத்தமான ஒலி.

# மஞ்சரி விளையாட்டு



## சில்வர்வுட்டுக்கு அடுத்து யார்?

கிறிஸ் சில்வர்வுட்டின் விலகல் என்பது எதிர்பார்த்ததே. அவருக்கு டி20 உலகக் கிண்ணம் முடியும் வரை தான் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளர் பதவிக்கான ஒப்பந்தம் நீடிக்கப்பட்டிருந்தது. போதாக்குறைக்கு உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறியதால் அவர் பதவியில் நீடிப்பது நிச்சயம் இல்லாமலேயே இருந்தது.

சில்வர்வுட் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை முடிவொன்றை எடுப்பதற்கு முன்னதாகவே அவர் பதவி விலகலை அறிவித்து வெளியேறிவிட்டார். குடும்பத்துடன் அதிக நேரம் செலவிட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டபோதும் அது ஒரு உபரிக் காரணமாக தெரிகிறது.

49 வயது இங்கிலாந்து முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான கிறிஸ் சில்வர்வுட் இலங்கை அணிக்கு பயிற்சியாளராக செயற்பட்ட கடந்த இரண்டு ஆண்டு காலமும் ஏற்றத்தாழ்வுகள் கொண்டது. இலங்கை அணி டி20 ஆசிய கிண்ணத்தை வென்றது மற்றும் ஒருநாள் ஆசிய கிண்ணத்தின் இறுதிப் போட்டி வரை முன்னேறியது அவரது பயிற்சியின் கீழ் இலங்கை தொட்ட உச்சம்.

என்றாலும் சில்வர்வுட் பயிற்சியாளர் பதவியை ஏற்கும்போது அணி இப்போதை விடவும் ஸ்திரமற்ற நிலையிலேயே இருந்தது. எப்படி இருந்தாலும் அணியில் மாற்றங்கள் தேவைப்படும் சூழலிலேயே அவரின் பதவி விலகல் இடம்பெற்றிருக்கிறது. இலங்கை அணியின் அடுத்த தலைமை பயிற்சியாளர் யார் என்பது தான் தற்போதைய கேள்வி.

பயிற்சியாளர் பதவிக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் பற்றி அவதான செலுத்தப்பட்டபோதும், உள்நாட்டு பயிற்சியாளர் ஒருவர் பற்றி பேச்சு வலுத்து வருகிறது. அப்படியாக தகுதி பெற்ற உள்நாட்டு பயிற்சியாளர்கள் என்பது விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே இருக்கிறார்கள். இவர்களில் முதன்மையானவர்களாக ரோய் டயஸ் மற்றும் மார்வன் அத்தபத்துவதை பார்க்க முடியும்.

1998–1999 இல் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக செயற்பட்ட ரோய் டயஸுக்கு இன்னும் மூன்று மாதங்களில் 72 வயது பிறக்கிறது. அவர் பயிற்சியாளர் பொறுப்பை மீண்டும் ஏற்பதற்கான ஆர்வம் குறைவாகவே தெரிகிறது. மற்ற முக்கியமானவர் இலங்கை முன்னாள் அணித் தலைவர் மார்வன் அத்தபத்து. ஆனால் அவர் தற்போதெல்லாம் தொலைக்காட்சிகளில் தோன்றி அணியையும் அணி நிர்வாகத்தையும் கடுமையாக விமர்சிப்பவராக மாறி இருக்கிறது.

எல்லாவற்றையும் விட மஹேல ஜயவர்தன பயிற்சியாளர் பதவிக்கு மிகப்பொருத்தமானவர் என்றாலும், அண்மையிலேயே அவர் பயிற்சி ஆலோசகர் பதவியில் இருந்து விலகினார். அத்தோடு அவர் முழு நேரப் பயிற்சியாளர் பதவி ஒன்றுக்கு முன்வருவார் என்று எதிர்பார்க்க முடியாது. சர்வதேச அளவில் குறிப்பாக இந்தியாவில் அவருக்கான கேள்வி என்பது அதிகமாக இருக்கும் நிலையில் அவர் பயிற்சியாளர் வரம்புக்குள் சிக்கிக்கொள்வார் என்று நம்புவது கடினம்.

மற்றது சனத் ஜனசூரியவும் அவதானத்திற்கு உரியவர். அவர் ஏற்கனவே இலங்கை கிரிக்கெட்டின் ஆலோசகர் பதவியை வகித்து வருகிறார். முன்னர் தேர்வுக் குழு தலைவராகவும் இருந்திருக்கிறார். பயிற்சியாளராக செயற்படுவதிலும் அவருக்கு ஆர்வம் இருக்கிறது. அவரிடம் பொறுப்புக் கொடுத்தால் அது பாதகமான யோசனையாக இருக்காது.

ஜனசூரியவுடன் ஆரம்ப வீரராக அதிரடி காட்டிய டி.எம். டில்ஷானும் பயிற்சியாளர் பொறுப்புக் குறித்து அண்மைக் காலத்தில் விருப்பத்தை வெளியிட்டிருந்தார். சம்பிரதாயத்திற்கு வெளியில் சிந்திக்கக் கூடியவர் என்பதால் அணிக்கு புதிய திட்டங்கள் வகுக்க முடியுமாக இருக்கும். அதேபோன்று திலான் சமரவீர மற்றும் ரங்கன ஹேரத் போன்றவர்கள் மீது அவதானம் செலுத்த முடியும். இவர்கள் ஏற்கனவே வேறு நாட்டு அணிகளுடன் பயிற்சியாளர் பொறுப்புகளில் ஈடுபட்ட சர்வதேச அனுபவம் பெற்றவர்களாக உள்ளனர்.

மறுபக்கம் வெளிநாட்டு பயிற்சியாளர்களின் கீழ் முன்னேற முடியாது என்று காலத்திற்கு காலம் ஏற்படும் சிந்தனையும் உண்மையல்ல. இலங்கையின் மிக வெற்றிகரமான பயிற்சியாளர்கள் என்று பார்த்தால் டேவ் வட்மோர், டொம் மூடி போன்ற வெளிநாட்டு பயிற்சியாளர்கள் இருக்கிறார்.

காமினி திசாநாயக்க இலங்கை கிரிக்கெட் சபை தலைவராக இருந்த காலத்தில் கர்ரி சோர்பஸ் போன்ற வெளிநாட்டு பயிற்சியாளர்களைக் கொண்டுவருவதில் ஈடுபாடு காட்டினார். 1994 இல் அவரது மரணத்திற்குப் பின்னர் அனா புஞ்சிஹேவா, டேவ் வட்மோரை இலங்கை அணியின் பயிற்சியாளராக அழைத்து வந்தார். அது இரண்டு ஆண்டுகளில் இலங்கை உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு உதவியது.

ஜயந்த தர்மதாச 2005 இல் கிரேக் செப்பலுக்கு பதில் டொம் மூடியை பயிற்சியாளராக அழைத்து வந்தபோது பெரும் விமர்சனம் எழுந்தது. ஆனால் அந்த முடிவு வெற்றி அளித்தது. அப்போது இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்தில் தொடர் வெற்றியைப் பெற்ற இலங்கை உலகக் கிண்ண இறுதிப் போட்டி வரை முன்னேறியது. மறுபக்கம் கிரேக் செப்பலை பயிற்சியாளராக நியமித்த இந்திய அணி பெரும் பின்னடைவை சந்தித்ததோடு விளையாட்டுக்கு அப்பால் அணிக்குள்ளும் பெரும் பிளவுகள் ஏற்பட்டன.

அதேபோன்று ட்ரெவோர் பெய்லிஸ், ஜெப் மார்ஷ் மற்றும் கிரஹம் போர்ட்டின் கீழும் இலங்கை சிறப்பாக செயற்பட்டது. இந்தப் பயிற்சியாளர்கள் இன்றும் செயற்பட்டு வருகிறார்கள். அவர்களை மீண்டும் அழைப்பதிலும் தப்பில்லை.

எப்படி இருந்தாலும் பயிற்சியாளருக்கு அப்பால் அடிப்படையில் அணியின் திறமை, சமயோசித புத்தி, எந்த அணிக்கும் சவால் விடுக்கும் தைரியம் போன்றவையும் கட்டி எழுப்பப்பட வேண்டி இருக்கிறது. இலங்கை அணி அடுத்து டி20 உலக சம்பியன் பட்டத்தை வென்றிருக்கும் இந்தியாவையே எதிர்கொள்ளப்போகிறது.

இந்தியாவும் புதிய பயிற்சியாளரை தேட ஆரம்பித்திருக்கிறது. உலகக் கிண்ணத்துடன் தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட் விலகினார். அந்த இடத்திற்கே புதிய பயிற்சியாளர் ஒருவரை தேடுகிறது. இந்தப் பதவிக்கு விண்ணப்பங்கள் குவியும். கிரிக்கெட்டே தெரியாதவர்கள் கூட விண்ணப்பிக்கும் தொந்தரவுகள் கடந்த காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன. அது இலங்கையின் தேர்வில் பாதிப்பை செலுத்தாமல் இருப்பதற்கு பார்த்துக்கொள்ள வேண்டும்.

எஸ்.பிர்தௌஸ்...

## குறிப்புகள்

# மந்தமான உலகக் கிண்ணத்தில் அதிக சிக்ஸர், தோல்வியுறாத சம்பியனான இந்தியா...

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் கிட்டத்தட்ட ஒரு மாதமாக நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத்தில் இந்தியா இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது. பரபரப்புகள்... குழப்பங்கள்... சர்ச்சைகள்.... என்று கடந்து சென்ற இம்முறை உலகக் கிண்ணத்தின் முக்கிய சாதனைகள் பற்றி பார்ப்போம்,



- இம்முறை உலகக் கிண்ணத்தின் ஒட்டுமொத்த ஓட்ட வீதம் 7.09. இது டி20 உலகக் கிண்ணத் தொடர்களில் மிகக் குறைவான ஓட்ட வீதமாகும். முன்னர் 2021 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த தொடரில் பதிவான ஒட்டுமொத்த ஓட்ட வீதமான 7.43 ஆமை வேகத்தில் இருந்தது.
- தொடரில் மொத்தமான 517 சிக்ஸர்கள் விளாசப்பட்டன. அதாவது 500க்கும் அதிகமான சிக்ஸர்கள் பெறப்பட்ட முதல் உலகக் கிண்ணத் தொடராக இது சாதனை படைத்தது. முந்தைய அதிகபட்ச சிக்ஸர்கள் 2021 தொடரில் பதிவானது. அது 405 ஆகும். அதாவது 21.35 பந்துகளுக்கு ஒரு சிக்ஸர் பெறப்பட்டிருக்கிறது. இதுவும் அதிகமாகும்.
- டி20 உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் எந்தப் போட்டியிலும் தோல்வியுறாது கிண்ணத்தை வென்ற முதல் அணியாக இந்தியா சாதனை படைத்தது. இந்தியா ஆடிய எட்டுப் போட்டிகளிலும் வெற்றியீட்டியதோடு கனடாவுக்கு எதிரான போட்டி மழை காரணமாக நாணய சுழற்சி கூட போடப்படாமல் கைவிடப்பட்டது.
- இம்முறை உலகக் கிண்ணத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று இந்தத் தொடரில் ஒருவர் கூட சதம் பெறவில்லை. இதற்கு முன்னர் 2009 உலகக் கிண்ணத்திலேயே இவ்வாறு நிகழ்ந்தது. 2009 உலகக் கிண்ணத்தில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான அரையிறுதியில் திலகரத்ன டில்ஷான் ஆட்டமிழக்காது பெற்ற 96 ஓட்டங்களுமே தொடரில் அதிகமாகும். இம்முறை ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நிகொலஸ் பூரன் பெற்ற 98 ஓட்டங்களுமே அதிகூடியது.
- 2024 தொடரில் மொத்தம் 19 தடவைகள் பந்துவீச்சாளர் ஒருவர் நான்கு அல்லது அதற்கு மேல் விக்கெட்டுகளை வீழ்த்தினர். டி20 உலகக் கிண்ணத் தொடர்களில் இதுவே அதிகம். 2021 தொடரில் 14 தடவைகள் இவ்வாறு நான்கு அல்லது அதற்கு மேல் விக்கெட்டுகளை வீழ்த்திய சாதனை முறியடிக்கப்பட்டது.
- இந்த உலகக் கிண்ணத்தில் ஜெஸ்பிரிட் பூம்ரா ஓவர் ஒன்றுக்கு சராசரியாக 4.17 ஓட்டங்களையே விட்டுக்கொடுத்தார். உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் வீரர் ஒருவர் 100க்கு மேல் பந்துகளை வீசிய நிலையில் இதுவே சிறந்ததாகும். இம்முறை தொடரில் பூம்ரா ஆடிய எட்டுப் போட்டிகளில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் விட்டுக்கொடுத்த 29 ஓட்டங்களுமே அதிகமாகும்.
- பூம்ரா இம்முறை உலகக் கிண்ணத்தில் பெற்ற விக்கெட்டுகளை மற்றும் விட்டுக் கொடுத்த பௌண்டரிகள் இடையில் 3 இலக்கங்களே வித்தியாசம் உள்ளன. அதாவது அவர் 29.4 ஓவர்கள் பந்து வீசி 15 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு இரண்டு சிக்ஸர்கள் உட்பட 12 பௌண்டரிகளையே விட்டுக் கொடுத்தார்.
- இம்முறை உலகக் கிண்ணத்தில் பூம்ரா தான் தொடர் நாயகன் விருதை வென்றார். அதாவது டி20 உலகக் கிண்ண வரலாற்றில் ஒரு ஓட்டம் கூட துடுப்பினால் பெறாது தொடர் நாயகன் விருதை வென்ற முதல் வீரராக அவர் பதிவானார். இந்தத் தொடரில் அவர் ஒரு முறை பாகிஸ்தானுக்கு எதிராக துடுப்பெடுத்தாட வந்தபோது முதல் பந்திலேயே டக் அவுட் ஆனார். எவ்வாறாயினும் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் கிளென் மெக்ராத் (2007) மற்றும் மிச்சல் ஸ்டார்க் (2015) இவ்வாறு தொடர் நாயகன் விருதை வென்றிருக்கிறார்கள்.
- ரிஷாப் பண்ட் விக்கெட் காப்பாளராக இம்முறை தொடரில் மொத்த 14 ஆட்டமிழப்புகளைச் செய்திருக்கிறார். அவர் 13 பிடியெடுப்புகள் மற்றும் ஒரு ஸ்டம்ப் செய்தார். அதாவது விக்கெட் காப்பாளராக அல்லது களத்தடுப்பாளராக உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் இத்தனை ஆட்டமிழப்புகளை இதற்கு முன்னர் செய்ததில்லை.





- இம்மறை உலகக் கிண்ணத்தில் அதிகபட்சமாக அர்ஷ்தீப் சிங் மற்றும் பஸால்ஹக் பரூக்கி தலா 17 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதன்மூலம் 2021 உலகக் கிண்ணத்தில் வனிந்து ஹசரங்க பெற்ற 16 விக்கெட்டுகள் என்ற சாதனையை முறியடித்தனர்.
- 20 ஓவர்கள் முழுமையாக ஆடப்பட்டு 120 அல்லது அதற்கு குறைவான ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் 5 முறை அணிகள் வெற்றியீட்டியுள்ளன. இது இம்முறை உலகக் கிண்ணத்தின் விசேட அம்சமாகும். உலகக் கிண்ணம் ஒன்றில் இதற்கு முன்னர் இவ்வாறு நிகழ்ந்தது ஒரே ஒரு முறை தான். அது 2014 தொடரில் நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை அணி 119 ஓட்டங்களுக்கே சுரண்ட நிலையில் அந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.
- ரோஹித் ஷர்மா உலகக் கிண்ணத்தை வீரராகவும் (2007), அணித் தலைவராகவும் (2024) வெற்றியீட்டினார். எனினும் டெரன் சமி 2012 மற்றும் 2016 இல் அணித் தலைவராக இரு தடவைகள் கிண்ணத்தை வென்றதோடு மேற்கிந்திய திவுகளின் ஏழு வீரர்கள் இந்த இரு வெற்றிகளிலும் அணியில் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் மார்லன் சாமுவேல்ஸ், கிறிஸ் கெயில், ஜோன்சன் சார்ல்ஸ், ட்வாயன் பிராவோ, சாமுவேல் பத்ரி, அன்ட்ரே ரசல் மற்றும் தினேஷ் ராம்தின் ஆகியோராவர்.
- இந்த உலகக் கிண்ணத்தில் முந்தை அதிகபட்ச ஓட்டமற்ற ஓவர்களை விட 109.52 வீதம் அதிகரித்துள்ளது. இந்த உலகக் கிண்ணத்தில் முழுமையாக நடைபெற்ற 52 போட்டிகளிலும் மொத்தமான 44 ஓட்டமற்ற ஓவர்கள் வீசப்பட்டுள்ளன. முன்னர் 2012 தொடரில் 27 போட்டிகளில் 21 ஓட்டமற்ற ஓவர்கள் வீசப்பட்டதே அதிகமாகும்.
- உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விராட் கொஹ்லி 48 பந்துகளிலும் ஹென்ரிச் கிளாசன் 23 பந்துகளிலும் அரைச்சதம் பெற்றனர். இவர்களுக்கு இடையே 25 பந்துகள் இடைவெளி உள்ளன. இதில் கிளாசனின் அரைச்சதம் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பெறப்பட்ட அதிவேக அரைச்சதமாகும். மறுபுறம் கொஹ்லி பெற்ற அரைச்சதம் அவரது டி20 வாழ்வில் பெற்ற மந்தமான அரைச்சதமாக இருந்தது.
- ஆப்கானிஸ்தான் இந்த உலகக் கிண்ணத்தில் 5 இல் வென்று 3 போட்டிகளில் தோற்றது. அந்த அணி வெற்றியீட்டிய ஐந்து போட்டிகளிலும் எதிரணியின் அனைத்து விக்கெட்டுகளையும் சாய்த்தது. இவ்வாறு அதிகமுறை எதிரணியை சாய்த்ததில் 2010 தொடரில் அவுஸ்திரேலியா படைத்த சாதனையை சமன் செய்தது. மறுபுறம் ஆப்கான் தோற்ற மூன்று போட்டிகளிலும் அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதுவும் டி20 உலகக் கிண்ணத்தில் அதிகமாகும்.
- நியூசிலாந்து மற்றும் உகண்டா அணிகளுக்கு இடையிலான போட்டியில் ஒரு சிக்ஸர் கூட பெறப்படவில்லை. டி20 உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் ஒரு சிக்ஸர் கூட பெறப்படாத மூன்றாவது சந்தர்ப்பமாக இது உள்ளது. 2012 இல் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற தென்னாபிரிக்கா மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான போட்டி மற்றும் 2022 இல் பேர்த்தில் நடந்த நெதர்லாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் ஒரு சிக்ஸர் கூடப் பெறப்படவில்லை.
- இம்முறை உலகக் கிண்ணத்தில் பப்புவா நியூகினி மற்றும் ஓமான் அணிகள் ஒரு புள்ளியைக் கூட பெறவில்லை. இந்த இரண்டு அணிகளும் நான்கு போட்டிகளில் ஆடிய நிலையிலேயே வெற்றிபெறத் தவறியது. இது டி20 உலகக் கிண்ணத்தில் வெற்றி இன்றி ஆடப்பட்ட அதிக போட்டிகளாக இருந்தன. எனினும் ஓமான் அணி தனது முதல் போட்டியில் நமிபியாவை எதிர்கொண்டபோது அந்தப் போட்டி சுப்பர் ஓவர் வரை சென்றது.
- உலகக் கிண்ணத்தில் ரிஷப் பண்ட் மொத்தமாக 171 ஓட்டங்களை பெற்றதோடு இது தொடர் ஒன்றில் ஒரு அரைச்சதம் கூட பெறாமல் சேர்க்கப்பட்ட இரண்டாவது அதிகூடிய ஓட்டமாக இருந்தது. 2014 தொடரில் பங்களாதேஷ் அணிக்காக அனாமுல் ஹக் அரைச்சதம் இன்றி மொத்தமாக 184 ஓட்டங்களை பெற்றதே சாதனையாக உள்ளது. ரிஷப் பண்டின் அதிகூடிய ஓட்டங்கள் பாகிஸ்தானுக்கு எதிராக பெற்ற 42 ஓட்டங்களாகும்.



- இந்த உலகக் கிண்ணத்தில் முஹமது ஆமிர் 96 பந்துகளை வீசி ஒரு சிக்ஸரைக் கூட விட்டுக்கொடுக்கவில்லை. இது சிக்ஸர் விட்டுக்கொடுக்காமல் வீசப்பட்ட அதிக பந்துகளாகும். அதாவது இரண்டு உலகக் கிண்ணத் தொடர்களில் குறைந்தது பத்து ஓவர்கள் வீசப்பட்டு ஒரு சிக்ஸர் கூட விட்டுக்கொடுக்காத முதல் பந்துவீச்சாளராக அவர் பதிவானார். 2012 தொடரில் அவர் ஒரு சிக்ஸர் கூட விட்டுக்கொடுக்காது மொத்தம் 139 பந்துகளை வீசினார். இது உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக பந்துகள் வீசி ஒரு சிக்ஸர் கூட விட்டுக்கொடுக்காத பந்துவீச்சாளர் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. 2009 தொடரில் உமர் குல் 147 பந்துகள் வீசி ஒரு சிக்ஸர் கூட விட்டுக்கொடுக்காதது இதன் முதலிடத்தில் உள்ளது.
- இம்முறை உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி வரை கொஹ்லி ஆடிய முதல் ஏழு போட்டிகளிலும் மொத்தமாக 2 பௌண்டரிகளையே பெற்றார். எனினும் இறுதிப் போட்டியின் முதல் ஓவரிலேயே அவர் இந்த எண்ணிக்கையைத் தாண்டினார். மார்கோ ஜேன்சன் வீசிய அந்த ஓவரில் கொஹ்லி மூன்று பௌண்டரிகளைப் பெற்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2024 ஜூலை 7 ஞாயிற்றுக்கிழமை



கவிதாயினி கலைச்சுடர்
ஏ.ஆர்.எப். சிமாரா
(ஊதாப்பூ)



# கற்பனைக்கு எட்டாத பால்வெளி மண்டலம்!

எமது சூரிய குடும்பம் இருக்கும் பால்வெளி மண்டலம் எத்தனை பெரியது தெரியுமா? அதனை சாதாரணமாகச் சொன்னால் புரிந்துகொள்ள முடியாது. முதலில் பூமிக்கும் எமது முதல் தரிப்பிடமாக இருக்கும் நிலவுக்கும் இடையிலான தூரம் என்பது 384,400 கிலோமீற்றர்கள். இது கூட எமக்கு மிகப்பெரிய தூரம். ஆனால் எமது பால்வெளி மண்டலத்துடன் ஒப்பிட்டால் ஓர் அங்குலம் கூட வராது.

ஆனால் ஒரு விமானம் மணிக்கு 1000 கிலோமீற்றர் வேகத்தில் பூமியில் இருந்து புறப்பட்டு நிறுத்தாமல் நிலவை நோக்கி பயணித்தால் அது போய்ச் சேர 16 நாட்கள் எடுக்கும். நம்ப முடியாத வேகத்தில் பயணிக்கும் ஒளி பூமியில் இருந்து நிலவைப் போய்ச் சேர 1.28 விநாடிகள் எடுக்கிறது.

இதுவே எமக்கு நெருக்கமான கிரகமாக இருக்கும் செவ்வாய்க்கான தூரம் எம்மை பொறுத்தவரை இதனை விடவும் அதிகம். அதாவது இந்த சிவப்புக் கிரகமானது பூமியில் இருந்து 56 மில்லியன் கிலேமீற்றர் தூரத்தில் இருக்கிறது. அதாவது அதே விமானம் மணிக்கு 1000 கிலோமீற்றர் வேகத்தில் புறப்பட்டால் செவ்வாயை சென்றடைய 6.2 ஆண்டுகள் தேவைப்படும். இதுவே ஒளி பயணிக்க 3 நிமிடங்கள் தேவைப்படும்.

பூமிக்கும் எமது சூரியனுக்குமான தூரம் என்பது கிட்டத்தட்ட 150 மில்லியன் கிலோமீற்றர்கள். இந்தத் தூரத்தை கணிப்பதற்கு இலகுவாக ஒரு வானியல் அலகு என்று அழைப்பார்கள். சூரியனில் இருந்து பூமிக்கு ஒளி வந்தடைவதற்கு எடுக்கும் காலம் 8 நிமிடங்கள் மற்றும் 20 விநாடிகள்.



சூரியனில் இருந்து தொலைதூரத்தில் இருக்கும் கிரகமான நெப்டியூன் பூமியில் இருந்து 4.5 பில்லியன் கிலோமீற்றர் தொலைவில் இருக்கிறது. அதாவது சூரியனில் இருந்து வரும் ஒளி நெப்டியுனை சென்றடைய நான்கு மணி நேரம் எடுக்கும். நெப்டியுனுக்கு மணிக்கு 1000 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் விமானத்தில் பூமியில் இருந்து புறப்பட்டுச் சென்றால் பயணத் தூரத்தை அடைவதற்கு 490 ஆண்டுகள் எடுத்துக்கொள்ளும்.

நெப்டியுனுக்கு அப்பால் சூரிய குடும்பத்தின் எல்லையில் இருப்பது குறுங்கோள்கள் தான். அதில் முக்கியமானது புளூடோ. அது பூமியில் இருந்து 7.5 பில்லியன் கிலோமீற்றர் தொலைவில் இருக்கிறது. இதற்கு அடுத்து இருப்பது சூரிய மண்டலத்தில் உள்ள கோள்களை மூடியிருக்கும் ஹீலியோஸ்பியர் எனும் பகுதியாகும். சூரியனில் இருந்து வெளியாகும் மின்னூட்டப்பட்ட துகள்களால் ஆன மற்றும் சூரிய காற்று காரணமாக உருவாகும் ஒரு மிகப் பெரிய குமிழிதான் இந்த ஹீலியோஸ்பியர் என்பது. இத்தோடு எமது சூரிய குடும்பத்தின் எல்லை முடிகிறது.

இதனையடுத்து வருவது நட்சத்திரங்களுக்கு இடையிலான பகுதியாகும். மனிதனால் தயாரிக்கப்பட்ட ஒரு பொருள் இந்தப் பகுதியை சென்றடைந்திருக்கிறது. அது நாசாவின் வொயேஜர் 2 விண்கலமாகும். இந்த விண்கலம் பூமியில் இருந்து புறப்பட்டது 1977 ஆம் ஆண்டில் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது சூரியனுக்கு நெருக்கமாக இருக்கும் நட்சத்திரத்தின் பெயர் புரொக்சிமா சென்டோரி. அது 40 டிரில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. இதிலே எமது பால்வெளி மண்டலத்தில் இருக்கும் பெட்டல்ஜியூஸ் என்ற நட்சத்திரத்தின் அளவை பார்த்தாலே அதிர்ந்து போவீர்கள். அது எமது சூரியனை விடவும் 700 மடங்கு பெரியது. அதிகம் ஒளிரும் இந்த நட்சத்திரத்தை இரவு வானில் இலகுவாகக் கண்டுகொள்ள முடியும். இத்தனைக்கும் இந்த நட்சத்திரம் 650 மில்லியன் ஒளியாண்டு தொலைவில் இருக்கிறது.

அதாவது சராசரியான ஒரு மனிதன் நாளொன்றுக்கு 7,500 அடி தூரம் நடப்பதாக கணக்கிட்டு, இதுவரையான மனித குலத்தின் ஆயுள் காலம் 24 வயது என்று எடுத்துக் கொண்டால், சராசரி மனிதன் ஒருவன் தனது ஆயுளில் 50,000 கிலோமீற்றர்கள் நடப்பதாகக் கணிக்கலாம். இதன்படி கடந்த 300,000 ஆண்டுகாலத்தில் வாழ்ந்த ஒட்டு மொத்த மனிதர்களின் எண்ணிக்கை 117 பில்லியன் பேர் என்று எடுத்துக் கொள்வோம். இவர்கள் ஒட்டுமொத்தமாக நடந்த தூரம் ஆறு குவாட்ரில்லியன் அளவாகும்.

இதுவரை பிறந்த மனித குலத்தின் அனைத்து உறுப்பினர்களும் தமது ஆயுள் காலம் முழுவதும் ஒருவர் பின் ஒருவர் நடந்தாலேயே எம்மால் பெட்டல்ஜியூஸ் நட்சத்திரத்தை அடைய முடியும். இந்த கற்பனைக்கு எட்டாத தூரம் என்பது எமது பால்வெளி மண்டலத்தின் மொத்த தூரத்தில் ஒரு வீதம் தான்.

அதாவது எமது பால்வெளி மண்டலத்தின் ஒரு முனையில் இருந்து மற்ற முனைக்கான தூரம் என்பது ஒரு இலட்சம் ஒளி ஆண்டு தொலைவாகும். இதன் அளவை புரிந்துகொள்ள ஒட்டமொத்த பிரபஞ்சத்தையும் எமது பூமியின் அளவுக்கு சுருக்கி பார்த்தோம் என்றால் எமது சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரம் என்பது மனித முடியின் அகலத்தின் அளவு தூரம் தான்.

எமது நெருங்கிய நட்சத்தரமாக இருக்கும் புரொக்சிமா சென்டோரி எமது சூரியனில் இருந்து அரை கிலோமீற்றர் தூரத்திலேயே இருக்கும். இதேநேரம் அறியப்பட்டதில் மிகப்பெரிய நட்சத்திரங்களில் ஒன்றான பெட்டல்ஜியூஸ் சூரியனில் இருந்து 18 கிலோமீற்றர் தூரத்திலேயே இருக்கும்.



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# சுதந்திர தினத்துக்குமா காலாவதி திகதி?

ஹொங்கொங்கில் ஜூலை 1ஆம் திகதி சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு, அன்றைய திகதியில் தான் பிரிட்டிஷ் ஹொங்கொங்கை விட்டு வெளியேறியது.

ஆனால், சுதந்திர தினத்திற்கே காலாவதியாகும் திகதி இருக்கும் ஒரே தேசம் ஹொங்கொங் ஆகத் தான் இருக்க முடியும்.

அதாவது ஹொங்கொங்கில் சுயாட்சி, சுதந்திரம் 50 ஆண்டுகளுக்குத் தான் செல்லுபடியாகும் என்று பிரிட்டிஷ் மற்றும் சீனா ஒப்பந்தம் போட்டிருக்கின்றன. அதன்படி 2047 ஆம் ஆண்டு ஹொங்கொங் முழுக்க முழுக்க சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்.

உண்மையில் 1898 ஆம் ஆண்டு பிரிட்டன் 99 ஆண்டுகளுக்கு சீனா விடம் இருந்து குத்தகைக்கு எடுத்த நிலம் தான் ஹொங்கொங் என்பது.



# வாங்க சிரிக்கலாம்....



கொடுத்த டொக்டர் பட்டத்தை தலைவர் ஏன் வேணாம்ன்னு சொல் லிட்டாரு?
அவரு மேல நெறைய கேஸ் இருப்ப தால அவருக்கு வழக்கறிஞர் பட்டம் தான் வேணுமாம்!



வீட்டில எல்லாரும் இருக்கும் போது சத்தம் வராம எப்படி பீரோவ திறந்த...?
சுவாமி, செய்த குற்றத்துக்கு தண்டனை கொடுங்க! தொழில் ரகசி யத்த பத்தி கேட்காதீங்க.

உன் பேரு என்ன? ஏன் ராஜாராம கொலை செய்த?
இப்படித்தான் தொண தொணன்னு கேள்வி கேட்டுக்கிட்டே இருந் தான்?





நம்ம தலைவரின் சிலை மேல கழுகு சிலை வைக்க எதிர்ப்பு தெரிவிச்சீங்களே...!
இப்ப பாருங்கள்.... காக்கா உக்காந்து அசிங்கப்படுத் தாம... எவ்வளவு இலட்சணமாக இருக்கு?

நீதிமன்றத்தில நமீதாவை ஜட்ஜா நியமிச்ச என்னஆகும்?
கொலைக் குற்றவாளியைப் பார்த்து ஒங்க எட்டிடியூட் நல்லா இருந்தது. கொலை இனர்ஜெடிக்கா இருந்தது. மைண்ட் புளோமிங் சூப்பர் ....... கீப் இட் அப்....உங் களுக்கு பத்து மார்க் அப்படின்னு சொல்லுவாங்க...!



ஏன் மனைவியை கொலை செய்த?
அவதான் சுமங்கலியா சாக ணும்னு ஆசைப்பட்டாள்?




ஆர். சி. புக், லைசன்ஸ், இன்சுரன்ஸ் எல்லாம் என் கிட்ட இருக்கு சார்.
அப்ப பேர்ஸ் இல் லையா தம்பி



மொய்களில் என்ன லெட்டர் இருக்கே?
திருட்டுப் போன செருப்புக்கு நஷ்டஈடு தந்தால் மொய் எழுதுவானாம்!
எவனோ லெட்டர் எழுதி வைச்சிருக்கான்



அப்பா என்னை எப்ப எல்கேஜே யில் சேர்த்துவிடப்போற?
முளைச்சு மூனு இலை விடல்ல.. அதுக்குள்ள சொத்தையா பிரிச்சி கேட்கிற



8ம் நம்பர் பேஷண்ட் கண் முழிச்சுட்டார் டொக்டர்.
ஒப்பரேஷன் சக்ஸஸாயாகிடிச்சுன்னு சொல்லுங்க சிஸ்ட்டர்
அவருக்கு இன்னும் ஒப்பரேஷன் செய்ய இல்லையே டொக்டரே! தூங்கி கண் முழிச்சிட் டார்ன்னு சொல்ல வந்தேன்.



என்னது தல தளபதி சலூன் கடைக்குப் பக்கத்தில சி. எம் பி எம் டீக் கடைன்னு புதுஷா திறந்திருக்கிறீங்க?
எதையுமே சீஸனுக்கு ஏத்த மாதிரி செய் யணும் தலைவரே!

தளபதி போர்க் களம் சென்ற தும் செல்லை அணைத்து வைத்து விடுங்கள்.
ஏன் உபதளபதி யாரே?
மன்னர் அந்தப் புரத்தில் அமர்ந்து கொண்டு போர் தந்திரங்கள் சொல்லி சாகடிப் பார்.







தலைவர் செய்த செலவை வாங்கிய வாக்குகளால் வகுத்து வயிறு எரிஞ்சி போயிருக்கிறார்.
என்ன சொல்லுற ஒரு வாக்குக்கு 10 ஆயிரம் ரூபா வருதாம்!

# காத்தான்குடியில் 100 பேருக்கு கௌரவம்





வாரவலம் ஊடக வலையமைப்பு அதன் இரண்டாவது ஆண்டு நிறைவை யொட்டி காத்தான்குடி பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் 100 துறைசார் பணியாளர்களுக்கு ஒரே மேடையில் விருது வழங்கி கௌரவிக்கிறது .

வாரவலம் ஊடக வலையமைப்பின் தலைவரும் வாரவலம் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான கவிமாமணி ரீ. எல். ஜவ்பர்கான் தலைமையில் எதிர்வரும் 12ஆம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் குறித்த நிகழ்வு நடைபெற ஏற்பாடாக இருக்கிறது.

துறைசார் பணியாளர்கள் நூறு பேருக்கு கௌரவம் அளிக்கின்ற அன்றைய நிகழ்வில் கௌரவம் பெறுவோர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய வேர்கள் எனும் சிறப்பு மலரும் வாரவலம் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு வெளியிடும் வெளியிடப்படவு ள்ளதாக வாரவலம் ஊடக வலையமைப்பு தெரிவித்துள்ளது. குறித்த நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி றவூப் ஹக்கீம் கௌரவ அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா, முன்னாள் ராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எம் எஸ் எஸ் அமீர்அலி உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.




கனகசிங்கம் உட்பட பலர் சிறப்பு அதிதிகளாகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

வாரவலம் செய்தி பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு மலரின் முதன்மை பிரதியை பிரபல தொழிலதிபர் கலாநிதி எம் எஸ் எம் முபாரக் பெற்றுக் கொள்வதுடன் சிறப்பு பிரதியை தொழிலதிபர் எஸ். நந்தகுமாரன் பெற்றுக் கொள்கிறார்.

ஆன்மீக அதிதிகளாக சங்கைக்குரிய பொக வந்தலாவ ராகுல தேரர், மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீல மதானந்தாஜி மகராஜ், மட்டக்களப்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமா தலைவர், சங்கைக்குரிய மௌலானா மௌலவி எஸ்.எம்.அலியார் பலாஹி, மட்டக்களப்பு அம்பாறை மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஊடக அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தினகரன், தினகரன் வாரமஞ்சரின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், கெப்பிட்டல் டிவி செய்தி பிரிவு பொறுப்பாளர் எம்.நௌஷாத் முஹைதீன், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன நேத்ரா தமிழ் செய்தி பணிப்பாளர் சி பி எம் சியாம், வசந்தம் தொலைக்காட்சியின் செய்தி முகாமையாளர் எம் சித்திக் ஹனிபா, மட்டக்களப்பு மாவட்ட தகவல் அதிகாரி எம். ஜீவானந்தம் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளத்தின் தலைவர் மீரா இஸ்ஸதீன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

வாரவலம் செய்திப் பத்திரிகையும் அச்சு ஊடகத்தின் அவசியமும் என்ற தொனிப் பொருளில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம் நௌசாத் முஹிதீன் சிறப்புரையாற்றும் இந்நிகழ்வில் நூறு பல்துறை சார்ந்த சமூக பணியாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன் குறித்த நிகழ்வை பிரபல ஒலி, ஒளிபரப்பாளர் அஸ்ஸெய்யத் இர்ஃபான் மௌலானா தொகுத்து வழங்குவது குறிப்பிடத்தக்கது. வாரவலம் ஊடக வலையமைப்பு அதன் இரண்டாவது ஆண்டு நிறைவை யொட்டி காத்தான்குடி பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் 100 துறைசார் பணியாளர்களுக்கு ஒரே மேடையில் விருது வழங்கி கௌரவிக்கிறது .




# குரு "பத்மபூஷன்" பேராசிரியர் C.V சந்திரசேகர்




குரு " பத்மபூஷன்" பேராசிரியர் C.V சந்திரசேகரின் மறைவை ஒட்டிய 13ஆவது தின கிரியை வழிபாடும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மந்திர சமர்ப்பணம் நிகழ்த்தி உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் குருவருள் என்று உணர்த்திய சிவஸ்ரீ வைதீஸ்வரன் குருக்களுக்காக இந்நிகழ்வு நடத்தப்பட்டது.



அபிநயக்ஷேத்ராவிற்கு குருநாதரை அறிமுகப்படுத்திய திருமதி புஷ்பராணி சிவநேசன் திருமுறை ஓதி நிகழ்வினை ஆரம்பித்து வைத்து நெகிழ்ச்சியளித்தார்.



பக்தியுடன் கலை போற்றும் இசைக் கலைஞர் வைஷாலி யோகராஜன் நாத சமர்ப்பணம் வழங்க , கூடுகையில் இணைந்த நடனக் கலைஞர்கள் நாட்டிய சமர்ப்பணம் வழங்கினர்.

தாவரவியலில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் போது பூக்களின் மீது அதிக பிரியம் கொண்ட குருநாதருக்கு , மதிப்பிற்குரிய திருமதி அபிராமி கைலாசபிள்ளை முதல் அஞ்சலி செலுத்த

அதனைத் தொடர்ந்து முனைவர் ஜெயபிரகாஷ் சர்மா , நடனக் கலைஞர்கள் பத்தும் சாமர, ஜெகநாதன் சஞ்சீவன் மற்றும் வருகை தந்த அனைவரும் மலர் அஞ்சலி செலுத்தி வழிபட்டனர்.

பேராசிரியர் முனைவர் மௌனகுரு ஐயாவின் செறிந்த நல்லுரையும் , அமெரிக்காவில் இருந்து வருகை தந்த சிரேஷ்ட நடன ஆசிரியர் திருமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தியின் பிரார்த்தனை உரையும் அக நிறைவினைத் தந்தது.




லண்டனில் இருந்து வருகை தந்த நடனக் கலைஞர் திருமதி நிறைஞ்சனா சுரேஷ் நிறைவுரை வழங்கிய பின் மௌனாஞ்சலியுடன் பிரார்த்தனைகள் நிறைவு பெற்றன.

இன்சுவை இராப்போசனம் வழங்கிய சண்முகத்துக்கும் , ஒலி அமைப்பு வழங்கிய மிருதங்க கலைஞர் பிரபாவுக்கும் , சரஸ்வதி மண்டபத்தினருக்கும் அபிநயக்ஷேத்ரா நன்றிகளைத் தெரிவித்தது.

# மனது மறக்காத வியத்தகு ஆசான், இயக்குனர், நடிகர், கவிஞர், ஓவியர், இறக்காமம் குத்தூஸ்

சிக்குப் போடியார் என்றழைத்த சுலையுமாலெவ்வை நகுமத்தும்மா தம்பதிகளின் ஆறாவது செல்வ மகன்தான் ஜாயிஸ் என்று நாங்கள் அழைக்கும் குத்தூஸ் ஆசிரியர்.

இவர் 19790126 ஆம் திகதி இறக்காமத்தில் பிறந்தார். ஆரம்பம் முதல் உயர்தரம் வரை இறக்காமம் அல் அஸ்ரப் மத்திய கல்லூரியிலும் பட்டப் படிப்பினை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் கற்றுக்கொண்டார்

பாடசாலைக் காலத்திலேயே கலைத்துறை சார்ந்த விடயங்களில் அதிக ஆர்வம் கொண்டவராய் திகழ்ந்தார்.

தினகரன், ஜனனி, அல் ஹஸனாத் போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு கவிதை, கட்டுரை என்று நின்றுவிடாமல் அழகிய ஓவியங்களையும் வரைந்தனுப்பியபடி ஊடகத் துறையில் பிரவேசமான இவர் அதிகப்படியான வாசகர்களின் உள்ளம் கவர்ந்த கலைஞரானார். உயர்தரம் படித்த நாட்களில் "உனக்காக" என்ற தலைப்பில் தனது கன்னிக் கவிதை நூலினை வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து "மறக்குமா நெஞ்சம்" என்ற புத்தகத்தினையும் இரண்டாவது நூலாக வெளியீடு செய்தார். சிறு வயதுமுதல் சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்து தனது ஊரான இறக்காமத்தில் நடைபெறும் அனைத்து பொது வேலைகளிலும் முன் நின்று உழைத்தார்.

அரச விழாக்கள், கல்யாண வீடுகள், பாலர் பாடசாலை நிகழ்வுகளின் மேடை அலங்கரிப்பு, அறிவிப்புத் துறை என பன்முகத் திறன் கொண்டவராய் திகழ்ந்தார். விளையாட்டுத் துறையிலும் நாட்டம் கொண்டவராய் விளங்கினார். பாடசாலைக் காலங்களில் 400 மற்றும் 800 மீட்டர் ஓட்டப்போட்டியிலும் ஈட்டி எறிதலிலும் தொடர் சம்பியனாக சாதனைகள் படைத்தார். சிறந்த உதைப்பந்தாட்ட கோள் காப்பாளருமான இவர் கிரிக்கட் விளையாட்டில் all rounder ஆக திகழ்ந்தார்.

2003 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சித்திரப் பாட டிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட இறக்காமத்தின் முதலாவது இளைஞனாகவும், அம்பாரை மாவட்டத்தின் முதல் முஸ்லிமாகவும், கிழக்குமாகாணத்தில் இரண்டாவது சித்திரப் பாட டிப்ளோமா பட்டதாரியுமாக தடம் பதித்த பெருமை நண்பர் குத்தூஸையே சாரும்

அன்று பயங்கரவாதம் நிறைந்த காலத்தில் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து பொறுமையோடு தனது கற்கை நெறியினை பூர்த்தி செய்தார்.

யாழ் கல்லூரி நாட்களில் முதலாவது வருடத்தில்.. "தூங்காத கண்கள்" என்ற கவிதைப் புத்தகத்தை வெளியிட்டு யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் வெளியிடப்பட்ட முதலாவது கவிதை நூலாசிரியர் எனும் நாமத்தைப் பெற்றார்

இரண்டாம் வருடத்தில்.. "மரணம் துப்பிய எச்சில்" என்ற கவிதைத் தொகுதியையும் வெளியிட்டார்.

கல்லூரியில் இருக்கும் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல்வேறு நிகழ்வுகளில் கவிதைகளை வடித்து அவர்களின் பாராட்டுகளையும் பெற்றார்...

கல்லூரியில் எல்லா விரிவுரையாளர்களுக்கும் விருப்பமான மாணவனாக செயற்பட்டு எமதூரின் பெயருக்கு கௌரவமளித்தார்.

கல்லூரியில் மூன்றாம் வருடத்தில் "கல்லூரித் தாயில் முகிழ்த்த இதழ்கள்" எனும் பாடல் ,கவிதைகள் நிரம்பிய இரு



வெட்டினை தனது பீடாதிபதி திருநாவுக் கரசு கமலநாதன் ஐயாவின் சொந்த நிதியிலே வெளியிட்டார். "ஊமை உதடுகள்" என்ற கவிதைப் புத்தகத்தையும்,"பேசும் பூக்கள்" என்ற சித்திரப் புத்தகத்தையும் வெளியிட்டார்

யாழில் படித்த நாட்களில்.. ஈழநாடு, சங்குநாதம், வலம்புரி,உதயன் பத்திரிகைகளுக்கு கவிதை இன்னும் கட்டுரைகளையும் எழுதினார்.

கல்லூரியில் கவிப் பேழையின் தலைவராகவும் ,நுண்கலை மன்றத் தலைவராகவும் செயற்பட்டார். கல்லூரி முடிந்து தனது ஆசிரிய நியமனம் வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டத்தில் சியம்பலாகஸ் கொடுவ என்ற ஊரில் இலங்கையில் பிரபல்யமான பாடசாலையான மதீனா தேசிய பாடசாலையில் முதல் நியமனம் பெற்றுச் சென்று எட்டு வருடங்கள் கடமையாற்றினார், அங்குள்ள ஆயிரக்கணக்காண மாணவர்களுக்கு ரோல் மொடலாகத் திகழ்ந்தார், அந்த ஊர் மக்கள் மனங்களிலும் அழியாத இடத்தைப் பிடித்திருந்தார் குத்தூஸ் ஆசிரியர்.

எட்டு வருட காலத்தில் சித்திரப் பாடத்தில் பதினைந்து மாணவர்களை கல்வியியற் கல்லூரிக்கும், பல்கலைக் கழகத்திற்கும் அனுப்பியதனூடாக வரலாற்றுச் சாதனையாளரானார். 2010125ஆம் திகதி திருமதி வாழ்வில் இணைந்துகொண்டார். பழைய முஅத்தினாருடைய மகன் சுலைமாலெவ்வையின் மகளான வரலாற்று ஆசிரியை பஸ்மியாவைக் கரம் பிடித்தார். இதனூடாக யூசுப்ஸயான்,சுரைப் அகமட் , அதூப் அகமட் என்ற மூன்று ஆண் பிள்ளைகளுமுண்டு.



"பகமுனை இல்லம்" என்று செல்லக்கூடிய அனாதை இல்லத்தில் நான்கு வருடங்கள் விடுதிப் பொறுப்பாசிரியராக கடமையாற்றினார். அப்பாடசாலையை விட்டு இடமாற்றம் பெற்று தனது சொந்த ஊருக்கு தான் கற்ற பாடசாலையான அல் அஸ்ரப் மத்திய கல்லூரிக்கு வந்து சேர்ந்து தனது சேவையை தொடர்ந்து வருகின்றார்...

தரம் 10,11 வகுப்புகளுக்கான பகுதித் தலைவராக இருந்து கடின உழைப்பை மேற்கொண்டதனூடாக எமது பாடசாலை ஐந்து all "A" பெறுபேற்றினைப் பெறக் காரணமாக இருந்தார். இதுவே இப்பாடசாலை பெற்ற கூடிய all"A" பெறுபேறு என்பது குறிப்பிடத் தக்கதாகும்...

இறக்காமம் பிரதேசத்திற்கான ஜனாஸா வாகனத்தைப் பெற வேண்டும் என்ற தன் எண்ணத்தை ஊரிற்கு எடுத்துரைத்து முன்னின்று உழைத்து அதில் வெற்றியும் கண்டார்.



இக்ராம் பள்ளியின் சுற்று மதில் இன்னும் ஜாமியத் தையார் ஜும்ஆப் பள்ளிவாயலின் சுற்றுமதில், மற்றும் இறக்காமம் ஜும்ஆப் பள்ளி வாயல் கட்டுமானப் பணிகளிலும் கூடுதலான பங்குகளைச் செய்துள்ளார்....

மாணவர்களை உற்சாகப் படுத்துவதிலும், மாணவர்களை வழி நடாத்துவதிலும், மாணவரகளுக்கான களங்களைக் கண்டு வழி காட்டுவதிலும், கலைகளில் மாணவர்களை ஈடு படச் செய்வதிலும் மாணவர்களின் மனங்களை வென்ற ஆசானாகக் காணப்படும் குத்தூஸ் ஆசிரியர் ஒரு சிறந்த குறும் திரைப்பட கலைஞருமாவார். இவருடைய எழுத்தில் உருவான "6A" மற்றும் "சோதனை" என்ற இரு குறுந் திரைப்படங்கள் இலங்கை ரூபவாஹினியின் நேத்ரா அலை வரிசையில் ஒளிபரப்பாகி இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.



அதேபோல் ரூபவாஹினி நேத்ரா ஐ அலை வரிசையில் இடம்பெற்ற " படிப்பினை"என்ற நாடகத்திலும் இவர் பாத்திரம் ஏற்று நடித்திருந்தார்....

இவை தவிர.. கலைந்த கனவுகள், நாட்டுக்காக, வேம்பு, கரும்பலகை, கசக்கும் சீனி, போதையால் மாறிய பாதை, போன்ற குறும் படங்களைத் தயாரித்து இயக்கியுமுள்ளார். இறக்காமத்து பிரதேச கவிஞர்களை இணைத்து "அந்தி" என்ற கவிதைக்கான சிற்றிதழை உருவாக்கினார், மீஸான், ஒலி, வேர், மதி, கலாசுரபி போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் செயற்பட்டார்...

இவ்வாறு தன்னகத்தே பல் வேறு திறன்களைக் கொண்ட குத்தூஸ் ஆசிரியர் இன்னும் இன்னும் சாதித்து மண்ணுக்கும் மக்களுக்கும் பெரும் சேவை செய்ய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

கட்டார் நாட்டிலிருந்து
**ஜெப்ராஸ் காஸிம்**



# படைப்பாளனின் படைப்பை விமர்சனம் செய்வதை தவிர்த்து சிலர் தனிநபர் சுதந்திரத்துக்குள் மூக்கை நுழைக்கின்றனர்!

## கவிதாயினி கலைச்சுடர் ஏ.ஆர்.எப். சிமாரா (ஊதாப்பூ)

**1–ஆரம்பத்தில் நீங்கள் காலடி எடுத்து வைத்த இலக்கிய பயணத்தையும், அதன் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட அனுபவத்தையும் கூற முடியுமா?**

2000 ஆம் ஆண்டில்தான் நான் சரியான முறையில் இலக்கியத் துறைக்குள் வந்தேன். நிறைய தேடல்கள் கொண்டதாகவே எனது பயணம் இருந்ததால் மூத்த எழுத்தாளர்களின் வழியையும் அவர்களின் அறிவுரைகளையும் பெற்றுக் கொண்டேன். இலகுவாக எனக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. நிறைய என்னை நான் திருத்திக் கொண்டேன். நல்ல விமர்சனங்களும் என்னை மிக வலுவாக்கியது. குடுபத்தில் இருந்த கட்டுப்பாட்டு அந்த நேரத்தில் இருந்த சமூகத்தின் பார்வை இவை எல்லாம் என்னை எதிர்நீச்சலடிக்க வைத்தது. அந்தப் போராட்டம் என்னை சோர்வடைய செய்யவில்லை. என் இலக்கின் மீதான் ஆர்வத்தை அதிகரித்தது .

**2–உங்களது பிறப்பிடம், பெற்றோர், கல்விகற்ற பாடசாலை மற்றும் உங்கள் படைப்புகளுக்கு உறுதுணையாக இருந்தவர்களை குறிப்பிடுங்கள்?**

எனது தந்தை அப்துல் காதர் அப்துல் ரஸ்ஸால். இவர் கண்டி அக்குறணையை சேர்ந்தவர். தந்தை ஒரு மாணிக்கக் கல் வியாபாரி. அத்தோடு அவர் அருள்வாக்கி அப்துல் காதர் பரம்பரையைச் சேர்ந்தவர். (தந்தை வழி) தாய் கொழும்பு செய்யத் ஹபீப் தூஃபதுல் மஹ்கூமா. தாதியாக இருந்தார். நான் பிறந்தது கொழும்பு . ஆரம்ப கல்வி கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் பின் மடவளை மதீனா தேசிய பாடசாலையிலும் கற்றேன். பின்னர் கணினி மென்பொருள் கற்றதுடன் ஆங்கில மொழி டிப்மாளோமா, ஏ.எம்.ஐ கற்கை நெறிகளை முடித்தேன். ஊடகக் கல்வியை இடையில் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக தொடர முடியாமல் போனது.

ஆரம்பத்தில் அதாவது பாடசாலை நாட்களில் நான் மடவளையில் படிக்கும்போது எனது வகுப்பாசிரியை சுஹீரா நுஸ்ரி என்னை ஓர் எழுத்தாளராக இனங் கண்டார். அவரும் இன்னொரு ஆசிரியரான காமில் சேரும் எனது ஆக்கங்களை பத்திரிகைகளுக்கு அனுப்பினார்கள் .



ஆரம்பத்தில் ஆங்கில கவிதைகளையே எழுதினேன் . பின் தமிழிலும் எழுத ஆரம்பித்தேன்..2001 இறுதியில் வானொலி, பத்திரிகைகள் மூலமாக எனது கவிதைகளை வெளியிட்டேன். பின் தனியார் வானொலி ஒன்றில் எனது குரல் நேரடியாக ஒலிப்பதிவு செய்து சில நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின. 2002ஆம் ஆண்டு உலக இஸ்லாமிய மாநாட்டில் எனக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அது என்னை இன்னும் தமிழ் இலக்கிய உலகில் காலூன்ற ஆசையை ஏற்படுத்தியதோடு. மூத்த எழுத்தாளர்களிடம் ஆசியையும் அறிவுரைகளையும் வழிகாட்டலையும் பெற்றுக் கொடுத்தது.



**3– கந்துரட்ட வானொலியில் முஸ்லிம் சேவையில் நிகழ்ச்சி தொகுப்பாளராக இருக்கிறீர்கள். அதனைப் பற்றியும் அதன்மூலம் நீங்கள் சொல்லவரும் விடயங்களையும் கூறுங்கள்.**

இதை பற்றி நிறைய பேசலாம். கனவுகளின் மீதான பற்றுதல் எந்த அளவுக்கு இருக்குமோ அதன் வலு எம்மை எம் கனவுகளிடம் அழைத்துச் செல்லும். நீண்ட போராட்டத்தின்போது எந்த இடத்திலும் நான் சோர்வதில்லை. என் மீது விழும் அடிகளின் வலிகள் என்னை இன்னும் நிதானமாக செயற்படுத்த செய்ததேயன்றி தளர்ச்சியடைய செய்ததில்லை.



வானொலி தொலைக்காட்சி இரண்டிலுமே நான் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருகிறேன். ஆனால் கந்துரட்ட முஸ்லிம் சேவையில் கவிதைச் சாரல் மற்றும் மின்னும் மின்மினிகள் சிறுவர் நிகழ்ச்சி நேயர்கள் மத்தியில் நான் எதிர்ப்பார்த்ததை விட நிறையவே வரவேற்பை பெற்றுவருகிறது. குறுகிய காலத்தில் நிறைய ரசிகர்களை இந்த இரு நிகழ்ச்சிகளும் தன்வசமாக்கியுள்ளன.. இந்த நிகழ்ச்சிக்கு இவ்வளவு வரவேற்பை தந்து தலைதூக்க வைத்த என் அன்பு நேயர்களுக்கு நான் எப்போதும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

அதேபோல் எம் மீது நம்பிக்கை வைத்து எனக்கு இந்த பொறுப்பை வழங்கியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அ னை த் து த் து றை க ளி லு ம் பெண்கள் கால் பதித்தாலும் அதில் நிறைய சிக்கல்கள் வரும். மிகுந்த ஈடுபாட்டோடு ஒவ்வொரு விடயத்தையும் தேடி தேடி செய்கிறேன். எனது மனம் திருப்தியடையும் வரை நான் மிக நன்றாக நிகழ்ச்சிக்கு முன் எல்லாவற்றையும் சரி பார்த்து செய்துவிடுவேன்.அதன் பின் வரும் ஆரோக்கியமான பின்னூட்டங்களை தவிர வேறு எதனையும் நான் காதில் வாங்கிக்கொள்வதில்லை.

**4–எந்தெந்த தனியார் தொலைக் காட்சிகளில் நேர்காணல் செய்கிறீர்கள். ?**

utv மற்றும் அரச தொலைக் காட்சியான நேத்ரா தொலைக்காட்சியில் எனக்கு முதலில் (2019) வாய்ப்பை வழங்கியவர் சகோதரர் மபா ஃஹிர் மௌலானா. நல்ல ஆசானாக ஒவ்வொரு நுணுக்கமான விடயத்தையும் எனக்கு சொல்லிக் கொடுத்தார். இன்றுவரை நான் எந்த நிகழ்ச்சி செய்தாலும் முதலாவதாக அழைப்பை எடுத்து சரி பிழைகளை எனக்கு சொல்லித் தருவார். என்றுமே மறக்க முடியாத சகோதரர். எதிர்காலத்தில் இன்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் செய்வேன் இறைவன் நாடினால்.



**5–ஒரு படைப்பாளரின் படைப்பை விமர்சனம் செய்வதை விட்டுவிட்டு தனிநபர் சுதந்திரத்திற்குள் சிலர் மூக்கை நுழைத்து அதனை ஒரு விமர்சனமாக திரிவுபடுத்துகிறார்களே...இதனைப்பற்றி உங்கள் கருத்துக்கள்....**

இந்த விடயத்தில் பாதிக்கப்படாதவர்கள் யாருமே இல்லை. ஒருவரை எந்த விதத்திலும் தாக்க முடியவில்லை என்றாலோ ஒருவரால் ஒருவரின் வளர்ச்சியை பொறுக்க முடியவில்லை அல்லது தன்னை முந்தி விடுவாரல்ரோ என்ற தன் மீதான அவநம்பிக்கை கொண்டவர்கள் எடுக்கும் மிகப் பெரிய ஆயுதமே தனி நபர் விமர்சனம். முதலாவது இவர்கள் தன்னை கேட்டுக்கொள்ள வேண்டிய விடயம் தான் தனது இலட்சியத்தை அடைய எந்த இடத்தில் இருந்து எப்படி உழைத்து வந்தேன் என்று.



பாதிக்கப் பட்ட ஒருவரின் மூச்சு சிங்கத்தின் கர்ச்சனையை விட பயங்கரமானதாக இருக்கும். ஆக பாதிக்கப்பட்டவர் செயற்பட ஆரம்பித்தால் அவர் வெற்றியை அடையாமல் ஓய மாட்டார் .இதில் ஒரு சிலர் பயந்து ஒதுங்கலாம். ஆனால் எல்லோரும் அப்படியல்ல. வெட்ட வெட்ட ஓங்கி தழைக்கும் வாழைமரங்களும் உண்டும்.

அதுமட்டுமல்ல ஒரு சிலர் மிக கடினமாக சூழ்நிலையில் இருந்தே தன்னை வெளிப் படுத்திக் கொண்டிருப்பார்கள் . முக்கியமாக பெண்கள் .அவர்களை பொறுத்தவரையில் நிறையவே பொறுப்புகள் உள்ளன. குடுப்பத்தில் பலவிதமான பிரச்சினைகளுக்கு மத்தியில் தான் ஒவ்வொரு பெண்ணும் தனது இலட்சியத்தை நோக்கி பயணிக்கிறாள்.

விமர்சனங்கள் செய்பவர்கள் தன்னை ஒரு பெரிய ஞானியாக காட்டவும் நியாயங்களை வழங்குபவராக காட்டவும் எவ்வளவு மோசமாக முடியுமோ அவ்வளவு மோசமாக முதுகுக்கு பின்னாலோ அல்லது வேறு விதமாகவோ விமர்சனங்களை வைப்பார். இதனால் விமர்சிக்கப்பட்ட நபரின் குடும்பம் உட்பட அனைவருமே பாதிக்கப் படுவார்கள். மீண்டும் சொல்கின்றேன் எல்லோரையும் வீழ்த்தலாம் என்ற எண்ணத்தில் செய்யும் தனி நபரை தாக்கும் விமர்சனங்கள் ஒரு சிலரை இல்லாமல் செய்தாலும் இன்னும் ஒரு சிலர் ஓங்கி வளர அதுவே காரணமாகி விடுகிறது. ஒரு பிழையை சொல்லும் விதம் இருக்கிறது அவ்வாறு சொல்லும் பட்சத்தில் அதை கேட்டு நம்மை நாம் சரி செய்ய வேண்டும் அது ஆரோக்கியமானது.ஆனால் ஒருவரை தாழ்த்தி தான் உயர செய்யும் விமர்சனங்கள் சிலவேலை எதிர்மறையாக செயற்படலாம்.

(தொடர் 7ஆம் பக்கம்)



பாத்திமா நளீரா

# நாதஸ்வர மேதை பஞ்சாபிகேசனுக்கு நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நாதஸ்வர மேதை கலாநிதி எம். பஞ்சாபிகேசனனின் நூற்றாண்டு விழா 01.07.2024 சாவகச்சேரியில் பல நூற்றுக்கணக்கான இசை ஆர்வலர்களின் பங்கேற்புடன் கோலாகலமாக இடம்பெற்றது.

மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தானை இராக்கச்சி அம்மன் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள பஞ்சாபிகேசன் வாழ்ந்த இல்லத்தில் அவரது திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிலையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து இராக்கச்சி அம்மன் ஆலயத்தில் இருந்து பஞ்சாபிகேசனின் திருவுருவப்படம் மங்கலப் பொருட்களுடன் நாற்பதுக்கும் மேற்பட்ட நாதஸ்வரத் தவில் கலைஞர்களின் இசை ஆராதனையுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டது.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரையையும் ஆசிரியர் த. பரமானந்தம் தொடக்கவுரையையும் ஆற்றினர். பேராசிரியர் என். சண்முகலிங்கன், பேராசிரியர் அ. சண்முகதாஸ்., சட்டத்தரணி கே. சயந்தன், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் கிருபாசக்தி கருணா ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். நாதஸ்வரக்கலை பற்றிய சிறப்புக்கட்டுரைகளை உள்ளடக்கிய எம்பஞ்சாபிகேசன் என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் வெளியீட்டுரையை செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் வழங்கினார்.

நிகழ்வில் மூத்த நாதஸ்வரக் கலைஞர் பிச்சையப்பா ரஜீவன், தவில் கலைஞர் தெட்சணாமூர்த்தி உதயசங்கர் ஆகியோர் பஞ்சாபிகேசன் நினைவு தங்கப்பதக்க விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பஞ்சாபிகேசனுடன் நீண்டகாலம் பணியாற்றிய கலைஞர்கள் வரிசையில் தவில் வித்துவான் ச. முருகையா நாதஸ்வர வித்துவான் த. கோபாலசாமி ஆகியோர் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புகழ்பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்கள் பங்கேற்ற இரண்டு கச்சேரிகள், பஞ்சாபிகேசனின் பேர்த்தி இசையாசிரியர் நிருத்திகா சுஜீவனின் பாட்டு இந்துக் கல்லூரி மாணவிகளின் நடனம் என பல நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்துக் கல்லூரி அதிபர் வரவேற்புரையையும் கவிஞர் ச. மார்க்கண்டு கவி வாழ்த்தையும் வழங்கினர். நிகழ்வுகளை அதிபர் வை. விஜயகுமாரன் தொகுத்து வழங்கினார்.













(6 ஆம் பக்கத் தொடர்.....)

**6–ஒரு படைப்பாளி என்ற நிலையில் உங்கள் படைப்புகள் சமூகத் தேடல்கள் வழியே இலக்கிய உலகில் நீங்கள் கண்ட சாதிப்பு பாதிப்புகள் எவை?**

சாதிப்பு என்ற வார்த்தை மிகப் பெரியது.இன்னும் நான் அதை நோக்கிய தேடலின் பயணத்திலேயே இருக்கிறேன்.சாதிப்பு இப்போதைக்கு பாதிப்புகளை கடந்து இன்னும் நிலைத்து இருப்பதுதான் இலக்கிய சாகரத்தில் இன்னும் கரையில் தான் நான். இன்னும் சமூகத்துக்குள்ளும் இலக்கியத்துக்குள்ளும் ஊடுருவி தேடலில் ஆழ்ந்திருக்கும் ஒரு புள்ளி நான்.

**7–பெண் படைப்பாளிகள் அவர்களின் படைப்புகள் மூலம் சிலநேரம் கடும் விமர்சனத்திற்குள்ளாகிறார்கள். என்ன காரணம் என நினைக்கிறீர்கள். சிலநேரம் உள்வாங்கப்படும் கருத்துக்களில் முரண்பாடுகளா?**

பெண் இந்த சொல் சமூகத்தால் எப்போதும் விமர்சகர்களுக்கு முதல் வரிதான். அதற்குள் அகப்படாமல் செல்ல வேண்டியது நமது ஆக்கத்தின் புரிதலும் வெளிப்பாடும்தான் காரணம். அதிகப்படியான பெண் உரிமை பேசும்போதே இந்த பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன. பெண்ணுக்கான உரிமைகள் இப்போது வழங்கப்பட்டுதான் உள்ளது .அதை நாம் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தி பெண் என்ற இயல்பை தாண்டி செல்லும்போது தர்க்க ரீதியான கருத்துக்கள் வெளியாகின்றன.

நான் எப்போதும் பெண் என்ற அந்த இடத்தை விட்டுக் கொடுத்து அந்த இலயல்பை தாண்டி செல்லக்கூடாது என்பது என் கருத்து. ஏன் என்றால் இப்போது பெண்களுக்கு சுதந்திரம் இல்லை என்ற வார்த்தைக்கு இடமில்லை. அத்துமீறல்களுக்கு குரல் கொடுக்கலாம். அதை விட்டு விட்டு ஏட்டிக்கு போட்டி என்ற நிலையே சர்ச்சைக்குரிய விடயமாகிறது.

ஏன் நாமே நம்மை விமர்சன பொருளாக மாற்ற வேண்டும். நான் பெண் என்ற கௌரவத்தை எப்போதும் நாம் பாதுகாக்க வேண்டும் அதுதான் சுதந்திரம்.

ஒரு சிலர் இன்னும் இருக்கத்தான் செய்கின்றார்கள் நாம் எப்படி இருந்தாலும் அதை விமர்சிக்கவே செய்வார்கள் .அவர்களின் அறியாமையை நினைத்து கவலையடையத்தான் முடியுமே அன்றி வேறு ஒன்றும் செய்ய முடியாது.புன்னகைத்தப் படியே நகர்தல் நல்லது.

**8– ஒருவரின் படைப்பை காட்டிலும் அவரை அதிகமாக சொல்லக் கூடியது எதுவும் இல்லை அல்லவா .....அதற்கேற்ப பிறர் மூலம் உங்கள் மதிப்பீடு பங்களிப்பு என்ன?**

இந்த நேர்காணலின் பின் வாசகர்களின் இன்னும் மதிப்பீட்டை எதிர்பார்க்கிறேன்.

**9–பெண் படைப்பாளிகளின் ஆளுமை பற்றியும் ஆளுமை என்பதை எந்த கோணத்தில் வைத்து பார்க்கிறீர்கள் என்பதையும் கூறுங்கள். ?**

பெண் தனது அன்றாட வேலைகளுக்கு மத்தியில் ஒரு விடயத்தை செய்கிறாள் என்றால் நிச்சயமாக அவள் மிகுந்த ஆளுமை கொண்டவளே.இங்கு அவள் இரண்டு விடயங்களை ஒரே நேரத்தில் செய்கிறாள். தனது தனிப்பட்ட விடயத்தோடு தனது கடமைகள்.இவை இரண்டையுமே அவள் சரியாக செய்கிறாள் என்றால் நிச்சயமாக பெருமையாகப் பார்க்க வேண்டிய ஆளுமையே.

இறைவன் அவளை குழந்தைகளை பெற்றெடுக்கும் ஒரு ஆற்றல் மிக்கவளாகவே படைத்துள்ளான் .அவனின் படைப்பை சுமப்பவள் .ஆகையால் இறைவனே அவளை மிக உயர்ந்த இடத்தில் வைத்திருக்கிறான்.இதுவே பெண்ணின் ஆளுமைக்கு பெரிய எடுத்துக் காட்டு.

**10–சமூக ஊடகங்களில் புற்றீசல்களைப் போல் புதுக் கவிதைகள் பறக்கின்றன. இதனைப் பற்றி.....?**

எல்லோருமே எல்லாம் தெரிந்து வருபவர்கள் அல்ல .முதல் அடி பிழைத்தால் அடுத்த அடியை நாம் சரியாக கற்று முன்னெடுத்து வைக்க வேண்டும். அதற்கு நிச்சயமாக மூத்த ஆளுமைகளின் அறிவுரை பெறுவதோடு தேடல் , ஆழ்ந்த வாசிப்பு சுயமதிப்பீடு நிச்சயமாக தேவை. அவை இல்லாமல் இருக்கும் பட்சத்தில் புற்றீசல் போல் சில காலமே நிலைக்கலாம்.

புதுக்கவிதைகளின் சிறப்பே அதன் ஆழமும் இலகு மொழியுமே. அர்த்தமற்ற வரிகளை அர்த்தம் கொண்டவைகளாக்க வாசிப்புத் தேவை. .இப்போது வாசிப்பு இல்லை அத்தோடு ஒருவரின் பிழையை சரியாக சொல்லும் நபர்களும் இல்லை. அப்படி சொன்னாலும் அதை ஏற்கும் மனப்பக்குவம் இல்லை. பக்குவப்படாமல் உணர்ச்சி வசப்படும் எழும் எழுத்துக்கள் புற்றீசல்களே.

**11–நீங்கள் வெளியிட்ட புத்தகங்கள் .....மற்றும் உங்களுக்கு கிடைத்த விருதுகள்?**

2019 கரையைத் தழுவும் அலைகள், 2020, அரச இந்து கலாசார திணைக்களம் கலைச்சுடர் 2022 இனிய நந்தவனம் ஃபவுண்டேசன் சாதனைப் பெண் 2023அமுத சுரபி ஈழக்குயில் சந்தக் கவி 2022ல் இஸ்லாமிய மாநாட்டில் இளம் படைப்பாளர்

**12–நீங்கள் இன்னும் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

எப்போதும் எமது இலக்கில் செல்லும்போது வரும் தடைகளை கண்டு அச்சமடையக் கூடாது.

உங்கள் குடும்பம் முக்கியமான ஒன்று. அவர்களின் ஆதரவும் எப்போதும் தேவை அது இருக்கும் பட்சத்தில் கனவுகள் கைகூடும்.நான் சமூக சேவைகளில் ஈடுபட்டாலும் எதுவும் வெளியே தெரிய செய்வதில்லை. கொடுப்பது முடியுமானரை மறைவாகவே செய்ய முயலுங்கள்.

வாழ்க்கை மிக கடினமான பாதை. கடினத்தை ரசிக்க பழகிக் கொள்ளுங்கள் புன்னகைத்தப் படியே வெற்றியை நோக்கி பயணம் செய்யுங்கள்.

# சினேகா பிரசன்னாவை ஆச்சரியப்படுத்திய 'சின்ன சின்ன கண்கள்'

தளபதி விஜய் நடிப்பில், வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகி உள்ள 'கோட்' திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து வரும் செப்டம்பர் 5ஆம் தேதி வெளியாக உள்ளது என்பது தெரிந்ததே. இந்த நிலையில் இந்த படத்தில் இடம் பெற்ற 'சின்ன சின்ன கண்கள்' என்ற பாடல் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் இந்த பாடலில் பவதாரிணி குரல் ஏஐ டெக்னாலஜி மூலம் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தது.

மேலும் இந்த பாடலின் லிரிக்ஸ் வீடியோவில் இடை இடையே வரும் சில காட்சிகளில் விஜய் மற்றும் சினேகாவின் கெமிஸ்ட்ரி காட்சிகள் இடம் பெற்றிருந்தது சூப்பராக இருந்தது என்று ரசிகர்கள் பாராட்டினர்.

இந்த நிலையில் தனியார் நிறுவனம் ஒன்று இந்த பாடலின் வீடியோவை ரீகிரியேட் செய்துள்ளது. அதில் விஜய்க்கு பதிலாக பிரசன்னாவை வைத்து பிரசன்னா சினேகாவின் இரண்டு குழந்தைகளையும் அதில் இணைத்து 'சின்ன சின்ன கண்கள்' பின்னணியுடன் வீடியோ ஒன்றை பதிவு செய்து இருவருக்கும் அனுப்பி உள்ளது. இந்த வீடியோவை பார்த்து ஆச்சரியமடைந்த சினேகா, பிரசன்னா 'சின்ன சின்ன கண்கள்' பாடலில் தங்கள் குடும்பமே இருப்பதை பார்த்து மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த வீடியோவை இருவருமே தங்களது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்துள்ள நிலையில் பிரசன்னா சினேகா குடும்பம் க்யூட்டாக இருக்கிறது என்று கமெண்ட் பதிவாகி வருகிறது.



# விடாமுயற்சி' க்கு இன்ப அதிரிச்சி

அஜித் நடிப்பில், மகிழ் திருமேனி இயக்கத்தில், அனிருத் இசையில் லைகா நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகி வரும் 'விடாமுயற்சி' திரைப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தற்போது அஜர்பைஜான் நாட்டில் நடைபெற்று வரும் நிலையில் இந்த படத்தின் முக்கிய அப்டேட்டை அஜித்தின் மேனேஜர் சுரேஷ் சந்திரா தனது சமூக வலை தளத்தில் அறிவித்துள்ளார்.

'விடாமுயற்சி' படத்தின் அறிவிப்பு வெளியாகி இரண்டு வருடங்கள் ஆன பின்னரும் 70 முதல் 80 சதவீத படப்பிடிப்பு தான் இன்னும் முடிவடைந்து இருக்கிறது என்று கூறப்படுகிறது. ஒரு வழியாக இந்த படத்திற்கு இருந்த சில பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு தற்போது அஜர்பைஜானில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.இந்நிலையில் ஜூலை இரண்டாம் வாரத்திற்குள் இந்த படத்தின் மொத்த படப்பிடிப்பு முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனை அடுத்து விறுவிறுப்பாக தொழில்நுட்ப பணிகளை தொடங்கி வரும் தீபாவளி அன்று இந்த படத்தை ரிலீஸ் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 'விடாமுயற்சி' அப்டேட் கேட்டு பல மாதங்களாக அஜித் ரசிகர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் தற்போது நாளை இரவு 7.03 'விடாமுயற்சி' படத்தின் அப்டேட்டை லைகா நிறுவனம் வெளியிட இருப்பதாக சுரேஷ் சந்திரா தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து அஜித் ரசிகர்கள் இன்ப அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர். ஒரு வழியாக 'விடாமுயற்சி' அப்டேட் வெளிவர தொடங்கி விட்டால் அடுத்தடுத்து ஆச்சரியப்படும் அப்டேட்டுகள் வரும் என்றும் கூறப்பட்டு வருகிறது.

அஜித், அர்ஜுன், த்ரிஷா, ரெஜினா, ஆரவ் உள்பட பலர் நடித்திருக்கும் 'விடாமுயற்சி' படம் இந்த ஆண்டின் மிகப்பெரிய எதிர்பார்ப்புக்குரிய படங்களில் ஒன்று ஆகும்.'



# கவின் ஜோடியாக ஆண்ட்ரியா, அனுஷ்கா ஷர்மா







நடிகர் கவின் நடிப்பில், வெற்றிமாறன் தயாரிப்பில், 'மாஸ்க்' என்ற படத்தின் அறிவிப்பு சமீபத்தில் வெளியான நிலையில் இந்த படத்தின் முக்கிய கேரக்டரில் ஆண்ட்ரியா நடிக்கிறார் என்று ஏற்கனவே செய்திகள் வெளியானது.

இந்த நிலையில் தற்போது வந்துள்ள தகவல் படி இந்த படத்தில் கவின் ஜோடியாக நடிப்பது பிரபல கிரிக்கெட் வீரர் விராட் கோலியின் மனைவி அனுஷ்கா ஷர்மாவின் நெருங்கிய உறவினர் என்று கூறப்படுகிறது.

பாலிவுட் நடிகையும் விராத் கோஹ்லியின் மனைவியுமான அனுஷ்கா ஷர்மாவின் நெருங்கிய உறவினர் ருஹானி ஷர்மா. இவர் ஒரே ஒரு தமிழ் படத்திலும் சில தெலுங்கு மற்றும் மலையாளம் மற்றும் இந்தி படங்களிலும் நடித்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு 'கடைசி பெஞ்ச் கார்த்தி' என்ற தமிழ் படத்தில் நடித்த ருஹானி ஷர்மா, ஏழு ஆண்டுகளுக்கு பிறகு தற்போது 'மாஸ்க்' படத்தில் கவின் ஜோடியாக நடித்த ஒப்பந்தமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.



# 33 வயது நடிகைக்கு திருமணம்...

33 வயது தமிழ் நடிகைக்கு அண்மையில் திருமணம் நடந்துள்ளதை அடுத்து திருமணம் குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது. இதனை அடுத்து அவருக்கு ரசிகர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு 'வால்மிகி' என்ற திரைப்படத்தில் அறிமுகமான நடிகை மீரா நந்தன் அதன் பிறகு 'அய்யனார்' 'காதலுக்கு மரணமில்லை' 'சூரிய நகரம்' 'சண்டமாருதம்' 'நேர்முகம்' உள்ளிட்ட சில தமிழ் படங்களிலும் பல மலையாள படங்களிலும் நடித்துள்ளார். இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மீரா நந்தன் திருமணம் செய்யப் போகிறார் என்றும் பெற்றோர்கள் மூலம் நிச்சயிக்கப்பட்ட இந்த திருமணம் விரைவில் நடைபெறும் என்று கூறப்பட்டது. அது மட்டும் இன்றி கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு திருமணத்துக்கு முந்தைய சடங்குகள் குறித்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை மீரா நந்தன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்திருந்தார். இந்த நிலையில் கேரளாவில் மீரா நந்தன் ஸ்ரீஜூ திருமணம் நடைபெற்ற நிலையில் இந்தத் திருமணம் குறித்த புகைப்படத்தை மீராவின் இன்ஸ்டாவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு ரசிகர்களின் வாழ்த்துக்கள் குவிந்து வருகிறது.



# மணமாகி ஒரு வாரம் கூட ஆகவில்லை.. அதற்குள் கர்ப்பமா?

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் திரைப்படத்தில் நாயகியாக நடித்த நடிகைக்கு அண்மையில் திருமணமான நிலையில் கடந்த 29ஆம் திகதி அவர் தனது கணவருடன் மருத்துவமனைக்கு சென்றதாக வெளியாகி இருக்கும் வீடியோ இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த 'லிங்கா' திரைப்படத்தில் அனுஷ்கா ஷெட்டி மற்றும் சோனாக்ஷி சின்ஹா ஆகிய இருவரும் நாயகிகளாக நடித்திருந்தனர். சோனாக்ஷி சின்கா நடித்த ஒரே தமிழ் படம் இதுதான் என்ற நிலையில் கடந்த வாரம் அவர் நடிகர் ஜாஹீர் இக்பால் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இந்த திருமணம் எளிய முறையில் நடந்ததாகவும் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டுமே இந்த திருமணத்தில் கலந்து கொண்டதாகவும் கூறப்பட்டது. இந்த நிலையில் ஜூன் 23ஆம் திகதி ஜாகிர் இக்பால் மற்றும் சோனாக்ஷி சின்கா திருமணம் நடந்த நிலையில் அன்று சோனாக்ஷி தனது கணவருடன் மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு காரில் சென்ற வீடியோ இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

சோனாக்ஷி சின்ஹா எதற்காக மருத்துவமனை சென்றார் என தெரியாத நிலையில் இந்த வீடியோவை பார்த்த நெட்டிசன்கள் அவர் கர்ப்ப பரிசோதனை செய்வதற்காக சென்று இருக்கலாம் என்று கமெண்ட்களை பதிவு செய்து வருவது பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது. சோனாக்ஷி சின்ஹா மற்றும் அவரது கணவர் இருவரும் இந்த செய்திக்கு எந்தவித விளக்கமும் இதுவரை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருமணத்திற்கு முன்பே பாலிவுட் நடிகைகள் கர்ப்பமாகி அதன்பின் திருமணம் செய்து கொள்வது என்பது சர்வ சாதாரணமாக நிகழ்ந்து வருகிறது. நடிகை அலியா பட் உள்பட ஒரு சில நடிகைகள் திருமணத்திற்கு முன்பே கர்ப்பமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கங்குவா படம் ரிலீஸ் ஆவதற்கு பல பிரச்சனை

சிறுத்தை சிவாஜோதிகா போட்ட கண்டிஷன் இயக்கத்தில் சூர்யா நடிப்பில் ஞானவேல் ராஜாவின் ஸ்டுடியோ கிரீன்ஸ், வம்சி கிருஷ்ண ரெட்டி மற்றும் பிரமோத் உபளபதியின் யுவி கிரியேசன்ஸ் ஆகிய நிறுவனங்கள் தயாரிப்பில் 300 கோடி செலவில் கங்குவா படம் உருவாகி இருக்கிறது. இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசை அமைத்திருக்கிறார். இதில் சூர்யா, பாபி டியோல், திஷா பதானி, நடராஜன் சுப்பிரமணியம், யோகி பாபு, கே.எஸ் ரவிக்குமார் ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

இப்படம் தமிழ், கன்னடம், ஹிந்தி உட்பட 38 மொழிகளில் உலக அளவில் ஐமேக்ஸ் தரத்தில் வெளியாகிறது. இப்படிப்பட்ட படம் வெளியிடுவதற்கு முன்னே 500 கோடி அளவிலான வருமானத்தை டிஜிட்டல் உரிமை மூலம் பெற்றுவிட்டது. மேலும் போஸ்டர்கள், கிளிம்ஸ் வீடியோ, டீசர் உள்ளிட்டவை அனைத்தும் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுவிட்டது.

அந்த வகையில் இப்படம் எப்பொழுது வெளிவரும் பார்க்கலாம் என்று ஆர்வத்துடன் இருந்த ரசிகர்களுக்கு சூர்யா அவருடைய எக்ஸ் வலைதளத்தில் அக்டோபர் 10ஆம் திகதி அனைத்து திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிப்பு கொடுத்து இருக்கிறார். இதற்கிடையில் கங்குவா படம் ரிலீஸ் ஆவதற்கு சில பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கிறது.

அதாவது கங்குவா படத்திற்கு தொடர்ந்து பிரமோஷன் மற்றும் இதர வேலைகள் இருப்பதால் சூர்யாவால் கவனம் செலுத்த முடியவில்லை. அதற்கு காரணம் ஜோதிகா போட்ட ஒரே ஒரு கண்டிஷன். தற்போது குடும்பத்துடன் மும்பையில் இருப்பதால் ஜோதிகா அங்கே பல படங்களில் கமிட் ஆகி பிசியாக நடித்துக் கொண்டு வருகிறார். இதனால் மாசத்திற்கு பாதி நாள் சூர்யா வீட்டில் இருந்து குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேண்டும்.

மற்ற நாட்களில் ஜோதிகா வீட்டில் இருந்து குழந்தையை பார்த்துக் கொள்ளும் பொழுது சூர்யா அவருக்கான வேலையை பார்க்க வேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அதன்படி ஜோதிகா ஷூட்டிங் போய்க் கொண்டிருப்பதால் சூர்யா மற்ற வேலைகளில் ஈடுபட முடியாமல் வீட்டில் பிள்ளைகளை பார்த்துக் கொள்கிறார்.

இதனால் என்ன பண்ணுவது என்று தெரியாமல் ஜோதிகா விடமும் காரராக பேச முடியாமல் தவித்திருக்கிறார். ஆனால் சூர்யா நடிக்கும் படமும் ஜோதிகா நடிக்கும் படங்களும் ஒன்னு இல்லை. சூர்யாவை நம்பி பல கோடி முதலீடு செய்து தயாரிப்பாளர்கள் லாபத்தை பார்ப்பதற்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜோதிகா அதைப் புரிந்து கொள்ளாமல் அவர் நடிக்கும் படங்களுக்கும் முக்கியத்துவம் வேண்டும் என்று சூர்யாவிடம் திட்டவட்டமாக சொன்னதால்தான் கங்குவா படம் ரிலீஸ் ஆவதற்கு பல பிரச்சனைகளை சந்தித்து இருக்கிறது.



கடந்த வாரத் தொடர்ச்சி...

# குழந்தைகளை செதுக்கும் சிற்பி பெற்றோர்களே!

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபி றங்காப்ப ண்புடை மக்கட் பெறின்.

பழி உருவாக்காத பண்புடைய குழந்தைகளைப் பெற்றால் எழுகின்ற பிறப்புக்கு எல்லாம் தீயவை தீண்டாது.

பிள்ளைகளை தொட்டு பேச அனுமதிக்காதீர்கள். பிள்ளைகள் யாரோடும் தொட்டுப் பேச பழக்காதீர்கள்.

தொடுதலில் நல்ல தொடுதல், கெட்ட தொடுதல் (good touch, bad touch ) எதுவுமே தேவையில்லை.

குழந்தைகள் அருவருப்பு கொள்ளும் செயல்களை தவிருங்கள்.

உங்கள் அன்பை பார்வையில், பேச்சில் உணர வையுங்கள்.

எப்போதும் நல்ல செய்கைகளில் உடன் இருப்பதை உறுதிப் படுத்துங்கள். தவறான செயல்களுக்கு உறுதுணையாக இருக்க மாட்டீர்கள் என்பதை எடுத்து சொல்லுங்கள். சந்தர்ப்பம் வரும் போது அதை உணர்த்துங்கள்.

இரவில் உறங்கும் முன் ஏதாவது கதைகள் சொல்லுங்கள். கதைகள் மூலமாக நற்சிந்தனைகளை அவர்கள் உள்ளத்தில் விதைக்கலாம். அவர்களை வசியப் படுத்தும் விடயங்களில் இதுவும் ஒன்றாகும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் மனம் விட்டு பேசுங்கள்.

பிள்ளைகளை கடுமையாக திட்டி விட்டால் அல்லது அடித்து விட்டால் நேரம் கடந்து மன்னிப்பு கேளுங்கள். ஏன் திட்டும் சூழ்நிலை உருவானது என்பதை புரிய வையுங்கள். அவர்களும் உங்களிடம் மனம் விட்டு மன்னிப்பு கேட்பார்கள்.

உங்கள் அன்பினை வெளிப்படுத்துவது போலவே உங்கள் சிரமான சூழ்நிலையையும் ஆழமாக இல்லாமல் மேலோட்டமாக பிள்ளைகளுடன் பகிருங்கள். அவர்களுக்கு கஷ்ட, நஷ்டம் தெரியாமல் வளர்க்க வேண்டும் என்று ஒருநாளும் நினைக்காதீர்கள். அவர்களே உங்களுடன் நெருக்கமாவார்கள். குழந்தைகளிடம் நம்பிக்கைக்குரிய நபராக மாறுங்கள். அவர்களாகவே ஓடி வந்து எதையும் தயக்கமின்றி பயமின்றி உங்களிடம் ஒப்புவிப்பார்கள்.



முடிந்தளவு வெளி நபர்களிடம் ஒட்டுதலுடன் இருக்க அனுமதிக்காதீர்கள். நீங்கள் நல்ல நண்பனாக குழந்தைக்கு வீட்டில் இருந்தால் அவர்கள் வெளியில் உறவைத் தேட மாட்டார்கள்.

பிள்ளைகள் கேட்டதை எல்லாம் உடனே வாங்கிக் கொடுக்காதீர்கள். அத்தியாவசிய தேவையைத் தவிர்த்து ஏனைய வற்றை ஓரிரு நாட்கள் அவசரமின்றி தாமதித்து வாங்கிக் கொடுங்கள். அவர்களின் பிடிவாதத்திற்கும், பிழைக்கும் துணைப்போகாதீர்கள்.அழுது சாதிக்க விடாதீர்கள்.

பெரியவர்களுக்கு மரியாதை செய்யக் கற்றுக் கொடுங்கள். பெரியவர் நின்று கொண்டிருக்க எழும்பி இடம் கொடுக்காமல் அமர்ந்திருப்பது, பெரியவர்கள் பேசும் போது செவி சாய்க்காமை என்பன பிழையான செயலென உணர்த்துங்கள்.

அதற்கு முன்பாக நீங்கள் குழந்தைகளை மரியாதை குறைவான வார்த்தைகளால் பேசுவதை தவிருங்கள். நீங்களும் பெரியவர்களிடம் மரியாதை செலுத்துங்கள். காரணம் பெற்றோரே பிள்ளைகளின் வழிகாட்டி. நன்றி, மன்னிப்பு இரண்டையும் தயங்காமல் சொல்லப் பழக்குங்கள். அவர்கள் விருப்பம் போலவே எல்லா விடயங்களுக்கும் தலை சாய்க்காமலும் உங்கள் விருப்பங்கள் அனைத்தையும் அவர்கள் மீது திணிக்காமலும் நடுநிலையாக வாழுங்கள்.வீட்டில் பிள்ளைகளை அழைக்கும் வார்த்தை மரியாதையானதாக இருக்கட்டும். பிள்ளைகளின் நண்பர்களுடன் உரையாடும் சொற்பதங்களை அவதானியுங்கள்.தரமற்ற வார்த்தைகள் உபயோகிக்கும் போது முதலில் எச்சரிக்கை செய்யுங்கள்.

மீண்டும் உபயோகிக்க அனுமதிக்காதீர்கள்.

இன்றைய குட்டீஸ் பார்க்கும் கார்ட்டூன், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றில் சிறுவர்கள் அதீத வார்த்தை பிரயோகங்களை பாவிக்க அதை கைத்தட்டி மக்கள் இரசிக்கின்றனர். எனவே சிறுவர் நிகழ்ச்சிகள் என்றாலும் தரமான நிகழ்ச்சிகளை மட்டும் பார்க்க அனுமதியுங்கள்.

பெற்றோரை பெயர் சொல்லி அழைப்பது, வீட்டு முதியவர்களை கிழவன், கிழவி என்று கூறுவது நண்பர்களை கஸ்மாலம், டுபுக்கு போன்ற அகராதியில் இல்லாத வார்த்தைகளை உபயோகித்து பேசுவது அருவருக்கும் பேச்சாக உள்ளது.

இதற்கு எப்போதும் அனுமதி கொடுக்காதீர்கள்.

பகிர்ந்து உண்ணல், மற்றவர்களுக்கு இரக்கப் படல், கொடுத்து உதவுதல் என்பது சிறந்த பண்பு. வளர்த்து விடுங்கள்.

யாரும் பேசும் போது கேட்டு நிதானமாய் பதில் சொல்லப் பழக்குங்கள்.

கல்வியில் போட்டி இருக்கட்டும். பொறாமை வேண்டாம்.

உங்களுக்கு தொல்லை தரக்கூடாது என்பதற்காக கைப்பேசியில் விளையாட கொடுக்காமல் வெளியில் அழைத்துச் சென்று விளையாட விடுங்கள்.கைபேசி பார்க்க அவர்களிடமே தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை சொல்லச் சொல்லி அவர்கள் தெரிவு செய்த நேரம் கொடுத்து குறிப்பிட்ட நேரத்தில் வாங்குங்கள்.முதலில் சிணுங்குவார்கள். பின் பழகிக் கொள்வார்கள். ஒரு வேளை உணவாவது பிள்ளைகளுடன் குடும்பமாக சேர்ந்து அமர்ந்து உண்ணுங்கள். எல்லா உணவுகளையும் உண்ணப் பழக்குங்கள்.

அவர்களின் உடல் நலன் ஆரோக்கியமாக அமையும்.பிள்ளைகள் படிக்கும் நேரங்களில் நீங்கள் கைபேசியில் காணொளி பார்ப்பது, தொலைக்காட்சி பார்ப்பதில் மூழ்குவது, மற்றவர்களுடன் சத்தமாக நேரிலோ, கைபேசியில் கதைப்பது என்பவற்றை தவிருங்கள். குழந்தைகளுக்கு நீங்கள் முன்னுதாரணமாக இருங்கள். காரணம் குழந்தைகளை செதுக்கும் சிற்பி முதலில் பெற்றோர்களே!நீங்கள்நல்லசெயற்பாடுகள் மூலமாக அவர்களை செதுக்க நல்லதொரு பிள்ளையாக இந்த சமூகத்தில் வளர்வார்கள்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# தலைபோகும் தலைமுடி பிரச்சினைக்கு காரணம் என்ன?

தலைமுடி பிரச்சினை இன்றைக்கு தலைபோகும் பிரச்சினையாக உள்ளது. ஜோதிட ரீதியாக காரணங்களும், அதற்கான பரிகாரங்களையும் கூறியுள்ளனர்.

கூந்தல் வளர வேண்டும் என்பதற்காக விளம்பரத்தில் வரும் தைலங்களை வாங்கி பூசுகின்றனர். கூந்தல் உதிர்வு பிரச்சினைக்கு ஜோதிட ரீதியான காரணங்கடிளயும் பரிகாரங்களையும் பார்க்கலாம்.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி காமம் செப்பாது கண்டது மொழிமோ பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற் செறி எயிற்று அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே" தலைவி சூடியுள்ள பூவில் மொய்க்கும் தும்பி என்னும் வண்டைப் பார்த்து நீ அறிந்த பூக்களில் என் தலைவியின் கூந்தலைக் காட்டிலும் நல்ல மணமுள்ள பூவை அறிந்ததுண்டா? என்று வினவிக்கொண்டே அவளது உச்சியை முகர்கிறான். (அவள் நாணம் நீங்குகிறது. உறவு மலர்கிறது.)



தேன் தேடும் வாழ்க்கை கொண்ட அழகிய சிறகுகளை உடைய தும்பியே! தேன் உண்ணும் காம ஆசையால் சொல்லாமல் உண்மையாக நீ கண்டதைச் சொல். இவள் என்னிடம் பயின்றதைக் கெழுதகை நட்பாகக் கொண்டவள். அவளும், அவள் கூந்தலும் மயிலின் இயல்பைக் கொண்டவை. அவற்றைக் காட்டிலும் நல்ல மணமுள்ள பூக்கள் இருக்கின்றனவா? என்கிறான்

இந்த பாடல் வரிகளும் அதன் பொருளும் நமக்கு உணர்த்துவது அழகான கூந்தலுக்கும் ஆழமான காதலுக்கும் காரகன் சுக்கிரன் என்பதுதான்.

இன்று பலரிடமும் அழகான கூந்தலும் இல்லை. ஆழமான காதலும் இல்லை. எல்லாம் அவசர காதல்தான்.

இன்று நீண்ட கருமையான கூந்தலை பற்றி சினிமா பாடலில்தான் கேட்கும் நிலையில் இருக்கிறது. தலைக்கு முடி என்பது மிகவும் முக்கியமானதாகும். தலை நிறைய முடி இருந்தால் மட்டுமே முகத்திற்கும் அழகு உண்டாகும். தலை முடி நீளமாக அழகாக உள்ள பெண்களை எல்லா ஆண்களும் விரும்புவார்கள். தற்போது நிறைய முடி வளர்த்து குடுமி போட்டுக் கொள்ளும் ஆண்களும் உள்ளார்கள்.

தலைவாரி பூச்சூட்டிக் கொள்வது என்பது பெண்களுக்கே தனி அழகு தான். பெண்களுக்கு முடி கொட்டும் என்றாலும் வழுக்கை என்பது அவ்வளவாக ஏற்படாது. ஆனால் முடி கொட்டி வழுக்கையால் பாதிக்கப்படுபவர்கள் அதிகம் ஆண்களே. அழகான கருமையான முடியை பெற லக்கினமும் சுக்கிரனும் பலமாக இருக்கவேண்டும். சாதாரணமாக முடிக்கு காரகன் கேது என்றாலும் அழகிய கருமையான கூந்தலுக்கு காரகன் சுக்கிரனாவார். எண்ணை வடியும் சிக்கு சேர்ந்த துர்நாற்றத்துடன் கூடிய கூந்தலுக்கு சனீஸ்வர பகவான் காரகனாவார். சுக்கிரன், சந்திரன் இருவரும் முக அழகிற்கு முக்கிய மானவர்கள். குறிப்பாக இவற்றிக்கு ஜென்ம இலக்னம் முக்கிய பங்கு வகிக்கிறது. இலக்னம் பலமாக இருந்தால் நல்ல உடலமைப்பு, முக அழகு, அழகான தலை முடி உண்டாகிறது.

சூரியன், செவ்வாய், சந்திரனையோ சுக்கிரனையோ பார்வை செய்தால் முடி உதிர்ந்து வழுக்கை உண்டாகும். லக்னாதிபதி சூரியனுடன் இணைந்து அஸ்தங்கம் பெற்றாலும் வழுக்கை உண்டாகும். சுக்கிரனும் சந்திரனும் சூரியன் செவ்வாயால் பாதிக்கப்படுவது நல்லதல்ல. சனி செவ்வாயை பலமாக பார்த்தாலும் முறையற்ற முடி அமைப்பு உண்டாகின்றது.

# கிண்ணியாவில் கலைச்சுடர் இலக்கிய மன்ற ஒன்றுகூடலும் கவியரங்கும்









கலைச்சுடர் இலக்கிய மன்றத்தின் ஒன்றுகூடலும் ஹஜ் ஜுப்பெருநாள் கவியரங்கும் தி /கிண்ணியா அல்ஹிரா மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. கலைச்சுடர் இலக்கிய மன்றத்தின் தலைவி கிண்ணியா சபீனா இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் கலைச்சுடர் இலக்கிய மன்ற உறுப்பினர்கள், அவர்களின் பெற்றோர், மற்றும் இலக்கிய ஆர்வலர்கள், முது பெரும் கவிஞர்கள், இலக்கியவாதிகள், எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்!

இந்த ஒன்று கூடலின் போது கலைச்சுடர் இலக்கிய மன்ற அங்கத்தவர்களுக்கு எழுத்தாற்றல் சம்பந்தமான ஆலோசனைகளும் தெளிவுரைகளும் இலக்கிய வித்தகர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

கிண்ணியாப் பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் க. அன்பழகனும், கிண்ணியா கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரான MC . நசாரும், கிண்ணியாவின் முதுமைக் கவிஞரான எம். கௌரிதாசனும் மற்றும் கிண்ணியாவின் 50 வருடங்களை எழுத்தாற்றலால் தொட்டு விட்ட PT. அசீஸும், இலக்கியவாதியான M.H.A ஹசனும், ஈச்சலம் பற்றைச் சேர்ந்த கலைஞர் மதிபால சிங்கமும் இந்நிகழ்வில் கலந்து நல்ல பல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இதில் பெண்கள் உதவி நிறுவன நளீமாவும் கலந்து கொண்டார்! அவர், இக்கலை மன்றத்துக்கு தன்னால் இயன்ற உதவிகளை வழங்க இருப்பதாகக் கூறினார்!

இந்த மன்றத்தின் உறுப்பினர்களாகப் பெரும்பாலானோர் பல்கலைக்கழக மாணவிகளும் , கல்விக்கல்லூரி மாணவர்களும் உறுப்பினர்களாக இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.



---





ஈழத்தின் கலைத்துறையில் தலைசிறந்த பன்முக கலைஞரான ஜெராட் நோயல் கடந்த 13ஆம் திகதி பபிதாவின் கரம் பிடித்து இல்லற பந்தத்தில் இணைந்தார். நடிகராகவும், பாடகராகவும், சமூக சேவகராகவும் தனது பணியைத் தொடரும் இவர் "மனதோடு மழைக்காலம்" திரைப்படத்தின் கதாநாயகனாக நடித்துள்ளார். நிழல், கடலாய் காதல் என பல தொலைக்காட்சி தொடர்கள், விளம்பரங்கள், காணொளிப் பாடல்கள் பலவற்றில் நடித்து மட்டுமன்றி பல இன்னிசை நிகழ்வுகளில் பாடல்கள் பாடியதுடன் பல விதத்திலும் தனது திறமையை வெளிப்படுத்தி வருபவர்.

A.K.இளங்கோ

## கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 61" இன்று! அனுமதி இலவசம்!

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சக்தி தொலைக்காட்சி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 61" இன்று ஞாயிறு மாலை மாலை 7 மணிக்கு கொழும்பு 7 ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல இசைக் கலைஞர்கள் பஸால் ஜின்னாஹ், அயாஸ் சவாஹிர், ஹாரிஸ் மாஸ்டர், சுப்பர் டியூனர்ஸ் பௌமி, அஸார் கௌஸ் இசையில் கலைக்கமலுடன் சிறப்புப் பாடகராக சிங்கப்பூர் பிரபல கலைஞர், சுங்கத் திணைக்கள அதிகாரி ஹாஜி ஃபரிஹுல்லாஹ், பிரபல பாடகி மொறின் ஜெனற் ஆகியோர் இணைந்து பாடவுள்ளனர். தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரபல தொழிலதிபரும் சமூகசேவையாளருமான ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD இப்திகார் அஹ்மத் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். இந்நிகழ்வு, பிரதான அனுசரணை வழங்கும் Level 09 , Orion Towers, 752, Dr .Danister De Silva Mawatha, Baseline Road, Colombo 09 RANAR MIGRATION CENTER இயக்குநர் முஹம்மத் நஸீர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.



இலங்கை வானொலி முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் கலாபூஷணம் M .Z. அஹ்மத் முனவ்வர், பிரபல தொழிலதிபர் இலக்கிய ஆர்வலர் செல்லமுத்து ரவீந்திரன், இறை ஞானக் கவிமணி ரமீஸ்ஹாஜி, பிரபல சமூகசேவகி ஷீனியா ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ அதிதிகளாக கௌசலாதேவி கோவிந்தப்பிள்ளை, றோயல் கல்லூரி ஆசிரியை ஷெரினா முஸ்தபா பங்குபற்றவுள்ளனர்.

பிரபல வானொலி அறிவிப்பாளர் கவிதாயினி கலையழகி வரதராணி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவார். இந்த இசை நிகழ்ச்சியை இலவசமாக பார்த்து ரசிக்கலாம்.

## "வெய்துயிர்த்தல்" கவிதை நூல்

கவிஞர் பெரியமடு நிஹ்ரி எழுதிய "வெய்துயிர்த்தல்" என்ற கவிதை நூல் இன்று மாலை 3.00 மணிக்கு புத்தளம் I.B.M மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது. இந்நிகழ்வுக்கு புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பதுடன் நூலின் முதல் பிரதியும் பெற்றுக் கொள்கிறார்.

நிகழ்வுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சபா அதிரதன் தலைமை தாங்குவார். பிரதம அதிதியாக மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஜே.றலியுதீன் கலந்துகொள்ள சிறப்பதிதியாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நூலின் நயவுரையை கவிஞர், எழுத்தாளர் பிரேம் ராஜும், நூலாசிரியரும் நூலும் பற்றிய உரையை கண்ணகி கலாலய தலைவரும் பல்துறை கலைஞருமான ஏ.கே. இளங்கோ நிகழ்த்தவுள்ளார்.



# மலையகத்தின் குரலாக மக்களில் ஒருவனாக விளங்கும் மலையக தேவா

பேஸ்புக் என அழைக்கப்படும் முகநூல் பக்கத்தின் ஊடாக தனது ஊடகச் செயற்பாட்டை ஆரம்பித்து முதலாவது அகவையில் கால் தடம் பதிக்கின்ற ஊடகவியலாளர் மலையகம் தேவா.

இவர், இந்த முகநூல் பக்கம் ஊடாக கலை, கலாச்சார, விளையாட்டு, ஆன்மீகம், பாடசாலை நிகழ்வுகள், சமூக நிகழ்வுகள் என பல்வேறுபட்ட நிகழ்வுகளையும் சிறப்பான முறையில் நேரடியாக ஒளி, ஒலிபரப்பி செய்து புகழ் பெற்று வருகிறார். இதன் ஊடாக நிகழ்ச்சிகளை அவ்வப்போது நேரடியாக அறிவிப்பு செய்து தொகுத்து வழங்கி மக்களின் மனங்களை வென்று வருகிறார். இந்த ஒரு வருடத்தைக் கடந்து இரண்டாவது ஆண்டில் கால் தடம் பதிக்கின்ற வேளையில் முதலாம் அகவை தின கொண்டாட்டங்களாக அன்னலட்சுமி முதியோர் இல்லத்தில் இருக்கக் கூடிய தாய்மார்களுக்கான பகல் உணவு வழங்கி வைக்கப்பட்டதோடு மரக்கன்று ஒன்றினையும் வழங்கி வைத்து இந்த முதலாவது அகவை தினத்தை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடியது ஒரு சிறப்பு அம்சமாகும். அது மாத்திரமில்லாமல் இலங்கையின் முன்னணி பாடகி மற்றும் இசையமைப்பாளர் நிலுக்சி ஜெயவீரசிங்கம் மற்றும் கருப்பையா பிள்ளை பிரபாகரன் ஆகிய இருவரின் சிறப்பு நிகழ்ச்சி நேரலையும் இடம்பெற்றது.

இனி மலையக தேவா பற்றி அறிந்து கொள்ளலாம்.

அவரது முழுப்பெயர் துரைசாமி தேவராஜ். அவர் நுவரெலியா மாவட்டத்தில் அட்டன் நகருக்கு உட்பட்ட நோட்டன் டிவிஷன் என்னும் அழகிய கிராமத்தில் பிறந்தவர். இவர், நோட்டன் பிரிட்ஜ் கணபதி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். கல்வி கற்கின்ற காலத்திலேயே, அதாவது சிறு வயதிலேயே இவருக்கு ஊடகத்துறையில் பயணிப்பது ஒரு கனவாக இருந்தது. இருந்த போதும் இவருக்கு அதற்கான சரியான களம் கிடைக்கவில்லை.

அப்போதுதான் வேலைத் தேடி தலைநகருக்கு வந்திருந்தார். அப்போது ஆலய நிகழ்வுகள், விளையாட்டு போட்டி நிகழ்வுகள் ஆகியவற்றைத் தொகுத்து வழங்குவதற்கான சந்தர்ப்பங்கள் அதிக அளவில் கிடைத்தது. அப்போதுதான் மலையகத்தின்





தனித்துவக் குரல் மலையகம். lk என்னும் இணையதளத்தில் செய்தி பிரிவினூடாக ஆர் ஜே தனாவின் அழைப்பின் பேரில் இவருடைய ஊடகத்துறை கனவு சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது.

அதிலிருந்து அவரது ஊடகப் பயணம் மிகச் சிறப்பான முறையில் ஆரம்பிக்கப்பட்டது.



ஆலய நிகழ்வுகள், சமுதாய நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள், கலைக் கலாச்சார நிகழ்வுகள், இப்படி அனைத்து நிகழ்வுகளையும் சிறந்த முறையில் நேரலையின் ஊடாக தொகுத்து வழங்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இவருக்குக் கிடைத்தது. முதலாம் ஆண்டில் கால் பதிக்கும் இத் தருணத்தில் அவர் தனது நன்றிகளை ஆர் ஜே தனாவுக்கு தெரிவிப்பதில் பெருமிதம் கொள்வதாக அவர் அறிவித்துக் கொள்வதில் ஆனந்தம் அடைகிறார்.

தனக்கு ஒரு அன்னையாகவும் தந்தையாகவும் நண்பனாகவும் தன்னுடைய நிறை குறைகளை நிவர்த்தி செய்து ஊடகத்துறையில் பயணிப்பதற்கு உந்து சக்தியாக அவர் இருந்திருக்கின்றார் என அவர் அடிக்கடி கூறி வருகின்றார்.



லோகேஷ், நவீன், சுதா, வினோ ஆகியோர் மலையகம். lk ஊடாக அறிமுகமான நண்பர்கள் என இவர் கூறுவதுண்டு. இலங்கையின் முன்னணி ஊடகமாக இருக்கக்கூடிய துறை சார்ந்தவர்களும் தனக்கான பல வழிமுறைகளை கற்றுக் கொடுத்தார்கள் என்பார். அந்த வகையில் அறிவிப்பாளர் அஜித்தையும் நினைவுபடுத்துவதில் அவர் உள்ளம் ஆனந்தமடைந்ததை அவர் கூறிய கருத்துக்களில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

இப்படியாக ஊடகப் பயணம் மேலும் சென்று கொண்டிருக்கும் வேளையில் தனக்கென்று தனிப் பயணத்தை ஆரம்பித்து முகப்புத்தகம் ஊடாக மலையகம் தேவா மற்றும் you tube தளம் மலையகம் தேவா என்னும் பெயரில் ஆரம்பித்தார்.

இது ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலமாக இருந்தாலும் பல ரசிகர்களைக் கொண்ட தனது பயணத்தை ஆரம்பித்து இப்போது மிகச் சிறப்பான முறையில் கலை கலாச்சார ஆன்மீக விளையாட்டு கலைஞர்களின் திறமைகளை வெளி உலகுக்கு கொண்டு செல்லக்கூடிய ஒரு பொறுப்பையும் செய்து கொண்டிருக்கின்றார். இந்த ஊடகத்துறை பயணம் என்பது கடந்த 10 ஆண்டு காலமாக தான் கற்றுக்கொண்ட. தனக்கு கற்றுக் கொடுத்த அனைவரின் உதவியோடு செல்லும் பயணம் என்பார்.



இவ்வாறான விடயங்களுக்கு தன்னுடைய குடும்பத்தினரும் தன்னுடைய நண்பர்களும் பல்வேறுபட்ட உதவிகளையும் செய்து கொண்டிருக்கின்றார்கள் அனைவருக்கும் இத் தருணத்தில் தன்னுடைய நன்றிகளை பகிர்ந்து கொண்டார்.

இந்த ஊடகத்துறையில் பல சமூக அமைப்புக்கள் ஊடாக வழங்கப்பட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இது பெரு மகிழ்ச்சியாக இருப்பதாகவும் இதன் தொடர்ச்சியாக தன்னுடைய பயணத்தை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு தன்னுடைய அன்பான நேயர்களின் அன்பு மிகப்பெரிய அளவில் இருக்கின்றது என அறிவித்தார்.

எனவே எப்பொழுதும் மக்களில் ஒருவனாக மலையகத்தின் குரலாக மலையகம் தேவா விளங்குகின்றார்.



முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



# பெரியமடு நிஹ்ரியின் "வெய்துயிர்த்தல்"கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

பெரியமடு எனும் நாமத்தை தனது கவிதை உலகின் அடையாளமாகக் கொண்டு கவிதை எழுதி வரும் கொண்டச்சி பாடசாலையின் தமிழ்ப்பாட ஆசிரியரான நிஹ்ரியின் கவிதைப் பயணத்தின் முதல் முயற்சியாக வெளிவர இருக்கிறது வெய்துயிர்த்தல் எனும் கவிதைத் தொகுப்பு.



1989.01.22 பெரியமடு கிராமத்தில் பிறந்து 1990 இல் இடம்பெயர்ந்து தில்லையடிப் பகுதியில் குடியேறி தில்லையடி மு.ம வித்தியாலயத்தில் உயர்தரம் வரை கற்று பேராதெனிய பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்று தமிழ்ப்பாட ஆசிரியராகக் கடமையாற்றி வரும் நிஹ்ரி அவர்கள் தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி கற்கைநெறியைத் தொடர்கின்றார்.

கவிதை உலகில் தனக்கென ஓர் அடையாளம் கவிஞர் பெரியமடு நிஹ்ரியின் தமிழ்ப்புலமையும் மொழிப்புலமையும் ஒருங்கே அமைந்த இந்நூல் சமூகத்தின் எதிர்பார்ப்பை ஈடுசெய்து வெற்றி பெறவும் நிகழ்வு சிறப்பாக அமையவும் வாழ்த்திப் பிரார்த்திக்கிறோம்.

கவிஞர், நடிகர், எழுத்தாளர் என பல் பரிமாணங்களை கொண்ட இவர் சமூக அவலங்கள், பொது விடயங்கள், காதல், என அனைத்தையும் தொட்டுச் செல்லும் வகையில் தனது கவிதைகளை வடித்து வருகிறார்.

இலங்கையின் தினகரன், தினக்குரல், மெட்ரோ பத்திரிகைகள் இவரின் கவிதைகளை சுமந்து வருகின்றன. வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் இவர் எழுதி வருகிறார்.

**இவர் பெற்ற விருதுகள்**

கவிநிலா, கலைநிலா, கவித்தேனீ, இளம்பாரதி, கவியருவி, கவிவேந்தர், இளங்கலைஞர், கலாவிபூஷணம்

# மருதமுனை நாணலின் "குக் வித் நாணல்" சமையல் போட்டி நிகழ்வு

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த "குக் வித் நாணல்" எனும் சமையல் போட்டி நிகழ்வு நாணல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவி ஏ.ஆர்.பாத்திமா சூபா தலைமையில் புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.இதில் சிரேஷ்ட கவிஞரும் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் ஆலோசகருமான எம்.எம்.நௌபல் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக அதிபர் ஏ.முஹம்மட்.அன்சார், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், கலாநிதி. தல்ஹா சீனி முஹம்மட்





ஆகியோர் கலந்து கொண்டதுடன், விஷேட அதிதிகளாக சென்.ஜுடி பரா மெடிகல் கொலேஜ் பணிப்பாளர் சப்ராஸ் மன்சூர், கரையோர பராமரிப்பு திட்டமிடல் அதிகாரி எம்.எஸ்.அஹமட் மஃப்றூர், மூன் விலேஜ் ஹோட்டல் உரிமையாளர் எம்.எம்.எம். ஹிஸாம்,ஆபிதா ஹேன்ட் லூம் எம்.என்.இசட்..றூமி, சப்னம் ப்ரூட் சொப் என்ட் ஐஸ் ஏஜ் பணிப்பாளர் ஏ.டபிள்யூ. எம்.நாபிர், இல்ஹாஸ் பூட் சிற்றி உரிமையாளர் பி.எம். எம்.இல்ஹாஸ், எம்.ரீ.வாக்கிர் அஜமல், தாஜ் சாப்பாட்டுக் கடை எஸ்.எம்.தாஜுதீன், பிறை எப். எம் பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், ஓய்வு பெற்ற அதிபர் டேவிட், சிரேஷ்ட அறிவிப்பாளர் ஏ.ஆர். ஏ.புகாரி, கவிஞர் ஜெமீல், கவிஞர் விஜிலி, கலை இலக்கிய வட்டத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளரும் படப்பிடிப்பாளருமான சத்தார் எம். முஜீப்,ஆகியோருடன் இலக்கிய ஆளுமைகள்,கவிஞர்கள் ,ஆசிரியர்கள் ,நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் தமிழ் பாடல்களை இசை ஆசிரியர் எம்.ஜெம்சித்,எம்.என்.சற்.றூமி, சிங்களப்பாடலை கெப்டன் எம்.ஐ.எம்.சுல்பிகார் ஆசிரியரும் வழங்கினார்கள். நகைச்சுவை நாடகம் ஒன்றை ஊடகவியலாளர் நிஸா இஸ்மாயில், ஏ.அஹ்னா, எம்.ஐ.சம்ஹா ஆகியோர் வழங்கினார்கள்.



கவிதை வாசிப்புகளை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களான மூத்த கவிதாயினி மாஜிதா தௌபீக்,சிபானா அஸீம், எஸ். அக்கீலா பானு, பதுர் நிஸா போன்றோர் வழங்கினார்கள், நாட்டார் பாடலொன்றை கலை இலக்கிய வட்டத்தின் தலைவி கவிதாயினி ஏ.ஆர்.பாத்திமா சூபா வழங்கினார்.கேள்வி பதில் நிகழ்ச்சியை ஊடகவியலாளர் றாசிக் நபாயிஸ் நடத்தினார். நிகழ்ச்சிகளை சிரேஷ்ட ஊடகவியலாளர், அறிவிப்பாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் தொகுத்து வழங்கினார்.

நாணல் கலை இலக்கிய வட்டத்தினால் நடாத்தப்பட்ட சமையல் போட்டியில் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள் மூவர் கலந்து கொண்டதில் பதுர்நிஸா முதலிடத்தை பெற்றமைக்காக ஓய்வுபெற்ற மனையியல் பாட ஆசிரியர் ஏ.எஸ்.உம்முல் பாரியா அவர்களினால் கிரீடம் அணிவிக்கப்பட்டு பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இரண்டாம் , மூன்றாம் இடங்களை பெற்றுக் கொண்ட எச். எம்.நூர்சிபா, எம்.ஐ.ஜீஸான் பேகம் ஆகிய இருவருக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

**ஏ.எல்.எம்.ஷினாஸ்**
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# மாத்தளை JOLLY BOYS விளையாட்டு கழகத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி நடந்த கால்பந்தாட்ட போட்டி

மாத்தளை ஜொலி போயிஸ் விளையாட்டு கழகம் அதன் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய மாபெரும் கால்பந்தாட்ட சுற்று போட்டி மாத்தளை மாநகரத்தில் அமைந்துள்ள பேர்னாட் அலுவிகார விளையாட்டு மைதானத்தில் கழகத்தின் தலைவர் எஸ்.எம்.உபாலி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



அணிக்கு ஏழு பேர் கொண்ட இந்த கால்பந்தாட்ட சுற்று போட்டியில் 18 கழகங்கள் பங்கு பற்றியதுடன் மொத்தமாக 43 போட்டிகள் நடைபெற்றன. ஆரம்ப சிநேகபூர்வ போட்டியாக மாத்தளை சாஹிரா கல்லூரி மாணவர் அணிக்கும் றோயல் இன்டர்நேஷனல் பாடசாலை அணிக்கும் இடையிலான போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் (01:00) என்ற கோல் வித்தியாசத்தில் சாஹிரா கல்லூரி மாணவர் அணி வெற்றி பெற்றது.



ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நவகல் பவுண்டேஷன் தலைவரும் அரச சட்ட



அமுலாக்கல் திணைக்களத்தின் தலைவரும் விஜயா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செயலாளருமான நிஷாந்த பிரதம அதிதியாக கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

கால்பந்தாட்ட சுற்று போட்டியில் இறுதிப்போட்டிக்கு இக்கொல்லஎப்.சிமற்றும்கோல்டன் மூன் ஏ ஆகிய இரு அணிகளும் தெரிவு செய்யப்பட்டன. இறுதிப் போட்டியில் (01:00 ) என்ற கோல் வித்தியாசத்தில் கோல்ட் மூன் ஏ அணி, இக்கொல்ல எப்.சி அணியினரை வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தையும் 30.000 ரூபா காசோலையையும் தமதாக்கிக் கொண்டனர். சம்பியன் அணிக்குரிய வீரர்களுக்கு பதக்கம், வெற்றிக் கிண்ணம், காசோலை என்பவற்றை அதிதியாக கலந்து கொண்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபை உறுப்பினர் பி. மனோகரன் வழங்கி வைத்தார்.

இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட இக்கொல்ல எப்.சி அணியினருக்கான பதக்கம் அதேபோன்று வெற்றிக் கிண்ணம், 15,000 ரூபா பெறுமதியான காசோலை என்பவற்றினை அதிதியாக கலந்து கொண்டு சலனி ரெஸ்டூரண்ட் நிறுவனத்தின் உரிமையாளர் ஜட்டிலயன் வழங்கி வைத்தார்.

மைதானத்தில் கால்பந்து ரசிகர்களுக்கான மாபெரும் அதிர்ஷ்ட கூப்பன் விநியோகிக்கப்பட்டு மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கழகத்தில் பல்வேறு நிர்வாகங்களில் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்ற முன்னாள் வீரர்கள் நினைவு சின்னங்கள், பதக்கங்களை வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

**ஏ.எல்.எம்.ஷினாஸ்**
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# மல்லிகை ஜீவா: இலக்கிய ஜீவிதம்



ஈழத்துத் தமிழ் இலக்கியத் தளத்தில் பேரடையாளமாக வேரோடி நிற்பது மல்லிகைப்பந்தல். பந்தலின் காலாகி நிற்பவர் அமரர் டொமினிக் ஜீவா அவர்கள்.

இலக்கிய ஊழியராக வாழ்ந்து மறைந்த டொமினிக் ஜீவா நூற்றாண்டை அவாவி நிற்கிறார்.

மார்க்ஸிய சிந்தனையிலூறி,முற்போக்குப் பண்ணையில் வளர்ந்து ,சாதித்துவ எதிரெழுத்தில் விழுது விட்டெழுந்த மல்லிகைக்காரரர் ஜீவா.

தனிமனித எழுத்தியக்கமாக தன்னை மேலெழுப்பிய ஜீவா கதைகள்,நாவல்கள்,திறனாய்வுகள்,கட்டுரைகள், பத்திகள்,இலக்கிய நினைவுகள்,இலக்கிய வரலாறெ‌ன எழுதியவை அதிகம். எழுத்தாளராக மட்டுமல்லாது சிறுசஞ்சிகைக்காரனாக,பதிப்பாளனாக,வெளியீட்டாளனாக,பேச்சாளனாக,சமூக இலக்கியச் செயற்பாட்டாளனாக தன் வாழ் காலத்தை வழிநடத்தியவர்.

'மல்லிகை' என்ற பதத்தின் அர்த்தம் சஞ்சிகை என்பதை ஐம்பதாண்டுகால தொடர்ச்சியான மல்லிகை மலர்ச்சியிலே நிரூபித்தவர். முற்போக்கு எழுத்தாளர்கள் பலரை மல்லிகை மணத்தில் உருவாக்கியவர் ஜீவா.

மல்லிகைப் பந்தலென தன் இலக்கியக் காலூன்றலை அகலித்து பதிப்புப் பணியாற்றிய ஜீவா பல தசாப்தம் இலக்கியத்தில் நின்றிலங்கியவர்.

கத்திரிக்கோலோடு சிகைதிருத்தும் காலத்திலேயே கதையெழுதி கதையாலே சாதிப் போராட்டக்களத்தில் தன் மக்களுக்கான போராளியாகி நின்று ஒரு காலத்து யாழில் எழுத்தை வீரியமாக்கியவர்.

இடம்பெயர்த்து கொழும்புக்கு வந்தாலும் தன் மல்லிகையையும் அதன் பந்தலையும் தன் நறுமண நிழலாக கதிரேசன் தெருவிலே நிறுவியவர். இதனூடாக இலக்கிய அடையாளத்தை அழுத்தமாக வெளிப்படுத்தியவர்.

தீவிர இலக்கிய செயற்பாட்டாளரான டொமினிக்ஜீவா நூற்றாண்டை அவாவும் இலக்கிய ஜீவிதம்

# புழுதி படிந்த கவிதை



கவிதை என்பது சந்தன வாசம் கமழும் அற்புதப் பொருளல்ல; அது சமூகத்தில் புரண்டெழும் புழுதி படிந்த சொற்களின் கூட்டு;

உணர்வுகளின் திரட்சி; கவிதை சமூகத்தின் மனச்சாட்சியைச் சுட்டிப் பேசும்; உளக்குமுறலைப் பெய்யும் அனுபவங்களின் பெய்தல்.

காலாகாலமாகக் கவிதை புழுதியில் கிடந்து துடிக்கும் காலத்தின் குரல்தான்.

இந்தக் குரலைக்கொண்டவராக காரையன் கதன் மேலெழுகிறார்.

தாயதி முன்னெழுப்பும் கவிதைத்திரட்டுக்களின் தொடராக இப்போது புழுதி எழுந்திருக்கிறது.

இது காற்றுத்திரட்சியின் எழுகை. காரையன் கதன் கவிதைகள் புழுதிக்குள்ளிருந்து மேலெழும் தூயகாற்றின் அவாவுகைதான்.

அம்மாக்களுக்கு அர்ப்பணமாக புழுதி அழகு முதல் ஆலா பற பற வரையான கவிதைகளை உட்கொண்டது. எனது கவிதைகள் புழுதி போன்றன என்கிறார். எத்தனை முறை தட்டி உதறிவிட்டாலும் மனங்களிலும் நினைவுகளிலும் மீண்டும் மீண்டும் ஒட்டிக்கொள்ளும் கவிதைகளை கதன் எழுதுகிறார்.

எளிமையான சொற்களுக்குள் அடர்த்தியான பொருளுமையை கதன் கவிதைகளில் காணலாம். முதல் பனுவலெனினும் அனுபவத்தில் முதிர் ரேகைகள் படர்ந்துள்ள சொற்களின் துடிப்பு புழுதிக்குள் இருக்கிறது.

'இதுதான் எங்கள் குளம் பாட்டன் அப்பன் அம்மை அக்கறை நான் எல்லாம் இந்தக் குளத்தில் தான்...'என தன் குளம் குறித்து எழுதும் கதனின் கவிதைக்குளம் வற்றிவிடுவதில்லை. அது புழுதி படியாத தூய நீர்த்தேக்கம் தான்.

# புதிய கூத்து: யாதுமூரே யாவருங் கேளிர்

கூத்தறிஞர் பேராசிரியர் மௌனகுரு கூத்துக்கலையில் பிரிசோதனைகளை முன்னெடுப்பவர்.அந்தகைய பரிசோதனை கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

சங்கபுகழ்ப்பாடலை

கூத்து மெட்டில் இசை வடிவமாக்கி தாள் வாத்தியங்களின்பின்னணியில் பிற்பாட்டு உதவியுடன் பேராசிரியர் அளிக்கைப் படுத்தினார். புகழ் பெற்ற பாடலுக்குள் வடமோடித் தாளக் கட்டுகளை இடையிடையே செருகி அதனை ஒரு "உருப்படி" போல ஆக்கியிருந்தார்.

பூங்குன்றனார் பாடியது இது

""யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன

சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்

இன்னா தென்றலும் இலமே, மின்னொடு

வானம் தண்துளி தலைஇ யானாது

கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

முறை வழிப் படூஉம் என்பது திறவோர்

காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்

பெரியோரை வியத்தலும் இலமே,

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே." (புறம்: 192)

பூங்குன்றனார் இன் பாடல் கூறும் பொருள் முக்கியமானது.

எல்லா ஊரும் எம் ஊர். எல்லா மக்களும் எம் சொந்தம். நன்மை தீமை அடுத்தவரால் வருவதில்லை. துன்பமும் ஆறுதலும்கூட மற்றவர் தருவதில்லை, சாதல் என்பது புதுமை யில்லை; வாழ்தல். இன்பமென்று மகிழ்வதும் இல்லை. வெறுத்து வாழ்வு துன்பமென ஒதுங்கியது மில்லை

பேராற்று நீர்வழி ஓடும் தெப்பம்போல உயிர் வாழ்வு இயற்கைவழி நடந்து செல்கிறது இதனை நாங்கள் தக்கோர் ஊட்டிய அறிவால் தெளிந்து கொன்டோம் ஆதலினால்பிறந்து வாழ்வோரில்

சிறியோரை நாம் இகழ்ந்து தூற்றியதும் இல்லை

பெரியோரை நாம் வியந்து போற்றியதும் இல்லை.

இந்தப் பொருளுணர் பாடலைக் கூத்துக்குள் கூத்தாசான் உட்படுத்தினார்.

வடமோடி பாணியிலான வரவு விருத்தம்

அணி எனத் கவிதை நூறு

ஆக்கியே தமிழ் அன்னைக்கு

பணி செய்த புலவர் தம்மில்

பருதிபோல் மேலெழுந்த

கணியன் பூங்குன்றன் அன்று

கூறிய கவிதை ஒன்றை

பணிவுடன் ஈழக் கூத்தில்

பாடவே இங்கு வந்தேன்

வரவுத் தாளக்கட்டு:

தத் தாங்கிட தருகிட திமிதக

தாதாகிட தாகிட தோம் தரி

தத் தாங்கிட தருகிட திமிதக

தாதாகிட தாகிட தோம் தரி

தத்திமித் தாகிட தத்துமித் தரிகிட தெய்

தக தக தக தக திகு திகு திகு திகு



தக தக தக தக திகு திகு திகுதிகு

தளாங்கு தித்தக தக ததிங்கிணதோம்

தளாங்கு தித் தக தக ததிங்கிணதோம்

ஆடல் தரு:

யாதும் ஊரே யாதும் ஊரே

யாவரும் கேளிர் யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தரவாரா

தக திக தா திமிதகதெய் தக

தாத தெய்யத் தா தளாங்கு ததிங்கிண

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன

சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்

இன்னா தென்றலும் இலமே

தா தெய்யத் தா தளாங்கு ததிங்கிண

நடை மாற்றம்:

(, ஒய்யார நாலடி):

மின்னொடு வானம் தண் துளி தலை யானாது

கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

( ரத்து ஆட்டம்)

முறை வழிப் படூஉம் என்பது திறவோர்

(சுற்றித்திரும்புதல்) :

காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்

ஆட்டம்:

பெரியோரை வியத்தலும் இலமே,

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

தா தெய்யத் தா தளாங்கு ததிங்கிண

சுழன்றாடல் :

யாதும் ஊரே யாதும் ஊரே

யாவரும் கேளிர் யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தரவாரா

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே

தா தெய்யத் தா தளாங்கு ததிங்க

இறுதில் எமது பாடகர்கள் மொத்தக் குரலில்

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே

என எழுந்து நின்று கைதட்டிக்கொண்டு பாட சபையும் சேர்ந்து கைதட்ட சங்கப்பாடலின் கூத்து வடிவ அளிக்கை நிறைவுற்றது.

பேராசான் மௌனகுருவின் கூத்தாக்கப் புத்தாக்க முயற்சி பாராட்டத்தக்கது.




# சேரன் கவிதைகள்: காஞ்சி

1.யா அல்லா

நிலம் கொந்தளித்துப் பிளந்து சிதறிய

மூன்று மணித்துளிகளில்

இரண்டு நகரங்கள்

இடிபாடுகளாக மாறுகின்றன

ஒரு சிறுமி

குர்டிஷ் மொழியில் அலறுகிறாள்

அவள் மேல் பெரும் இடிபாடு

புன்னகையுடன்

அந்தச் சிறுமியைக் கடந்து செல்லும்

துருக்கிப் படையாளுக்கு

ஐ.நா. விருது தருகிறது

அல்லா தலை குனிகிறார்

2. சாம்பலும் புன்னகையும்

இருள் கவியும்போது

உள்ளே நுழையும் வாயில் தெரியவில்லை

அப்போதுதான் என்னைச் சேர்கிறது

நீங்கள் அனுப்பிய புன்னகை

அவலத்தை எழுதித் தோற்றுவிட்ட மொழியில்

இன்று ஒளியில்லை

எல்லா ஓவியங்களிலும் சாம்பல்

எனக்கூற விழைகிறேன்

குரல் எழவில்லை

3.இன்னொரு விரல்

முப்பது ஆண்டுகள் முன்பு

நீங்கள் நீட்டிய விரல்களை

இன்றுதான் பற்றுகிறேன்

பாங்கொலி காற்றில் மிதந்து

வளாகத்துள் வரும் போது

சேலைத் தலைப்பால்

கூந்தலை மூடிய விரல்கள் அவை

விரல்கள் இணைகின்றன பிரிகின்றன

யாருமறியா மொழியில் அவை பேசிக்கொள்வதும்

நீண்ட காலத்துக்கு அவற்றின் நறுமணம்

நெஞ்சில் இருப்பதுவும் தெரியும்

எழுத முடியாது

அன்பின் பரிசல்ல விரல் நுனி அது நம்பிக்கையின்

துளிர் இலை

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

ஜோங்கிந்தாபாவை காலத்தின் கோலம் மாற்றியிருந்தது. அவரது கம்பீரமான நடை, உற்சாகமான பேச்சு, கலகலப்பான சிரிப்பு, மிடுக்கான பார்வை ஒன்றுமேயில்லாமல் அவரது முகம் களையிழந்து சோகமே உருவாக காட்சியளித்தார். நடையிலும் தள்ளாட்டம் தென்பட்டது. தலையிலே நிரம்பியிருந்தவெள்ளை மயிர்கள் அவரது முதுமையின் அடையாளச் சின்னமாக காணப்பட்டது. மண்டேலாவுக்கு அவரை பார்த்தவுடனேயே இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் வலியெடுத்து இரு சொட்டு கண்ணீர் கன்னத்தில் வடிகாலமைத்து கழுத்து வரை கோடிட்டு நின்றது. கண்களை துடைத்தவாறே "அப்பா என்னை மன்னித்து விடுங்கள் நான் செய்தது மாபெரும் தவறுதான். உங்களை நேருக்கு நேர் எதிர்க்க தைரியமில்லாமல் கோழைத்தனமாக ஊரை விட்டே ஓடி வந்துவிட்டேன்" என்று கெஞ்சிக் கேட்டான்.அவரோ விரக்தியும் கவலையும் ததும்பிய முகத்துடன் "பழையதை பேசி என் ஆத்திரத்தை கிளப்பாதே. நான் அது பற்றி பேசவும் கேட்கவும் இங்கே வரவில்லை. நீங்கள் இருவரும் செய்த நம்பிக்கை துரோகத்தால் நான் மனம் நொடிந்து நோயாளி ஆகி விட்டேன். உங்களை வளர்த்த பாவத்திற்கு நல்ல பரிசு கொடுத்துவிட்டீர்கள். சரி போனது போகட்டும். நீ இப்போது எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய்?ஜஸ்டிஸ் எங்கே இருக்கிறான்?" என்று கேள்விக்கணைகளை தொடுத்தார். மண்டேலா அதற்கு "ஜஸ்டிஸ் சுரங்க நிர்வாகத்திலே தான் பணிபுரிகின்றான். நான் அலெக்சாண்ட்ரியாவிலுள்ள ஒரு அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டே சட்டப்படிப்பையும் முடித்து தற்போது பி.ஏ. பட்டதாரியாகிவிட்டேன். எனக்கும் உங்களை பார்க்க வேண்டும் என்று மனது அடிக்கடி அங்கலாய்க்கும். ஆனால் எந்த முகத்தை வைத்துக்கொண்டு உங்கள் முன் நிற்பேன் என்ற நினைப்பு அதைத் தடுத்து விடும். அவ்வளவு நிகழ்ந்த பின்பும் உங்களை நேருக்கு நேர் சந்திக்கும் திராணியற்ற கோழை நான். நான் பாவி அப்பா. என்னை நீங்கள் மன்னிக்காவிட்டால் கடவுள் கூட என்னை மன்னிக்க மாட்டான்" என்று மன்றாடினான். அவரோ அவன் பேசியதை அசட்டை



செய்துவிட்டு, பேச்சை திசை மாற்றினார். "ஜஸ்டிஸ் அங்கே நல்ல படியாக வேலை செய்கிறானா? நானோ இன்றோ நாளையோ என்று என்னுயிரை கையில் பிடித்து வைத்திருக்கிறேன். ஊரில் எனக்கு பிறகு என் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அலுவலக நிர்வாகத்தையும் கவனிக்கவும் பராமரிக்கவும் அவனை எவ்வாறாவது சம்மதிக்க வைத்து என்னுடன் நீதான் அனுப்பி வைக்கவேண்டும். அதுவே எனது இறுதி ஆசை. நீ எனக்கு நன்றிக்கடனாக இதை கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும்" என்று உறுதியாக கூறினார். அதற்கு மண்டேலா "கண்டிப்பாக அவனை உங்களுடன் அனுப்பி வைக்க என்னாலான உதவிகளை செய்வேன்" என்று கூறி சிசுலுவும் மண்டேலாவும் ஜோங்கிந்தாபாவை தாங்கள் தங்கியிருக்கும் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். கோரும் வந்து ஜோங்கிந்தாபாவை சந்தித்து உரையாடினான்.

மண்டேலா தொலைபேசியூடாக ஜஸ்டிஸுடன் தொடர்பு கொண்டு தந்தை வந்திருக்கும் செய்தியைக் கூறினான். அச்செய்தி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒருகணம் வியந்து மறுகணம் நெகிழ்ந்து "நாளைக் காலையிலேயே நான் அங்கே இருப்பேன். அவர் எப்படி இருக்கிறார்? நன்றாக இருக்கிறாரா? அவருக்குத் தேவையானவற்றை செய்து கொடு " என்று உணர்ச்சிவசப்பட்டவனாக கூறினான். ஜோங்கிந்தாபா அவரது அருமை மகன் ஜஸ்டிஸின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதா?!



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# ஜெய்சங்கர்



ஆறேழு நாயகர்கள் இருந்த காலகட்டத்தில், தனக்கென ஒரு பாணியை வைத்துக் கொண்டு, நடையிலோ நடிப்பிலோ வசன உச்சரிப்பிலோ எவர் சாயலுமில்லாமல், வலம் வந்த நடிகர்... ஜெய்சங்கர்.

எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி, எஸ்.எஸ்.ஆர்., முத்துராமன், ஏவிஎம்.ராஜன் என பலரும் நடித்துக் கொண்டிருந்த காலம் அது. ஸ்டைலீஷான ரவிச்சந்திரன் ஒருபக்கமும் சிவாஜியை இமிடேட் செய்யும் ஏவிஎம்.ராஜனும் அப்போதுதான் வந்திருந்த காலகட்டம். ஆனால், எவர் மாதிரியாகவும் நடிக்காமல், புதுமாதிரியாக நடித்தார் ஜெய்சங்கர்.

மிகப்பெரிய வக்கீல் குடும்பம். ஆனால் இவருக்கோ நடிப்பில் ஆர்வம். சினிமாக் கம்பெனிகளுக்கு நடையாய் நடந்தார். இந்தப் பையன்கிட்ட ஏதோ இருக்கு' என்று உறுதியாக நம்பினார் இயக்குநர் ஜோஸப் தளியத். முதல் படத்திலேயே நல்லபெயர் கிடைத்தது. அந்தப் படம் 'இரவும் பகலும்'.

கே.சங்கரின் 'பஞ்சவர்ணக்கிளி'யிலும் வித்தியாசமான கேரக்டர். அடுத்து ஏவிஎம்மின் 'குழந்தையும் தெய்வமும்' திரைப்படமும் பெண்கள் பக்கம் இவரைக் கொண்டு சேர்த்தது. இவரின் சுறுசுறுப்பைப் பார்த்துவிட்டு, மாடர்ன் தியேட்டர்ஸ் மாதச் சம்பளத்துக்கு அவரை வைத்துக் கொண்டு, தொடர்ச்சியாக படங்கள் பண்ணியது. 'வல்லவன் ஒருவன்', 'சிஐடி.சங்கர்' அவரை வசூல் சக்கரவர்த்தியாக்கிற்று. கத்திச்சண்டை போட்டு வந்த காலத்தில், டுமீல் டுமீல் சத்தங்கள், கோட்சூட், துப்பாக்கி சகிதமாக ஆங்கிலப் பட பாணியில், ஜேம்ஸ்பாண்ட் கேரக்டரில் பின்னிப்பெடலெடுத்தார் ஜெய்சங்கர். பின்னாளில், எம்ஜிஆர் 'ரகசிய போலீஸ் 115', சிவாஜி 'தங்கச்சுரங்கம்' மாதிரியான படங்கள் பண்ணுவதற்கு, இவரின் படங்களே அந்த ஆசையை வளர்த்தன என்பார்கள்.

ஒருபக்கம் ஜேம்ஸ்பாண்ட் படங்கள், இன்னொரு பக்கம், 'பஞ்சவர்ணக்கிளி' மாதிரியான குடும்பக் கதைப் படங்கள், நடுவே 'பொம்மலாட்டம்', 'வரவேற்பு', 'பூவா தலையா' என காமெடி படங்கள் என ரவுண்டு கட்டி வலம் வந்தார் ஜெய்சங்கர்.

பாலசந்தரின் 'நூற்றுக்கு நூறு' மிகச்சிறந்த நடிகர் எனும் பெயரைப் பெற்றுத் தந்தது. எம்ஜிஆர், சிவாஜிக்கு சம்பளம் கொடுக்க முடியாத சிறிய தயாரிப்பாளர்களெல்லாம் ஜெய்சங்கரை டிக் அடித்தார்கள். குறைந்த சம்பளத்தில் நடித்துக் கொடுத்தார் ஜெய்சங்கர். டார்ச்சர் கொடுக்காமல் நடித்துக் கொடுத்தார். ஈகோ எதுவும் பார்க்காமல் மிகுந்த ஒத்துழைப்பு கொடுத்து நடித்துக் கொடுத்தார். மிகுந்த லாபத்துடன், தயாரிப்பாளர்கள் மகிழ்ந்து கொண்டாடினார்கள்.

கேட்கும் சம்பளமும் குறைவு. அந்தக் குறைவான சம்பளத்திலும் பாக்கி வைத்தால் அதையும் கேட்பதுமில்லை. 'அவங்ககிட்ட இல்லேன்னுதான் நமக்குத் தரமுடியாம இருக்காங்க. அவங்களுக்குக் கிடைக்கும் போது தரட்டும். கிடைச்சும் தரலையா... பரவாயில்ல' என்று அவற்றையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளாதவர் ஜெய்சங்கர்.

கால்ஷீட் சொதப்பமாட்டார், சொன்ன நேரத்துக்கு வந்துவிடுவார் என்று ஜெய்சங்கருக்கு குட்மார்க் சொல்கிறார்கள் திரை வட்டாரத்தில். இந்த நடிகையைப் போடுங்கள் அந்த வில்லனைப் போடுங்கள் என்றெல்லாம் சொல்லமாட்டாராம். தன்னுடைய வேலையை கண்ணும் கருத்துமாக இருந்து செய்து கொடுப்பாராம்.

ஜெய்சங்கரின் படங்கள் முக்கால்வாசி பட்ஜெட் படங்கள். ஆனால் போட்ட பணத்தை விட மூன்று நான்கு மடங்கு லாபம் தந்தன. யூனிட்டில் உள்ள எல்லோரிடமும் கனிவாகப் பேசும் பண்பு கொண்டவர் என்கிறார்கள். யாரைப் பார்த்தாலும் 'ஹாய்' என்று சொல்லி, நட்புடன் பேசுவதுதான் ஜெய்சங்கர் குணம். பின்னாளில், இந்த 'ஹாய்' என்ற வார்த்தையே ஜெய்சங்கரை அடையாளமாகிற்று.

வெள்ளிக்கிழமை தோறும் படங்கள் வெளியாகும். இதிலென்ன சுவாரஸ்யம் என்றால்... ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஜெய்சங்கரின் படங்கள் வெளியாகும். சில சமயங்களில், ஒரே வெள்ளிக்கிழமையில், இவரின் இரண்டு படங்கள் கூட வெளியாகி, வெற்றிபெறும்.

ஒருபக்கம், ஜேம்ஸ்பாண்ட் படங்களின் மூலமாக ஸ்டைலீஷ் மேனரிஸம் காட்டினார். இது எம்ஜிஆர் ரசிகர்களையும் கவர்ந்தது. இன்னொரு பக்கம், 'பொம்மலாட்டம்', 'யார் நீ', 'பூவா தலையா', 'வைரம்', 'செல்வமகள்', 'டீச்சரம்மா', 'குழந்தையும் தெய்வமும்', 'கண்ணன் வருவான்', 'மன்னிப்பு', 'அவசர கல்யாணம்', 'பட்டணத்தில் பூதம்' , 'உள்ளத்தில் குழந்தையடி' மாதிரியான படங்களில் நடித்து, சிவாஜி ரசிகர்களையும் கவர்ந்தார். ஆக்ஷன், செண்டிமெண்ட், காமெடி என பல ரூட்டுகளிலும் ஜெயித்தார் ஜெய்சங்கர்.

எம்ஜிஆர், சிவாஜி, ஜெய்சங்கர் என உயர்ந்தார். தன்னால் முடிந்த உதவிகளை எல்லோருக்கும் சத்தமில்லாமல், விளம்பரமில்லாமல் செய்தார். தனக்கென்று கொடி பிடிக்க ரசிகர்களை சேர்க்கவில்லை. துதிபாட கூட்டம் சேர்க்கவில்லை. ஆனால், திரையுலகிலும் வெளியுலகிலும் ஏராளமான நண்பர்களைச் சம்பாதித்தார்.

வயது கூடிக்கொண்டே வர, படங்கள் குறைந்துகொண்டே வந்தன. அப்போது கமல், ரஜினி காலகட்டம். எல்லோருக்கும் பிடித்த நடிகர், வில்லனாக நடித்தால் புதுமையாக இருக்கும் என 'முரட்டுகாளை'யில் வில்லனாக நடிக்கக் கேட்டார்கள். சம்மதித்தார். இவரின் கதாபாத்திரம் மெருகேற்றப்பட்டது. அடுத்தடுத்து வில்லனாக வலம் வந்தார். 'அபூர்வ சகோதரர்கள்' உள்ளிட்ட பல படங்களில் நடித்தார். 'ஊமைவிழிகள்' குணச்சித்திரக் கேரக்டர், அடுத்தடுத்து நல்ல கேரக்டர்களை வழங்கக் காரணமாக அமைந்தது. எல்லோருக்கும் பிடித்த நடிகர்களின் பட்டியலில் ஜெய்சங்கர் இருப்பதற்கு, அவரின் நடிப்பும் வேகமும் சிரித்த முகமும் மட்டுமே காரணமில்லை. அவரின் பண்பும் அன்பும் கனிவும் கருணையும் அவரை நிஜ ஹீரோவாக்கிற்று!



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# மலேசிய நாட்டின் தமிழ்தனா முருத்ரன் நடனக்குழு ஏற்பாட்டில் சங்கே முழங்கு









மலேசிய நாட்டின் தமிழ்தனா ஸ்ரீருத்ரன் நடனக்குழு ஏற்பாட்டில் சங்கே முழங்கு மலேசிய நாட்டின் தமிழ்தனா ஸ்ரீருத்ரன் நடனக்குழு ஏற்பாட்டில் பன்னாட்டு சான்றோர்களின் நல்லாசியோடு முத்தமிழையும் காக்கும் வண்ணம் சங்கே முழங்கு எனும் முப்பெரும் விழா அண்மையில் மலேசியாவில் மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ்ப்பள்ளி மாணவர்களின் பேச்சுப்



போட்டி – உலக சாதனை முயற்சியின் துவக்க விழா,

இந்நிகழ்ச்சியை மலேசியாவின் சிகாமட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் யுவனேசன் தலைமை தாங்க ஸ்ரீருத்ரன் நடனக் குழுவின் தோற்றுனரும் ஏற்பாட்டுக் குழுத்தலைவியுமான ஆசிரியை தனலெட்சுமி மற்றும் அவரின் நடனக்குழு உறுப்பினர்கள் மாசாய் சுப்ரமணியர் கோவிலின் தலைவர் சுப்ரமணியம் மற்றும் அவரது செயலவை உறுப்பினர்கள், டில்லி கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் பா.குமார் மற்றும் அவரது செயலவை உறுப்பினர்கள் இணைசேர ஜொகூர் மாநில கல்வி இலாகாவின் பாலர் மற்றும் ஆரம்பப்பள்ளிக்கான உதவி இயக்குனரான ரவிச்சந்திரன், பிறப்பால் மலாய்க்காரராக இருந்தாலும் தமிழ்ப் பாடல்கள் பலவற்றைப் பாடி புகழ் உச்சியைத் தொட்டிருக்கும் மலேசியப் பாடகர் சுபீர் கான் , புலம்பெயர்ந்த மலேசிய ஆளுமைகளைச் சிறப்பிக்க சிறப்பு வருகை புரிந்திருந்த குஜராத் வடோதரா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் .சி. பி.கண்ணன் , திருமதி சாந்தி கண்ணன், நைஜீரியா தமிழ்ச் சங்கத்தின் தலைவி திருமதி கீதா சங்கர், ஆலந்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையத்தின் தலைவர் மோ.பாட்டழகன் , கவிஞரும் வழக்கறிஞருமான பி.எஸ்.அகிலன், இளவரசி மாத இதழின் ஆசிரியர் திருமதி பி.சங்கமித்திரை, எழுத்தாளர் எம். வெற்றியரசி (குயிலோசை) அமெரிக்க நாட்டின் பிரபு, சிங்கையின் தமிழ் ஆர்வாளர் ராமச்சந்திரன் மற்றும் திருமதி நளினிகுமார் ஆகியோர் கலந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்ததோடு மலேசிய நாட்டின் ஜொகூர் மாநில ஆளுமைகளாக இசையமைப்பாளர் தனேஸ் ஜீகே குமார், நடன ஆசிரியர் .மணிமாறன் செல்வராஜா, சங்கரத்னா அர்ஜுனன் கங்கன், இளங்கோ முத்துசாமி, திருமதி தனலெட்சுமி சொ.கிருஷ்ணன், முன்னாள் RTM அறிவிப்பாளர் டேவ் மற்றும் வளர்ந்து வரும் சாதனை மாணவர்கள் , சுற்றுவட்டார பிரமுகர்கள், கல்வியாளர்கள் என பலர் கலந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.



இந்தியாவின் டில்லி இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் ப.குமாரின் முத்தமிழ்சார் முன்னெடுப்புகளைப் பாராட்டி தமிழ்த்திருமகன் விருது 2024 வழங்கி சிறப்பிக்கப்பட்டது. ஆளுமைவாதிகளுக்கு விருது வழங்கி சிறப்பித்த அதே நேரத்தில் ஸ்ரீருத்ரன் நடனக்குழு நடனமணிகளின் நடனங்கள் ஒவ்வொன்றும் மிக அருமையாக அமைந்திருந்தது.

இந்நிகழ்ச்சியில் டில்லி கலை இலக்கியப் பேரவை இணையவழியில் வழங்கிய உலக மகளீர் தின நிகழ்ச்சியில் மலேசிய ஆசிரியை தனலெட்சுமி ராஜேந்திரனுக்கு "முத்தமிழ் கலையரசி விருது" ம் மற்றும் மலேசிய ஆசிரியர் தினத்தை முன்னிட்டு " இலட்சிய ஆசிரியை " என்ற இவ்விருது நிகழ்ச்சியில் நேராக வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

தலைநகர் டில்லியில் 78 வருட பாராம்பரிய மிக்க டில்லி தமிழ் சங்கத்தில் கடந்த 5வது முறையாக டில்லி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு கொண்டு இருக்கும் அதன் பொதுச் செயலாளர் முனைவர் இரா. முகுந்தனுக்கு "சங்கத் தமிழ் வளர் சான்றோர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

டில்லி கலை இலக்கியப் பேரவையின் தலைவர் டாக்டர் R.கிரிராஜுக்கு நினைவு பரிசும் அவரின் துணைவியார் யாழினி ராஜ் வெளியிட்ட ஆல்பாவிலிருந்து ஆதிச்சநல்லுர் வரை என்ற புத்தகமும் வெளியிடப்பட்டது.

முனைவர் ஆ.முகமது மொகைதீன், துபாய் சொல்வேந்தர் பாலமுருகன் பஹ்ரைன்,கவிஞர் சீனு செந்தாமரை கடலூர், கவிஞர் சுந்தரபழனியப்பன், ஆகியோருக்கு விருதுகளும் ஞானமுருகன், திருமதி புவனா வெங்கட் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்பதை டில்லி கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் தனது உரையில் கூறினார்.











இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுலை மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.